இலங்கை காப்புறுதி
ஒழுங்குமுறைப்படுத்தல்
ஆணைக்குழு



# எதிர்காலத்திற்கான நிலை நிறுத்தல்

ஆண்டு அறிக்கை 2021

# பொருளடக்கம்


தொலைநோக்கு, செயற்பணி ........ 3
ஆண்டின் முக்கிய நிகழ்வுகள் ........ 4
தலைவரின் செய்தி ........ 6
பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு ........ 10
ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் ........ 16
ஆணைக்குழு அங்கத்தவர்களின் சுயவிபரங்கள் ........ 18
சிரேஷ்ட முகாமைத்துவக் குழு ........ 20
ஊழிய அங்கத்தவர்கள் ........ 22
மீளாய்வுகள்
பொது மீளாய்வு ........ 26
புள்ளிவிபர மீளாய்வு ........ 32
தொழிற்பாடுகளின் மீளாய்வு
- மேற்பார்வை மீளாய்வு ........ 88
- ஒழுங்குமுறைப்படுத்தல் மீளாய்வு ........ 92
- விசாரணை மீளாய்வு ........ 95
- சந்தை அபிவிருத்தி மற்றும் வெளித்தரப்பு உறவுகள் மீளாய்வு ........ 98
- நிர்வாக மீளாய்வு ........ 101
- நிதியியல் மீளாய்வு ........ 102
நிதி தகவல்கள்
- கணக்காளர் நாயகத்தின் அறிக்கை ........ 106
- கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் 2021ஆம் ஆண்டுகாக ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பதில்கள் ........ 116
- நிதியியல் நிலைமை கூற்று ........ 131
- நிதிச் செயலாற்றுகை கூற்று ........ 132
- தேறிய சொத்துகளின் மாற்றங்கள் மீதான கூற்று ........ 133
- காசுப்பாய்ச்சல் கூற்று ........ 134
- காப்பறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் காசுப்பாய்ச்சல் கூற்று ........ 135
- கணக்கீட்டு கொள்கைகள் ........ 136
- நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள் ........ 142
இணைப்பு I ........ 155
இணைப்பு II ........ 156
இணைப்பு III ........ 158
அருஞ்சொல் அகராதி ........ 159

# எதிர்காலத்திற்கான
## நிலை நிறுத்தல்

இலங்கை காப்பறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு காப்பறுதிப் பூட்கையாளர்களைப் பாதுகாப்பதற்கும், காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் நிலைபேற்றினை அபிவிருத்தி செய்வதற்கும், மற்றும் வலுவான மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறை ஆளுகையை உருாவக்குவதற்கும் சேவை செய்கின்றது.

இலங்கை காப்பறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு இடர்களுக்கு எதிராக எமது சமூகத்தையும் பொருளாதாரத்தையும் மிகவும் நெகிழ்வுடையதாக மாற்றுவதற்கு உறுதிபூண்டுள்ளது. வளங்களை முதலீடு செய்து, எமது நாட்டில் உள்ள பூட்கையாளர்களைப் பாதுகாக்க, கைத்தொழிற்துறையுடன் இணைந்து செயற்படுகின்றோம்.




இலங்கை காப்பறுதி
ஒழுங்குமுறைப்படுத்தல்
ஆணைக்குழு

# தொலைநோக்கு

ஆசியாவின் திறன்மதிப்புமிக்க காப்புறுதி ஒழுங்குபடுத்துனராக இருத்தல்.

# செயற்பணி

காப்புறுதியாளர்களின் நாட்டங்களைப் பாதுகாக்கும் அதேவேளை, காப்புறுதித்துறையின் அபிவிருத்தியை ஒழுங்குபடுத்துதல், மேற்பார்வை செய்தல் மற்றும் வசதிப்படுத்தல்.



# ஆண்டின் முக்கிய நிகழ்வுகள்

**27**
காப்புறுதிக் கம்பனிகளின் எண்ணிக்கை

**70**
காப்புறுதித் தரகர்களின் எண்ணிக்கை

**43,934**
காப்புறுதியாளர்களைப் பிரதிநிதித்துப்படுத்திய காப்புறுதி முகவர்களின் எண்ணிக்கை

**560**
காப்புறுதித் தரகர்களுடன் பதிவுசெய்துள்ள காப்புறுதி முகவர்களின் எண்ணிக்கை

(Facebook, LinkedIn and YouTube)
அறிமுகப்படுத்தப்பட்ட சமூக வலைத்தளங்கள்

IRCSLஇன் 20வது ஆண்டு நிறைவு விழா 01.03.2021 அன்று கொண்டாடப்பட்டது.

## காப்புறுதித் தொழிற்துறையின் செயலாற்றுகை

| | 2021 | 2020 | மாற்று % |
|---|---|---|---|
| மொத்தக் காப்புறுதிக் கட்டுப்பணம் (ரூ. மில்லியனில்) | 233,512 | 208,265 | 12.12 |
| மொத்த சொத்துகள் (ரூ. மில்லியன்) | 888,377 | 796,412 | 11.55 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) % சத வீதத்தில் ஊடுருவல் | 1.39 | 1.39 | - |
| காப்புறுதியின் அடர்த்தி (ரூபா) | 10,539 | 9,502 | 10.91 |

## ஆணைக்குழுவின் செயலாற்றுகை

| | | | |
|---|---|---|---|
| காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியம் (ரூ.மில்) | 8,441.42 | 7,468.72 | 13% |
| செஸ் (ரூ.மில்) | 543.91 | 506.14 | 7% |
| வருடாந்தக் கட்டணம் (ரூ.மில்) | 257.76 | 244.90 | 5% |

**ரூபா 888,377 மில்லியன்**
காப்பறுதிக் கைத்தொழிற்துறையின் மொத்த சொத்துக்கள்

**ரூபா 233,512 மில்லியன்**
காப்பறுதிக் கைத்தொழிற்துறையின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணங்கள



# தலைவரின் செய்தி



**ரஸீக் ஸரூக் பி.சீ**
**தலைவர**

# தலைவரின் செய்தி

**"2020இல் அறிக்கையிடப்பட்ட இ.ரூபா 208,265 மில்லியனுடன் ஒப்பிடுகையில் கைத்தொழிற்துறையின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் இ.ரூபா 233,512 மில்லியனாக அதிகரித்தது, இது 12.12% வீத உறுதியான வளர்ச்சி வீதத்தைக் காட்டுகின்றது."**

2020இல் தொற்றுநோயால் தூண்டப்பட்ட சுருக்கத்திலிருந்து 2021இல் இலங்கைப் பொருளாதாரம் மீண்டு வந்தது எனினும், மீண்டும் ஒருமுறை கோவிட்-19 வைரஸின் வகைகள் தோன்றியதனால், நாட்டின் பொருளாதார நிலைமை எதிர்பாராத விதத்தில் தொடர்ந்து மாறியது. ஒரு தேசமாக, வலிமையான இலங்கையைக் கட்டியெழுப்புவதற்காக பயணிக்கும் சவாலுடன் "புதிய இயல்பான" வாழ்க்கைக்கு படிப்படியாக பொருத்திக்கொள்கின்றோம். இந்த சவால்கள் மற்றும் நிட்சயமற்ற நிலைகளுக்கு மத்தியில் 2021 ஆம் ஆண்டிற்கான இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கையை முன்வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

### செயலாற்றுகை கண்ணோட்டம்

2021ஆம் ஆண்டில் கோவிட்-19 இன் இரண்டாவது மற்றும் மூன்றாவது அலைகளை இலங்கை எதிர்கொண்டதால், காப்புறுதித்துறை உட்பட அனைத்து வியாபாரங்களும் பல பாரிய சவால்களை எதிர்கொண்டன. "கடந்த காலத்தில் சிறப்பாக செயற்பட்டது எதிர்காலத்திற்கு தயாரிப்பதற்கு போதுமானதாக இருக்காது" என்ற உண்மையை உணர்ந்து கொண்டு, காப்புறுதித் துறையானது, காப்புறுதித்துறையில் நல்வாழ்வுக்காக புத்தாக்கங்கள் மற்றும் டிஜிடல் மாற்றம் மூலம் சவால்களை விரைவாக எதிர்கொள்ள இசைவாக்கமடைந்தது.

2020இல் அறிக்கையிடப்பட்ட இ.ரூபா 208,265 மில்லியனுடன் ஒப்பிடுகையில் கைத்தொழிற்துறையின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் இ.ரூபா 233,512 மில்லியனாக அதிகரித்தது, இது 12.12% வீத உறுதியான வளர்ச்சி வீதத்தைக் காட்டுகின்றது. 2021ஆம் ஆண்டில் இ.ரூபா 124,752 மில்லியன் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை உருவாக்கியுள்ள நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் மூலம் தவணைக் கட்டணத்தின் வளர்ச்சி பிரதானமாக பங்களிக்கப்படுகின்றது. தொற்றுநோயப் பரவல் பொதுமக்களின் இடர் விழிப்புணர்வை உணர்த்தியது மற்றும் உயிர் பாதுகாப்பின் அவசியத்தை மேம்படுத்தியது. மேலும், பல காப்புறுதியாளர்கள் தொந்தரவில்லாத கோரிக்கை செலுத்தல்களை மேற்கொண்டு, தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு நீட்டிக்கப்பட்ட பலன்களை வழங்கியதால், காப்புறுதியில் பொது மக்களின் நம்பிக்கை வளரத் தொடங்கியது. இந்த இரண்டு முக்கிய காரணிகளும் நீண்ட கால காப்புறுதித்துறையின் இந்த ஆண்டில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியின் முக்கிய இயக்கிகள் ஆகும்.

2021ஆம் ஆண்டு பொதுக் காப்புறுதி வியாபாரம் 3.32% வீத நடுநிலையான வளர்ச்சியை அடைந்தது. எனினும், இந்த வளர்ச்சி 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் பொதுக் காப்புறுதி வியாபாரம் சுமார் 7% வீத தவணைக் கட்டண வளர்ச்சியைக் கண்டிருந்தது, தொற்றுநோயக்கு முந்தைய சூழலில் வளர்ச்சி வேகம் இன்றும் பின்தங்கியே உள்ளது. மோட்டார் வாகன இறக்குமதியைத் தடை செய்வதற்கான அரசாங்கத்தின் முடிவானது பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் தவணைக் கட்டணத்தை திரும்பப் பெறுவதற்குத் தடையாக இருந்தது. பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் பாதிக்கும் மேலான மோட்டார் காப்பறுதி வகை இருப்பதனால், முன்மையாக மோட்டார் வாகன இறக்குமதி மீதான காரணமாக 2021ஆம் அணடில் எதிர்மறையான தவணைக் கட்டண வளர்ச்சியைப் பதிவுசெய்தது. கோவிட் 19 தொற்றுநோய்களின் போது அடுத்தடுத்த பரவல் காரணமாக மீட்பு மோசமாகியது. நாட்டின் முடக்கல்கள் மற்றும் நடமாட்டக் கட்டுப்பாடுகள் குறிப்பாக ஆண்டின் மூன்றாம் காலாண்டில் தொடர்ந்தன, ஏனெனில் கற்பனையான டெல்டா மாறுபாடு நாட்டில் வேகமாகப் பரவியது. இந்த பாதகமான நிலைமைகளின் கீழ்கூட, பொது காப்பறுதி வியாபாரத்தின் ஏனைய அனைத்து காப்புறுதி வகைகளும் நேர்மறையான வளர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளன.

தற்போதைய சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இதேபோன்ற விகிதாசார அதிகரிப்பு காணப்பட்டதன் காரணமாக, முந்தைய ஆண்டோடு ஒப்பிடுகையில், காப்புறுதி ஊடுறுவல் விகிதம் மாறாமல் 1.39% வீதமாக உள்ளது. பிராந்தியத்தில் ஒப்பீட்டளவில் குறைந்த காப்புறுதி ஊடுறுவலைக் கொண்டிருந்த போதிலும், இலங்கையானது காப்புறுதி செய்யப்பட்ட இழப்புகளுக்கும் காப்புறுதியற்ற இழப்புகளுக்கும் பரந்த பாதுகாப்பு இடைவெளியைக் கொண்டுள்ளது, இது பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கு இட்டுச் செல்கின்றது, ஏனெனில் நாடு அடிக்கடி இயற்கை அனர்த்தங்கள் மற்றும் விபத்துக்கள் மற்றும் நோய்களால் எழும் இழப்பு நிகழ்வுகளுக்கு வழிவகுக்கின்றது.

### முக்கிய சாதனைகள் மற்றும் சரியான பாதைக்கான தலைமைத்துவம்

வெற்றி என்பது முழுமையின் விளைவு: இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு 2001ஆம் ஆண்டு நிறுவப்பட்டதிலிருந்து காப்புறுதித்துறையின் அபிவிருத்திக்காகவும் காப்பறுதியாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காகவும் ஒழுங்குமுறை நடவடிக்கைகளை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தியுள்ளது.

காப்புறுதித்துறையில் தனது ஆணையை நிறைவேற்றும் போது, நுகர்வோர்

# தலைவரின் செய்தி

உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாப்பதற்காகவும், காப்பீட்டுத் தயாரிப்புகளை வாங்கும் போது மேலும் தகவலறிந்த முடிவுகளை எடுப்பதற்காகவும் IRCSL பொதுமக்களுக்கு தொடர்ந்து அதிகாரம் அளித்து வருகின்றது. மீளாய்வுக்குட்பட்ட காலகட்டத்தில், அச்சு மின்னிலத்தினியல் ஊடகங்கள் மற்றும் சமூக ஊடக தளங்கள் மூலம் நுகர்வோர் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் IRCSL தொடர்ந்து பொதுமக்களுக்கு அதிகாரம் அளித்துள்ளது. இத்தகைய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துவதில் ஆணைக்குழுவின் நோக்கம், காப்புறுதித் தொகை, காப்புறுதியின் முக்கியத்துவம், காப்புறுதித்துறை மற்றும் அதன் சமீபத்திய முன்னேற்றங்கள், பொருத்தமான காப்புறுதி வகைகளைத் தேர்ந்தெடுப்பது, குறைகள் தொடர்பான உரிமைகள் பற்றிய அறிவை மேம்படுத்தவதன் மூலம் ஏற்கனவே உள்ள மற்றும் சாத்தியமான பூட்கையாளர்களின் நலனைப் பாதுகாப்பதற்கும் பூட்கையாளர்களுக்கு கிடைக்கக்கூடிய தீர்வு வழிமுறைகள் போன்றவற்றை மேம்படுத்ததல் ஆகும்.

### எதிர்காலத்திற்கான சவால்கள்

2022 மற்றொரு சவாலான ஆண்டாக இருக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். தொழில்நுட்பம் மற்றும் டிஜிடல் மயமாக்கலுடன் நாம் முன்னேறும் போது, தரவுப் பாதுகாப்பு மற்றும் நுகர்வொரின் தனியுரிமைத் தேவைகளை உறுதி செய்வதற்காக தொழில்துறை இணையப் பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். மேலும், காப்புறுதித்துறை பணியாளர்கள் நெகிழ்வானதாகவும் ஆக்கபூர்வமானதாகவும் இருக்க வேண்டும், அவர்களின் கல்வியைத் தொடர வேண்டும், உலகளாவிய வணகச் சூழலைப் பற்றி பரந்தளவில் சிந்திக்க வேண்டும் மற்றும் விரைவான மாற்றத்திற்குத் தயாராக இருக்க வேண்டும் என நான் நம்புகின்றேன்.

### பாராட்டுதல்கள்

ஆணையத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணியை மேற்கொள்வதில் சக பங்காளிகளின் பங்களிப்பு மற்றும் முயற்சிக்காக எங்கள் ஆணைக்குழுவின் எனது சகாக்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன். அனைத்து காப்புறுதி நிறுவனங்கள், தரகர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட இடைத்தரகர்கள், இலங்கை காப்புறுதிச் சங்கம், இலங்கை காப்புறுதி தரகர்கள் சங்கம், இலங்கை காப்புறுதி நிறுவனம், மற்றும் காப்பறுதி ஒம்புட்ஸ்மன் அவர்களின் தொடர்ச்சியான ஆதரவு, சிறந்த ஒத்துழைப்பு மற்றும் அவர்கள் எங்களுடன் தொடர்ந்து பாராமரிக்கும் நல்லுறவுக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் நோக்கங்களை அடைவதில் அவரகள் வெளிப்படுத்திய தொழில்முறை மற்றும் அர்ப்பணிப்புக்காக பணிப்பாளர் நாயகம், சிரேஸ்ட முகாமைத்துவக் குழு மற்றும் ஊழியர்களுக்கு சிறப்பு பாராட்டுகளைத் தெரிவிக்கின்றேன்.



**ரஸீக் ஸரூக் பி.சீ**
தலைவர்



# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு



**தமயந்தி பெர்னாண்டோ**
பணிப்பாளர் நாயகம்

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

**2021ஆம் ஆண்டில், பொதுக் காப்பறுதித்துறையின் பல்வேறு துணை வகுப்பகளில் இருந்து மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண பிறப்பாக்கத்திற்கு பங்களிதத்த காப்புறுதிப் பூட்கைகளின் மொத்த எண்ணிக்கை 6,620,274 ஆக இருந்தது. 2020 உடன் ஒப்பிடும் போது மொத்த பூட்கைகளின் எண்ணிக்கை 80,719ஆல் அதிகரித்துள்ளது.**

2021ஆம் ஆண்டிற்கான இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் சாதனைகளை தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு 2001ஆம் ஆண்டு நிறுவப்பட்டு 2021ஆம் ஆண்டில் 20 வருடங்களைப் பூர்த்திசெய்தமையினால், இவ்வாண்டு ஆணைக்குழுவிற்கு ஒரு வரலாற்று மைல்கல்லாகும், கடந்த இரண்டு தசாப்தங்களாக, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவானது, பூட்கையாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான அதிகபட்ச பொறுப்பை நிறைவேற்ற, ஒழுங்குமுறைக் கட்டமைப்பை சமநிலைப்படுத்துவதில் வெற்றிபெற்றுள்ளது, அதேநேரத்தில் காப்புறுதி வியாபாரம் நேர்மையுடனும் தொழில்சார் மற்றும் விவேகமான முறையில் மேற்கொள்ளபடுவதை உறுதிசெய்கின்றது. அது நிறுவப்பட்டதிலிருந்து, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு பல்வேறுபட்ட மைல்கற்களை அடைந்துள்ளது. இவற்றில், ஆணைக்குழுவின் நோக்கத்தினை அடைவதற்கு காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் வினைத்திறனான ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்கதல், வளர்ந்துவரும் தேவைக்கு ஏற்றவகையில் 2007, 2011 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் 2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதி கைத்தொழில் ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தினை திருத்தல், காப்புறுதி ஒம்புட்ஸ்மன் திட்டத்தை தாபிப்பதற்கு உதவுதல், இலங்கை காப்புறுதி நிறுவனத்தின் ஊடாக நடாத்தப்படும் காப்புறுதி முகவராக தொழிற்படுவதற்கான திறன் பரீட்சையை அறிமுகப்படுத்தல். 2015இல் விதிகள் அடிப்படையிலான மூலதன காப்பறுதிச் சட்டகத்திலிருந்து இடர் அடிப்படையிலான சட்டகத்திற்கு மாறுதல், இடர் அடிப்படையிலான மேற்பார்வை சட்டகம் 1ஐ வடிவமைத்தல் மற்றும் இணைத்துக்கொள்ளல், கலவைக் காப்புறுதிக் கம்பனி முறைமையினை நீக்குதல் மற்றம் ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரங்களை இரு உருவகங்களாக வேறாக்கல், கைத்தொழிற்துறையின் கடன் நடைமுறையை ஒழுங்குபடுத்துவதற்கு தவணைக் கட்டண கொடுப்பனவு உத்தரவாதத்தை அறிமுகப்படுத்தல், பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனையில் அனைத்துக் கம்பனிகளையும் பட்டியலபடுத்தமாறு வேண்டல், க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர் தரப் பரீட்சை வணிகவியல் பிரிவுப் பாடங்களில் ஒன்றாக காப்புறுதியை அறிமுகப்படுத்துவதற்கு தேசிய கல்வி நிறுவனத்துடன் இணைந்து பாடவிதானமொன்றை அபிவிருத்தி செய்தல், காப்புறுதிப் பூட்கையாளர்களின் குறைகள் மற்றும் காப்புறுதிக் கோரிக்கைகளின் தீர்பனவுகளுக்கு வசதியளிப்பதற்கு விசாரணைகளை மேற்கொள்வதற்கு முழுமையான வசதிகள் கொண்ட விசாரணைகள் பிரிவினை நிறுவுதல், அவசியமாயின் பிரிவு 98இன் கீழ் கட்டளைகளைப் பிறப்பித்தல், ஒழுங்குமுறைப்படுத்துனரின் பெயரான இலங்கை காப்புறுதிச் சபை என்பதை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு என மாற்றல், தேசிய காப்புறுதி நாளாக செப்டெம்பர் 1ஆம் திகதியை பிரகடனப்படுத்துவதற்கு கோரல், சமூக சேவைப் பொறுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடல் மற்றும் நாடு முழுவதிலும் உள்ள பொது மக்களுக்கு காப்புறுதி தொடர்பான விழிப்புணர்வை பரப்பல் மற்றும் காப்புறுதி தொடர்பாக நுகர்வோர் கல்வி நிகழ்ச்சிகள்.∴ செயலமர்வுகள் ∴ கருத்தரங்குகள் என்பன உள்ளடங்கும்.

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் 20வது ஆண்டு நிறைவையொட்டி, அதிக பயனர் நட்பு மற்றும் உள்ளடக்கம் சார்ந்த தகவல்களை வழங்குவதற்காக இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு இணையத்தளத்தை மீண்டும் தொடங்கினோம், மேலும் தகவலறிந்த வாடிக்கையாளர்களை உருவாக்கவும் காப்புறுதி எண்ணக்கரு தொடர்பாகவும் விழிப்புணர்வினை உருவாக்கி பலப்படுத்துவதற்கு காப்புறுதி பற்றிய செய்திகளைப் பரப்பவதற்காக இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு YouTube Channel, Facebook, மற்றும் LinkedIn பக்கங்களைத் தொடங்கியுள்ளோம்.

2021ஆம் ஆண்டு காப்புறுதித் துறை ஆட்டதாரர்கள் மற்றும் காப்புறுதி நுகர்வோருக்கு ஒரு சவாலான ஆண்டாக இருந்தது ஏனெனில் கோவிட்-19 தொற்றுநோய் தொடர்ந்து பொருளாதார நடவடிக்கைகளை சீர்குலைத்ததது. சவாலான தொழிற்பாட்டு சூழல் இருந்தபோதிலும், பூட்கையாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்யும் அதேவேளையில் பூட்கையாளர்களின் நம்பிக்கையை அதிகரிப்பதற்கு மத்தியில் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு ஒரு வலுவான மற்றும் உறுதியான காப்புறுதித்துறையை உறுதி செய்வதில் தொடர்ந்து கவனம் செலுத்துகின்றது.

காப்புறுதித்துறையின் ஸ்திரத்தன்மை மற்றும் பூட்கையாளர்களுக்கு சாத்தியமான கோவிட் 19 வீழ்ச்சியிலிருந்து ஏற்படும் நிச்சயமற்ற தன்மைகளுக்கு எதிராக நெகிழ்வான நடவடிக்கைகளை உறுதிசெய்யும் ஒழுங்குமுறை நடவடிக்கைகளை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு விவேகத்துடன் எடுத்துள்ளது. பூட்கையாளர்களைப் பாதுகாப்பதில் ஆணையம் உறுதிபூண்டுள்ளது, இது அவர்களின் முதன்மையான முன்னுரிமைகளில் ஒன்றாகும். காப்புறுதி குறித்த விழிப்புணர்வை வலுப்படுத்த இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும், பல காப்புறுதியாளர்கள் தொந்தரவல்லாத கோரிக்கை தீர்ப்பனவு செயல்முறைகளைப் செயற்படுத்தி தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு, நீட்டிக்கப்பட்ட நன்மைகளை வழங்குவதால், காப்புறுதி தொடர்பாக பொது மக்களின் நம்பிக்கை வளரத் தொடங்கியது.

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

## பிரதான ஒழுங்குமுறைப்படுத்தல் முன்னெடுப்புகள்

இந்த வருடம் சட்டத்தின் 96 அ பிரிவின் கீழ், ஆணைக்குழு கீழ்வரும் பணிப்புரைகளை விநியோகித்தது. அதன் விபரங்கள் பொது மீளாய்வில் கூறப்பட்டுள்ளன::

- 2021இன் பணிப்புரை #01– பங்கிலாப பிரகடனம் மற்றும் விநியோகம்
- 2021இன் பணிப்புரை #02 – குறியீடுகளை வழங்குவதன் மீது கட்டுப்பாடுகள் மற்றும் குறியீடுகளை மாற்றுவதன் மீது கட்டுப்பாடுகள்
- 2021இன் பணிப்புரை #03– இடைநிறுத்துவதற்கான தீர்மானத்தை எடுப்பதற்கு முன்னர் விசேடமாக இயற்கை நியதி கோட்பாடுகளுக்கு அமைவாக, சரியான நடைமுறையைப் பின்பற்றி நிதி துஷ்பிரயோகம் அல்லது மோசடியின் அடிப்படையில் பணி நீக்கம் செய்யப்பட்ட எந்தவொரு நபரையும் வேலையில் அமர்த்துவதைத் தவிர்க்கவும்.
- 2021இன் பணிப்புரை #04– தொலைதொடர்பு சேவை வழங்குனர்களின் தளங்கள் (கைத்தொலைபேசி காப்புறுதி) மற்றும் அதனுடைய தொடர்புடைய மற்றும் தற்செயலான விடயங்களை நிறுத்துதல்.
- 2021இன் பணிப்புரை #05– காப்புறுதியாளர்கள் மற்றும் காப்புறுதித் தரகர்களின் பிரதான அலுவலர்கள் தொடர்பான பணிப்பரை #09 (13 மே 2016) ஐத் திருத்துதல்.

## காப்புறுதி கைத்தொழிற்துறையின் செயலாற்றுகை

### மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணம் (GWP) மற்றும் ஊடுறுவல்

2021இல், தொழிற்துறையின் மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணம் இ.ரூபா 233,512 மில்லியனாக உயர்ந்தது, 2020 இல் அறிவிக்கப்பட்ட இ.ரூபா 208,265 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 12.12% வீத உறுதியான வளர்ச்சி வீதத்தை வெளிப்படுத்தியது. தவணைக் கட்டண வளர்ச்சி முக்கியமாக நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தினால் பங்களிக்கப்படுகின்றது, இது வருடத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது, ஏனெனில் தொற்றுநோய் பரவியதனால் பொது மக்களின் இடர் விழிப்புணர்வு அதிகரித்தது மற்றும் உயிர் பாதுகாப்பின் அவசியத்தை மேம்படுத்தியது. கைத்தொழிற்துறையின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வளர்ச்சி, 2020 இல் பதிவுசெய்யப்பட்ட இ.ரூபா 164,960 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 41.56% வீதத்தைக் எட்டியது, 2021ஆம் ஆண்டு பொதுக் காப்புறுதி வியாபாரம் மீண்டெழுந்து 3.32% வீத மிதமான வளர்ச்சியை எட்டியது. எனினும், 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் பொதுக் காப்புறுதி வியாபாரம் 7% வீத தவணைக் கட்டண வளர்ச்சியைக் கண்டது, தொற்றுநோய்க்கு முந்தைய சூழலில் வளர்ச்சி வேகம் இன்னும் பின்தங்கியுள்ளது. 2021ஆம் ஆண்டின் இறுதியில், சந்தையில் இயங்கும் காப்புறுதி தரகு நிறுவனங்கள் இ.ரூபா 30,286 மில்லியன் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களை உருவாக்கியது, இது மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் 12.97% வீதமாகும்.

மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் குறிப்பிடத்தக்க விரிவாக்கம் ஏற்பட்ட போதிலும், முந்தைய ஆண்டோடு ஒப்பிடும் போது காப்புறுதி ஊடுறுவல் விகிதம் 1.39% வீதமான மாறாமல் உள்ளது. கடந்த ஏழு ஆண்டுகளில் காப்புறுதி ஊடுறுவல் 2017இல் 1.24% வீதமாக இருந்து 2021இல் 1.39% வீதமாக அதிகரித்துள்ளது. குறைந்த செலவழிப்பு வருமான நிலைகள் மற்றும் காப்புறுதியில் குறைந்த கவனம் செலுத்துதல் ஆகியவை இலங்கையில் காப்புறுதி ஊடுறுவலின் அதிகரிப்பை பாதிக்கும் பிரதான தடைகளாக இருக்கின்றன. காப்புறுதிச் சேவைகளை வெவ்வேறு பிரிவுகளாகவும், வெவ்வேறு தொகுதிகளாகவும் விரிவுபடுத்துவதன் மூலம் பாதுகாப்பு இடைவெளியைக் குறைப்பதில் இந்தக் கைத்தொழிற்துறை முனைப்புடன் உள்ளது. ஒரு நபருக்கு காப்புறுதித் தவணைக் கட்டணத்தின் அளவைக் குறிக்கும் காப்புறுதி அடர்த்தி மீளாய்வு ஆண்டில் இ.ரூபா 9,502 இருந்து இ.ரூபா 10,539 ஆக சாதகமான அதிகரிப்பைக் காட்டுகின்றது.

### நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் செயலாற்றுகை

நீண்டகால காப்புறுதி வியாபாரமானது அதன் முற்போக்கான போக்கைத் தொடர்ந்ததுடன் 21.12% வீத குறிப்பிடத்தக்க மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வளர்ச்சியைப் பதிவுசெய்தது மற்றும் தவணைக் கட்டண வருமானத்தின் அடிப்படையில் இ.ரூபா 125 பில்லியனை எட்டியது, அதேநேரத்தில் ஆயுட் காப்புறுதிப் பிரிவில் கடந்த ஐந்து ஆண்டுகளில் மிக உயர்ந்த வளர்ச்சி வீதத்தைப் பதிவுசெய்தது. வியாபர மற்றும் தொழிற்பாட்டு மாதிரிகளின் டிஜிடல் மயமாக்கல், புத்தாக்கமான காப்புறுதி வழங்கல்கள், விநியோக ஊடக மேம்படுத்தல் போன்றவை ஆயுட் காப்புறுதிப் பிரிவின் இந்தப் பாராட்டத்தக்க வளர்ச்சிக்கு பங்களித்துள்ளன. மேலும் நிச்சயமற்ற தன்மைகள், காப்புறுதியின் முக்கியத்துவம் மற்றும் கைத்தொழிற்துறையில் பொது மக்களின் நம்பிக்கை ஆகியவற்றைப் பற்றிய பொது விழிப்புணர்வு என்பவற்றை ஏற்படுத்துவதன் மூலம் இந்த தொற்றுநோய் ஆயுள் காப்புறுதித்துறையை உயர்த்தியது. கடந்த ஐந்து ஆண்டுகளில் 2017 தொடக்கம் 2021 வரை, நீண்ட கால காப்புறுதித்துறை 10% வீதத்திற்கும் அதிகமான நிலையான வீதத்தில் வளர்ந்துள்ளது. ஆயுள் காப்புறுதிச் சந்தை ஊடுறுவல் 2021இல் 0.74% வீதமாதக பதிவாகியுள்ளது. இது ஒரு மேல்நோக்கிய பாதையில் இருந்தாலும், ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இன்னும் குறைவாகவே உள்ளது.

2021ஆம் ஆண்டின் இறுதியில் நடைமுறையில் உள்ள மொத்த ஆயுள் காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கை 4,297,794 ஆக இருந்தது, இது 2020இல் பதிவான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 5.76% வீத மிதமான வளர்ச்சியைக் காட்டுகின்றது. வெளியிடப்பட்ட புதிய ஆயுட் காப்புறுதிப் பூட்கைகள் 3.37% வீதத்தினால் குறைந்து 873,762 ஆக இருந்தது. மொத்த குடித்தொகையில் அமுலில் உள்ள மொத்த ஆயுட் காப்புறுதிப் பூட்கைளின் எண்ணிக்கை மற்றும் தொழிற்படையில் அமுலில் உள்ள பூட்கைகளின் எண்ணிக்கை வீதமானது முறையே 19.40% வீதத்தில் இருந்து 50.25% வீதமாக மேம்பட்டுள்ளது.

நீண்ட கால காப்புறுதியாளர்களால் பெறப்பட்ட உரிமைக்கோரல்கள் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் மேலும்

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

அதிகரித்து, 21.64% வீத கணிசமான வளர்ச்சியைப் பதிவுசெய்ததுடன் பெறுமதியானது இ.ரூபா 46,113 மில்லியனை எட்டியது.

### பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் செயலாற்றுகை

தற்போதைய கோவிட்-19 பற்றிய கவலைகள் மற்றும் சவாலான பொருளாதார சூழல்கள் இருந்தபோதிலும், பொதுக் காப்புறுதித்துறையானது முந்தைய ஆண்டின் 2.25% வீத பாதகமான போக்குடன் ஒப்பிடுகையில் 3.32% வீத மெலிதான முன்னேற்றத்தை அளித்தது, இ.ரூபா 108,760 மில்லியன் தவணைக் கட்டண வருமானத்தைப் பதிவுசெய்தது மற்றும் கடந்த ஐந்து ஆண்டுகளில் மிக உயர்ந்த மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை எட்டியது. 2020இல் 44.8% வீத சரிவுடன் ஒப்பிடுகையில், மோட்டர் வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளின் விரிவாக்கம் மற்றும் மோட்டார் வாகனங்களின் புதிய பதிவுகள் குறிப்பிடத்தக்க வகையில் 83.3% வீதமாகக் குறைந்ததன் காரணமாக, 2021ஆம் ஆண்டு மோட்டார் வாகனங்களின் புதிய பதிவு தொடர்ந்து குறைந்து வந்தது. ஆயினும்கூட, ஒட்டுமொத்த பொதுக் காப்புறுதித்துறையும் 2021இல் முன்னேற்றம் அடைந்ததுடன் கடந்த ஐந்து ஆண்டுகளில் மிக உயர்ந்த மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை எட்டியது.

2021ஆம் ஆண்டில், பொதுக் காப்பறுதித்துறையின் பல்வேறு துணை வகுப்பகளில் இருந்து மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண பிறப்பாக்கத்திற்கு பங்களித்த காப்புறுதிப் பூட்கைகளின் மொத்த எண்ணிக்கை 6,620,274 ஆக இருந்தது. 2020 உடன் ஒப்பிடும் போது மொத்த பூட்கைகளின் எண்ணிக்கை 80,719ஆல் அதிகரித்துள்ளது. மேலும், மொத்த பூட்கைகளின் எண்ணிக்கை கடந்த ஐந்து ஆண்டுகளில் மெதுவாக அதிகரித்து 2021இல் 8.04% வீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. கடந்த ஆண்டுகளைப் போலவே பெரும்பான்மையானவர்கள், அதாவது 3,285,221 பூட்கைகள் மூன்றாம் தரப்பு காப்புறுதிப் பூட்கைகளையும் 2,671,816 விரிவான பூட்கைகளையும் உள்ளடக்கிய மோட்டார் உப பிரிவைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்.

கடந்த ஐந்தாண்டுகளுடன் ஒப்பிடும் போது, 2021 ஆம் ஆண்டிற்கான சுகாதார காப்புறுதி வியாபாரத்தின் உரிமைகோரல்கள், முந்தைய ஆண்டின் எதிர்மறையான வளர்ச்சியான 27.80%க்கு எதிராக 42.71% வீத வளர்ச்சியுடன் உச்சத்தில் இருந்தன. 2020ஆம் ஆண்டில் ஏற்பட்ட பல முடக்கல்களின் விளைவாக, 2021ஆம் ஆண்டில் அதிக எண்ணிக்கையிலான கோரிக்கைகள் தாமதமாகி, அதற்கான அனுமதியை வழங்கியது, இதன் விளைவாக மருத்துவக் காப்புறுதித்துறையின் உரிமைக்கோரல்களில் திடீர் உயர்வு ஏற்பட்டது. தவிர, நோவல் கோவிட் -19 வகைகளின் பரவல் மற்றும் எண்ணிக்கைகளின் அதிகரிப்பு ஆகியவை தனிநபர்களின் மருத்துவத் தேவைகளில் விரைவாக கவனம் செலுத்தியது, இது இறுதியில் மருத்துவக் காப்புறுதித்துறையின் கோரிக்கைகளை அதிகரிக்க உதவியது. பொதுக் காப்புறுதியானது, கோரிக்கைகளின் அதிகரிப்பின் காரணமாக இலாபத்தில் ஒரு சிறிய சுருங்குதலைக் காட்டியது. பல காப்புறுதியாளர்கள் டிஜிடல் செயல்முறைகளுக்கு விரைவான மற்றும் சமூகமான மாற்றத்தைத் தொடங்கினர், எனவே கடிகாரத்தை சுற்றி வாடிக்கையாளர் உறவை நிலைநிறுத்துகின்றனர். எனவே, காப்புறுதியாளர்கள் ஆண்டு முழுவதிலும் வாடிக்கையாளர்களுக்கு தடையல்லா சேவையை வழங்க முடிந்தது. தொற்றுநோயால் முன்வைக்கப்படும் தடைகளை சமாளிப்பதற்கான ஒரு வழிமுறையாக, இலங்கையில் உள்ள காப்புறுதியாளர்கள், தவணைக் கட்டண சேகரிப்பு, உரிமைகோரல் கொடுப்பனவுகள் போன்றவற்றில் பூட்கையாளர்களுக்கு பல நீடிக்கப்பட்ட நன்மைகளை வழங்கினர்.

### இலாபம்

2021ஆம் ஆண்டுக்கான இலாபம் இ.ரூபா 42,762 மில்லியனுடன் கூடிய பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் பலவீனமான செயலாற்றுகை காரணமாக காப்புறுதித் துறையானது ஒட்டுமொத்த இலாபத்தில் (வரிக்கு முன்னைய இலாபம்) 2.03% வீதம் குறைந்துள்ளது.

நீண்டகால காப்புறுதி வியாபாரமானது, 2021இல் செயலாற்றுகை அடிப்படையில் வலுவாக மீண்டெழுந்து 20.82% வீத இலாப வளர்ச்சியை எட்டியது. மொத்தத்தில், மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வலுவான வளர்ச்சிக்கு, வருடத்தில் உருவாக்கப்பட்ட சாதகமான தேறிய முதலீட்டு வருமானம் மற்றும் கடுமையான செலவு தேர்வுமுறை மற்றும் பல நீண்ட கால காப்புறுதியாளர்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஆகியவை முதன்மையான பங்களிப்பை வழங்கின. இருப்பினும், பூட்கையாளர்களுக்கான உரிமைக்கோரல்கள் மற்றும் நன்மைகள் மிதமான முன்னேற்றத்தைக் கண்டன, முக்கியமாக இறப்பு நன்மைகள், முதிர்வுச் செலுத்தல்கள் மற்றும் சரணடைதல் கொடுப்பனவுகளின் அதிகரிப்பு ஆகியவை இலாபத்தில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

பொதுக் காப்பறுதி வியாபாரத்தின் மொத்த இலாபம் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 18.48% வீதத்தினால் குறைந்துள்ளது. பொதுக் காப்புறுதிக் கோரிக்கைகள் ஆண்டில் 13.72% வீதத்தினால் அதிகரித்தது, இது பொருளாதார செயல்பாடு மற்றும் அசைவு ஆகியவற்றின் இயல்பான நிலையைப் பிரதிபலிக்கின்றது. ஆயினும் கூட, 2021இல் உதிரிப்பாகங்களின் விலை கடுமையாக அதிகரித்த போதிலும், மோட்டார் உரிமைக் கோரல்கள் குறுகியளவே காணப்பட்டன.

### எதிர்கால கண்ணோட்டம்

2022 மற்றொரு சவாலான ஆண்டாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். காப்புறுதிச் சந்தை விழிப்புடன இருக்க வேண்டும் மற்றும் தொற்றுநோயின் தாக்கங்களை தொடர்ந்து நிர்வகிக்க வேண்டும், அத்துடன் பொருளாதார அழுத்தங்களால் ஏற்படக்கூடிய எதிர்பாராத ஏற்ற இறக்கங்கள் குறித்து உன்னிப்பாக கவனம் செலுத்த வேண்டும். காப்புறுதித்துறையான புதிய சூழலில் சாத்தமானதாக இருக்க வியாபர மாதிரிகளை மாற்றும் அதேவேளையில், வளர்ச்சியைத் தக்கவைக்க அனுமதிக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வது முக்கியமானதாகும்.

2021இல் வெள்ளம் மற்றும் வறட்சியின் நிலைத்தன்மை, அதிகரிக்கும் இடரை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது. எதிர்காலத்தில் பெரிய இயற்கை பேரழிவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது மற்றும் தொற்றுநோய் அதன் மூன்றாவது ஆண்டிலும் தொடர்வதால், பயனுள்ள சுகாதார உபாயமார்க்கத்தின் தேவை அவசியமாகும். எனவே, புதுமை மற்றும் விரிதிறனை வளர்க்கும் பணிச்சூழலை வழங்கும் அதேவேளையில், எந்தவொரு சூழ்நிலைக்கும் ஏற்றவாறு காப்புறுதி வியாபார மாதிரியை மேம்படுத்தவதற்கான

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

வழிகளை காப்புறுதியாளர்கள் தொடர்ந்து தேட வேண்டும்.


மேலும், வாடிக்கையார் கல்வி, உரிமைக்கோரல்களை கையாளுதல் மற்றும் புகார் தீர்வு ஆகியவை காப்புறுதியாளர்களுக்கு காப்புறுதித்துறையில் நம்பிக்கையை வளர்க்கவும் வலுப்படுத்தவும் உதவும், இது ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதித்துறையால் அதிக காப்புறுதியாளர்களை உருவாக்குவதற்கு சாதகமான வலுவூட்டலாக செயல்படும். நிதி அறிவுள்ள நுகர்வோர் இடர்களை மதிப்பிடலாம் மற்றும் அவர்களின் குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்கு காப்புறுதித் தயாரிப்புகளின் பொருத்தம் குறித்து தகவலறிந்த முடிவுகளை எடுக்கலாம். எனவே, காப்பறுதிச் சந்தையின் நீண்டகால வளர்ச்சியை எளிதாக்கும் வகையில், இலங்கையில் காப்புறுதித்துறையை சீராக்கவும் நிலையானதாகவும் இயங்கச் செய்யும் பொது மக்களின் நிதிக் கல்வியறிவு மட்டத்தை அதிகரிக்க காப்புறுதியாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பூட்கையாளர்களின் சிறந்த பாதுகாப்பிற்காக பல சட்ட திருத்தங்களை ஆணைக்குழு தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கத்தின் காப்புறுதி மையக் கோட்பாடுகளுக்கு இணங்க பரந்த அதிகாரங்களைக் கொண்ட புதிய காப்புறுதி ஒழுங்குமுறைச் சட்டம், நுண் காப்புறுதி ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை மற்றும் பொதுக் காப்புறுதி மற்றும் நீண்டகால காப்புறுதிக் கொள்கை ஆவணங்களுக்கான தயாரிப்பு மதிப்பாய்வு, விளம்பர மதிப்பாய்வு மற்றும் நிலையான கொள்கை கட்டமைப்பில் மேம்படுத்தப்பட்ட விதிகள் சில முக்கிய சீர்திருத்தங்கள் நடந்து வருகின்றன. காப்புறுதித்துறையின் வளர்ச்சியை எளிதாக்கும் வகையில், காப்புறுதித்துறையின் செயலாற்றுகையை தூண்டும் பல்வேறு காரணிகளையும், பூட்கையாளர்களின் காப்புறுதித் தேவைகள் மற்றும் பாதுகாப்பு இடைவெளிகள் போன்றவற்றையும் அடையாளம் காண சந்தை ஆராய்ச்சியை நடத்த ஆணைக்குழு விரும்புகின்றது

### பாராட்டுதல்


மிகவும் நிலையற்ற இந்த ஆண்டில் அவர்களின் ஆதரவு மற்றும் வழிகாட்டுதல்களுக்காக தலைவர் மற்றும் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றறேன். பல ஆண்டுகளாக கைத்தொழிற்துறையை மேம்படுத்துவதற்கான உற்பத்தித்திறன் மிக்க ஆலோசனைகளை வழங்கிய காப்புறுதித்துறையின் பங்குதாரர்களுக்கு எனது நன்றியை பதிவுசெய்ய விரும்புகின்றேன் மற்றும் வரும் ஆண்டுகளில் அவர்களின் ஆதரவை எதிர்பார்க்கின்றேன்.

ஆணைக்குழுவின் சிரேஷ்ட முகாமைத்துவக் குழு மற்றும் ஊழியர்களின் நிபுணத்துவம் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றுக்காக நான் மனப்பூர்வமான நன்றியைக் கூறுகின்றேன். அவர்களின் கடின உழைப்பும், கோவிட் 19 தொற்றுநோயால் இடையூறுகள் மற்றும் வரம்புகள் இருந்தபோதிலும், இலங்கை காப்பறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு அதன் இலக்குகளை அடைய உதவியது.



**தமயந்தி பெர்னாண்டோ**

பணிப்பாளர் நாயகம்



# ஆணைக்குழு அங்கத்தவர்களும் ஊழியர்களும்

# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்



திரு. ஆர்.எம். ரத்நாயக்க

திரு. சஞ்சீவ திசாநாயக்க

திரு. ரஸீக் ஸரூக் பி.சீ
தலைவர்



திரு.ஹரீஷ் சல்பிடிகோரளே

திரு. ராஜா குணரத்ன

திருமதி. இவெட் பெர்ணாந்து

செல்வி. இந்திரா பதுகே

# ஆணைக்குழு அங்கத்தவர்களின் சுயவிபரங்கள்

01 **திரு. ரஸீக் ஸரூக்**
**தலைவர்**
**ஜனாதிபதி சட்டத்தரணி**

திரு. ரஸீக் ஸரூக் ஒரு சட்டத்தரணி, தூதுவர் மற்றும் பல்வேறு அரச கூட்டுத்தாபனங்களின் முன்னாள் தலைவர் என பல பதவிகளை வகித்துள்ளதுடன், நடைமுறையில் அவர் சிரேஸ்ட சட்டத்தரணியாவார். இவர் கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்தின் தலைவராக இருந்தார், அத்துடன் அவரது பதவிக் காலத்தில், அதாவது 1978ஆம் ஆண்டில் இருந்து 1989ஆம் ஆண்டுவரை கூட்டுறவு மொத்த ஸ்தாபனம், இலாபகரமான மற்றும் சாத்தியமான அமைப்பாக மாற்றப்பட்டதுடன், பல சொத்துக்களை பன்முகப்படுத்தி கையகப்படுத்தியதுடன் ஆதனங்கள் வாங்கி விற்கும் துறையை வளர்த்து சத்தோச மோட்டர்ஸ், லங்கா மில்க் புட்ஸ் போன்ற பல நிறுவனங்களை நிறுவியது. அத்துடன் அவர் விவசாய அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய நீர் சார்ந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் இலங்கை வங்கியின் தலைவராகவும் இருந்தார்.

அப்போதைய பெரடல் குடியரசு கோலோவஸ்கியாவின் தூதராகவும், அதன் பின்னர் ஹங்கேரியின் முதல் தூதுவராகவும் இராஜதந்திர சேவையில் பணியாற்றியதுடன், அதனைத் தொடர்ந்து சிங்கப்பூருக்கு உயர் ஸ்தானிகராக நியமிக்கப்பட்டார். இவர் மாத்தறை புனித சேவியஸ் கல்லூரி மற்றும் கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் பழைய மாணவன் ஆவார்.

02 **திரு. ஆர். எம். பி. ரத்நாயக்க**

திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தர அலுவலராவதுடன், தற்போது பொதுத் திறைசேரியின் பிரதிச் செயலாளராகப் பணியாற்றுகின்றார்.

இவர் நோர்வேப் பல்கலைக்கழகத்தில் இருந்து விவசாயத்தில் முதுமானிப் பட்டத்தையும் பேராதெனியப் பல்கலைக்கழகத்தில் இருந்து விஞ்ஞானமானி விசேட பட்டத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

இவர் 1994 ஆம் ஆண்டு அரச சேவையில் இணைந்ததுடன் தேசிய திட்டமிடல் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களங்கள் உள்ளடங்கலாக பொது திறைசேரியில் பல்வேறுபட்ட பதவிகளில் கிட்டத்தட்ட 27 வருடங்களாகச் சேவையாற்றியுள்ளார். வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக, அபிவிருத்திப் பங்காளர்கள், முன்னணி முகவர்கள் மற்றும் மூலதனச் சந்தையுடன் இணைந்து அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு வெளிநாட்டு நிதியைத் திரட்டுவதற்காகவும் இருதரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு பொறுப்புள்ளவறாக செயற்பட்டுள்ளார்.

இவர் தற்போது திறைசேரியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், இலங்கை வங்கி, இலங்கை பிணையங்கள் மற்றும் நாணயப் பரிமாற்ற ஆணைக்குழு மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபை என பல்வேறு நிறுவனங்களின் பணிப்பாளர் சபை அங்கத்தவராக இருக்கின்றார்.

திரு. ரத்நாயக்க வேறுபட்ட பல துறைகளில்.'. விடயங்களில் பல்வேறுபட்ட கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.

03 **திரு. சஞ்சீவ திசாநாயக்க**

திரு. சஞ்சீவ திசாநாயக்க ஹொங்கொங் பல்கலைக்கழகத்திலிருந்து மனித உரிமைகள் தொடர்பான முதுமானிப் பட்டத்தைப் பெற்றுள்ளார் இவர் 1997ஆம் ஆண்டு இலங்கை மீயுர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக அனுமதிக்கப்பட்டு சேர்த்துக்கொள்ளப்பட்டார். இவர் இலங்கை சட்டமா திணைக்களத்தில் பிரதி சொலிஸ்டர் ஜெனரலாக இணைக்கப்பட்டுள்ளதுடன் தற்போது கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பணிகளை ஏற்பதற்காக பொதுச் சேவை ஆணைக்குழுவினால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

திரு. சஞ்சீவ திசாநாயக்க சட்டமா திணைக்களத்தின் குற்ற மற்றும் சிவில் பிரிவு எனும் இரண்டிலும் அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன் ஊழலுக்கு எதிரான பிஜி சுயாதீன ஆணைக்குழுவில் வழக்கறிஞராகவும் பணியாற்றியுள்ளார். இவர் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனம், இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியம கண்காணிப்பு சபை மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் நாணயப்பரிமாற்ற ஆணைக்குழுவின் பதவிநிலை அங்கத்தவராகவும் இருக்கின்றார்..

04 **திருமதி. இவெட் பெர்ணாந்து**

திருமதி. இவெட் பெர்னான்டோ தற்போது இலங்கை மத்திய வங்கியில் நிதியியல் முறைமை நிலைபேற்றுப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதி ஆளுனராகப் பணியாற்றுகின்றார். இவர் மத்திய வங்கியின் வங்கிகளின் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல், வெளிநாட்டு நாணயப் பரிமாற்ற முகாமைத்துவம் மற்றும் நாணய முகாமைத்துவம் போன்ற பிரிவுகளில் 30 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய அனுபவத்தைக் கொண்டுள்ளார். இந்தக் காலப்பகுதியில் இவர் நாணயப் பரிமாற்றக் கட்டுப்பாட்டாளராக பணியாளராக சேவையாற்றியதுடன், வங்கி மேற்பார்வை, நாணயம், வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்

# ஆணைக்குழு அங்கத்தவர்களின் சுயவிபரங்கள்

மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றின் உதவி ஆளுனர் பதவிகளையும் வகித்துள்ளார்.

திருமதி. பெர்னான்டோ பல்வேறுபட்ட உள்;ர் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளில் பங்குபற்றியதன் ஊடாக வங்கி மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல், பொது வங்கியின் தொழிற்பாடுகள், சிறந்த ஆளுகை நடைமுறை, பலவீனமான வங்கிகளுக்கான தீர்வு, காசுத் தொழிற்பாடுகள், நாணய முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவ திறன்கள் போன்ற வேறுபட்ட விடயங்களில் தனது அறிவை மேம்படுத்தி இற்றைப்படுத்தியுள்ளார். பல்வேறுபட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் வள நபராக இருப்பதுடன் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் பணி சார்ந்த விடயங்கள் மீதான மேடைக் கலந்துரையாடல்களிலும் பங்குபற்றியுள்ளார். திருமதி. பெர்னான்டோ, இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் முறைமை நிலைபேற்றுக் குழு மற்றும் தேசிய கொடுப்பனவுக் கவுன்சில், இலங்கை வங்கியாளர் நிறுவனம் மற்றும் இலங்கை கடன் தகவல் பணியகம் என்பவற்றின் தலைவராகவும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபை அங்கத்தவராகவும் இருக்கின்றார். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து நிதியியல் பொருளாதாரத்தில் முதுமானிப் பட்டத்தைக் கொண்டிருப்பதுடன் இலங்கை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிகமானிப் (விசேட) பட்டத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

## 05 திரு. ஹரிஸ் சல்பிதிகோரல்

திரு. ஹரிஸ் சல்பிதிகோரள ஐக்கிய ராஜ்ஜிய முகாமைத்துவக் கணக்காளர்களின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினதும் ஐக்கிய அமெரிக்காவின் ஆயுள் முகாமைத்துவ நிறுவனத்தின் அங்கத்தவராவர். இவர் ஆயுள் காப்புறுதித்துறையில் 30 வருடத்திற்கு மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன், இவர் புருணை, சிங்கப்பூர் மற்றும் இலங்கையில் காப்புறுதிக் கம்பனிகளுக்கு ஆலோசனையாளராக பணிபுரிந்துள்ளார்.

## 06 திரு. ராஜா குணரத்ன

திரு. ராஜா குணரத்ன ஒரு சட்டத்தரணியாவார். இவர் அவுஸ்திரேலியாக மொனாஷ் பல்கலைக்கழகத்தில் வர்த்தக சட்டம் தொடர்பான முதுமானியை பெற்றிருப்பதுடன், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளராகவும் பணிபுரிகின்றார்.

திரு குணரத்ன இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டக் கல்வித் திணைக்களத்தின் சிரேஸ்ட விரிவுரையாளராகவும் உள்ளார். இவர் அரச சேவையில் தேசிய மருத்துவ ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு என்பவற்றின் பணிப்பாளர் சபைகளில் அங்கத்தவராக உள்ளார். திரு. குணரத்ன சட்டத்தரணிகள் சங்கத்தில் ஆயுட்கால அங்கத்தவராக இருப்பதுடன், பங்களாதேஷ் உயிரியல் மருத்துவ சங்கம் மற்றும் இலங்கை மெடிகோ சட்ட சங்கம் என்வற்றிலும் அங்கத்தவராக இருக்கின்றார். அத்துடன், இவர் முன்னாள் தேசிய வீடமைப்பு ஆணையாளர், தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் மற்றும் தேசிய அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர் போன்ற பதவிகளிலும் இருந்துள்ளார். இவர் பல்கலைக்கழக முறைமையில், சட்டக் கல்வித் திணைக்களத்தின் தலைவர் மற்றும் மனிதத்தன்மை மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் பதில் கல்வி நிலைய துறைத் தலைவர் என பல பதவிகளை வகித்துள்ளார்.

## 07 திருமதி. இந்திரா பதுகே

திருமதி. இந்திரா பதுகே ஒரு சட்டத்தரணியாவதுடன் சட்டக் கல்வியில் முதுமானியையும் பெற்றுள்ளார். இவர் அரச மற்றும் தனியார் துறைகளில் 26 வருடத்திற்கு மேற்பட்ட சேவைக் காலத்ததைக் கொண்டுள்ளார். இவர் பணியாற்றிய காலத்தில் வீதிப் போக்குவரத்து அமைச்சின் சட்ட ஆலோசகர், தேசிய மீன்வள மற்றும் கடல்சார் பொறியியல் நிறுவனத்தின் பிரதான சட்ட ஆலோசகர் போன்ற உயர் பதவிகளை வகித்துள்ளார்.

# சிரேஸ்ட முகாமைத்துவக் குழு




1. திருமதி. தமயந்தி பெர்னான்டோ (பணிப்பாளர் நாயகம்)
2. திருமதி. சமரி ஏக்கநாயக்க (பணிப்பாளர் மேற்பார்வை)
3. திரு. சதீஸ் குமார் (பணிப்பாளர், நிதி மற்றும் நிர்வாகம்)
4. திருமதி. பிரபாஷினி சமரகோன் (பணிப்பாளர், புலனாய்வு)
5. திருமதி. தீபிகா நவரத்ன (பணிப்பாளர் சந்தை அபிவிருத்தி மற்றும் வெளிவாரி உறவுகள்)
6. திரு. ராஜன் நிருபசிங்கம் (பணிப்பாளர் சட்டம் மற்றும் அமுல்படுத்தல்)




7. திரு. பிம்சர விஜேசிங்க (உதவிப் பணிப்பாளர் சந்தை அபிவிருத்தி மற்றும் வெளிவாரி உறவுகள்)
8. திருமதி. சாரிகா வத்துஹேவா (உதவிப் பணிப்பாளர் மேற்பார்வை)
9. திருமதி. சமரி ஹீனடிகல (உதவிப் பணிப்பாளர் புலனாய்வு)
10. திரு. பிரியந்த பெர்னான்டோ (உதவிப் பணிப்பாளர் தகவல் தொழில்நுட்பம்)
11. செல்வி. மலிதி அம்பலாங்கொடகே (உதவிப் பணிப்பாளர் சட்டம் மற்றும் அமுல்படுத்தல்)


# ஊழிய அங்கத்தவர்கள்




1. திருமதி. டெசிகா ரத்நாயக்க
2. திருமதி. ஹர்ஷனி பெரேரா
3. திருமதி. நடேசா கீர்த்திசிங்க
4. திருமதி. லசந்தி தொடஹேவா
5. திருமதி பராமி முனசிங்க
6. திருமதி. திலினி வகிஸ்டா
7. திருமதி. வீனா செனவிரத்ன
8. செல்வி. ஏ.டபில்யூ. செவ்வந்தி
9. திரு. சச்சித்ரா ரணதுங்க
10. செல்வி. சதுனி தல்பாவில
11. திருமதி.துஷாரி விஜயகுணவர்தன
12. திருமதி. சஷினி வத்சலா
13. திருமதி. மல்ஹாரி விகரமசிங்க
14. திரு. கலனா புஷ்பகுமார
15. திரு. பானுக கமகே
16. திரு. ரவீந்திர ஹன்சக
17. திரு. சனத் உதயங்க
18. திரு. நயன ரவீந்ர
19. திரு. அனுஷ்க திலான் பண்டார
20. திரு. லக்மின பத்திராஜா




21. திருமதி. உபேந்ரா செனவிரத்ன
22. திருமதி. ரூவினி லியனகே
23. திருமதி. பவித்ரா புஞ்சிஹேவா
24. திருமதி. டி.டபில்யூ.எஸ்.எஸ். சுபுலி
25. திருமதி. நிலங்கா வலிசுந்தர
26. திருமதி. விந்தியானி துலபிடிய
27. திருமதி. பிரியங்கி த சில்வா
28. திருமதி. கோகிலா சிறிவர்தன
29. செல்வி. உபெக்ஷா லியனகே
30. திருமதி. சந்திம கம்புறுகமுவ
31. திருமதி. சுஜீவ ரனசிங்க
32. திருமதி. சியாமளி அத்தனாயக்க
33. திரு. சமிந்த லால் குமார
34. திரு. ஹசன்க ரத்னசிறி
35. திரு. இமேஷா வதுகே
36. திரு.நிசல் கருணாரத்ன
37. திரு. நளின் தலகால
38. திரு மலின் பெரேரா
39. திரு. எதிராஜ் ஸ்ரீகாந்தன்
40. திரு சரித விக்ரமிங்க
41. திரு நுவன் சுதர்ஷன



# மீளாய்வுகள்


பொது மீளாய்வு 26

புள்ளிவிபர மீளாய்வு 32

தொழிற்பாடுகளின் மீளாய்வு 88

# பொது மீளாய்வு

### சட்டம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மறுசீரமைப்புகளின் நிர்வாகம்

#### சட்டவாக்கம்

இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (இதற்குப் பின்னர் ஆணைக்குழு எனக் குறிப்பிடப்படும்) இலக்கு மற்றும் பொறுப்பு யாதெனில், காப்புறுதிப் பூட்கையாளர்கள் மற்றும் சாத்தியமான காப்புறுதிப் பூட்கையாளர்கள் ஆகியோரின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தை நேர்மைத்திறனுடன் தொழிற்துறை ரீதியாகவும் விவேகமாகவும் நடாத்துதலாகும்.

2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டம் (இதன் பின்னர் "சட்டம்" எனக் குறிப்பிடப்படும்) காப்புறுதிக் கம்பனிகள், காப்புறுதி தரகுக் கம்பனிகள், காப்புறுதி முகவர்கள் மற்றும் நட்ட சீராக்கலாளர்கள் ஆகியவற்றை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்வதற்குரிய இயைபான சட்டக் கட்டமைப்பைத் தருகின்றது.

2007 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, 2011ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க மற்றும் 2017ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் (திருத்தம்) சட்டம் என்பவற்றினால் காப்புறுதிக் கைத்தொழிலின் ஒழுங்குமுறைப்படுத்தல் திருத்தப்பட்டுள்ளது.

#### துணைச் சட்டவாக்கம்

இவ்வாண்டில் இந்தச் சட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட துணைநிலைச் சட்டவாக்கம் கீழே ஒழுங்குமுறைப்படுத்தல் சீரமைப்புகளின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளன..

#### ஒழுங்குமுறைப்படுத்தல் மறுசீரமைப்புகள்

#### சட்டத்தின் 96அ பிரிவின் கீழ் விநியோகிக்கப்பட்ட பணிப்புரை

1. **2021ஆம் ஆண்டின் பணிப்புரை #01 – பங்குலாப பிரகடனம் மற்றும் விநியோகம்**

   பங்குதாரர்களுக்கு பங்கிலாபத்தை (இடைக்கால பங்குலாபங்கள் உள்ளடங்களாக) பிரகடனப்படுத்தும் போதும் விநியோகிக்கும் போதும் காப்புறுதியாளர்களுக்கான நியதிகளையும் நிபந்தனைகளையும் ஆணைக்குழு விநியோகித்துள்ளது. இந்த பணிப்புரை 10 மார்ச் 2021ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வந்தது.

2. **2021ஆம் ஆண்டின் பணிப்புரை #01 ற்கான திருத்தம் - பங்குலாப பிரகடனம் மற்றும் விநியோகம் (திருத்தம்)**

   இலங்கை காப்புறுதிச் சங்கத்தின் வேண்டுகோளைக் கருத்தில் கொண்ட, ஆணைக்குழு 10 மார்ச் 2021ஆம் திகதி வெளியிடப்பட்ட பணிப்புரையில் 1(ஆ) பகுதியை ஆணைக்குழு கீழ்வருமாறு பதிலீடு செய்தது.:

   i. நிறுவனத்தின் நிதி நிலை மற்றும் கடனீட்டு நிலை ஆகியவற்றின் நிலைத்தன்மைக்கு எதிராக அதனுடன் தொடர்புடைய ஆபத்தை மதிப்பிட்டு பரந்த கட்டமைப்பின் அடிப்படையில் சரியான ஆய்வுக்குப் பின் நிறுவனத்தினால் தற்செயலான பொறுப்புகள் பற்றிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

   ii. பங்குதாரர்களுக்கான முன்மொழியப்பட்ட கணக்கீட்டு முறை நிதியில் மற்றும் கடன்தீர் நிலைமையின் தாக்கத்தைக் கருத்தில் கொள்ளப்படுகின்றது. உரிய கணக்கீட்டு நியமங்களுடன் காப்புறுதியாளர்கள் இணங்குவதன் கீழாகும்..

   2021ஆம் ஆண்டு 1ஆம் இலக்க பணிப்புரைக்கான திருத்தம் 30 ஓகஸ்ட் 2021ஆம் திகதியில் இருந்து உடனடியாக அமுலுக்கு வந்தது.

3. **2021ஆம் ஆண்டின் பணிப்புரை #02 – குறியீடுகளை வழங்குவதன் மீதும் மற்றும் குறியீடுகளை மாற்றுவதன் மீதும் கட்டுப்பாடுகள**

   ஆணைக்குழு காப்புறுதிக் கம்பனிகளுக்கும் காப்புறுதி தரகர் கம்பனிகளுக்கும் குறியீடுகளை வழஙங்குதல் மற்றும் மாற்றுதல் மீது கட்டுப்பாடுகளை விதித்து பணப்புரைகளை வழங்கியது. குறியீடுகளை மாறறுதல் தொடர்பான கடுப்பாடுகளை விதிப்பதை நோக்காகக் கொண்டு 04 செப்டெம்பர் 04ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட பணிப்புரை # 21 இரத்துசெய்யப்பட்டது. இந்தப் பணிப்புரை 24 மார்ச் 2021ஆம் திகதி முதல் உடனடியாக அமுலுக்கு வந்தது.

4. **2021ஆம் ஆண்டின் பணிப்புரை #03 – பணிப்புரை # 14 (திருத்தப்பட்டது)**

   ஆணைக்குழு, நிதியினை தவறாகக் கையாளுதல் அல்லது மோசடி காரணமாக சேவை இடைநிறுத்தப்பட்ட ஒருவரை எந்தவொரு பணிக்கும் ஊழியராக நியமதிப்பதைத் தடைசெய்து காப்புறுதி கைத்தொழிற்துறை ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் கீழ் நபர்களைப் (காப்புறுதியாளர்கள், தரகர்கள் மற்றும் நட்ட சீராக்கலாளர்) பதிவுசெய்தல் பணிப்புரையினை வழங்கியது. இதன் மூலம் 09 ஜனவரி 2018ஆம் திகதி வழங்கப்பட்ட பணிப்புரை கு 14 இரத்துசெய்ப்பட்டது. இந்தப் பணிப்புரை 29 ஜுலை 2021ஆம் திகதி முதல் உடனடியாக அமுலுக்கு வந்தது. .

5. **2021ஆம் ஆண்டின் பணிப்புரை #04 - தொலைதொடர்பாடல் சேவைகளை வழங்குனர்களின் தளங்களைப் பயன்படுத்துதலை (கைத்தொலைபேசி காப்புறுதி) இடைநிறுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடய விடயங்கள் மற்றும் சம்பவங்கள்**

   ஆணைக்குழு காப்புறுதிக் கம்பனிகளுக்கு, கைதொலைபேசி மற்றும் நிலையான இணைப்புகள் போன்ற தொலைதொடர்பு தளங்களைப் பயன்படுத்தி உத்தேசக் காப்பறுதியாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் காப்புறுதியினை விற்பனை செய்யும் தற்போதைய நடைமுறையினை நிறுத்துமாறு பணிப்புரையினை வழங்கியது. இந்தப் பணிப்புரை 06 செப்டெம்பர் 2021ஆம் திகதி முதல் உடனடியாக அமுலுக்கு வந்தது..

6. **2021ஆம் ஆண்டின் பணிப்புரை #05 - காப்புறுதியாளர்கள் மற்றும் காப்புறுதித் தரகர்களின் தலைமை அலுவலர் மீதான பணிப்புரை #09 (13 மே 2016) இன் திருத்தம்**

   ஆணைக்குழு காப்பறுதிக் கம்பனி மற்றும் காப்புறுதித் தரகர் கம்பனியின் பிரதான அலுவலராக பிரதான நிறைவேற்ற அலுவலர்/ முகாமைத்துவப் பணிப்பாளர் இருக்க வேண்டும் மற்றும் அவர் கம்பனிய வியாபாரத்தின் செயற்பாடுகளின் பொதுக் கட்டுப்பாடு, வழிகாட்டல் மற்றும் மேற்பார்வை என்பவற்றுக்குப் பொறுப்புக்கூறுதல் வேண்டும் 13 மே 2016 விநியோகித்த பணிப்புரை #09ஐ மீள்திருத்தியது. இந்தப் பணிப்புரையின் 1ஆம் பந்தி 01 நவம்பர் 2022ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வந்தது.

# பொது மீளாய்வு

### இவ்வாண்டில் வழங்கப்பட்ட சுற்றுநிருபங்கள்

1. **2021 இன் சுற்றறிருபம், 01 - காப்பறுதிப் பண்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் இசைவாணைச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல்**

காப்புறுதிக் கைத்தொழிற்துறை ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் பிரிவு 37(1) மற்றும் (2)ல் குறிப்பிடப்பட்ட தேவைப்பாட்டினைக் கருத்தில்கொண்டு, ஆணைக்குழு அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளுக்கும் பிரிவு 37(1) ற்கு அமைவாக பண்டங்கள் / பூட்கைப் படிவங்கள் தொடர்பாக ஆணைக்குழு நியாயமானது மற்றும் சமமானது என ஆணைக்குழு கருத்தினைக் கொண்டிருந்தால் மட்டுமே, அப்பண்டத்தை / பூட்கைப் படிவத்தை வெளியிட முடியும் என அறிவித்தது. அனைத்துப் பொதுக் காப்புறுதிக் கம்பனிகளும் பூட்கையினை வெளியிடத் தீர்மானித்த தினத்திற்கு குறைந்தது 30 தினங்களுக்கு முன்னர் பூட்கை ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கு கோரப்படுவதுடன் நீண்டகால காப்புறுதிக் கம்பனிகள் பூட்கையினை வெளியிடத் தீர்மானித்த தினத்திற்கு குறைந்தது 45 தினங்களுக்கு முன்னர் பூட்கை ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். இந்த சுற்றுநிருபம் 23 மார்ச் 2021ஆம் திகதியில் இருந்து உடனடியாக அமுலுக்கு வந்தது.

2. **2021 இன் சுற்றறிருபம் #02 - மூன்றாந்தரப்பு மோட்டார் காப்புறுதி ஊக்குவிப்பு / விளம்பரப்படுத்தலை தடைசெய்தல**

**காப்புறுதிக் கைத்தொழிற்துறை ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் பிரிவு 3 இல் குறிப்பிடப்பட்ட தேவைப்பாட்டினைக் கருத்தில்கொண்டு, மூன்றாந் தரப்பு மோட்டார் காப்புறுதி ஊக்குவிப்பு / விளம்பரப்படுத்தலை தடைசெய்தது. இந்தச் சுற்றறிருபம் 8 ஏப்பிரல் 2021ஆம் திகதியில் இருந்து உடனடியாக அமுலுக்கு வந்தது.**

### இந்த ஆண்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்

**2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதி கைத்தொழில் ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் பிரிவு 88இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் (திருத்தம்)**

"நீண்ட கால காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் கொடுப்பனவு செய்யக்கூடிய தரகு" தொடர்பாக நடைமுறையில் காணப்பட்ட தீர்மான இலக்கம் # 10 புதிய தீர்மான இலக்கம் # 10 மூலம் பதிலீடு செய்யப்பட்டு காப்புறுதிக் கம்பனிகளுக்கும் காப்புறுதித் தரகர்களுக்கும் வழங்கப்பட்டது. இந்தத் தீர்மானம் 06 டிசம்பர் 2021ஆம் திகதி முதல் உடனடியாக அமுலுக்கு வந்தது

### சந்தைக் கட்டமைப்பு

### காப்புறுதியாளர்கள்

சட்டத்தின் 12ஆம் பிரிவு ஏற்பாட்டிற்கு அமைவாக, காப்புறுதி வியாபாரத்தைக் கொண்டு நடாசெய்தல் த்துவதற்கு காப்புறுதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதாக அல்லது பதிவுசெய்யப்பட்டதாக கருதப்பட்ட நபர் அல்லாத எவரும் இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தை கொண்டு நடாத்தக்கூடாது.


சட்டத்தின் 13ஆம் பிரிவு ஏற்பாட்டிற்கு அமைவாக, எந்தவொரு நபரும் இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தை கொண்டு நடாத்துவதற்கு விரும்பின், 2007ஆம் ஆண்டு கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவசியமான அனைத்து நியதிச் சட்ட தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்ததன் பின்னர் சட்டத்தின் கீழ் காப்புறுதியாளராக பதிவுசெய்து அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்.

வருட இறுதியில் காப்புறுதியாளர்களாக 27 கம்பனிகள் தங்கள் தொழிற்பாட்டை மேற்கொள்ளுகின்றன. மேலும் ஏஐஜி காப்புறுதி லிமிடட் நிறுவனம் தொடர்ந்து எந்தவொரு புதிய காப்புறுதி வியாபாரத்தையும் ஏற்றுக்கொள்ளமாட்டாது என்பதுடன் 2007ஆம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இலங்கையில் இருந்து வெளியேறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது. எம்பிஎஸ்எல் காப்புறுதிக் கம்பனி லிமிடட் 01 ஜூன் 2020 ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் புதிய காப்புறுதி வியாபாரங்களுக்கான ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதலை நிறுத்தியுள்ளது.

வியாபாரத்தை கொண்டு செல்வதற்கு பதிவு செய்துள்ள காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்ளும் கம்பனிகளின் வகைகளை விளக்கப்படம் 01 காண்பிக்கின்றது. தொழிற்படும் 27 காப்புறுதிக் கம்பனிகளில், நீண்டகால காப்புறுதி வியாபாரத்தையும், பொதுவான காப்புறுதி வியாபாரத்தையும் மேற்கொள்ளும், கலவை காப்புறுதி வழங்குனர்களாக பதிவு செய்யப்பட்ட 2 கம்பனிகளும், நீண்ட காலக் காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்ள பதிவு செய்து கொண்ட 13 கம்பனிகளும், பொதுவான காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்ள பதிவு செய்து கொண்ட 12 கம்பனிகளும் உள்ளடங்கும்.

**விளக்கப்படம் 1**

**காப்புறுதியாளர்களினால் கொண்டு நடாத்தப்படும் காப்புறுதி வியாபாரத்தின் வகைகள்**




### காப்புறுதித் தரகர்கள்

2007 இன் 7ஆம் இல. கம்பனிகள் சட்டத்தின் கீழ் உட்சேர்க்கப்பட்டு காப்புறுதி தரகு வியாபாரத்தை மேற்கொள்வதற்காக சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பனி காப்புறுதித் தரகர் எனப்படும். காப்புறுதி வழங்குனர், காப்புறுதி வைப்பாளர் அல்லது காப்புறுதி ஒன்றை பிரேரிப்பவர்கள் அல்லது மீள் காப்புறுதி செய்பவர்களுக்கு அல்லது ஒரு காப்புறுதி கம்பனியுடன் அவர்கள் சார்பாக காப்புறுதி வழங்குனர் அல்லது காப்புறுதிக் கம்பனியிடமிருந்து தரகுப் பணத்தை அல்லது தரகு எனும் கொடுப்பனவு ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்புடன் காப்புறுதி வியாபாரத்திற்கு இடையீட்டாளர்களாக காப்புறுதி தரகர்கள் செயற்படுகின்றனர்.


ஆண்டிறுதியின் போது 68 கம்பனிகள் காப்புறுதி தரகர்களாக பதிவு செய்யப்பட்டிருந்தன. சொல்லப்பட்ட கம்பனிகளில், 48 கம்பனிகள் நீண்ட காலம் மற்றும் பொதுவான காப்புறுதி தரகு வியாபாரம் இரண்டிலும் பதிவு செய்திருந்த அதே நேரம் 20 கம்பனிகள் பொதுக் காப்புறுதி தரகு வியாபாரத்தில் மட்டும் பதிவு செய்திருந்தன.

# பொது மீளாய்வு

விளக்கப்படம் 2 இந்த ஆண்டில் காப்புறுதி தரகர்கள் மேற்கொண்ட காப்புறுதி தரகு வியாபாரத்தின் வகைப்படுத்தல்களைக் காண்பிக்கின்றது..

**விளக்கப்படம் 2**

**காப்புறுதி தரகர்களினால் கொண்டு நடாத்தப்படும் காப்புறுதி வியாபாரத்தின் வகைகள்**




## காப்புறுதி முகவர்கள்

சட்டத்தின் கீழ் காப்புறுதி வழங்குனர் அல்லது காப்புறுதி தரகர் ஒருவருடன், காப்புறுதி முகவராக பதிவு செய்து கொள்ளும் தனியாளர்கள், அத்தகைய காப்புறுதி வழங்குனர் அல்லது காப்புறுதி தரகர்களுடன் தரகை நோக்கமாகக் கொண்டு காப்புறுதி வியாபாரத்தைப் பதிவு செய்வதவர்களாவர். பதிவு செய்வதற்கான தகைமைகள் சபையினால் நிர்ணயிக்கப்படும்.

சட்டத்தின் 34 ஆம் பிரிவிற்கு அமைவாக, காப்புறுதி முகவர்கள் முக்கிய விநியோக ஊடகமாக இருப்பதுடன், இவர்க;டாக காப்புறுதி வழங்குனர்கள் காப்புறுதி வியாபாரத்தை தேடிப் பெற்றுக் கொள்ளுகின்றனர்.


காப்புறுதி வழங்குனர்களினால் வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைவாக இந்த ஆண்டின் போது காப்புறுதி முகவர்களாகச் சேர்க்கப்பட்ட தனிநபர்களின் மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ 15,913 ஆகவிருந்ததுடன், இது கடந்த ஆண்டின் எண்ணிக்கையுடன் (16,101) ஒப்பிடும் போது 1.17% வீத வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

இந்த ஆண்டின் இறுதியில், காப்புறுதி வழங்குனர்களை பிரதிநிதித்துவப்படுத்திய தனிப்பட்ட காப்புறுதி முகவர்களின் மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ 43,342 ஆகும். இது கடந்த ஆண்டின் (45,567) எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது 4.88மூ வீத வீழ்ச்சியாகும்.

விளக்கப்படம் 03 காப்புறுதி கம்பனிகளுடன் பதிவு செய்து கொண்டுள்ள தனிப்பட்ட காப்புறுதி முகவர்களைக் காட்டுகின்றது.

**விளக்கப்படம் 03**

**31.12.2021ஆம் திகதியன்று மொத்த முகவர்கள்**




இந்த வருடம் காப்புறுதி முகவர் நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் காப்புறுதி முகவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 509 ஆகும்.

## நட்ட சீராக்கலாளர்கள்

இவ்வருட இறுதியில் 23 தனிப்பட்ட நட்ட சீராக்கலாளர்கள் செயற்பட்டார்கள்.

நட்ட சீராக்கலாளர்களுக்கான பதிவு தொடர்பான விதிகள் 05 ஜுலை 2017ஆம் திகதி 2026.27 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவில் பதிவு செய்யாமல் நட்ட சீராக்கலாளராக (பிரிவு 114(1) இல் வரையறுக்கப்பட்டவாறு) எவரேனும் நபர் செயற்படுதல் அல்லது வைத்திருத்தல் தடைசெய்யப்பட்டு 2011ஆம் ஆண்டு 3ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் மூலம் 2011ஆம் ஆண்டு சட்டம் திருத்தப்பட்டது. சட்டத்தின் 89அ(2) ஆம் பிரிவுக்கு அமைவாக பதிவு செய்வதற்கான தேவைப்பாடுகளில் இருந்து வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகள் சில உள்ளன.

சட்டத்தின் 89பி பிரிவின் கீழ் நட்ட சீராக்கலாளராக பதிவு செய்வதற்கு அவசியமான குறிப்பிடப்பட்ட தகைமைகள் மற்றும் அனுபவங்களை குறிப்பிட்ட விண்ணப்பங்களைக் கோருவதற்கு ஆணைக்குழு விதிகளை உருவாக்க முடியும். சட்டத்தின் 89 சீ (1)இன் கீழ் ஆணைக்குழு பதிவுசெய்வதற்கு அவசியமான விண்ணப்பங்களைக் கோருவதற்கு அவசியமான ஆவணங்கள், தகவல்கள் மற்றும் கட்டணங்களைக் குறிப்பிட்டு விதிகளை உருவாக்க முடியும்.

அதற்கமைவாக, ஆணைக்குழு நட்ட சீராக்கலாளராக பதிவு செய்வதற்கு அவசியமான தகைமைகள் மற்றும் அனுபவங்களைக் கோரி மேற்குறிப்பிட்ட விதிகளை உருவாக்கும்.


## கம்பனியின் அந்தஸ்தும் மூலதன மாற்றங்களும்

31 டிசம்பர் 2019 அன்று பின்வரும் காப்புறுதி வர்த்தகத்தில் ஈடுபடும் காப்புறுதி வழங்குனர்களில் 08 கம்பனிகள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டன. அவை யூனியன் அசூரன்ஸ் பிஎல்சி, சொப்ட்லொஜிக் லைப் இன்சூரான்ஸ் பிஎல்சி, எச்என்பி அஸ்யூரன்ஸ் பிஎல்சி, அமானா டக்பாபுல் பிஎல்சீ, அமானா டக்பாபுல் லைப் பிஎல்சீ, ஜனசக்தி இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சீ ஆர்பிக்கோ இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி மற்றும் பீப்பள்ஸ் இன்சூரனஸ் பிஎல்சீ, என்பனவாகும்.

பட்டியலிடப்பட்டதும், பட்டியலிடப்படாததுமான காப்புறுதியாளர்களின் சதவீதத்தை விளக்கப்படம் 4 காண்பிக்கின்றது.

**விளக்கப்படம் 4**

**பட்டியலிடப்பட்டதும், பட்டியலிடப்படாததுமான காப்புறுதியாளர்களின் நிலவரம்**



# பொது மீளாய்வு

1987 இன் 36 ஆம் இலக்க இலங்கையின் பிணையங்களும் பரிவர்த்தனையும் ஆணையகத்தின் கீழ், உரிமம் பெற்ற பங்குப் பரிவர்த்தனையில் தற்போதுள்ள காப்புறுதியாளர்கள் பட்டியலிடப்பட்டிருக்க வேண்டும் எனும் தேவைப்பாட்டை 2011ஆம் ஆண்டு 3ஆம் இலக்கச் திருத்தச் சட்டம் கொண்டுள்ளது. பெப்ரவரி 2015 அன்று அல்லது அதற்கு முன்னர், கலவைக் காப்புறுதி கம்பனிகள் அதன் வியாபாரத்தை இரண்டு வெவ்வேறு கம்பனிகளாக வேறாக்கி பெப்பரவரி 2016 அன்று அல்லது அதற்கு முன்னர் பட்டியலிடுதல் வேண்டும்.

2011ஆம் ஆண்டு 3ஆம் இலக்கச் திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்ததன் பின்னர் காப்புறுதி வழங்குனராக பதிவு செய்யும் புதிய கம்பனி ஒன்றிற்கு சபையின் உரிமம் வழங்கப்பட்ட மூன்று ஆண்டு காலத்திற்குள், 1987 இன் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்களும், பரிவர்த்தனைகளும் ஆணையத்தின் கீழ் உரிமம் பெற்ற பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட வேண்டிய தேவையுள்ளது.

2011 ஜுன் மாதத்திற்கு முன்னால் காப்புறுதி வழங்குனராக பதிவு செய்யப்பட்ட கம்பனி ஒன்றிற்கு, 2015 பெப்ரவரி அன்று அல்லது அதற்கு முன்னர் காப்புறுதி வியாபாரத்தின் ஒவ்வொரு வகைப்படுத்தலுக்கும் அதன் பங்கு மூலதனத்தை மிகக் குறைந்தது ரூபா ஐந்நூறு மில்லியனை அதிகரிக்குமாறு கூற வேண்டிய தேவை ஆணைக்குழுவிற்கு உள்ளது.

2011 ஜுன் மாதத்தை தொடர்ந்து பதிவு செய்து கொண்டுள்ள காப்புறுதிக் கம்பனிகள், ரூபா 500 மில்லியனுக்கு குறையாத பங்கு மூலதனத்தைக் கொண்டுள்ளனர்.

### காப்புறுதியாளர்களிடமிருந்து ஒரு செஸ் தீர்வை

சட்டத்தின் 7 ஆம் பிரிவிற்கு அமைவாக காப்புறுதி பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் ஒன்றை உருவாக்குவதற்கு செஸ் தீர்வை ஒன்றை ஏற்படுத்துமாறு கட்டளை ஒன்று கௌரவ நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரினால் பிறப்பிக்கப்பட்டது. 09 ஜுலை 2002ஆம் திகதி உடைய 1244/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின்படி, நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த நிகர காப்புறுதி கட்டணத்தின் 0.2% வீதமும் மற்றும் பொதுக் காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த நிகர காப்புறுதி கட்டணத்தின் 0.4%மும் காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

2003 ஜனவரியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, காப்புறுதியாளர்கள் வழங்குனர்களிடமிருந்து செஸ் சேகரிப்பு ஆரம்பமாகியதுடன், 2021 ஆம் ஆண்டிற்கான செஸ் சேகரிப்பு தொகை ரூபா 546 மில்லியன் ஆகும்.

### காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம்

சட்டத்தின் 103 ஆம் பிரிவிற்கு அமைவாக காப்புறுதியாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட செஸ் காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தில் வைப்பு செய்யப்படுகின்றது.

இந்த நிதி காப்புறுதிப்பூட்கையாளர்களின் பொதுப் பாதுகாப்புக்கும் மற்றும் ஏதேனும் விசேட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படலாம். இது காப்புறுதிப் பூட்கையாளர்களுக்கும் உத்தேச பூட்கையாளர்களுக்கும் நன்மையளிப்பதற்காக இருக்கின்றது.

(அ) பொதுமக்கள் மத்தியில் காப்புறுதி தொழில் குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதில் ஏற்படக்கூடிய செலவினம் மற்றும் காப்புறுதித் தொழிலை அபிவிருத்தி செய்வதில் ஏற்படக்கூடிய ஏனைய செலவினங்களைத் தீர்த்தல்.


(ஆ) ஆணைக்குழுவின் அதிகாரங்கள், நடவடிக்கைகள் மற்றும் கடமைகள் ஆகியவற்றை பிரயோகிப்பது, கடமையாற்றுவது மற்றும் செயற்படுத்துவதினால் ஏற்படக்கூடிய செலவினத்தைத் தீர்த்தல்.

காப்புறுதி பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் வரவில் இருக்கும் தொகை அரசாங்க பிணையங்களிலும் அரசாங்க வங்கிகளின் நிலையான வைப்புகளிலும் முதலீடு செய்யப்படும்.

2021 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு நிதியத்திற்கு திரண்ட தொகை ரூபா 8,444 மில்லியனாகும். இது முன்னைய ஆண்டைவிட (ரூபா 7,469 மில்லியன்) 19.45% அதிகரிப்பாகும்.

**விளக்கப்படம் 05**

**செஸ் மற்றும் காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம்**



# பொது மீளாய்வு

### காப்புறுதித் தீர்வை

பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் எந்தவொரு வகுப்புத் தொடர்பிலும் தற்போது எவ்வித தீர்வைகளும் இல்லை. மோட்டார் காப்புறுதி, தீ அபாயக் காப்புறுதி, தொழிலாளர் நட்ட ஈட்டுக் காப்புறுதி என்பவற்றிற்கு இருந்த தீர்வைகள் முறையே 1 ஜனவரி 2002, 2005, 2007 இலிருந்து நடைமுறைக்கு வருமாறு நீக்கப்பட்டன

### சட்டத்தின் பிரயோகத்திற்கான விதி விலக்குகள்

சட்டத்தின் 12 (3) ஆம் பிரிவிற்கு அமைவாக, 1999 இன் 20 ஆம் இலக்க விவசாயம் மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட விவசாய மற்றும் கமத்தொழில் சபை, 1978 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம் 1996 இன் 17 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு சபை சட்டத்தின் கீழ் சமூக பாதுகாப்பு சபை என்பவற்றுக்குச் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படுவதில்லை.

### தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் (NITF)

2006 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சட்டத்தினால் (NITF சட்டம்) தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சபை தாபிக்கப்பட்டு 2011 ஆம் ஆண்டு 3ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினால் ஆணைக்குழுவின் நோக்கெல்லையின் கீழ் கொண்டு வரப்பட்டது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சட்டத்திற்கு அமைவாக, வேலை நிறுத்தம், கலவரம், சிவில் அமைதியின்மை மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றிற்காக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் பேணப்பட்டு வந்த நிதி தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டது. காப்புறுதியாளர்களினால் விநியோகிக்கப்படும் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் அமைதியின்மை மற்றும் காப்புறுதி இடர்களுக்கு எதிராக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் சார்பான காப்புறுதி காப்புகளை வழங்கும் காப்புறுதியாளர்கள் அவற்றின் மீது சேகரிக்கும் எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தில் வைப்புச் செய்ய வேண்டும்.

2007 இன் 27 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தப்பட்ட சட்டத்திற்கு அமைவாக, ஒவ்வொரு மீள்காப்புறுதி செய்யும் ஒவ்வொரு காப்புறுதியாளரும் அமைச்சரினால் தீர்மானிக்கப்பட்டவாறு வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளவாறு 50% வீதத்திற்கும் மேற்படாது பொறுப்புத் தொகையை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தில் மீள் காப்புறுதி செய்ய வேண்டும். 31 டிசம்பர் 2012 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 1791/ 4 ஐக் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் படி, ஒவ்வொரு காப்புறுதியாளரும் நீண்டகால மீள் காப்புறுதி ஒப்பந்தங்கள் தவிர்த்து ஒவ்வொரு பொது மீள்காப்புறுதிக் கொள்கையில் இருந்து எழும் மொத்தப் பொறுப்பில் 30% வீதத்தைத் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தில் மீள்காப்புறுதி செய்வதற்கு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இதற்கு முன்னர் இது 20% சதவீதமாகும்.

## ஏனைய தொடர்புடைய விடயங்கள்

### வீதி பாதுகாப்பிற்கான தேசிய கவுன்சில் (NCRS)

வீதி பாதுகாப்பிற்கான தேசிய கவுன்சில் போக்குவரத்து அமைச்சின் நோக்கெல்லையின் கீழ், வாகனப் போக்குவரத்து சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. வாகன காப்புறுதியை வழங்குகின்ற ஒவ்வொரு காப்புறுதியாளரும் வீதிப்பாதுகாப்பு நிதியத்திற்காக மூன்றாந் தரப்பு காப்புறுதிக் கட்டணங்களின் 2மூ வீதத்தைப் பங்களிப்பு செய்ய வேண்டும். (01 ஒக்டோபர் 2021 இல் இருந்து அமுலுக்கு வரும் வகையில் 1% வீத பங்களிப்பு வீதம் 2% வீதமாக அதிகரிக்கப்பட்டது).

இந்தப் பங்களிப்பு மோட்டார் வாகன விபத்துகளின் போது விபத்தை ஏற்படுத்திவிட்டு ஓடும் சந்தர்ப்பங்களில் நட்டஈட்டை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும்.

### நிதியியல் முறைமை மேற்பார்வைக் கவுன்சில (FSOC)

இலங்கை மத்திய வங்கியினால் நிதியியல் முறைமை மேற்பார்வைக் கவுன்சில்¨ நிறுவப்பட்டதுடன், இதில் நிதியியல் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல்களை மேற்கொள்ளும் சிரேஸ்ட பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றனர். இந்த உயர் மட்டக் குழு, நிதிச் சந்தையின் சீரான அபிவிருத்திக்கு பொருத்தமான கொள்கை பணிப்புரைகளை வழங்குவதை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் முழு நிதி முறைமையினதும் தேவைக்கு அமைவாக அனைத்து நிதியியல் ஒழுங்கமைப்பு முகவர்களை ஒருங்கிணைப்பதற்கும் மற்றும் தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிதியியல் முறைமை மேற்பார்வைக் கவுன்சிலில் ஆணைக்குழுவின் தலைவரும் பணிப்பாளரும் பிரதிநிதித்துவம் வகிப்பர்.

### இலங்கை காப்புறுதி சங்கம் (IASL)

இலங்கை காப்புறுதி சங்கம் (IASL) 1989 இல் நிறுவப்பட்டது. சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட காப்புறுதியாளர்கள் அனைவரும் சபையில் அங்கத்துவம் பெறுவதற்குத் தகுதி பெறுவார்கள்.

இலங்கை காப்புறுதி கம்பனிகள் அனைத்தினதும் பிரதம நிறைவேற்று அதிகாரிகளை கொண்டுள்ள இலங்கை காப்புறுதி சங்கத்தின் நிறைவேற்றுக் குழு, சங்கத்தின் நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த முகாமைத்துவத்திற்கு பொறுப்பாகவிருக்கும். அத்துடன் பின்வரும் குழுக்கள் அவற்றுடன் தொடர்புடைய விடயங்களில் நிறைவேற்றுக் குழுவிற்கு தமது பரிந்துரைகளை செய்வதிலும் உதவும்.

- ஆயுள் காப்புறுதி மன்றம்
- பொதுக் காப்புறுதி மன்றம்
- நிதி தொழில்நுட்ப உப-குழு
- சட்ட ஆலோசனை மன்றம்
- மனிதவள உப-குழு
- தகவல் தொழில்நுட்ப உப-குழு
- சந்தைப்படுத்தலும் விற்பனையும் மன்றம்
- காப்புறுதிக் கணிப்பீட்டு உப குழு

### இலங்கை காப்புறுதித் தரகர்கள் சங்கம் (SLIBA)

ஆணைக்குழுவில் பதிவுசெய்த காப்புறுதி தரகர்கள் இலங்கை காப்புறுதி தரகர் சங்கத்தில் பிரதிநிதித்துவப்படுத்துவர். இலங்கை காப்புறுதி தரகர் சங்கம் காப்புறுதி தரகர்களின் நன்மைக்காக உருவாக்கப்பட்டது.

### இலங்கை காப்புறுதி நிறுவனம் (SLII)

1982 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை காப்புறுதி நிறுவனமானது இலாப நோக்கமற்ற ஒரு அமைப்பாக இருப்பதோடு காப்புறுதி வியாபாரத்தில் உள்ளவர்களின் திறமைகளையும் அறிவையும் விருத்தி

# பொது மீளாய்வு

செய்வது அதன் நோக்கமாகவும் உள்ளது. இலங்கை காப்புறுதி நிறுவனத்திற்கான நிதிக் காப்புறுதி வழங்குனர்களின் ஆண்டு சந்தா மற்றும் அதன் உறுப்பினர்களிடமிருந்து கிடைத்த பங்களிப்புகளில் இருந்து கிடைக்கிறது.

இலங்கை காப்புறுதி நிறுவனம் இலண்டன் பட்டயக் காப்புறுதி நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் இலண்டனிலுள்ள பட்டயக் காப்புறுதி நிறுவனம், இந்திய காப்புறுதி நிறுவனம், இந்தியாவின் காப்புறுதிக் கணிப்பீட்டாளர் சங்கம் போன்ற தொழிச்சார் அமைப்புகளுக்கான பரீட்சைகளையும் நிருவகித்து வருகின்றது. நிறுவனமானது காப்புறுதி கைத்தொழிலில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள நபர்களுக்காக காப்புறுதியில், குறுங்கால டிப்ளோமா பாடநெறிகளையும் நடாத்தி வருகின்றது.

ஆணைக்குழுவானது காப்புறுதி முகவர்களாக நியமிக்கப்படவுள்ளவர்களுக்கு ஆட்சேர்ப்பு பரீட்சைகளை நடாத்துவதற்கான பொறுப்பையும் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. நிறுவனமானது காப்புறுதி வியாபாரத்தின் இரு பகுதிகள் தொடர்பிலும் ஆட்சேர்ப்பு பரீட்சைகளை தொடர்ந்தும் நடாத்தி வருகின்றது.

### காப்புறுதி ஒம்புட்ஸ்மன்

இலங்கை காப்புறுதி சங்கம் பெப்பரவரி 2019 ஆம் ஆண்டு டாக்டர் ரஞ்சித் ரனராஜாவை காப்புறுதி ஒம்புட்ஸ்மனாக நியமித்ததுள்ளது. இலங்கை காப்புறுதிச் சங்கம் மற்றும் ஒம்புட்ஸ்மன் என்பவற்றுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைவாக, காப்புறுதி வைப்பாளர்களினால் காப்புறுதி ஒம்புட்ஸ்மனுக்கு கொண்டுவரப்படும் முரண்பாடுகளை இலங்கை காப்புறுதிச் சங்கத்துடன் இணைந்துள்ள காப்புறுதிக் கம்பனிகள் தீர்த்துக்கொள்கின்றன.

### காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கம் (IAIS)

காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கத்தின் ஒரு அங்கத்தினர் என்ற வகையில் சபையானது காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பான பிரதான காப்புறுதிக் கோட்பாடுகள், தகவல்கள் போன்ற வெளியீடுகளையும், வழிகாட்டிகளையும் கிரமமான முறையில் பெறுகின்றது. காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கத்தினால் பரிந்துரை செய்யப்பட்ட சில பிரதான கோட்பாடுகள் இலங்கையில் காப்புறுதித் தொழிலின் சிறந்த மேலாண்மை மற்றும் கண்காணிப்பிற்காக சபையினால் பின்பற்றப்படுகின்றன

### காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்துனர்களுக்கான ஆசிய மன்றம் (AFIR)

சீனக் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் முன்னெடுப்புடன் 2006 ஆம் ஆண்டு காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்துனர்களுக்கான ஆசிய மன்றம் பிராந்திய காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஒத்துழைப்பு பொறிமுறைக்காக உருவாக்கப்பட்டது. ஆணைக்குழு காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்துனர்களுக்கான ஆசிய மன்றத்தில் அங்கத்தவராக உள்ளது.

காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்துனர்களுக்கான ஆசிய மன்றம் கரைகடந்த மேற்பார்வையைப் பலப்படுத்துவதற்காக ஆசிய காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தலாளர்களுக்கான பிராந்திய ஒத்துழைப்பு மேடையாக அமைந்துள்ளது.

அதன் வகிபாகத்தை நிலைநிறுத்துவதற்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் தகவல்கள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பரிமாற்றிக்கொள்ளுதல், ஒழுங்குமுறைப்படுத்தல் அனுபவங்களைப் பரிமாறிக்கொள்ளல் மற்றும் கைத்தொழிற்துறை நிபுணர்களை பரிமாறிக்கொள்ளுதல் போன்றவற்றை ஊக்குவிப்பதற்கான அதன் பிரதான மேடையை சரியாக அமைப்பதற்கும், எல்லை தாண்டிய அபாயங்களை தடுப்பதற்கும் பதிலளிப்பதற்கும் ஒழுங்குமுறை ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்புக்கான ஒரு முக்கிய தளமாகவும், ஒழுங்குமுறை அமைப்புகள் மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்கான ஒரு முக்கிய தளமாகவும் இதனை உருவாக்குவதற்கும், காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்துனர்களுக்கான ஆசிய மன்றம் எதிர்பார்க்கின்றது. இதனால் உலகளாவிய காப்புறுதி ஒழுங்குமுறை சீர்திருத்தத்தில் மிகவும் பயனுள்ள முறையில் பங்கேற்க வேண்டும்.

# புள்ளிவிபர மீளாய்வு

**காப்புறுதிக் கம்பனிகளின் சுருக்கப் பெயர்**

| | காப்புறுதிக் கம்பனிகளின் சுருக்கப் பெயர் | சுருக்கப் பெயர் |
|---|---|---|
| 1 | ஏஐஏ இன்சூரன்ஸ் லங்கா லிமிடட் | ஏஐஏ லைப் |
| 2 | எலைன்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட். | எலைன்ஸ் ஜென் |
| 3 | எலைன்ஸ் லைப் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட். | எலைன்ஸ் லைப் |
| 4 | அமானா டக்காபுல் பிஎல்சி. | அமானா ஜென |
| 5 | அமானா டக்காபுல் லைப் பிஎல்சி. | அமானா லைப் |
| 6 | ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சி. | ஆர்பிகோ |
| 7 | சிலிங்கோ ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட். | சிலிங்கோ ஜென் |
| 8 | சிலிங்கோ லைப் இன்சூரன்ஸ் லிமிடட். | சிலிங்கோ லைப் |
| 9 | கென்டினன்டல் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட். | கென்டினன்டல் |
| 10 | கோப்பரட்டிவ் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட். | கோப்பரட்டிவ் ஜென் |
| 11 | கோப்லைப் இன்சூரன்ஸ் லிமிடட். | கோப்லைப் |
| 12 | பியார்பெஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட். | பியார்பெஸ்ட் |
| 13 | எச்என்பி அசூரன்ஸ் பிஎல்சி. | எச்என்பி லைப் |
| 14 | எச்என்பி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட். | எச்என்பி ஜென். |
| 15 | ஜனசக்தி இன்சூரன்ஸ் பிஎல்சி. | ஜனசக்தி லைப் |
| 16 | ஜனசக்தி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட். | ஜனசக்தி ஜென் |
| 17 | லைப் இன்சூரன்ஸ் கோப்பரே'ன் (லங்கா) லிமிடட். | எல்ஐசி |
| 18 | எல்ஒஎல்சி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட். | எல்ஒஎல்சி ஜென் |
| 19 | எல்ஒஎல்சி லைப் அசூரன்ஸ் லிமிடட். | எல்ஒஎல்சி லைப் |
| 20 | எம்பிஎஸ்எல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட். | எம்பிஎஸ்எல் |
| 21 | தேசிய காப்பறுதி நம்பிக்கை நிதியம். | என்ஐடிஎப் |
| 22 | ஒரியன்ட் இன்சூரன்ஸ் லிமிடட். | ஒரியன்ட் |
| 23 | பிப்பீள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி | பிப்பீள்ஸ் |
| 24 | சனச லைப் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட் | சனச லைப் |
| 25 | சனச ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட் | சனச ஜென். |
| 26 | ஸொப்ட்லொஜிக் லைப் இன்சூரன்ஸ் பிஎல்சி | ஸொப்ட்லொஜிக் லைப் |
| 27 | வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | எஸ்எல்ஐசி |
| 28 | யூனியன் அசூரன்ஸ் பிஎல்சி | யூனியன் லைப் |

புள்ளிவிபர மீளாய்வுக்கான அட்டவணை களினதும் விளக்கப்படங்களினதும் தரவுகளை விளக்கும் போது கீழ்வரும் பொதுக்குறிப்புகள் துணையாகும்.

1. காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதி தரகுக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட புள்ளிவிபரங்களின் அடிப்படையில் அட்டவணைகளும் வரைபுகளும் தயாரிக்கப்பட்டுள்ளது.

2. என்ஐடீஎப் மீள்காப்புறுதி மற்றும் காப்புறுதி வியாபாரங்களைக் கையாளுவதனால் ஒப்பீட்டளவைப் பராமரிப்பதற்கு இடர் அடிப்படையிலான மூலதனத்தைக் கருத்தில் கொள்வதற்கு என்ஐடீஎப் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தரவுகள்கவனத்திற் கொள்ளப்படவில்லை.

3. என்ஐடீஎப் நிறுவனத்தின் பயிர் மற்றும் கடன் பாதுகாப்பு திட்டத்தின் நிதித் தரவுகள், குறிப்பிடப்பட்ட தொழிற்பாடு காப்புறுதியாக கருதப்படாமையினால் 2014 தொடக்கம் அப்புள்ளிவிபரங்கள் அகற்றப்பட்டன.

4. அட்டவணைகளில் காணப்படும் பெறுமதி மிகக்கிட்டிய எண்ணுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதனால், காட்டப்பட்டுள்ள மொத்தத் தொகைக்கும் அதன் ஆக்கக்கூறுகளின் கூட்டுத்தொகைகளுக்கும் இடையில் சிறிய வேறுபாடு காணப்படக்கூடும்.

5. முன்னர் வெளியிடப்பட்ட பெறுமதிகளுடன் தற்போதுள்ள பெறுமதியை ஒப்பிடும் போது வேறுபாடு காணப்பட்டால், அது திருத்தத்தின் காரணமாக ஏற்பட்டதாகும்.

6. அடைப்புக்குறிக்குள் சுட்டிக்காட்டியுள்ள பெறுமதிகள் மறைப்பெறுமதியாகும்.

7. கீழ்வரும் சின்னங்கள் அறிக்கை முழுவதிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

(அ) = மீண்டும் குறிப்பிடப்பட்ட மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட பெறுமதி

(ஆ) = தற்காலிக புள்ளிவிபரங்கள்

= ஏதுமில்லை

# புள்ளிவிபர மீளாய்வு

## இலங்கை காப்புறுதிக் கைதொழிற்துறை பற்றிய ஓர் கண்ணோட்டம்

### உலக காப்புறுதிச் சந்தை ஒரே பார்வையில்

கோவிட் 19 தொற்றுநோயின் வெடிப்பு மற்றும் அதன் தொடர்சியான விரிவாக்கங்கள் உலகப் பொருளாதாரத்தில் நீண்டகால தாக்கங்களை உருவாக்கியது. சரவதேச நாணய நிதியத்தின் வெளியீடுகளின் படி, மிகப்பெரிய சவால்கள் இருந்தபோதிலும், உலகப் பொருளாதாரம் 2021ஆம் ஆண்டில் 6.1% வீத வளர்ச்சியுடன் வலுவான மீட்சியை அடைந்து வருகின்றது. இதேபோல், காப்புறுதித்துறையும் 2021ஆம் ஆண்டில் மீள் எழுச்சியைப் பதிவுசெய்துள்ளது, இது முக்கியமாக நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதிப் பிரிவுகளில் அதிகரித்துவரும் ஆபத்து விழிப்புணர்வால் பயனடைகின்றது, ஏனெனில் தனிநபர்களும் வியாபாரங்களும் கோவிட் 19 தொற்றுநோயால் உருவாக்கப்பட்ட சூழ்நிலைகளைத் தொடர்ந்து அதிக காப்புறுதிப் பாதுகாப்பைப் பெற நாடுகின்றனர். அதிகரித்த இயற்கை பேரழிவு அபாயங்கள் மற்றும் வளர்ந்து வரும் சந்தைகளின் எழுச்சி ஆகியவை சிறந்த வளர்ச்சி வாய்ப்புகளில் ஆதிக்கத்தை செலுத்தியுள்ளன.

Swiss Reஇன் மதிப்பீடுகளின் பதி, உலகளாவிய காப்புறுதி தவணைக் கட்டணங்கள் 2020இல் காணப்பட்ட தவணைக் கட்டண சுருக்கத்திற்கு பிறகு உறுதியான மீட்சியைக் காட்டும் 2021ஆம் ஆண்டில் நிஜ விதிமுறையின் அடிப்படையில் 3.4% வீதம் அதிகரித்தது. நெருக்கடியில் உள்ள தனிநபர்கள் மற்றும் வியாபாரங்கள் எனும் இருசாராருக்கும் நிதியியல் நிபாரணங்களை வழங்கும் இடர் உறிஞ்சியாக காப்புறுதித்துறையின் முக்கியத்துவத்தை தொற்றுநோய் அதிர்ச்சிகள் வலியுறுத்தின. பல தனிநபர்கள் காப்பீடு குறைவாக உள்ளதை உணர்ந்ததுடன் மேலும் பாதுகாப்பை வாங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளனர். நிறுவனங்கள் விநியோகச் சங்கிலி சிக்கல்கள், வியாபார இடையூறுகள் மற்றும் இணைய இடர்கள் தொடர்பான அவர்களுடைய விழிப்புணர்வை அதிகரித்துள்ளன. இந்தக் காரணிகள் காப்பறுதிக்கான வலுவான தேவை இயக்கியகளாக மாறியுள்ளன, இதன் விளைவாக தவணைக் கட்டண வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. வளர்ந்துவரும் தேவை மற்றும் பணவீக்க அழுத்தத்தின் தாக்கங்களுக்கு ஏற்ப, பொதுக் காப்புறுதி வியாபாரத்தில், குறிப்பாக வியாபார வணிக வரிசைகளில் தவணைக் கட்டண வீதங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. எனினும், சீனாவில் மேற்கொள்ளப்பட்ட தீர்வை வீத (de-tarrification rate) குறைப்புக் காரணமாக மோட்டார் தவணைக் கட்டண வளர்ச்சியானது பாதிக்கப்பட்டுள்ளதுடன், அதனால் வளர்ச்சி வேகம் 2020 இல் கைவிடப்பட்ட பிறகு மீட்சியைத் தொடர்ந்து தாமதப்படுத்தியது. அதிக இடர் விழிப்புணர்வு மற்றும் பலமான கேள்விகளால் இது உந்தப்பட்டு, உலகளாவிய உடல்நல மற்றும் மருத்துவ காப்புறுதி 2021இல் ஒரு மேல்நோக்கிய போக்கைப் பதிவுசெய்தது. இதேபோல், இடர் விழிப்புணர்வு மற்றும் அதிகரித்த டிஜிடல் தொடர்புகளினால் ஆதரவளிக்கப்பட்டு பெருகிவரும் கேள்வியின் தாக்கத்தினால் மிதமான வளர்ச்சியை நீண்ட கால காப்புறுதி வியாபாரத் தவணைக் கட்டணங்கள் வெளிப்படுத்தியது. நுகர்வோரின் முதலீட்டு ஆசை தொடர்ந்து வளர்ந்து வந்ததனால், ஐரோப்பாவில் சில மேம்பட்ட சந்தைகள் யுனிட்-லிங்ட் வியாபராங்களில் வலுவான மீள் எழுச்சியை அனுபவித்தன. பொருளாதார மறுமலர்ச்சி, மேம்படுத்தப்பட்ட இடர் விழிப்புணர்வு மற்றும் டிஜிடல் விநியோக ஊடகங்களின் பயன்பர்டு ஆகியவற்றின் காரணமாக ஆசியாவில் வளர்ந்து வரும் சந்தைகளில் தவணைக் கட்டண வளர்ச்சி ஏற்பட்டது. தொற்றுநோயால் துண்டப்பட்ட உலகளாவிய ஆபத்து விழிப்புணர்வு தவிர, பெரும்பாலான வளர்ந்து வரும் சந்தைகளில் சமூகப் பாதுகாப்பு அமைப்புகளின் அடிப்படைத்தன்மை மற்றும் மக்கள் தொகை மாற்றத்தை துரியதப்படுத்தியமை என்பன நீண்ட கால காப்புறுதி வியாபாரங்களுக்கான வலுவான வளர்ச்சி மற்றும் வாய்ப்புகளை தொடர்ந்து உருவாக்குகின்றன.

உயர்ந்த பணவீக்கத்துடன் இணைந்த நிலையான குறைந்த வட்டி விகித சூழல் உலகளவில் காப்புறுதியாளர்ளின் உண்மையான முதலீட்டு வருமானத்தை கட்டுப்படுத்தியது. உயர்ந்த பணவீக்கத்துடன் இணைந்த நிலையான குறைந்த வட்டி விகித சூழல் உலகளவில் காப்புறுதியாளர்களின் உண்மையான முதலீட்டு வருமானத்தை கட்டுப்படுத்தியது.

பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் உரிமைக்கோரல் செலவு குறிப்பிடத்தக்க பேரழிவு இழப்புகள் மற்றும் உயர்ந்த பணவீக்க அழுத்தங்களால் மிகவும் பாதிக்கப்படுகின்றது. பல அதிகார வரம்புகளில் இயக்கம் கட்டுப்பாடுகளை நீக்கிய பிறகு மோட்டார் வகுப்பு படிப்படியாக தொற்றுநோய்க்கு முந்தைய உரிமை நிலைகளுக்குத் திரும்பியது. மேலும் உயரும் மோட்டார் வாகன பாகங்கள் மோட்டார் உரிமைக்கோரல்களில் மேல்நோக்கி அழுத்தத்தை ஏற்படுத்தியது. உடல்நலம் மற்றும் மருத்துவ செலவுகள் அதிகரிப்பு பொறுப்பு மற்றும் பணியாளர்களின் இழப்பீடு கோரிக்கைகளில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியது. தீவிர வானிலை பேரழிவு நிகழ்வுகள் காரணமாக சொத்து இழப்புகள் கணிசமாக அதிகரித்தன. Swiss Re யின் சிக்மா அறிக்கையின் படி, 2021ஆம் ஆண்டில் இயற்கை பேரழிவுகளின் காப்புறுதி செய்யப்பட்ட 111 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது, இது பேரழிவு இழப்புகளின் அடிப்படையில் காப்புறுதித்துறையின் விலையுயர்ந்த ஆண்டுகளில் ஒன்றாகும். அமெரிக்காவின் ஐடா சூரியவளி, ஐரோப்பிய வெள்ளம் மற்றும் சீனாவின் வெள்ளம் போன்ற பல பெரிய இயற்கை பேரழிவு நிகழ்வுகள் உலகளாவிய காப்புறுதி இழப்புகளுக்கு பெருமளவில் பங்களித்தன. 2021ஆம் ஆண்டில் அமெரிக்க, பிரேசில் மற்றும் மெக்சிகோ போன்ற பல அதிகார வரம்புளில் நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் தொற்றுநோய் தொடர்பான கோரிக்கைகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் காட்டியுள்ளன. ஆண்டின் முதல் பாதியில் இறப்புச் சலுகைகள் அதிகரித்தன, இறுதியில் மேம்படுத்தப்பட்ட தடுப்பூசி திட்டங்களால் இறப்பு விகிதம் குறைந்தது.

தொற்றுநோய்களின் போது காப்புறுதித்துறையின் நெகிழ்ச்சித்தன்மைக்கு பங்களித்த முக்கிய காரணிகளில் டிஜிடல்மயமாக்கலும் ஒன்றாகும். பல காப்புறுதியாளர்கள் விற்பனை மற்றும் தொழிற்பாட்டு செயன்முறைகளுக்கு சமூகமாக மாறியுள்ளனர், இது நடமாடும் கட்டுபாடுகள் செயற்படுத்தப்பட்ட காலங்களில் வியாபார நடவடிக்கைகளைத் தொடர பெரிதும் உதவியது. இந்த தொழில்துறையானது இப்போது விற்பனை மற்றும் தொழில்முறை செயற்பாட்டுகளுக்கு அப்பால் இடரை மதிப்பீடு செய்தல் மற்றும் கணித்தல் போன்ற பகுதிகளுக்கு செல்வதன் மூலம் இந்த புதிய தொழில்நுட்ப முன்னேற்றங்களுடன் முன்னேறி வருகின்றது. மற்றொரு முக்கிய மாற்றமான ஆசியா உலகளாவிய காப்புறுதி வளர்ச்சியில் முன்னணியில் உள்ளது. அடுத்த தசாப்தத்தில், இப்பகுதி உலகளாவிய தவணைக்கட்டண

# புள்ளிவிபர மீளாய்வு

வளர்ச்சியில் 50% வீதத்திற்கும் அதிகமான பங்களிப்பைக் கொண்டிருக்கும் எனக் கணிக்கப்படுகின்றது.

காலநிலை மாற்றம் மற்றும் இயற்கை பேரழிவு அபாயங்களை துல்லியாக மதிப்பிடுவது மற்றும் அதன் மூலம் காப்புறுதி செய்யப்பட்ட இழப்புகளைக் குறைப்பது உலகெங்கிலும் உள்ள காப்புறுதியாளர்களுக்கு பல ஆண்டுகளாக முக்கிய கவலையாக உள்ளது. பெரும்பாலான காலநிலை முன்னறிவிப்பு மாதிரிகள் எதிர்காலத்தில் காலநிலை மாற்றத்திலிருந்து அதிக தீவிர வானிலை நிகழ்வுகளை எதிர்பார்க்கின்றன மற்றும் நிலையற்ற வானிலை நிலைமைகளின் தாக்கத்தைத் தணிக்க முக்கியமான உட்கட்டமைப்பைக் கடினப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முதலீடுகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன.

### இலங்கைப் பொருளாதாரம் பற்றிய ஓர் கண்ணோட்டம்

பிரதானமாக கோவிட் 19 நோய்ப்பரவலின் தாக்கத்தினால் 2020இல் 3.6% வீத சுருக்கத்தைக் கண்ட இலங்கைப் பொருளாதாரம் 2021இல் 3.7% வீத வளர்ச்சியைப் பதிவுசெய்து மீண்டது. 2021ஆம் ஆண்டில் பொருளாதாரத்தின் மூன்று முக்கிய துறைகளும் முன்னேற்றத்தைக் காண்பித்தன, ஏனெனில் பொருளாதார நடவடிக்கைகள் தொற்றுநோய் தொடர்பான இடையூறுகளைப் படிப்படியாக தளர்த்துவதன் மூலம் இயல்பான செயல்பாட்டைத் தொடங்குகின்றன. விவசாயத்துறை முக்கியமாக தேங்காய் மற்றும் கால்நடை உற்பத்தி நடவடிக்கைகளின் விரிவாக்கத்தின் காரணமாக 2.0% வீதம் வளரந்தது. இருப்பினும் அரிசி, பழங்கள், காய்கறிகள் மற்றம் இதர பான பயிர்களின் வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள சுருக்கம், துறையின் செயல்திறனை எதிர்மறையாகப் பாதித்தது. விவசாயத்திற்கு தேவையான உரங்கள் மற்றும் விவசாய இரசாயனங்களின் பற்றாக்குறை, குறிப்பாக ஆண்டின் இரண்டாம் பகுதியில் குறைந்த விளைச்சலுக்கு வழிவகுத்தது. முந்தைய ஆண்டின் கூர்மையான சரிவுக்கு மாறாக, தொழில்துறை 2021இல் 5.3% வீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. நிர்மாணிப்பு மற்றும் சுரங்க நடவடிக்கைள் மிதமான விரிவாக்கங்களை பதிவுசெய்த அதேவேளையில் உற்பத்தி நடவடிக்கைகளில் ஏற்பட்ட மீட்சி தொழில்துறையின் வளர்ச்சியை நடாத்தியது. நிதிச் சேவைகள் மற்றும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளின் விரிவாக்கம் காரணமாக, 2021ஆம் ஆண்டில் சேவைத்துறை நடவடிக்கைகள் 3.0% வீதத்தினால் அதிகரித்துள்ளன. தகவல் தொழில்நுட்ப நிரலாக்கம், தொலைதொடர்பு மற்றும் சுகாதார நடவடிக்கைகளும் இந்த காலகட்டத்தில் விரிவடைந்தன, முன்மையாக தொற்றுநோயால் துண்டப்பட்ட தேவையால் உந்தப்படுகின்றது.

பொருளாதாரத்தின் முக்கிய துறைகள் வளர்ச்சி வேகத்தை வெளிப்படுத்தியிருந்தாலும், 2022ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து சமூக மற்றும் அரசியல் அழுத்தத்தை உயர்த்திய, ஏற்கனவே இருக்கும் பேரினப் பொருளாதாரப் பலவீனங்களால் தூண்டப்பட்ட பல கட்டமைப்பு சிக்கல்கள் மற்றும் பாதிப்புகளை நாடு இன்னும் எதிர்கொள்ளுகின்றது. (மூலம் - இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை)

2021இல், அரசாங்கமும் இலங்கை மத்திய வங்கியும் பொருளாதாரத்தைப் பாதுகாப்பதற்காக பல எதிர் நடவடிக்கைகளை எடுத்தன. நிதிக்கொள்கையைத் தளர்த்துவதும் சந்தைகளுக்கு போதுமான பணப்புழக்கத்தை வழங்குவதும் பொது மற்றும் தனியார் துறைகளுக்கு செயல்பாட்டு மூலதன மற்றும் முதலீட்டு தேவைகளுக்கு தேவையான நிதியை எளிதாக்கியது, இதன் மூலம் பொதுச் சேவைகள், பயன்பாடுகள் மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகளை பொது மக்களுக்கு தடையின்றி வழங்குவதை உறுதி செய்தது.

பணவியல் கொள்கையைத் தளர்த்துவதும் சந்தைகளுக்கு போதுமான பணப்புழக்கத்தை வழங்குவது அரச மற்றும் தனியார் துறைகளுக்கு செயல்பாட்டு மூலதனம் மற்றும் முதலீட்டுத் தேவைகளுக்கு தேவையான நிதியை எளிதாக்கியது, இதன் மூலம் பொது சேவைகள், பயன்பாடுகள் மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகளை பொது மக்களுக்கு தடையின்றி வழங்குவதை உறுதி செய்தது. எவ்வாறாயினும், செலுத்தும் இருப்புப் பற்றாக்குறை, கணிசமான கடன் சேவைக் கடமைகள் மற்றும் வெளிநாட்டு ஊழியர்களிடமிருந்து பணம் அனுப்புதல் குறைதல் ஆகியவற்றுக்கிடையே அந்நியச் செலவாணிக் கையிருப்பு கடுமையாக சுருங்கத் தொடங்கியது, இதன் விளைவாக உள்நாட்டு அந்நியச் செலவாணிச் சந்தை பெரும்பாலும் திரவமற்றதாகவே இருந்தது. அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட வட்டி விகிதங்கள் மற்றும் விலைக் கட்டுப்பாடுகள் அடுத்தடுத்து அதிகரித்த போதிலும், பணவீக்க அழுத்தமானது நாணயத் தேய்மானம் மற்றும் உலகளாவிய பொருட்களின் விலையேற்றம் ஆகியவற்றின் மத்தியில் வலுவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. உணவுப் பொருட்களின் விலை மேலும் உயர்ந்தது மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை 2021இன் பிற்பகுதியிலும் 2022இன் தொடக்கத்திலும் தொடர்ந்தது, இது உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் வறுமைக் கோடுகளை மோசமாக்கும்.

இந்த எதிர்மறையான பொருளாதாரக் கண்ணோட்டங்கள் காப்புறுதித்துறைக்கு பல வழிகளில் சவால்களை ஏற்படுத்துகின்றன. செலவழிக்கக்கூடிய வருமானத்தைக் குறைப்பது, ஏற்கனவே உள்ள சாத்தியமான பூட்கையாளர்களின் தவணைக் கட்டண செலுத்தலின் நம்பகத்தன்மையைக் கட்டுப்படுத்தும் மற்றும் இறுதியில் அதிக சரணடைதல் மற்றும் நிலுவையாதல்களுக்கு வழிவகுக்கும். அதிக பணவீக்க சூழலில் காப்புறுதியாளர்களின் செயல்பாட்டு மற்றும் உரிமைகோரல் செலவுகள் அதிகரிக்கும் மற்றுத் காப்புறுதியாளர்கள் தங்கள் இருப்பு மற்றும் பொறுப்பு ஏற்பாடுகளை அதற்கேற்ப சரிசெய்யவும், மேலும் தவணைக் கட்டண விகிதங்களை அதிகரிப்பதன் மூலம் தங்கள் தயாரிப்புகளை சரிசெய்வதற்கும் கட்டாயப்படுத்தப்படுவர்.

### இலங்கை காப்புறுதிச் சந்தை

தொற்றுநோயின் நீண்டகால விளைவுகள் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் சமூகத்ததின் இயல்புநிலைக்கு அச்சுறுத்தலாக இருந்ததால், காப்புறுதித்துறை விரைவாக பதிலளித்து அதன் வியாபார முன்னேற்றத்தை புத்தாக்கங்கள் மற்றும் டிஜிடல் திறன்களுடன் தக்க வைத்துக்கொண்டது. உலகளாவிய சூழலைப் போலவே, இலங்கையின் காப்புறுதித் துறையானது 2021ஆம் ஆண்டில் வலுவாக இருந்ததுடன், 2020ஆம் ஆண்டில் கைத்தொழிற்துறை வளர்சியை அடக்கிய தொற்றுநோயால் துண்டப்பட்ட சவால்களை விஞ்ச முடிந்தது.

2021ஆம் ஆண்டின் இறுதியில், காப்புறுதித்துறை இருபத்தியேழு காப்புறுதிக் கம்பனிகளை கொண்டுள்ளதுடன் இந்த இருபத்தியேழு

# புள்ளிவிபர மீளாய்வு

காப்புறுதிக் கம்பனிகளில் பதின்மூன்று கம்பனிகள் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தையும் பன்னிரெண்டு கம்பனிகள் பொது வியாபார நடவடிக்கைகளையும் இரு கம்பனிகள் இவை இரண்டு வியாபாரத்தையும் கொண்டு நடாத்துகின்றன. காப்புறுதித்துறையானது 2020இல் பதிவான இ.ரூபா 208,265 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இல் இ.ரூபா 233,512 மில்லியனாக மொத்த தவணைக் கட்டண வருமானத்தைப் பதிவாக்கியுள்ளதுடன் 12.12% வீத திடமான வளர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளது. தவணைக் கட்டண வளர்ச்சியானது நீண்டகால வியாபாரத்தால் முக்கியமாக பங்களிக்கப்படுகின்றது, இந்த குறிப்பிடத்தக்க முன்னேற்றம் தொற்றுநோய் வெடித்ததால் ஏற்பட்ட பொது மக்களின் இடர் விழிப்புணர்வு மற்றும் உணரப்பட்ட பாதுகாப்பின் அவசியம் உயர்ந்தமையை காட்டுகின்றது. மேலும், பல காப்புறுதியாளர்கள் தொந்தரவில்லாத கோரிக்கைத் தீர்ப்பனவு செயல்முறைகளை செயல்படுத்தி, தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு நீட்டிக்கப்பட்ட நன்மைகளை வழங்கியதால், காப்புறுதி மீது மக்களின் நம்பிக்கை வளரத் தொடங்கியது.

கடந்த ஆண்டில் அறிவிக்கப்பட்ட 2.25% எதிர்மறையான தவணைக் கட்டண வளர்ச்சிக்கு மாறாக, 2021ஆம் ஆண்டில் பொதுக் காப்புறுதி வியாபாரம் மீண்டெழுந்து 3.32% வீத மிதமான வளர்ச்சியை எட்டியது. இருப்பினும், 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் பொதுக் காப்புறுதி வியாபாரம் சுமார் 7% வீத வளர்ச்சியைக் கண்டிருந்த போதிலும் தொற்றுநோய்ச் சூழலில் வளர்ச்சி வேகம் இன்னும் பின்தள்ளியே உள்ளது. மோட்டார் வாகன இறக்குமதியை தடை செய்வதற்கான அரசாங்கத்தின் முடிவானது, பொதுக் காப்பறுதி வியாபாரத்தின் தவணைக் கட்டணத்தை மீளப் பெறுவதற்குத் தடையாக இருந்தது. மோட்டார் வாகன இறக்குமதி மீதான தடை காரணமாக, பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வளர்ச்சியைப் பாதிக்கும் பிரதான மோட்டார் காப்புறுதி வகுப்பு, 2021ஆம் ஆண்டில் எதிர்மறையான தவணைக் கட்டண வளர்ச்சியைப் பதிவுசெய்தது. கோவிட் 19 தொற்றுநோய்களின் அடுத்தடுத்த கிளர்சிகளால் மீட்சியானது மோசமடைந்தது. குறிப்பாக வருடத்தின் மூன்றாம் காலாண்டில் அதிக தொற்றுள்ள டெல்டா மாறுபாடு நாட்டில் வேகமாக பரவியதால், நாடு முழுவதற்குமான முடக்கம் மற்றும் நடமாட்டக் கட்டுப்பாடுகள் தொடர்ந்தன. இந்த பாதகமான நிலைமைகளின் கீழும் கூட, பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் ஏனைய அனைத்து வகுப்புகளும் ஆண்டில் நேர்மறையான வியாபார வளர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளன.

கீழே உள்ள விளக்கப்படம் 1 மற்றும் அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளபடி, நீண்டகால காப்புறுதி வியாபாரமானது அதன் முன்னேற்றப் போக்கைத் தொடர்ந்ததுடன் 21.12% வீத குறிப்பிடத்தக்க மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வளர்ச்சியைப் பதிவுசெய்தது மற்றும் வருமானத்தின் அடிப்படையில் இ.ரூபா 125 பில்லியன் மதிப்பை எட்டியது. ஒரு தொற்றுநோய் சூழ்நிலையின் விளைவுகளை மக்கள் அனுபவித்து, அத்தகைய நெருக்கடியால் ஏற்படக்கூடிய அபாயங்களிலிருந்து தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்வதன் முக்கியத்துவத்தை எச்சரித்ததால், ஆயுட் காப்புறுதிக்கான தேவை அதிகரித்தது. புத்தாக்கத் தயாரிப்புகளின் வெளியீடு, செயல்முறைகளில் டிஜிடல் மயமாக்கல், பன்முகப்படுத்தப்பட்ட விநியோக வழிகள் மற்றும் மேலும், வலுப்படுத்தப்பட்ட முகவர்படை போன்ற பல்வேறுபட்ட உத்திகளை செயல்படுத்துவதன் மூலம் இந்த வளர்ந்து வரும் சந்தைத் தேவைகள் நீண்ட கால காப்புறுதியாளர்களினால் தீர்க்கப்படுகின்றன.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் 2020இல் மீள்காப்புறுதிக்கான காப்புறுதி காப்பீடு கிடைக்கப்பெறாமையால் நிறுத்தப்பட்ட மீள்காப்புறுதித் தவணைக் கட்டணத்தைப் பெற ஆரம்பித்ததனால், பொதுக் காப்புறுதியாளர்களால் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு கொடுக்கப்பட்ட மீள்காப்புறுதித் தவணைக் கட்டணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வருமானம் இ.ரூபா 3,235 மில்லியனிலிருந்து இ.ரூபா 3,549 மில்லியனாக 2021இல் அதிகரித்துள்ளது.

மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்துடன் கூட, தற்போதைய சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இதேபோன்ற விகிதாசார அதிகரிப்பு காணப்பட்டதன் காரணமாக, முந்தைய ஆண்டை ஒப்பிடுகையில் காப்புறுதி விகிதம் 1.39% ஆக மாறாமல் உள்ளது. பிராந்தியத்தில் ஒப்பீட்டளவில் குறைந்த காப்புறுதி ஊடுறுவலைக் கொண்டிருந்த போதிலும், இலங்கையானது காப்பறுதி இழப்புகளுக்கும் காப்புறுதியற்ற இழப்புகளுக்கும் இடையில் பரந்த பாதுகாப்பு இடைவெளியைக் கொண்டுள்ளது, இது நாடு அடிக்கடி இயற்கை அனர்த்தங்கள் மற்றும் விபத்துக்கள் மற்றும் நோயினால் ஏற்படும் இழப்பு நிகழ்வுகளினால் ஏற்பட்டு பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கின்றது. காப்புறுதிச் சேவைகளை வெவ்வேறு பிரிவுகளாகவும் வெவ்வேறு பகுதிகளாகவும் விரிவுபடுத்துவதன் மூலம் பாதுகாப்பு இடைவெளியைக் குறைப்பதில் தொழில்துறை முனைப்பாக உள்ளது, இருப்பினும் குறைந்த செலவழிப்பு வருமானம் மற்றும் காப்புறுதியில் குறைந்த கவனம் செலுத்தலாகியவை இலங்கையில் காப்புறுதி ஊடுவலைப் பாதிக்கும் தடைகளாக இருக்கின்றன. ஆயினும்கூட, ஒரு நபருக்கான காப்புறுதி தவணைக் கட்டணத்தின் அளவைக் குறிக்கும் காப்புறுதி அடர்ச்சி, ஆண்டு முழுவதிலும் இ.ரூபா 9,502 இலிருந்து இ.ரூபா 10,539 ஆக சாதகமான அதிகரிப்பைக் காட்டியது.

நாட்டில் உள்ள சிக்கலான பொருளாதாரப் பாதிப்புகள் மற்றும் வேகமாக மாறிவரும் காப்புறுதிப் பரப்பைக் கருத்தில் கொண்டு எதிர்காலம் காப்புறுதியாளர்களுக்கு சவாலானதாக இருக்கும். பணவீக்க அழுத்தம் குறுகளான நுகர்வோர் செலவுகள் மற்றும் மாற்றப்பட்ட நுகர்வோர் வாழ்க்கை முறை ஆகியவை குறுகிய காலத்தில் காப்புறுதித் தேவையைப் பாதிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், பணவியல் கொள்கையை மற்றும் அதன் விளைவாக வட்டி வீத உயர்வு ஆகியவை காப்புறுதியாளர்களின் முதலீடுகளுக்கு பயனளிக்கும்.

கைத்தொழிற்துறை தொற்றுநோய் சகாப்தத்தை வழிநடத்தும் போது, பல காப்புறுதியாளர்கள் வாடிக்கையாளர் தொடர்புகளை மேம்படுத்தவதற்கும், டிஜிடல் தளங்கள் மூலம் வலுவான வாடிக்கையாளர் உறவுகளை உருவாக்குவதற்கும் விழிப்புணர்வுடன் இருந்தனர், இது தரவுகளின் துல்லியத்தை அதிகரிக்கும், பரிமாற்றம் மற்றும் அதிக விவேகமான இடர் மதிப்பீட்டை எளிதாக்கும். அதே நேரத்தில், அதிக வாடிக்கையாளர் திருப்தி அடையளாம், ஏனெனில் காப்பறுதியாளர்கள் தனிப்பட்ட தேவையைப் பூர்த்தி செய்யும் தனிப்பயனாக்கப்பட்ட காப்புறுதிக் காப்பீடுகளை வழங்க முடியும், மேலும் பல்வேறு ஆபத்து வெளிப்பாடுகளின்


# புள்ளிவிபர மீளாய்வு

அடிப்படையில் விலை மிகவும் துல்லியமாக இருக்கும். தொழில்நுட்ப மேம்பாடுகள் மற்றும் டிஜிடல் முறைகள் மூலம் தரவுப் பரிமாற்றம் ஆகியவற்றில் அதிகரித்துவரும் கவனம் ஆகியவற்றுடன், தரவுப் பாதுகாப்பு மற்றும் நுகர்வோரின் தனியுரிமைத் தேவைகளை உறுதி செய்வதற்காக கைத்தொழிற்துறை இணையப் பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

.

**விளக்கப்படம் 1**

**காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம் மற்றும் வளர்ச்சி வீதம்**




**அட்டவணை 1**

**தவணைக் கட்டண வருமானமும் ஊடுருவலும்**

| | 2017 | 2018 | 2019 | 2020 (அ) | 2021 (அ) |
|---|---|---|---|---|---|
| தவணைக் கட்டண வருமானம் - நீண்டகால காப்புறுதி வியாபாரம் (இரூபா.மில்) | 71,571 | 80,294 | 88,787 | 103,000 | 124,752 |
| தவணைக் கட்டணத்தில் வளர்ச்சி வீதம் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம் (%) | 12.75 | 12.19 | 10.58 | 16.01 | 21.12 |
| தவணைக் கட்டண வருமானம் - பொதுக் காப்புறுதி வியாபாரம் (இரூபா.மில்) | 93,389 | 100,586 | 107,685 | 105,265 | 108,760 |
| தவணைக் கட்டணத்தில் வளர்ச்சி வீதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம் (%) | 17.34 | 7.71 | 7.06 | (2.25) | 3.32 |
| மொத்தத் தவணைக் கட்டண வருமானம் - காப்புறுதி வியாபாரம் (இரூபா.மில்) | 164,960 | 180,880 | 196,472 | 208,265 | 233,512 |
| மொத்தத் தவணைக் கட்டணத்தில் வளர்ச்சி வீதம் - காப்புறுதி வியாபாரம் (%) | 15.30 | 9.65 | 8.62 | 6.00 | 12.12 |
| மீள்காப்புறுதி தவணைக் கட்டண வருமானம் (இரூபா.மில்) ** | 3,683 | 4,056 | 4,174 | 3,235 | 3,549 |
| நடைமுறை சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (இரூபா.மில்) * | 13,328 | 14,291 | 14,997 | 15,027 | 16,809 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் (%)* | 3.6 | 3.3 | 2.3 | -3.60 | 3.7 |
| ஊடுருவல் (மொ.உ.உ. இன் % இல் மொத்தக் காப்புறுதி எழுதப்பட்ட தவணைக் கட்டணம்) | 1.24 | 1.27 | 1.31 | 1.39 | 1.39 |
| ஊடுருவல் % (மொ.உ.உ. இன் % இல் நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் எழுதப்பட்ட தவணைக் கட்டணம்) | 0.54 | 0.56 | 0.59 | 0.69 | 0.74 |
| ஊடுருவல் % (மொ.உ.உ. இன் % இல் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் எழுதப்பட்ட தவணைக் கட்டணம் | 0.70 | 0.70 | 0.72 | 0.70 | 0.65 |
| காப்புறுதி செறிவு (மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம் - காப்புறுதி வியாபாரம் / சனத்தொகை) (இரூபா.மில்) | 7,693 | 8,347 | 9,011 | 9,502 | 10,539 |
| சனத்தொகை “000 (ஆண்டின் மத்தியில்) | 21,444 | 21,670 | 21,803 | 21,919 | 22,156 |

* மூலம்: இலங்கை மத்திய வங்கி மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம். இலங்கை மத்திய வங்கியின் 2021ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 2017 இல் இருந்து தற்போதைய சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி இற்றை செய்யப்பட்டுள்ளது.

** தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் உழைக்கப்பட்ட பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் கட்டாய மீள்காப்புறுதி எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை மீள்காப்புறுதி எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது

# புள்ளிவிபர மீளாய்வு

## காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த சொத்துக்கள்

காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் மொத்த சொத்துக்களின் பெறுமதி 2020ஆம் ஆண்டு பதிவு செய்த இ.ரூபா 796,411 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 11.55% வீத நியாயமான வளர்ச்சியுடன் 2021ஆம் ஆண்டில் இ.ரூபா 888,377 மில்லியனைப் பதிவு செய்தது. ஒட்டுமொத்த சொத்துத் தளத்தின் அதிகரிப்பு முக்கியமாக வியாபார அளவுகளின் விரிவாக்கம் மற்றும் அதன் விளைவாக பொறுப்பு இருப்புகள் அதிகரித்தது, ஏனெனில் காப்புறுதியாளர்கள் ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு ஏற்ப எதிர்கால பொறுப்புகளை சந்திக்க போதுமான சொத்துக்களைப் பராமரித்தல் வேண்டும். எனினும் விளக்கப்படம் 2 இல் காட்டப்பட்டுள்ளபடி, 2021இல் வளர்ச்சி மந்தமடைந்துள்ளது. 2020இல் விதிக்கப்பட்ட பங்கிலாப கட்டுப்பாடுகளை நீக்கிய பிறகு, அந்த ஆண்டில் காப்புறுதியாளர்களால் அதிகரிக்கப்பட்ட பங்கிலாப விநியோகம் மற்றும் அதன் விளைவாக அத்தகைய விநியோகங்களுக்கு நிதியளிக்க சொத்துகளின் பயன்பாடு கைத்தொழிற்துறையின் சொத்து வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை விளைவித்தது.

நீண்ட கால காப்புறுதி வியாபாரங்கள் மொத்த கைத்தொழில்துறை சொத்துக்களின் பெரும்பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன, இது 31 டிசம்பர் 2021 இன் படி இ.ரூபா 632,627 மில்லியனாக இருந்தது (2020: இ.ரூபா 562,706 மில்லியன்) மற்றும் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12.43% அதிகரித்துள்ளது. பொதுக் காப்புறுதி வணிகத்தின் சொத்துக்கள், 2020இல் பதிவான 10.97% வளர்ச்சிக்கு எதிராக 2021இல் 9.92% வளர்ச்சியைப் பதிவுசெய்வதன் மூலம் அதிகரித்து வரும் போக்கைப் பராமரிக்க முடிந்தது. முந்தைய ஆண்டுகளைப் போலவே, தொழிற்துறையின் ஒட்டுமொத்த சொத்துத்தளத்தில் நிதி முதலீடுகள் கிட்டத்தட்ட 80% வீதப் பங்கினைக் கொண்டிருந்தன. அரசாங்கப் பிணையங்கள், கூட்டிணைந்த கடன்கள் மற்றும் உரிமைப் பங்கு முதலீடுகள் என்பன சொத்து வளர்ச்சியின் முக்கிய உந்துசக்திகளாக மாறியது, ஏனெனில் ஒவ்வொரு பிரிவினரும் 2021ஆம் ஆண்டில் சொத்துக்களில் 14% வீத அதிகரிப்பை பதிவுசெய்தனர். குறைந்த வட்டி விகிதச் சூழல் வைப்பு முதலீடுகளின் கவர்ச்சியைத் தணித்தது, இருப்பினும், ஆண்டின் இறுதியில் வட்டி விகிதங்கள் உயரத் தொடங்கிய பிறகு வளர்ச்சியை அடைந்தது.


இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் கைத்தொழிற்துறையின் ஒட்டுமொத்த சொத்துக்களின் அதிக பங்களிப்புடன் ஆதிக்கம் செலுத்தியது, அதைத் தொடர்ந்து சிலிங்கோ லைப், ஏஐஏ லைப், யூனியன் லைப், சிலிங்கோ ஜெனரல், எலைன்ஸ் ஜெனரல் என்பன வந்தன. என்ஐடீஎப் ஆண்டின் 3வது காலாண்டில் ஒரு பெரிய உரிமைக்கோரலைத் தீர்த்தமையால் மீள்காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்கள் 2021இல் 8.79% வீதத்தினால் குறைந்துள்ளது.

**அட்டவணை 2**
**காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த சொத்துக்கள்**

| | 2017 | 2018 | 2019 | 2020 (அ) | 2021 (ஆ) |
|---|---|---|---|---|---|
| நீண்டகால காப்புறுதி (இ.ரூபா. மில்லியன்) | 391,890 | 430,759 | 485,121 | 562,706 | 632,627 |
| வளர்ச்சி வீதம் - நீண்ட கால காப்புறுதி (%) | 13.40 | 9.92 | 12.62 | 15.99 | 12.43 |
| பொதுக் காப்புறுதி (இ.ரூபா. மில்லியன்) | 185,583 | 196,005 | 205,130 | 227,640 | 250,217 |
| வளர்ச்சி வீதம் - பொதுக் காப்புறுதி (%) | 6.67 | 5.62 | 4.66 | 10.97 | 9.92 |
| மீள்காப்புறுதி (இ.ரூபா.மில்) | 4,212 | 3,683 | 6,690 | 6,066 | 5,533 |
| வளர்ச்சி வீதம் - மீள்காப்புறுதி (%) | (26.82) | (12.54) | 81.63 | (9.33) | (8.79) |
| **மொத்தம் (இ.ரூபா மில்லியன்)** | **581,685** | **630,447** | **696,941** | **796,412** | **888,377** |
| **வளர்ச்சி வீதம் - மொத்தம் (%)** | **10.73** | **8.38** | **10.55** | **14.27** | **11.55** |

# புள்ளிவிபர மீளாய்வு

**வரைபு 2**
**காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் மொத்த சொத்துக்கள் மற்றும் சொத்துக்களின் வளர்ச்சி வீதம்**




## பிரதான நிதியியல் துறைகளில் மொத்த சொத்துக்களின் பரம்பல்

2021ஆம் ஆண்டில் இலங்கையின் நிதித்துறை ஸ்திரமாக இருந்தது மற்றும் கோவிட் 19 தொற்றுநோய் மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட பொருளாதாரத் தலையீடுகள் ஆகியவற்றிலிருந்து உருவான பல சவால்களுக்கு மத்தியில் ஒரு மிதமான செயல்திறனை அடைந்தது. அட்டவணை 3இல் விளக்கப்பட்டுள்ளபடி, 2021ஆம் ஆண்டில் நிதித் துறையின் ஒட்டுமொத்த சொத்துக்கள் 14.14% வீதம் விரிவடைந்தன, இது முதன்மையாக வங்கித்துறையாலும் அதனைத் தொடர்நது ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்களினாலும் இயக்கப்படுகின்றது. ஒட்டுமொத்த நிதித்துறையின் செயல்திறன இலாபம் மற்றும் கடன் வளர்ச்சியின் அடிப்படையில் கணிசமான முன்னேற்றத்தைக் கண்டது. வங்கி மற்றும் பிற நிதி நிறுவனங்களின் வட்டி மற்றும் வட்டியல்லாத வருமானம் இரண்டும் அதிகரித்தது, இறுதியில் கைத்தொழிற்துறையின் இலாபத்தை மேம்படுத்தியது. வெளிநாட்டு நாணயப் பணப்புழக்கத் தட்டுபாடு ஆண்டின் பிற்பகுதியில் அதிகரித்தது, முக்கியமாக குறைந்த வெளிநாட்டுப் பணம் அனுப்புதல், சுற்றுலாத்துறை வருமானங்களின் மெதுவான மீட்சி மற்றும் அதிகரித்த இறக்குமதி செலவினம், வங்கித் துறையில் எதிர்மறையான தாக்கங்களை உருவாக்கியது.

கடந்த ஆண்டுகளைப் போலவே, 2021ஆம் ஆண்டின் இறுதியில்(2020:72.9%) மொத்த சொத்துக்களில் 74.7%ஐ வெளிப்படுத்திய வங்கித்துறை நிதித்துறையில் ஆதிக்கம் செலுத்தியது. 24 உரிமம் பெற்ற வணிக வங்கிகள் மற்றும் 6 அனுமதிப்பத்திரம் பெற்ற சிறப்பு வங்கிகள் 2021இல் வங்கித்துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, கடன்கள் மற்றும் முன் பணங்கள் மற்றும் நியாயமான வளர்ச்சியைப் பேண முடிந்ததுடன் ஒட்டுமொத்த சொத்து 16.87% வீத உயர்வை எட்டியது. தொடர்ச்சியான குறைந்த வட்டி பாதையானது கடன் போர்ட்போலியோவில் அதிகரிப்புக்கு வழிவகுத்தது, ஏனெனில் சில கடன் தயாரிப்புகளுக்கான மிகைப்பற்று, அடகு முற்பணம் மற்றும் கடன் அட்டைகள் இந்த ஆண்டில் அதிக வளர்ச்சியைப் பதிவு செய்தன. 2021 இறுதியில், திறைசேரிப் பிணையங்களில் உள்ள முதலீடுகள் அதிகரித்தமையினால், முதலீட்டுத்துறை 16.4% வீதத்தினால் வளர்ச்சியடைந்தது

அனுமதிப்பத்திரம் பெற்ற நிதி நிறுவனங்கள், கிராமப்புற வங்கிகள் மற்றும் கடன் கூட்டுறவு சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிற வைப்பு நிதி நிறுவனங்களின் மொத்த சொத்துக்கள் 31 டிசம்பர் 2021 இன் படி இ.ரூபா 1,636.7 பில்லியன்களாக இருந்தது. அனுமதிப்பத்திரம் பெற்ற நிதி நிறுவனங்களின் சொத்துகளில் சாதகமான விரிவாக்கத்தில் தூண்டப்பட்ட வருடத்தில் இத்துறை 6.1% வீத சொத்து வளர்ச்சியை எட்டியுள்ளது. மோட்டார் வாகன இறக்குமதியின் மீது விதிக்கப்பட்ட கட்டுபாடுகள் காரணமாக குத்தகை போட்போலியோவின் வளர்ச்சி குறைந்தாலும், அனுமதிப்பத்திரம் பெற்றி நிதி நிறுவனங்களினால் வழங்கப்பட்ட பிற கடன்கள் மற்றும் முற்பணங்கள் இந்த ஆண்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைப் பதிவுசெய்தன. நம்பிக்கை அலகு முகாமைத்துவக் கம்பனிகளின் சொத்தக்கள் வருடத்தில் ஒரு சுருங்குதலைச் சந்தித்ததனால், சிறப்பு நிதி நிறுவனங்கள் சொத்து போட்போலியோவில் ஓரளவு வளர்ச்சியை மட்டுமே அடைய முடிந்தது.

# புள்ளிவிபர மீளாய்வு

**அட்டவணை 3**
**பிரதான நிதியியல் துறைகளில் மொத்த சொத்துக்களின் பரம்பல்**

| நிதியியற் துறை | 2017 | | 2018 | | 2019 | | 2020 | | 2021 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இ.ரூபா பில்லியன்கள் | % | இ.ரூபா பில்லியன்கள் | % | இ.ரூபா பில்லியன்கள் | % | இ.ரூபா பில்லியன்கள் | % | இ.ரூபா பில்லியன்கள் | % |
| **வங்கித்துறை** | 11,897.4 | 69.7 | 13,711.4 | 72.2 | 14,442.1 | 71.9 | 17,087.9 | 72.9 | 19,969.9 | 74.7 |
| **வைப்புகளை ஏற்கும் ஏனைய நிதி நிறுவனங்கள்** | 1,370.4 | 8.0 | 1,603.2 | 8.4 | 1,553.2 | 7.7 | 1,536.5 | 6.6 | 1,636.7 | 6.1 |
| **விசேட நிதி நிறுவனங்கள்** | 388.9 | 2.3 | 241.1 | 1.3 | 286.7 | 1.4 | 386.5 | 1.6 | 387.7 | 1.4 |
| **ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள்** | 2,838.0 | 16.6 | 2,807.4 | 14.8 | 3,097.9 | 15.4 | 3,635.9 | 15.5 | 3,876.3 | 14.5 |
| **காப்புறுதிக் கம்பனிகள்** * | 581.7 | 3.4 | 630.4 | 3.3 | 696.9 | 3.5 | 796.4 (அ) | 3.4 | 888.4 (ஆ) | 3.3 |
| **மொத்தம்** | **17,076.4** | **100.0** | **18,993.5** | **100.0** | **20,076.8** | **100.0** | **23,443.2** | **100.0** | **26,759.0** | **100.0** |


*மூலம் : இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை - 2021*

** காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து கிடைக்கப் பெற்ற தரவுகளின் அடிப்படையில் காப்புறுதிக் கம்பனிகளின் சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.*

ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள் 2021 டிசம்பர் 31 இல் இ.ரூபா 3,876.3 பில்லியன் சொத்துக்களை பதிவு செய்ததன் மூலம் இலங்கையின் நிதித்துறையின் சொத்துத் தளத்திற்கு இரண்டாவது மிக உயர்ந்த பங்களிப்பை வழங்கியதுடன், 2020 இறுதியல் அறிவிக்கப்பட்ட இ.ரூபா 3,635.9 பில்லியன் சொத்துகளுடன் ஒப்பிடுகையில் 6.61% வளர்ச்சியைக் காட்டியது. ஊழியர்களின் சேமலாப நிதி (EPF), ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட ஓய்வூதிய மற்றும் சேமலாப நிதியங்கள என்பன ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்களின் முக்கிய கூறுகளாகும். அவற்றியன் சொத்துக்கள் ஊழியர்களின் சேமலாப நிதி (EPF), ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) உறுப்பினர்களின் நிகர பங்களிப்பின் கூட்டு விளைவின் வெளிப்பாடாக ஏற்பட்டதாகும், ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றின் பிரதான சொத்து போர்ட்போலியோ அரசாங்கப் பத்திரங்களைக் கொண்டிருந்தது, அதேசமயம் சிறிய பங்கினை பங்குகள் நிலையான வைப்புகள் மற்றும் கூட்டிணைந்த தொகுதிக் கடன்களின் விகிதங்கள் கொண்டிருந்தது. (மூலம் - இலங்கை மத்திய வங்கி அறிக்கை 2021)

காப்புறுதிக் கம்பனிகள் 2021ஆம் ஆண்டின் இறுதியில் இ.ரூபா 888.4 பில்லியன் சொத்துக்களை அறிக்கையிட்டதன் மூலம் நிதித்துறையின் ஒட்டுமொத்த சொத்து போர்ட்போலியோவிற்கு தொடரந்து அதே நேர்மறையான பங்களிப்பைத் தொடர்ந்தன, இது 11.55% வீத மிதமான வளரச்சியைப் பதிவு செய்தது.

**விளக்கப்படம் 3**
**31 டிசம்பர் 2021ஆம் திகதியன்று பிரதான நிதியியல் துறைகளில் மொத்த சொத்துக்களின் பரம்பல்**



# புள்ளிவிபர மீளாய்வு

## இலாபத்தன்மை

கடந்த ஆண்டு பாராட்டத்தக்க நிதிச் செயல்திறனைக் கண்ட பிறகு, முக்கியமாக பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் பலவீனமான செயற்திறன் காரணமாக காப்புறுதித்துறையானது மொத்த இலாபத்தில் (வரிக்கு முன்னரான இலாபம்) 2.03% வீதம் குறைந்துளது. கீழேயுள்ள அட்டவணை 4இல் காட்டபட்டுள்ளவாறு, கைத்தொழிற்துறையின் இலாபம் 2020ஆம் ஆண்டில் இ.ரூபா 43,649 மில்லியனுக்கு எதிராக 2021ஆம் ஆண்டில் இ.ரூபா 42,762 மில்லியனாக இருந்தது.

செயலாற்றுகை அடிப்படையில் 2021ஆம் ஆண்டில் நீண்டகால காப்புறுதி வியாபாரம் வலுவாக மீண்டதுடன் 20.82% (2020:- 9.36%) வீத இலாப வளர்ச்சியை எட்டியது. பெரும்பாலான நீண்ட கால காப்புறுதி நிறுவனங்கள் இந்த வருடம் அதிகரித்த இலாபத்தை வெளிப்படுத்தின, ஏஐஏ லைப், சொப்லொஜிக் லைப் மற்றும் யூனியன் லைப் ஆகியவை முக்கிய இலாப வளர்ச்சிக்கான உந்துகையை வழங்கின. 2021ஆம் ஆண்டின் கடைசி இரண்டு காலாண்டுகளில் அதிகரித்த செயல்திறன், 2021ஆம் ஆண்டிற்கான நியாயமான இலாபத்தைக் காட்ட எல்ஐசிக்கு உதவியது, இது கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட இழப்புக்கு மாறாக உள்ளது. ஒட்டுமொத்தமாக, மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வலுவான வளர்ச்சி, ஆண்டில் உருவாக்கப்பட்ட சாதகமான தேறிய முதலீட்டு வருமானம் மற்றும் பல நீண்டகால காப்புறுதியாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடுமையான செலவு மேம்படுத்தல் மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஆகியவை இலாபத்தை உயர்த்துவதற்கு முன்மையான பங்களிப்பை வழங்கின. இருப்பினும் பூட்கையாளர்களுக்கான உரிமைக்கோரல்கள் மற்றும் நன்மைகள் மிதமான முன்னேற்றத்தைக் கட்டண, முக்கியமாக இறப்பு நன்மைகள், முதிர்ச்சிக் கொடுப்பனவுகள் மற்றும் அதிகரித்த சரணடவுக் கொடுப்பனவுகள் என்பன இலாபத்தில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இலாபத்தில் ஒரு சுருக்கம் காணப்பட்ட போதிலும் சிலிங்கோ லைப் 2021ஆம் ஆண்டில் இ.ரூபா 8,545 மில்லியன் இலாபத்தைப் பதிவுசெய்தது. முறையே ஸொப்லொஜிக் லைப், எஸ்எல்ஐசி, யூனியன் லைப் மற்றும் ஏஐஏ லைப் என்பன உயர் இலாபத்தைப் வெளிப்படுத்தின.

2020ஆம் ஆண்டு பொதுக் காப்புறுதி வியாபாரத்திற்கு இலாபத்தின் அடிப்படையில் ஒரு நம்பிக்கைக்குரிய ஆண்டாக சிறப்பிக்கப்பட்டது, ஏனெனில் குறைக்கப்பட்ட கோரிக்கை வெளிப்பாட்டின் விளைவு கிட்டத்தட்ட அனைத்து பொதுக் காப்புறுதியாளர்களினதும் செயலாற்றுகையை மேம்படுத்தியுள்ளது. இருப்பினும், 2021ஆம் ஆண்டில் பெயார் பெஸ்ட் தவிர்த்து, அனைத்து பொதுக் காப்புறுதி நிறுவனங்களும் குறைந்த இலாபத்தை வெளிப்படுத்தியுள்ளன, இதன் விளைவாக பொதுக் காப்புறுதி வியாபரத்தின் ஒட்டுமொத்த இலாபம் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 18.48% வீதத்தினால் குறைந்துள்ளது. பொதுக் காப்புறுதிக் கோரிக்கைகள் ஆண்டில் 13.72% வீதம் அதிகத்ததுடன், இது பொருளாதார செயல்பாடு மற்றும் அசைவு ஆகியவற்றின் இயல்பான நிலையைப் பிரதிபலிக்கின்றது. ஆயினும்கூட, 2021இல் உதிரிப்பாகங்களின் விலை கடுமையாக அதிகரித்த போதிலும், மோட்டார் உரிமைக்கோரல்கள் அடக்கமாகவே இருந்தன. கோவிட்-19 தொடர்பான கோரிக்கைகளின் அதிக தூண்டுதலால் தூண்டப்பட்ட அக்ரஹார காப்புறுதித் திட்டத்துடன் தொடர்புடைய உடல்நல பூட்கைகளின் கோரிக்கைகளின் அளவு கணிசமாக அதிகரித்ததால், முழுமையான இலாபக் குறைப்பின் பெரும்பகுதிக்கு என்ஜடிஎப் காரணமாகியது. எலையனஸ் ஜெனரலும் மோட்டார் மற்றும் ஆதன வரிசைகளின் வியாபார அளவுகளில் ஏற்பட்ட குறைவின் தாக்கம் மற்றும் உயர்ந்த உரிமைக் கோரல்கள் என்பனவற்றால் இலாபத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை பதிவுசெய்தது.

**அட்டவணை 4**
**காப்புறுதிக் கம்பனிகளின் இலாபத்தன்மை**

| காப்புறுதியாளர் | 2020(அ) | | | 2021(ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | நீண்டகால காப்புறுதி (இ.ரூபா'000) | பொதுக் காப்புறுதி (இ.ரூபா'000) | மொத்தம் (இ.ரூபா'000) | மொத்தம் (இ.ரூபா'000) | பொதுக் காப்புறுதி (இ.ரூபா'000) | மொத்தம் (இ.ரூபா'000) |
| ஏஐஏ லைப் | 724,428 | | 724,428 | 2,567,127 | | 2,567,127 |
| எலைன்ஸ் ஜென. | | 2,135,071 | 2,135,071 | | 1,542,889 | 1,542,889 |
| எலைன்ஸ் லைப் | 80,751 | | 80,751 | 77,487 | | 77,487 |
| அமான ஜென. | | 38,763 | 38,763 | | 23,762 | 23,762 |
| அமான லைப் | (34,712) | | (34,712) | 8,443 | | 8,443 |
| ஆர்பிகோ | 278,595 | | 278,595 | 337,563 | | 337,563 |
| சிலிங்கோ ஜென. | | 1,862,479 | 1,862,479 | | 1,747,523 | 1,747,523 |

# புள்ளிவிபர மீளாய்வு

| காப்புறுதியாளர் | 2020(அ) | | | 2021(ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | நீண்டகால காப்புறுதி (இ.ரூபா'000) | பொதுக் காப்புறுதி (இ.ரூபா'000) | மொத்தம் (இ.ரூபா'000) | மொத்தம் (இ.ரூபா'000) | பொதுக் காப்புறுதி (இ.ரூபா'000) | மொத்தம் (இ.ரூபா'000) |
| சிலிங்கோ லைப். | 8,766,512 | | 8,766,512 | 8,545,374 | | 8,545,374 |
| கென்டினன்டல் | | 1,086,086 | 1,086,086 | | 1,000,329 | 1,000,329 |
| கோப்பரட்டிவ் ஜென. | | 870,078 | 870,078 | | 748,541 | 748,541 |
| கோப்லைப் | 69,805 | | 69,805 | 71,516 | | 71,516 |
| பியார்பர்ஸ்ட் | | 765,687 | 765,687 | | 882,991 | 882,991 |
| எச்என்பி லைப் | 999,363 | | 999,363 | 1,452,211 | | 1,452,211 |
| என்என்பி ஜென. | | 631,131 | 631,131 | | 411,168 | 411,168 |
| ஜனசக்தி லைப் | 1,020,903 | | 1,020,903 | 661,673 | | 661,673 |
| எல்ஜசி | (371,145) | | (371,145) | 130,073 | | 130,073 |
| எல்ஓஎல்சி ஜென. | | 1,537,397 | 1,537,397 | | 1,271,403 | 1,271,403 |
| எல்ஓஎல்சி லைப் | 453,650 | | 453,650 | 585,138 | | 585,138 |
| எம்பிஎஸ்எல் | 36,696 | (99,118) | (62,422) | 33,595 | (87,360) | (53,765) |
| என்ஜசீஎப் * | | 7,721,134 | *8,865,905 | | 5,342,569 | *5,932,368 |
| ஓரியன்ட் | | 185,814 | 185,814 | | 183,938 | 183,938 |
| பீப்பிள்ஸ் | | 1,667,520 | 1,667,520 | | 1,125,882 | 1,125,882 |
| சனச லைப் | 44,874 | | 44,874 | 128,673 | | 128,673 |
| சனச ஜென. | | 136,105 | 136,105 | | 75,251 | 75,251 |
| சொப்ட்லொஜிக் லைப் | 2,130,347 | | 2,130,347 | 2,965,674 | | 2,965,674 |
| எஸ்எல்ஜசி | 3,149,448 | 4,822,335 | 7,971,783 | 2,937,771 | 4,733,490 | 7,711,261 |
| யூனியன் லைப் | 1,793,841 | | 1,793,841 | 2,627,307 | | 2,627,307 |
| **மொத்தம்** | **19,143,355** | **23,360,482** | **43,648,608** | **23,129,625** | **19,042,376** | **42,761,800** |

**பயிர் வியாபாரத்தின் வரிக்கு முன்னரான இலாபமான இ.ரூபா 1,115 மில்லியனையும் (2020: இ.ரூபா 86 மில்லியன்) மற்றும் மீள்காப்புறுதி வியாபாரத்தின் வரிக்கு முன்னரான நட்டமான இ.ரூபா 545 மில்லியனையும் (2020: இ.ரூபா 1,230 மில்லியன்) உள்ளடக்கியுள்ளது..*

# புள்ளிவிபர மீளாய்வு

### காப்புறுதிக் கம்பனிகளின் பங்குதாரர்களின் நிதி

காப்புறுதிக் கம்பனிகளின் பங்குதாரர்களின் நிதியானது 2021இன் இறுதியில் இ.ரூபா 259,360 மில்லியனை (2020:இ.ரூபா 236,971 மில்லியன்) அடைந்து 9.45% வீத நியாயமான வளர்ச்சியை அறிக்கையிட்டது. பங்குதாரர்களின் நிதிகளின் மேம்பாடு முக்கியமாக ஈட்டப்பட்ட இலாபங்களால் ஆதரிக்கப்படுகின்ற அதேசமயம் அதிகரித்த அறிவிக்கப்பட்ட மூலதனமும் மேற்கூறிய வளர்ச்சிக்கு சிறிய பங்களிப்பை வழங்கியது. கோப்பரட்டிவ் ஜெனரல், கென்டினனஷல், எல்ஐசி, சனச லைப், எல்ஓஎல்சி ஜெனரல், எல்ஓஎல்சி லைப் ஆகியவை 2021இல் தங்கள் பங்கு மூலதனத்தை அதிகரித்தன, அதன்படி மொத்த அறிவிக்கப்பட்ட மூலதனம் 3.60% வீதம் உயர்த்தப்பட்டு, இ.ரூபா 45,248 மில்லியன் (2020: இ.ரூபா 43,696 மில்லியன்) என அறிவிக்கப்பட்டது.

கீழே உள்ள அட்டவணை 5 இல் பதிவுசெய்யப்பட்ட மொத்த ஏனைய இருப்புகள் முக்கியமாக தக்கவைக்கப்பட்ட உழைப்புகள், மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள்கள் மற்றும் ஏனைய பொது ஒதுக்குகளை உள்ளடக்கியிருந்தது, மற்றும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 11.76% வீத முன்னேற்றத்தை வெளிப்படுத்திய போதிலும் பங்கிலாப விநியோகங்களின் ஏற்றம் மொத்த தக்கவைக்கப்பட்ட வருமானத்தை சுருக்கியது. காப்புறுதி நிறுவனங்களின் ஒரு முறை மிகையான இ.ரூபா 16,248 மில்லியன் 'வரையறுக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட ஒதுக்கு' என பராமரிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டைப் போலவே, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அதி உயர் பங்குதாரர் நிதியாகக் கொண்டிருந்ததுடன், அதனைத் தொடர்ந்த இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை சிலிங்கோ லைப் மற்றும் ஏஐஏ லைப் என்பன பெற்றிருந்தன. இந்த வருடம் SRCC&T நிதியம் மற்றும் பயிர் காப்புறுதித் திட்டம் என்பவற்றினால் அதிகரித்த இலாப கையிருப்புகளால் உந்தப்பட்டு, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் பொதுக் காப்புறுதி நிறுவனங்களுக்கு இடையிலான மொத்த பங்குதாரர்களின் நிதியத்திற்கு அதிக பங்களிப்பாளராக தொடர்நதும் முதலிடத்தில் இருந்தது. எல்ஐசி பங்குதாரர்களின் நிதிகளின் அடிப்படையில் ஒரு நேர்மறையான நகர்வைக் காட்ட முடிந்தது, கம்பனி இ.ரூபா 189 மில்லியன் பங்கு மூலதனத்தை இட்டமையினால் இ.ரூபா 61 மில்லியனில் இருந்து, 2021ஆம் ஆண்டின் இறுதியில் இ.ரூபா 325 மில்லியனாக அதிகரித்தது. சிறிதளவு முன்னேற்றம் அடைந்திருந்தாலும், எல்ஐசி மற்றும் அமான லைப் ஆகியவை கடந்த நிதியாண்டுகளில் ஏற்பட்ட மொத்த இழப்புகளின் காரணமாக காப்புறுதி கைத்தொழிற்துறையில் மிகக் குறைந்த பங்குதாரர்களின் நிதிகளைத் தொடர்ந்து அறிக்கையிட்டன

**அட்டவணை 5**
**காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த பங்குதாரர்களின் நிதிகள**

| காப்புறுதியாளர் | 2020(அ) | | 2021(ஆ) | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த பங்குதாரர்களின் நிதிகள் (இ.ரூபா '000) | % | எழுதப்பட்ட மூலதனம் (இ.ரூபா '000) | கட்டுப்படுத்தப்பட்ட ஒழுங்கு முறைப்படுத்தல் ஒதுக்கு (இ.ரூபா '000) | மொத்த ஏனைய ஒதுக்குகள (இ.ரூபா '000) | மொத்த பங்குதாரர்களின் நிதிகள் (இ.ரூபா '000) | % |
| ஏஐஏ லைப் | 20,579,684 | 8.68 | 511,922 | 6,080,848 | 13,156,326 | 19,749,096 | 7.93 |
| எலைன்ஸ் ஜென. | 11,559,232 | 4.88 | 8,619,972 | | 3,714,848 | 12,334,820 | 4.76 |
| எலைன்ஸ் லைப் | 2,079,140 | 0.88 | 739,624 | | 584,901 | 1,324,525 | 0.51 |
| அமான ஜென. | 1,505,015 | 0.64 | 1,860,001 | | (308,625) | 1,551,376 | 0.60 |
| அமான லைப் | 459,612 | 0.19 | 500,000 | | (26,546) | 473,454 | 0.18 |
| ஆர்பிகோ | 1,860,809 | 0.79 | 675,565 | | 1,395,580 | 2,071,145 | 0.80 |
| சிலிங்கோ ஜென. | 12,972,646 | 5.47 | 500,200 | | 13,967,904 | 14,468,104 | 5.58 |
| சிலிங்கோ லைப். | 38,145,036 | 16.10 | 500,001 | 3,456,184 | 40,237,848 | 44,194,033 | 17.04 |
| கென்டினன்டல் | 2,843,804 | 1.20 | 1,250,000 | | 2,214,469 | 3,464,469 | 1.34 |
| கோப்பரட்டிவ் ஜென. | 3,399,461 | 1.43 | 2,198,316 | | 2,429,162 | 4,627,478 | 1.78 |

# புள்ளிவிபர மீளாய்வு

| காப்புறுதியாளர் | 2020(அ) | | 2021(ஆ) | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த பங்குதாரர்களின் நிதிகள் (இ.ரூபா '000) | % | எழுதப்பட்ட மூலதனம் (இ.ரூபா '000) | கட்டுப்படுத்தப்பட்ட ஒழுங்கு முறைப்படுத்தல் ஒதுக்கு (இ.ரூபா '000) | மொத்த ஏனைய ஒதுக்குகள (இ.ரூபா '000) | மொத்த பங்குதாரர்களின் நிதிகள் (இ.ரூபா '000) | % |
| கோப்லைப் | 1,077,740 | 0.45 | 544,260 | | 420,438 | 964,698 | 0.37 |
| பியார்பர்ஸ்ட் | 6,304,508 | 2.66 | 3,131,949 | | 3,745,463 | 6,877,412 | 2.65 |
| எச்என்பி லைப் | 7,260,988 | 3.06 | 1,171,875 | 381,156 | 5,479,354 | 7,032,385 | 2.71 |
| எச்என்பி ஜென. | 2,083,242 | 0.88 | 1,150,000 | | 1,090,623 | 2,240,623 | 0.86 |
| ஜனசக்தி லைப் | 10,067,149 | 4.25 | 4,853,752 | 1,795,829 | 3,556,867 | 10,206,448 | 3.94 |
| எல்ஐசி | 60,840 | 0.03 | 839,016 | | (513,860) | 325,156 | 0.13 |
| எல்ஓஎல்சி ஜென. | 3,063,539 | 1.29 | 800,000 | | 3,204,018 | 4,004,018 | 1.54 |
| எல்ஓஎல்சி லைப் | 1,797,256 | 0.76 | 1,350,000 | 256,134 | 795,682 | 2,401,816 | 0.93 |
| எம்பிஎஸ்எல் | 1,029,668 | 0.43 | 2,280,022 | | (1,313,041) | 966,981 | 0.37 |
| என்ஐசீஎப் | 13,087,460 | 5.52 | | | 14,751,327 | 14,751,327 | 5.69 |
| ஓரியன்ட் | 1,016,320 | 0.43 | 825,000 | | 329,136 | 1,154,136 | 0.44 |
| பீப்பிள்ஸ் | 4,619,185 | 1.95 | 1,350,000 | | 3,591,619 | 4,941,619 | 1.91 |
| சனச லைப் | 1,092,456 | 0.46 | 1,045,346 | | 176,549 | 1,221,895 | 0.47 |
| சனச ஜென | 732,349 | 0.31 | 508,996 | | 231,819 | 740,815 | 0.29 |
| சொப்ட்லொஜிக் லைப் | 9,936,247 | 4.19 | 1,062,500 | 798,004 | 8,727,926 | 10,588,430 | 4.08 |
| எஸ்எல்ஐசி | 63,229,026 | 26.68 | 6,000,000 | 98,237 | 65,130,454 | 71,228,691 | 27.46 |
| யூனியன் லைப் | 15,108,489 | 6.38 | 1,000,000 | 3,381,934 | 11,073,159 | 15,455,093 | 5.96 |
| **மொத்தம்** | **236,970,901** | **100.00** | **45,268,317** | **16,248,326** | **197,843,400** | **259,360,043** | **100** |

*குறிப்பு: கணக்காய்வு சீராக்கத்துடன் 2020 இல் வெளியிடப்பட்ட எண்கள் திருத்தப்பட்டன*

# புள்ளிவிபர மீளாய்வு

### காப்புறுதியாளர்களின் கிளைகள், ஊழியர்கள் மற்றும் முகவர்களின் பகுப்பாய்வு

,வ்வருடத்தினுள் காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் மொத்த கிளை வலையமைப்பின் எண்ணிக்கை 1,953 இல் இருந்து 1,896 ஆக குறைவடைந்துள்ளது, இதற்கு பிரதான காரணம் இரண்டு காப்புறுதியாளர்கள் தங்களுடைய தொடர்புடைய நிதி நிறுவனங்களுக்கு சொந்தமான வளாகங்களில் இருந்து தங்களுடைய சொந்த வளாகங்களுக்கு போனமையினால் தங்களுடைய கிளைகளை மீள்கட்டமைப்பு செய்தமையாகும். எனினும், சவாலான தொழிற்பாட்டு சூழலுக்கு மத்தியிலும் வியாபார நடவடிக்கைகளின் வளர்ச்சியை எளிதாக்குவதற்கு நாடு முழுவதிலும் கிளைகளின் விரிவான அணுவல் அவசியம் என்பதனால், 2021ஆம் ஆண்டில் பெரும்பாலான காப்புறுதி நிறுவனங்கள் புதிய கிளைகளைத் திறந்தன. மொத்தக் கிளைகளில் 964 நீண்ட கால காப்புறுதிக் கிளைகளும், 775 பொதுக் காப்புறுதிக் கிளைகளும் 157 கலவைக் காப்புறுதிக் கிளைகளும் உள்ளடங்குகின்றன. நாட்டின் அதிக பூட்கையாளர்களைக் கொண்டுள்ள மேல் மாகாணத்திலும் அதனைத் தொடர்ந்து தென் மற்றும் மத்திய மாகாணத்திலுமே அதிக எண்ணிக்கையான கிளைகள் உள்ளன.

2021ஆம் ஆண்டின் இறுதியில் காப்புறுதித் துறையில் ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 20,032 ஆவதுடன், 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 19,571 ஆக இருந்த எண்ணிக்கை 2.36% வீதத்தினால் சற்று அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டுகளைப் போலவே, 60% வீதத்தை விட அதிகமான ஊழியர்கள் மேல் மாகாணத்திலேயே இருந்தனர். இதில் 10,999 நபர்கள் பொதுக் காப்புறுதி நிறுவனங்களிலும், 6,212 நபர்கள் நீண்ட கால காப்புறுதி நிறுவனங்களிலும், 2,821 நபர்கள் கலவைக் காப்புறுதி நிறுவனங்களிலும் பணிபுரிகின்றனர்.

எல்ஜசி, எச்என்பி லைப், ஸொப்ட் லொஜிக் லைப், ஜனசக்தி லைப், எல்ஓஎல்சி லைப் மற்றும் சனச லைப் போன்ற பல காப்பறுதி நிறுவனங்கள் தங்கள் வலையமைப்பில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை செய்தததன் காரணமாக, வருடத்தில் ஒட்டுமொத்த முகவர் படையில் ஒரு சிறிய முன்னேற்றத்தை காணக்கூடியதாக இருந்தது. பெரும்பான்மையான பொதுக் காப்புறுதிக் கம்பனிகளும் கலவைக் காப்புறுதியாளரகளும் கணிசமான எண்ணிக்கையிலான முகவர்களை தகுதியின்மை, மோசமான செயற்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் நீக்கியுள்ளன. பல நிறுவனங்கள் வினைத்திறனுள்ள முகவர் படையை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தி, அதற்கேற்றப செயற்திறனற்ற முகவர்களை இடை நிறுத்தின அதேவேளையில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான முகவர்கள் இராஜினாமா செய்ததை ஆண்டு முழுவதிலும் அவதானிக்க முடிந்தது. 2021ஆம் ஆண்டின் இறுதியில், நீண்ட கால காப்புறுதி நிறுவனங்களில் 61.42% வீத முகவர்களும் கலவைக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி நிறுவனங்களில் முறையே 30.77% மற்றும் 7.81% வீத முகவர்களும் காணப்பட்டனர்

**அட்டவணை 6**
**31 டிசம்பர் 2020 மற்றும் 31 டிசம்பர் 2021 அன்று கிளைகள், ஊழியர்கள் மற்றும் முகவர்களின் எண்ணிக்கை**

| மாகாணம் | கிளைகளின் எண்ணிக்கை | | ஊழியர்களின் எண்ணிக்கை | | காப்புறுதி முகவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|
| | 2020 | 2021 | 2020 | 2021 | 2020 | 2021 |
| மத்திய மாகாணம் | 207 | 197 | 1,214 | 1,327 | 3,741 | 3,705 |
| கிழக்கு மாகாணம் | 126 | 130 | 605 | 665 | 2,112 | 2,401 |
| வட மத்திய மாகாணம் | 137 | 134 | 663 | 736 | 2,520 | 2,472 |
| வட மேல் மாகாணம் | 221 | 207 | 1,244 | 1,221 | 4,676 | 4,414 |
| வட மாகாணம் | 133 | 130 | 615 | 689 | 2,683 | 3,513 |
| சப்பரகமுவ மாகாணம் | 148 | 145 | 835 | 907 | 3,088 | 3,527 |
| தென்மாகாணம் | 242 | 238 | 1,527 | 1,599 | 5,124 | 5,162 |
| ஊவா மாகாணம் | 107 | 117 | 580 | 742 | 2,153 | 2,087 |
| மேல் மாகாணம் | 632 | 598 | 12,288 | 12,146 | 16,622 | 16,539 |
| **மொத்தம்** | **1,953** | **1,896** | **19,571** | **20,032** | **42,719** | **43,820** |

# புள்ளிவிபர மீளாய்வு


## காப்புறுதிக் கம்பனிகளின் விநியோக ஊடகம்

பல்வகைப்படுத்தப்படுல் காப்புறுதியாளர்களுக்கு ஒரு முக்கிய விடயமாக மாறியுள்ளது, ஏனெனில் தொடர்ச்சியான தொற்றுநோய் சூழல் காப்புறுதியாளர்கள் தங்கள் காப்புறுதி வகைகளை காப்புறுதியார்களுக்கு விற்கும் விதத்தை வலுவாகப் பாதித்தது. தொற்றுநோய் வெடித்தவுடன் காப்புறுதி பற்றிய விழிப்புணர்வைக் கொண்ட இளைய தலைமுறையினரின் கோரிக்கைகளுடன் சிறப்பாக சீரமைக்க இது உதவுவதால், நேருக்கு நேர் விற்பனைக்குப் பதிலாக டிஜிடல் ஊடகங்களைப் பயன்படுத்தும் போக்கு அதிகரித்துள்ளது. இணையம், சமூக ஊடகங்கள் மற்றும் மொபைல் அப்பிளிகே'ன்கள் மூலம் ஊருவாக்கப்படும் தவணைக் கட்டணங்களின் படிப்படியான அதிகரிப்பு இதற்குச் சான்றாகும். அவை கீழே உள்ள விளக்கப்படும் 5 இல் 'நேரடி' வகையில் கீழ் காட்டப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டில் முகவர்கள் ஊடகம் இலங்கையின் காப்புறுதிச் சந்தையில் மொத்த தவணைக் கட்டண விநியோகத்தில் தனது ஆதிக்கத்தை தொடர்ந்தது, நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்திற்கு 80.55% வீத பங்களிப்பையும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்திற்கு 23.89% வீத பங்களிப்பையும் வழங்கியுள்ளது. நீண்ட கால காப்புறுதி வகைகள் இன்னும் முதன்மையாக முகவர் வலையமைப்பு மூலம் விற்கப்படுகின்றன, பொது காப்புறுதி நிறுவனங்கள் நேரடி ஊடகம், பிரத்தியோக விற்பனையாளர்கள், முகவர்கள் மற்றும் தரகர்களை தங்கள் முதன்மை விநியோக வகைகளாக பயன்படுத்தின, இது 2021ஆம் ஆண்டு பொது காப்புறுதி வியாபாரத்தின் மொத்த தவணைக் கட்டண வருமானத்தில் 89.68% வீதமாகும். பல நிறுவனங்கள் ஏற்கனவே இருக்கும் வங்கி காப்புறுதிக் கூட்டாண்மைகளை வலுப்படுத்தி, அதன் வரம்பை விரிவுபடுத்த தொழில்நுட்பத்தை மேம்படுத்தியுள்ளதால், குறிப்பாக நீண்டகால காப்புறுதியாளர்களுக்கு பேங்க்ஸ்யூரன்ஸ் ஊடகம் முக்கியமானதாக இருந்தது. நேரடியாக வரும் வாடிக்கையாளர்கள், மொபைல் அப்பிளிகேஷன்ஸ், இணையம் மற்றும் என்ஜடீஎப் ஊடாக அமுல்படுத்தப்பட்ட அரசாங்க காப்புறுதித் திட்டங்கள் மூலம்

**விளக்கப்படம் 4**


***31 டிசம்பர் 2021 அன்று கிளைகள், ஊழியர்கள் மற்றும் முகவர்களின் எண்ணிக்கை***



# புள்ளிவிபர மீளாய்வு

பெறப்பட்ட தவணைக்கட்டணங்கள் நேரடி ஊடாகத்தின் பிரதான ஆக்கக்கூறுகளாகும், இது பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்திற்கு அதிக பங்களிப்பை பதிவுசெய்தது. அந்ததந்தக் காப்புறுதியாளரைச் சேர்ந்த குழுவில் உள்ள நிறுவனங்களில் இருந்து உருவாக்கப்பட்ட முழு மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் தொடர்புடைய / குழு நிறுவனங்களின் ஊடகத்தின் கீழ் தெரிவிக்கப்பட்டது, இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முழு மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்திற்கு அதேயளவிலான பங்களிப்பை வெளிப்படுத்தியது.

**விளக்கப்படம்** *5*
**காப்புறுதிக் கம்பனிகளின் விநியோக ஊடகங்கள்**




| | 2020 நீண்ட கால | 2020 பொது | 2021 நீண்ட கால | 2021 நீண்ட கால |
|---|---|---|---|---|
| முகவர்கள் | 80.12 | 25.07 | 80.55 | 23.89 |
| தரகர்கள் | 1.27 | 18.82 | 1.98 | 18.40 |
| முகவர்கள் தவிர்ந்த நிறைவேற்று விற்பனைப் படை | 0.67 | 20.37 | 0.57 | 21.59 |
| நேரடி | 2.32 | 25.17 | 2.66 | 25.80 |
| வங்கிக்காப்புறுதி | 14.37 | 3.40 | 13.23 | 3.32 |
| தொடர்புடைய/ குழுக் கம்பனிகள | 1.26 | 6.72 | 1.00 | 6.53 |
| ஏனையவை | 0.00 | 0.45 | 0.01 | 0.46 |

## நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

### மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்

கோவிட் 19 நோய்த்தொற்று 2021இல் பொருளாதார நடவடிக்கைகளைத் தொடர்ந்து சீர்குலைத்தது. எவ்வாறாயினும், ஆண்டு முழுவதிலும் நிலவிய பெருகிய சவால்கள் இருந்தபோதிலும், தடுப்பூசி இயக்கத்தின் வெற்றிகரமான செயற்பாடு காரணமாக தொடர்ச்சியான பொருளாதார நடவடிக்கைகள் ஆதரிக்கப்பட்டு நீண்ட கால காப்புறுதி வியாபாரக் கம்பனிகளினால் 2021ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக இ.ரூபா 124,752 மில்லியன் (2020: இ.ரூபா 103,000 மில்லியன்) பெறப்பட்டு 21.12% (2020:16.01%) வளர்ச்சியைப் பதிவுசெய்ய முடிந்ததன் ஊடாக வளர்ச்சி பலப்படுத்தப்பட்டது. வியாபாரம் மற்றும் தொழிற்பாட்டு மாதிரிகள் டிஜிடல்மயமாக்கல், புத்தாக்க தயாரிப்புகள், விநியோக ஊடகங்களில் மேம்படுத்தல் போன்றவை ஆயுள் காப்புறுதிப் பிரிவின் இந்தப் பாராட்டத்தக்க வளர்ச்சிக்கு பங்களித்துள்ளன. மேலும், இந்த நோய்த்தொற்று நிச்சயமற்ற தன்மைகள், காப்புறுதியின் முக்கியத்துவம் மற்றும் கைத்தொழிற்துறையின் மீதான பொது மக்களின் நம்பிக்கையைப் பற்றிய பொது விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் ஆயுட் காப்புறுதித்துறை உயர்த்தப்பட்டது. ஆண்டின் முற்பகுதியல் சந்தையில் நிலவிய குறைந்த வட்டி வீத ஆட்சியானது, வழங்கப்பட்ட கவர்சிகரமான உத்தரவாதமான வருமானத்தின் காரணமாக குறுகிய கால ஆயுட் காப்புறுதிகளின் வளர்ச்சியை ஏற்படுத்தியது.

2020 இல் நிரூபிக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டண வளர்ச்சி வீதத்தின் மேல்நோக்கிய பாதையைப் பராமரிப்பதன் மூலம், 2021இல் முழு மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டண வளர்ச்சி வீதம் 21.12% வீதமான மேலும் துரிதப்படுத்தப்பட்டது, அதேநேரத்தில் ஆயுட் காப்புறுதிப் பிரிவில் கடந்த ஐந்து ஆண்டுகளில் மிக உயர்ந்த வளர்ச்சி வீதத்தைப் பதிவுசெய்துள்ளது, இது ஆயுட் காப்புறுதியாளர்களின் சவாலுக்கு மத்தியிலான நெகிழ்ச்சியான செயல்திறனைக் குறிக்கின்றது. மதிப்பின் அடிப்படையில் 2017 இருந்து 2021 வரை மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் 74.30% வீதத்தினால் மேம்பட்டுள்ளது.

ஆயுட் காப்புறுதிச் சந்தை ஊடுறுவல், அது ஒரு மேல்நோக்கிய பாதையில் இருந்தாலும், ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இன்னும் குறைவாகவே உள்ளது. சந்தையில்

# புள்ளிவிபர மீளாய்வு

வளர்ந்து வரும் போக்குகை எதிர்கொள்ளும் அதேவேளையில் பின்தங்கிய வாடிக்கையாளர் பிரிவுகளைச் சென்றடைவது, வரும் ஆண்டுகளில் வளர்ச்சியைக் கைப்பற்ற காப்பறுதியாளர்களுக்கு உதவும். எனினும், அடுத்த சில ஆண்டுகளில் சவாலான பேரினப் பொருளாதாரச் சூழலின் பின்னணியில் ஆயுட் காப்புறுதியாளர்கள் கொந்தளிப்பில் செல்ல வேண்டியிருக்கும்.

நீண்டகால காப்புறுதிக் கைத்தொழிற்துறை 13 நீண்ட கால காப்புறுதிக் கம்பனிகளையும் 02 கலவைக் காப்புறுதியாளர்களையும் இணைத்து மிகவும் போட்டித்தன்மையுள்ள சந்தையைத் தொழிற்படுத்தியது. ஏஐஏ லைப், எலைன்ஸ் லைப், எல்ஐசி மற்றும் ஸொப்ட்லொஜிக் லைப் எனும் நான்கு கம்பனிகளும் வெளிநாட்டுக் காப்புறுதிக் கம்பனிகளுடன் சேர்ந்தியங்குகின்றன.

**அட்டவணை 7**
**கம்பனி ரீதியான எழுதப்பட்ட தவணைக் கட்டணம் மற்றும் சந்தைப் பங்கு - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | 2017 | | 2018 | | 2019 | | 2020 (அ) | | 2021 (ஆ) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா | சந்தைப் பங்கு (%) |
| ஏஐஏ லைப் | 11,510,581 | 16.08 | 12,739,351 | 15.87 | 13,848,283 | 15.60 | 14,049,559 | 13.64 | 16,517,328 | 13.24 |
| எலைன்ஸ் லைப் | 1,178,817 | 1.65 | 1,301,254 | 1.62 | 1,403,858 | 1.58 | 1,476,069 | 1.43 | 1,886,703 | 1.51 |
| அமான லைப் | 792,174 | 1.11 | 827,948 | 1.03 | 851,293 | 0.96 | 767,232 | 0.74 | 929,830 | 0.75 |
| ஆர்பிகோ | 1,038,085 | 1.45 | 1,387,432 | 1.73 | 1,633,156 | 1.84 | 1,836,100 | 1.78 | 2,311,633 | 1.85 |
| சிலிங்கோ லைப். | 15,765,484 | 22.03 | 17,812,774 | 22.18 | 18,718,553 | 21.08 | 22,076,250 | 21.43 | 25,565,050 | 20.49 |
| கோப்லைப் | 626,972 | 0.88 | 619,881 | 0.77 | 772,782 | 0.87 | 775,410 | 0.75 | 840,604 | 0.67 |
| எச்என்பி லைப் | 3,963,642 | 5.54 | 4,420,513 | 5.51 | 5,175,044 | 5.83 | 5,487,039 | 5.33 | 7,091,470 | 5.68 |
| ஜனசக்தி லைப் | 2,902,873 | 4.06 | 3,008,842 | 3.75 | 3,511,660 | 3.96 | 3,819,817 | 3.71 | 5,460,929 | 4.38 |
| எல்ஐசி | 582,114 | 0.81 | 522,698 | 0.65 | 598,896 | 0.67 | 714,127 | 0.69 | 1,004,700 | 0.81 |
| எல்ஓஎல்சி லைப் | 2,467,166 | 3.45 | 2,610,785 | 3.25 | 2,682,522 | 3.02 | 3,236,480 | 3.14 | 4,420,081 | 3.54 |
| எம்பிஎஸ்எல் | 123,732 | 0.17 | 65,839 | 0.08 | 54,757 | 0.06 | 40,996 | 0.04 | 40,370 | 0.03 |
| சனச லைப் | 454,056 | 0.62 | 521,193 | 0.65 | 537,171 | 0.61 | 694,430 | 0.67 | 1,247,855 | 1.00 |
| எஸ்எல்ஐசி | 12,517,119 | 17.49 | 13,205,802 | 16.45 | 14,820,025 | 16.69 | 19,257,997 | 18.70 | 21,975,988 | 17.62 |
| சொப்ட்லொஜிக் லைப் | 7,530,935 | 10.52 | 10,005,733 | 12.46 | 12,531,283 | 14.11 | 15,660,116 | 15.20 | 20,053,302 | 16.07 |
| யூனியன் லைப் | 10,117,630 | 14.14 | 11,243,915 | 14.00 | 11,647,757 | 13.12 | 13,108,605 | 12.73 | 15,406,161 | 12.35 |
| **மொத்தம்.** | **71,571,380** | **100** | **80,293,960** | **100** | **88,787,041** | **100** | **103,000,228** | **100** | **124,752,003** | **100** |
| **வளர்ச்சி வீதம் (%)** | **12.75** | | **12.19** | | **10.58** | | **16.01** | | **21.12** | |

கடந்த ஆண்டுகளைப் போலவே, சிலிங்கோ லைப் நிறுவனம் 2021இல் என்டோமென்ட் பூட்கைகளில் இருந்து உருவாக்கப்பட்ட தவணைக் கட்டண வளர்ச்சியால் உந்தப்பட்டு 15.80% (2020: 17.94%) வீதத்துடன் இ.ரூபா 25,565 மில்லியன் (2020: இ.ரூபா 22,076 மில்லியன்) மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை உருவாக்கியதன் மூலம் இ.ரூபா 25 பில்லியனைத் தண்டி நீண்ட கால காப்புறுதிச் சந்தையில் முன்னணியாளர் எனும் நிலையைத் தக்க வைத்துக்கொண்டது. சிலிங்கோ லைப் உருவாக்கிய மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் சந்தைப் பங்கின் 20.49% (2020:21.43%) வீதமாவதுடன், 2020 உடன் ஒப்பிடுகையில் இது சற்றுக் குறைந்துள்ளது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் ஸொப்ட்லொஜிக் லைப் என்பன 2021ஆம் ஆண்டில் முறையே இ.ரூபா 21,976 மில்லியன் (2010:19,258 மில்லியன்) மற்றும் இ.ரூபா 20,053 மில்லியனை (2020: இ.ரூபா 15,660 மில்லியன்) எழுதப்பட்ட தவணைக் கட்டணமாகப் பெற்றுக்கொண்டதன் ஊடாக சந்தைப் பங்கில் முறையே 17.62% (2020: 18.70%) மற்றும் 16.07% (2020: 15.20%) வீதத்தைப் பெற்று இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்றுக்கொண்டன. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சந்தைப் பங்கு சுருங்கினாலும், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தனது மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை

# புள்ளிவிபர மீளாய்வு

14.11% வீதத்தினால் அதிகரிக்க முடிந்தது, இது முதலீட்டுத் திட்டத்துடன் ஏற்கனவே உள்ள பங்குபெறாத ஒரு தயாரிப்புக்காக வெளியிடப்பட்ட புதிய பூட்கைகளால் பெரிதும் உயர்த்தப்பட்டது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் 16.07% ஆக உயர்ந்த சந்தைப் பங்கைக் கைப்பற்றியதன் மூலம் ஸொப்ட்லொஜிக் லைப் ஆனது அதன் அதிவேக வளர்ச்சி வேகத்தைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டது. மேலும், ஊடக மூலோபாயத்தின் செயல்படுத்தல் மற்றும் விதிவிலக்கான செயல்திறன் மற்றும் டிஜிடல் விநியோக ஊடகத்தின் விரிவாக்கம், உள் செயல்முறைகளில் டிஜிடல் மயமாக்கல் ஆகியவற்றின் காரணமாக நிறுவனம் 28.05% (2020:24.97%) வீத வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்ததன் மூலம் அதன் இரட்டை இலக்க வளர்ச்சியைத் தக்க வைத்துக் கொண்டது.

இந்த மூன்று நிறுவனங்களும் நீண்ட கால காப்புறுதி மொத்த சந்தைப் பங்கில் 54.18% (2020:55.33%) வீதத்தைக் கைப்பற்றின, 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இது சற்று வீழ்ச்சியடைந்துள்ளது.

ஏஐஏ கடந்த ஆண்டைப் போலவே சந்தையில் நான்காவது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டது, அதன் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை 17.56% (2020:14.5%) கணிசமாக விரிவுபடுத்தி, இ.ரூபா 16,517 மில்லியனை (2020:இ.ரூபா 14,050 மில்லியன்) எட்டியது, முக்கியமாக புதிய வியாபாரம் மற்றும் புதுப்பித்தல் தவணைக் கட்டணங்கள், முகவரின் வலுவான செயலாற்றுகை மற்றும் வங்கி காப்புறுதி விநியோக ஊடகங்கள், டிஜிடல் தத்தெடுப்பு போன்றவை வளர்ச்சிக்கு காரணமாக இருக்கலாம். மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் நிறுவனத்தின் சந்தைப் பங்கு 13.24% (2020: 13.64%) ஆக இருந்தது, இது மேலும் சுருங்கிய போதிலும் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைந்தளவில் இருந்தது.

கடந்த ஆண்டுகளைப் போலவே, யூனியன் லைப் இ.ரூபா 15,406 மில்லியன் (2020:இ.ரூபா 13,109 மில்லியன்) மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தைப் பதிவுசெய்து சந்தையில் ஐந்தாவது இடத்தைப் பிரகடனப்படுத்தியது. அதேநேரத்தில் புதுப்பித்தல், தவணைக் கட்டணங்கள், முகவர் ஊடகம் மற்றும் வங்கி ஊடாக காப்புறுதி ஊடகத்தின் வலுவான செயலாற்றுகை போன்றவை அதன் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை 17.53% (2020: 12.54%) என கணிசமாக உயர்த்தியது. நிறுவனம் அதன் 12.35% (2020: 12.73%) வீத சந்தைப் பங்கை தக்கவைத்துக்கொண்டது.

எச்என்பி அசூரன்ஸ், ஜனசக்தி லைப் மற்றும் எல்ஓஎல்சி லைப் ஆகியவை இ.ரூபா 7,091 மில்லியன் (2020:இ.ரூபா 5,487 மில்லியன்), இ.ரூபா 5,461 மில்லியன் (2020:இ.ரூபா 3,820 மில்லியன்), இ.ரூபா 4,420 மில்லியன் (2020:இ.ரூபா 3,236 மில்லியன்) மற்றும் முறையே 29.24% (2020: 6.03%), 42.96% (2020: 8.78%) மற்றும் 36.57% (2020: 20.65%) வளர்ச்சி வீதங்களுடன் ஆறாம், ஏழாம் மற்றும் எட்டாம் இடங்களை சந்தையில் பெற்றன.


மேலும், குறிப்பிடத்தக்க மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வளர்ச்சி வீதங்களை ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் சனச லைப், எலைன்ஸ் லைப், ஆர்ப்பிகோ மற்றும் அமான லைப் ஆகியவை முறையே 79.69% (2020: 29.28%), 27.28% (2020: 5.14%), 25.90% (2020: 12.43%) மற்றும் 21.19% (2020: நெபயவளைந 9.87%) வீதங்களைப் பெற்றன.

எம்பிஎஸ்எல் தவிர்ந்த ஏனைய அனைத்து ஆயுட் காப்புறுதியாளர்களும் 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் தங்கள் உச்சளவை அதிகரிக்க முடிந்துள்ளமை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இது அவர்களின் நெருக்கடிக்கு மத்தியிலும் அவர்களின் மீள்தன்மைக்கான சான்றாகும். எம்பிஎஸ்எல் புதிய வியாபாரத்திற்கு உத்தரவாதம் அளிக்காமல் ஏற்கனவே உள்ள வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்வதன் மூலம் மட்டுமே போர்ட்போலியோவைக் கொண்டு செல்லத் திட்டமிட்டுள்ளது.

விளக்கப்படம் 6 ஒவ்வொரு நீண்ட கால காப்புறுதியாளர்களினதும் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் சந்தைப் பங்கினை விளக்குகின்றது.

**விளக்கப்படம் 6**

**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் கம்பனி ரீதியான சந்தைப் பங்குகள் - 31 டிசம்பர் 2021ஆம் திகதியன்று நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**



# புள்ளிவிபர மீளாய்வு

## மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்திற்கான முதல் ஐந்து பங்களிப்பாளர்களும் ஏனைய காப்புறுதியாளர்களும் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

2017 இல் இருந்து 2021 வரையான காலப்பகுதி வரை மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்திற்கு பங்களிப்பு செய்த முதல் ஐந்து பங்களிப்பாளர்ளையும் ஏனைய காப்புறுதியாளர்களையும் விளக்கப்படம் 7 விளக்குகின்றது.

நீண்ட கால காப்புறுதி கைத்தொழிற்துறையின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் முதல் ஐந்து பங்களிப்பாளர்களும் இ.ரூபா 99,518 மில்லியன் (2020 இ.ரூபா 84,153 மில்லியன்) பெறுமதியான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தைப் பெற்று 79.77% (2020:81.70%) வீதத்தைப் பதிவு செய்கின்ற அதேவேளையில், ஏனைய 10 காப்புறுதியாளர்களும் இ.ரூபா 25,234 மில்லியனைப் (2020:இ.ரூபா 18,848 மில்லியன்) பெற்று 20.23% (2020: 18.30%) வீதத்தைப் பதிவு செய்தனர். சிலிங்கோ லைப், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் லைப், ஸொப்ட் லொஜிக் லைப், ஏஐஏ லைப், மற்றும் யூனியன் லைப் என்பன நீண்ட கால காப்புறுதி சந்தைப் பங்கில் முதல் ஐந்து இடங்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

சிலிங்கோ லைப், அதன் விதிவிலக்கான செயலாற்றுகையை உறுதிசெய்து, கடந்த ஐந்து வருடங்களாகக் கருதப்பட்டதைப் போன்று சந்தையில் முதலிடத்தைப் பெற்றுள்ளதுடன், சந்தைப் பங்கில் சிறிதளவு வீழ்ச்சியையும் சந்தித்துள்ளது. எல்எல்ஐசி லைப் 14.11% வருமான வளர்ச்சியுடன் இரண்டாவது இடத்தை உறுதிப்படுத்தியது, இருப்பினும் கடந்த இரண்டு ஆண்டுகளாக அதிகரித்துவரும் போக்கில் இருந்த சந்தைப் பங்கு சற்று சுருங்கியுள்ளது.


ஸொப்லொஜிக் லைப் தொடர்ந்து வெற்றியை நோக்கி தனது உந்துதலை வெளிப்படுத்தி, சந்தையில் மூன்றாவது இடத்தைப் பிடித்த அதேவேளையில் அதன் சந்தைப் பங்கினையும் 16.07% வீதமாக உயர்த்தியது. 2021 ஆம் ஆண்டில் அதன் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணப் பங்கை உயர்த்திய முதல் ஐந்து கம்பனிகளில் ஒரே ஆட்டக்காரராக மாறியது. கடந்த ஆண்டைப் போலவே, நீண்ட கால காப்புறுதிச் சந்தையில் நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களைப் பெற்று ஏஐஏ மற்றும் யூனியன் லைப் சாதனை படைத்தன.

முதல் ஐந்து நிறுவனங்களின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் 2021இல் 18.26% (2020:17.59%) வீதமாக அதிகரித்தது, ஆனால் மீதமுள்ள பத்து நிறுவனங்களின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வளர்ச்சி, அவர்கள் வைத்திருந்த சந்தைப் பங்கில் விரிவாக்கம் ஏற்பட்டதன் விளைவாக 20.23% வீதத்தை எட்டியதன் மூலம் 33.88% (2020: 9.45%) வீதம் எனும் செறிவூட்டப்பட்ட வளர்ச்சியைப் பதிவு செய்ததால், அவர்கள் வைத்திருந்த கூட்டுச் சந்தைப் பங்கு 79.77% வீதமாகக் குறைக்கப்பட்டது.

கடந்த நான்கு ஆண்டுகில் 80% வீதத்திற்கும் மேல் குவிந்துள்ள முதல் ஐந்து காப்பறுதியாளர்களின் சந்தைப் பங்கு, மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் 80% வீதத்திற்கும் கீழ் சரிந்தது, மீதமுள்ள பத்துக் கம்பனிகளின் ஒருங்கிணைந்த சந்தைப் பங்குகள் 2021இல் முதல் முறையாக 20% ஐ தாண்டியது, இது சந்தையில் வளர்ந்து வரும் போட்டித்தன்மையைக் குறிக்கின்றது.

**விளக்கப்படம் 7**

**2017இல் இருந்து 2021 வரை முதல் ஐந்து பங்களிப்பாளர்களும் ஏனைய காப்புறுதியாளர்களும் - நீண்ட கால காப்பறுதி வியாபாரம்**




| | சிலிங்கோ லைப் | எஸ்எல்ஐசி | சொப்ட்லொஜிக் லைப் | ஏஐஏ லைப் | யூனியன் லைப் | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|
| 2017 | 22.03 | 17.49 | 10.52 | 16.08 | 14.14 | 19.74 |
| 2018 | 22.18 | 16.45 | 12.46 | 15.87 | 14.00 | 19.04 |
| 2019 | 21.08 | 16.69 | 14.11 | 15.60 | 13.12 | 19.40 |
| 2020(அ) | 21.43 | 18.70 | 15.20 | 13.64 | 12.73 | 18.30 |
| 2021(ஆ) | 20.49 | 17.62 | 16.07 | 13.24 | 12.35 | 20.23 |

# புள்ளிவிபர மீளாய்வு

### மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம், மீள்காப்புறுதிக்குச் செலுத்திய தவணைக் கட்டணம் மற்றும் தக்கவைத்துக்கொள்ளல் வீதம் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

2021 இல், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் 19.52% (2020: 20.88%) வீத பங்குபற்றல் வியாபாரத்தையும், 41.98% (2020: 41.57%) வீத பங்குபற்றாத வியாபாரத்தையும், 37.06% (2020: 35.93%) வீத யுனிவேர்சல் லைபையும் 1.43% (2020: 1.63%) வீத இணைக்கப்பட்ட நீண்ட கால வியாபாரத்தையும் உள்ளடக்கியிருந்தது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - லைப் மற்றும் சிலிங்கோ லைப், ஸொப்ட்லொஜிக் லைப் முறையே 50.56%, 24.23% மற்றும் 18.11% மதிப்புள்ள போர்ட்போலியோக்களை வைத்திருப்பதன் மூலம் பங்குபற்றும் வணிகத்தில் ஆதிக்கம் செலுத்தியது மற்றும் மொத்தமாக சந்தையில் 92.91% பங்கைக் கொண்டுள்ளது. ஸொப்ட்லொஜிக் லைப், சிலிங்கோ லைப் மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - லைப் ஆகியவை முறையே வீதத்தை 27.74%, 25.55%, மற்றும் 18.45% சொந்தமாக்கி கூட்டாக 71.74% பங்குபெறாத போர்ட்போலியோவைக் கொண்டிருந்தன, அதே நேரத்தில் உலகளாவிய ஆயுள் வருமானமானது ஏஐஏ, யுனியன் லைப் மற்றும் சிலிங்கோ லைப் முறையே வீதத்தை 33.87%, 24.78% மற்றும் 13.56% சொந்தமாக்கி ஆகியவற்றால் 72.21% வீத பங்குடன் வழிநடத்தப்பட்டது.

மீள்காப்புறுதியாளர்களுக்கு கொடுக்கப்பட்ட தவணைக் கட்டணம் இ.ரூபா 5,025 மில்லியன் (2020:இ.ரூபா 4,705 மில்லியன்) 2021 ஆம் ஆண்டில் ஆண்டுக்கு 6.97% வீத அதிகரிப்புடன் இருந்தது, முக்கியமாக யுனிவேர்சல் லைப் மற்றும் பங்குபெறாத வியாபாரத்தினால் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வளர்ச்சியினால் ஏற்பட்டதாகும். நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் ஒட்டுமொத்த தக்கவைப்பு விகிதம் 95.97% (2020:95.43%) வீதமாக உள்ளது.

**அட்டவணை 8**
**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம், மீள்காப்புறுதிக்கு செலுத்திய தவணைக் கட்டணம் மற்றும் தக்கவைத்துக்கொள்ளல் வீதம் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| வகுப்பு | 2019 | | | 2020(அ) | | | 2021(ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா '000) | மீள் காப்புறுதி யாளர்களுக்கு வழங்கப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா '000) | தக்க வைத்தல் வீதம் (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா '000) | மீள் காப்புறுதி யாளர்களுக்கு வழங்கப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா '000) | தக்கவைத்தல் வீதம் (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா '000) | மீள் காப்புறுதி யாளர்களுக்கு வழங்கப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா '000) | தக்கவைத்தல் வீதம் (%) |
| பங்குபற்றல் | 21,394,970 | 156,759 | 99.27 | 21,501,412 | 168,082 | 99.22 | 24,355,960 | 151,310 | 99.38 |
| பங்குபற்றாத | 32,370,493 | 2,977,659 | 90.80 | 42,817,109 | 3,994,124 | 90.67 | 52,374,038 | 4,107,457 | 92.16 |
| யுனிவேர்சல் லைப் | 33,129,499 | 473,575 | 98.57 | 37,007,344 | 471,295 | 98.73 | 46,234,646 | 673,178 | 98.54 |
| அலகு இணைக்கப்பட்டது | 1,892,079 | 84,245 | 95.55 | 1,674,363 | 71,743 | 95.72 | 1,787,359 | 92,843 | 94.81 |
| **மொத்தம்** | **88,787,041** | **3,692,237** | **95.84** | **103,000,228** | **4,705,243** | **95.43** | **124,752,003** | **5,024,788** | **95.97** |

### நீண்ட கால காப்புறுதி வியாபாரங்களின் சொத்துக்கள்

அட்டவணை 9இல் வெளிப்படுத்தியவாறு, நீண்ட கால காப்புறுதியாளர்கள் தங்கள் சொத்து போர்ட்ஃபோலியோவிற்கு கூடுதல் மதிப்பைச் சேர்த்துள்ளனர், இது நீண்டகால காப்புறுதித்துறையின் மொத்த சொத்துகள் 12.43% (2020: 15.99%) வீதத்தினால் வளர்ச்சி அடைந்துள்ளது மற்றும் மொத்த சொத்துக்களின் பெறுமதி இ.ரூபா 632,627 மில்லியன் (2020: இ.ரூபா 562,706 மில்லியன்) ஆகும்.

# புள்ளிவிபர மீளாய்வு

**அட்டவணை 9**
**மொத்த சொத்துக்களின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு – நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | 2020 (அ) | | 2021 (ஆ) | |
|---|---|---|---|---|
| | (இ.ரூபா '000) | % | (இ.ரூபா '000) | % |
| ஏஐஏ லைப் | 72,388,787 | 12.86 | 72,263,841 | 11.42 |
| எலைன்ஸ் லைப் | 7,758,471 | 1.38 | 8,191,271 | 1.29 |
| அமான லைப் | 3,099,222 | 0.55 | 3,337,501 | 0.53 |
| ஆர்பிகோ | 4,175,491 | 0.74 | 4,416,237 | 0.70 |
| சிலிங்கோ லைப். | 150,801,386 | 26.80 | 173,762,954 | 27.47 |
| கோப்லைப் | 3,510,426 | 0.62 | 3,719,827 | 0.59 |
| எச்என்பி லைப் | 26,042,871 | 4.63 | 29,463,951 | 4.66 |
| ஜனசக்தி லைப் | 24,613,500 | 4.37 | 26,045,536 | 4.12 |
| எல்ஐசி | 3,333,687 | 0.59 | 3,491,539 | 0.55 |
| எல்ஓஎல்சி லைப் | 7,752,075 | 1.38 | 9,622,145 | 1.52 |
| எம்பிஎஸ்எல் | 1,064,582 | 0.19 | 1,004,264 | 0.16 |
| சனச லைப் | 2,307,345 | 0.41 | 2,682,497 | 0.42 |
| எஸ்எல்ஐசி | 160,051,510 | 28.44 | 184,519,748 | 29.17 |
| சொப்ட்லொஜிக் லைப் | 33,206,203 | 5.90 | 39,343,732 | 6.22 |
| யூனியன் லைப் | 62,600,408 | 11.12 | 70,761,636 | 11.19 |
| **மொத்தம்.** | **562,705,964** | **100** | **632,626,679** | **100** |

கடந்த ஆண்டைப் போலவே, நீண்ட கால காப்புறுதித்துறையில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் சொத்துக்களில் அதிக பங்கைக் கோரியதுடன், அதைத் தொடர்ந்து, சிலிங்கோ லைப் இருந்ததுடன், இரண்டும் இணைந்து காப்புறுதித் தொழிற்துறையின் மொத்த சொத்துக்களில் 56.63% வீதத்தைப் (2020: 55.24%) பெற்றிருந்தது. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன - லைப்பின் மொத்த சொத்துக்கள் பிரதானமாக அரசாங்க பிணையங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக 15.29% வீதத்தினால் (2020: 13.61%) மேலும் அதிகரித்ததுடன், அதன் பெறுமதி இ.ரூபா 184,520 மில்லியனாக (2020: இ.ரூபா 160,052 மில்லியன்) இருந்ததுடன், இது மொத்த சொத்தில் 29.17% (2020: 28.44%) வீதம் ஆகும். அதேசமயம் சிலிங்கோ லைப் இன் மொத்த சொத்துகள் வைப்புக்கள் மற்றும் அரசாங்கப் பிணையங்கள் காரணமாக 15.23% (2020: 13.20%) வீதத்தினால் சீராக வளர்ச்சியடைந்து, இ.ரூபா 173,763(2020: இ.ரூபா 150,801) மில்லியனைப் பெற்று சந்தையில் 27.47% (2020: 26.80%) வீதத்தை பெற்றுக்கொண்டது. இரு கம்பனிகளினாலும் 2021இல் நீண்ட கால காப்புறுதிக் கைத்தொழிற்துறையில் மொத்த சொத்துக்களில் அவர்களுடைய சொத்துக்களின் பங்கினை அதிகரிக்க முடிந்தது.

ஏஐஏ லைப் மற்றும் யூனியன் லைப் ஆகியவை கைத்தொழிற்துறையில் உள்ள மொத்த சொத்துக்களில் கணிசமான பகுதிகளை வைத்திருப்பதன் மூலம் சந்தையில் மூன்றாவது மற்றும் நான்காவது இடங்களை உறுதிப்படுத்தியுள்ளன. எனினும், ஏஐஏ லைப்பின் சொத்து வளர்ச்சி வீதத்தில் 0.17% வீத வீழ்ச்சியை சந்தித்தது, இது கடந்த சில ஆண்டுகளாக தொடர்ச்சியாக அதிகரிக்கின்றதுடன் அதன் மொத்த சொத்துப் பங்கு 11.42% (2020: 12.86%) ஆகும். ஏஐஏ லைப் இன் மொத்த சொத்துக்கள் இ.ரூபா 72,264 மில்லியன் (2020: இ.ரூபா 72,389 மில்லியன்) ஆகும். யூனியன் லைப் 13.04% (2020: 13.31%) வீத வளர்ச்சியைப் பதிவுசெய்ததன் மூலம் தனது சொத்து போர்ட்போலியோவை தொடர்ச்சியாக விரிவுபடுத்த முடிந்ததுடன், அதன் சொத்துப் பெறுமதி இ.ரூபா 70,762 மில்லியன் (2020: இ.ரூபா 62,600 மில்லியன்) ஆகும்.

இந்த நான்கு கம்பனிகளும் இணைந்து மொத்த சொத்துகளில் 79.24% (2020:79.23%) வீதத்தை தம்வசம் வைத்திருந்ததுடன், 2020 உடன் ஒப்பிடுகையில் இது அதே அளவாகவே உள்ளது.


நீண்டகால காப்புறுதித்துறை சொத்துக்களின் அடிப்படையில், ஸொப்ட்லொஜிக் லைப், எச்என்பி லைப் மற்றும் ஜனசக்தி லைப் ஆகியவை மொத்த சொத்துக்களாக முறையே இ.ரூபா 39,344 மில்லியன் (2020:இ.ரூபா

# புள்ளிவிபர மீளாய்வு

33,206), இ.ரூபா 29,464 மில்லியன் (2020: இ.ரூபா 26,043) மற்றும் இ.ரூபா 26,046 மில்லியனைப் (2020:இ.ரூபா 24,614) பதிவுசெய்து சந்தையில் ஐந்தாவது, ஆறாவது மற்றும் ஏழாவது இடங்களைப் பெற முடிந்தது. இந்த நிறுவனங்கள் கணிசமான வளர்ச்சி வீதங்களுடன் அதிகரித்துவரும் சொத்து போர்ட்போலியோக்களையும் பதிவு செய்துள்ளன. இந்த ஏழு நிறுவனங்களும் சேர்ந்து மொத்த சந்தையில் 94.24% (2020: 94.14%) வீதத்தைக் கைப்பற்றியுள்ளன.

இந்த சவால்களுக்கு மத்தியிலும், மீளாய்வு ஆண்டில் எம்பிஎஸ்எல் மற்றும் ஏஐஏ லைப் தவிர்த்து ஏனைய அனைத்து ஆயுள் காப்புறுதி நிறுவனங்களும் தங்கள் சொத்துப் பட்டியலுக்கு கூடுதல் பெறுமதியைச் சேர்த்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். கடந்த ஆண்டைப் போலவே எல்ஓஎல்சி லைப் 20% வீதத்திற்கு அதிகமான வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது. வரைவு 8 மொத்த சொத்துக்களின் கம்பனி ரீதியிலான பகுப்பாய்வை விளக்குகின்றது.

**விளக்கப்படம் 8**
**31 டிசம்பர் 2020 மற்றும் 2021ஆம் திகதியன்று கம்பனி மொத்த சொத்துக்களின் பகுப்பாய்வு - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**




## டிசம்பர் 2020 மற்றும் 2021ஆம் திகதியன்று சொத்துக்களின் செறிவு - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 10 மற்றும் விளக்கப்படம் 9 என்பன 31 டிசம்பர் 2020 மற்றும் 2021ஆம் திகதியன்று வேறுபட்ட சொத்துக்களின் வகைப்படுத்தலுக்கிடையில் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்கள் தொடர்பான விரிவான தகவல்களை வழங்குகின்றன.

**அட்டவணை 10**
**31 டிசம்பர் 2020 மற்றும் 2021 ஆம் திகதியன்று சொத்துக்களின் செறிவு - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| சொத்துகளின் வகை | 2020 (அ) | | 2021 (ஆ) | |
|---|---|---|---|---|
| | (இ.ரூபா '000) | % | (இ.ரூபா '000) | % |
| அரசாங்க கடன் பிணையங்கள் | 230,273,823 | 40.92 | 262,410,756 | 41.48 |
| உரிமைப் பங்குகள் | 38,681,100 | 6.87 | 49,049,129 | 7.75 |
| கூட்டிணைந்த கடன் பத்திரங்கள் | 121,703,471 | 21.63 | 139,619,921 | 22.07 |
| நிலம் மற்றும் கட்டிடங்கள் | 8,735,425 | 1.55 | 9,273,787 | 1.47 |
| வைப்புகள் | 80,765,691 | 14.35 | 88,265,112 | 13.95 |
| அலகு நம்பிக்கைகள் | 9,991,047 | 1.78 | 13,426,656 | 2.12 |
| பூட்கைக் கடன்கள் | 6,940,431 | 1.23 | 7,022,135 | 1.11 |
| ஏனைய சொத்துகள் | 46,944,802 | 8.34 | 48,448,721 | 7.66 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | 18,670,177 | 3.32 | 15,110,463 | 2.39 |
| மொத்தம் | **562,705,967** | **100** | **632,626,679** | **100** |

# புள்ளிவிபர மீளாய்வு

அட்டவணை 10இல் காட்டப்பட்டவாறு, கடந்த ஆண்டுகளைப் போலவே, நீண்ட கால காப்புறுதியாளர்கள் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையிலும் திரவத்தன்மையைப் பேணுவதற்காகவும் தங்கள் முதலீடுகளை அரசாங்க கடன் பிணையங்களில் முதலீடு செய்தனர். அதனால், அரசாங்க கடன் பத்திரங்கள் பெரிய சொத்து வகையாக அமைந்ததுடன், இது 13.96% (2020:19.83%) வீதத்தினால் அதிகரித்து அதன் பெறுமதி இ.ரூபா 262,411 மில்லியன் (2020: இ.ரூபா 230,274 மில்லியன்) ஆகியதுடன், தொடர்ந்தும் பிரதான பங்கினைக் கொண்டிருந்ததுடன், மொத்த சொத்துக்களில் இது 41.48% (2020: 40.92%) வீதமாகும். ஒரு சிலரைத் தவிர அனைத்து ஆயுட் காப்புறுதியாளர்களும் அரசாங்கப் பிணையங்களில் தங்கள் முதலீடுகளை மேம்படுத்தியுள்ளதுடன், மேலும் நான்கு ஆயுட் காப்புறுதியாளர்கள் அதையே கணிசமாக மேம்படுத்தியுள்ளன், இது குறைந்த ஆபத்துள்ள சொத்து போர்ட்போலியோவைப் பராமரிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையைக் குறிக்கின்றது.

கூட்டிணைந்த கடன் முதலீடுகள் மொத்தம் இ.ரூபா 139,620 மில்லியன் (2020: இ.ரூபா 121,703 மில்லியன்) ஆகவும் 14.72% (2020: 14.19%) வளர்ச்சி வீதத்துடன் நான்கு ஆயுட் காப்புறுதியாளர்களால் இயக்கப்படுகின்றது. கூட்டிணைந்த கடன் மொத்த சொத்து அடிப்படையில் 22.07% (2020:21.63மூ) வீதத்தை ஆக்கியமித்துள்ளது.

மீண்டும் ஒரு காப்புறுதியாளரினால் வலுவூட்டப்பட்டதன் காரணமாக மூன்றாவது பெரிய சொத்தாக வைப்புகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு இ.ரூபா 88,265 மில்லியனாக (2020: இ.ரூபா 80,766 மில்லியன்) 13.95மூ (2020: 14.35%) வீதத்தினால் அதிகரித்தது. மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், ஐந்து ஆயுட் காப்புறுதியாளர்கள் மட்டுமே அவர்களுடைய வைப்புகளை அதிகரித்தனர். குறிப்பாக ஆண்டின் தொடக்கத்தில் குறைந்த வட்டி வீதத்தின் தாக்கம் நிலவியது.

உரிமைப் பங்குகளில் முதலீடுகள் இ.ரூபா 49,049 மில்லியனாக (2020: இ.ரூபா 38,681 மில்லியன்) அதிகரித்தது, இது மொத்த சொத்துப் பட்டியலில் 26.80% (2020:7.87%) ஆக உயர்ந்துள்ளதுடன், ஒரு ஆயுட் காப்புறுதியாளரினால் இயக்கப்படுகின்றது. உரிமைப் பங்கில் முதலீடு செய்துள்ள அனைத்து ஆயுள் காப்புறுதியாளர்களும் தங்கள் முதலீடுகளை 2021ஆம் ஆண்டில் விரிவுபடுத்தியுள்ளனர். இது மதிப்பீட்டாண்டின் உரிமைப் பங்குச் சந்தையின் ஈர்ப்பு மற்றும் 7.75% (2020: 6.87% முன்னேற்றத்தைக் குறிக்கின்றது.


இந்த பிரதான முதலீட்டு வகைகளான அரசாங்க பிணையங்கள், கூட்டிணைந்த கடன், வைப்புகள் மற்றும் உரிமைப் பங்கு என்பன நீண்ட கால காப்பறுதி வியாபாரத்தின் மொத்த சொத்துக்களில் 85.25% (2020:83.78%) வீதத்தைப் பதிவு செய்தன.

மேலும், ஏனைய சொத்துக்கள் இ.ரூபா 48,449 மில்லியனைப் (2020: இ.ரூபா 46,945 மில்லியன்) பதிவு செய்ததுடன், இது பிரதானமாக பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள், கட்புலனாகா சொத்துகள், பூட்கையாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய தவணைக் கட்டணம், கிடைக்க வேண்டிய மீள்காப்புறுதி என்பனவற்றை உள்ளடக்கியுள்ளதுடன், 2021இல் 3.20% (2020:15.60%) வீதத்தினால் சற்று அதிகரித்துள்ளது.

அலகு நம்பிக்கை சுறுகளில் முதலீடு செய்வதற்கான போக்கு 2021இல் தொடர்ந்து மேம்பட்டது, இது இ.ரூபா 13,427 மில்லியன் (2020: இ.ரூபா 9,991 மில்லியன்) கணிசமான வளர்ச்சியிலிருந்து இது தெளிவாகின்றது.

**விளக்கப்படம் 9**

**31 டிசம்பர் 2020 மற்றும் 2021 ஆம் திகதியன்று சொத்துக்களின் செறிவு - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**




முதலீட்டு வருமானம் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

நடைமுறையில் குறைந்த வட்டி வீத சூழல் இருந்தபோதிலும், குறிப்பாக ஆண்டின் முதல் பாதியில் நீண் கால காப்புறுதியாளர்கள் முதலீட்டு வருமானத்தில் 19.29% வீத கணிசடதன வளர்ச்சியைப் பதிவு செய்ததுடன், இக்காலப்பகுதியில் இ.ரூபா 55,871 மில்லியன் (2020: இ.ரூபா 46,839 மில்லியன்) பெறப்பட்டது. சராசரி நீண்ட கால வியாபார முதலீடுகள் இ.ரூபா 533,462 மில்லியனை (2020:இ.ரூபா 469,097 மில்லியன்) எட்டியதுடன், இது 13.72% வீத அதிகரிப்பினைக் குறிக்கின்றது.

அரசாங்கப் பிணையங்கள், 3.84% வீத சுமாரான வளர்ச்சி விகிதத்துடன் இ.ரூபா 22,419 மில்லியனை (2020: இ.ரூபா 21,590 மில்லியன்) பதிவு செய்ததன் மூலம் ஒட்டுமொத்த முதலீட்டு வருமானத்தில் அதிக பங்காக 40.13% (2020: 46.09%) வீதத்தைக் கொண்டுள்ளதுடன், இதற்கு இரண்டு முதலீட்டாளர்கள் REPO வில் மேற்கொண்ட முதலீடு பிரதானமான காரணமாக அமைந்தது. அரசாங்க கடன் பிணையங்களில் மேற்கொள்ளப்பட்ட

# புள்ளிவிபர மீளாய்வு

சராசரித் தொகையானது, இ.ரூபா 246,342 மில்லியனாக (2020:இ.ரூபா 211,219 மில்லியன்) அதிகரித்துள்ளது. கூட்டிணைந்த கடனில் நீண்ட கால காப்புறுதியாளர்கள் முதலீடு செய்தனர், ஒரு ஆயுட் காப்பீட்டாளரால் கடன் பத்திரங்களில் பதிவு செய்யப்பட்டு முதலீட்டு வருமானம் காரணமாக, 18.83% வீத வளர்ச்சியுடன் இ.ரூபா 15,524 மில்லியன் (2020:இ.ரூபா 13,064 மில்லியன்) முதலீட்டு வருமானத்தை பதிவுசெய்து, மொத்த முதலீட்டு வருமானத்தில் 27.79% (2020:27.89%) பங்குகளை ஆக்கிரமித்தது. கூட்டிணைந்த கடனில் உள்ள சராசரி சொத்துகள் 2021இல் இ.ரூபா 130,662 மில்லியனாக (2020:இ.ரூபா 114,141 மில்லியன்) மேம்பட்டது.

இந்த இரண்டு பிரிவுகளும் ஒட்டுமொத்த முதலீட்டு வருமானத்தில் 67.91% வீதத்தை (2020:73.99%) வைத்திருந்ததுடன் 2021இல் அரசாங்க பிணையங்கள் மற்றும் கூட்டிணைந்த கடன்களின் சராசரி முதலீட்டு வருமான ஈட்டுகை முறையே 9% (2020:10%) மற்றும் 12%(2020:11%) வீதமாக இருந்தது.

முதன்மையாக ஒரு ஆயுட் காப்புறுதியாளரினால் பதிவு செய்யப்படாத இலாபத்தின் காரணமாக, முதலீட்டு வருமானம் இ.ரூபா 8,937 மில்லியன் (2020: இ.ரூபா 2,824 மில்லியன்) ஐ எட்டியதன் மூலம், உரிமைப் பங்கு முதலீடுகள் சராசரியாக இ.ரூபா 43,865 மில்லியன் (2020: இ.ரூபா 37,271 மில்லியன்) ஆகும். 2020 உடன் ஒப்பிடுகையில் சற்று அதிகரித்துள்ள, மேற்கண்ட மூன்று முதலீட்டு வகைகளும் சேர்ந்து நீண்ட கால காப்புறுதியாளர்களின் மொத்த முதலீட்டு வருமானத்தில் 83.91% (2020:80.02%) வீதத்தைப் பெற்றுள்ளன.

2020ஆம் ஆண்டில் மூன்றாவது பெரிய வகையாக இருந்த வைப்புத்தொகையிலிருந்து பெறப்பட்ட முதலீட்டு வருமானம், இ.ரூபா 7,619 மில்லியனாக (2020: இ.ரூபா 8,268 மில்லியன்) குறைக்கப்பட்டது.

அதேவேளையில், 2021ஆம் ஆண்டில் முதலீட்டு வருமானத்தின் அடிப்படையில் நான்காவது பெரிய வகையாக இருந்ததுடன், சராசரி முதலீட்டுத் தொகை இ.ரூபா 85,515 மில்லியன் (2020: இ.ரூபா 78,419 மில்லியன்) ஆவதுடன், இது சந்தையில் நிலவிய குறைந்த வட்டி வீதங்களைக் குறிக்கின்றது.

ஒட்டுமொத்த முதலீட்டு வருமானம் சராசரியாக 10.47% (2020:9.98%) வீதமாக உள்ளது, இது 2020 இல் பதிவு செய்யப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில் வளர்ச்சியைக் காட்டுகின்றது.

**அட்டவணை 11**

**முதலீட்டு வருமானம் மற்றும் சராசரி முதலீடுகளின் சுருக்கம் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| வகை | 2020 (அ) | | 2021 (ஆ) | |
|---|---|---|---|---|
| | முதலீட்டு வருமானம் (இ.ரூபா '000) | சராசரி வருமானம் (இ.ரூபா '000) | முதலீட்டு வருமானம் (இ.ரூபா '000) | சராசரி வருமானம் (இ.ரூபா '000) |
| அரசாங்க கடன் பிணையங்கள் | 21,589,841 | 211,218,577 | 22,419,264 | 246,342,290 |
| - திறைசேரி பிணையங்கள் | 20,101,585 | | 20,097,959 | |
| - திறைசேரி உண்டியல்கள் | 68,130 | | 271,457 | |
| - ஏனையவை (ரிபோ | 1,420,126 | | 2,049,848 | |
| உரிமைப் பங்கு | 2,824,001 | 37,270,729 | 8,937,003 | 43,865,114 |
| - மூலதன ஈட்டுகை/ நட்டங்கள் | 1,828,612 | | 7,183,929 | |
| - பங்குலாபம் | 995,389 | | 1,753,074 | |
| கூட்டிணைந்த கடன்கள் | 13,063,583 | 114,140,670 | 15,523,868 | 130,661,696 |
| - தொகுதிக்கடன் | 12,855,495 | | 14,557,825 | |
| - வணிகப் பத்திரம் | 208,088 | | 833,834 | |
| - ஆதனம் சார்ந்த பிணையங்கள் | | | 115,957 | |
| - ஏனைய அதையொத்த நிதிக் கருவிகள் | | | 16,252 | |
| நிலம் மற்றும் கட்டிடங்கள் | 85,459 | 12,202,916 | 147,746 | 9,004,606 |
| வைப்புகள் | 8,267,920 | 78,419,337 | 7,619,109 | 84,515,401 |
| - வங்கி | 6,568,859 | | 6,143,646 | |
| - நிதி கம்பனிகள் | 1,699,061 | | 1,475,465 | |
| அலகு நம்பிக்கை | 546,577 | 7,787,929 | 750,870 | 11,708,851 |
| பூட்கை கடன்கள் | 383,897 | 6,881,616 | 400,419 | 6,981,283 |
| ஏனையவை | 76,541 | 1,174,855 | 73,096 | 382,565 |
| மொத்தம் | **46,837,820** | **469,096,629** | **55,871,375** | **533,461,806** |
| முதலீட்டில் உழைக்கப்பட்ட சராசரி | 9.98% | | 10.47% | |

குறிப்பு: துணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்களில் உள்ள முதலீடுகள் கவனத்தில் கொள்ளப்பட்டது. வருமானத்தை கணிப்பீடு செய்யும் போது மேற்குறிப்பிட்ட அனைத்து வகைகளும் கவனத்தில் கொள்ளப்பட்டது.

# புள்ளிவிபர மீளாய்வு

**காப்புறுதிக் கம்பனிகளின் கடன்தீர் நிலை - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

கடந்த ஆண்டுகளைப் போலவே, ஒழுங்காக நிர்வகிக்கப்பட்ட காப்புறுதித்துறையின் மூலம் காப்புறுதி பூட்கையாளர்களினதும் பாதுகாப்பினை மேம்படுத்தவதற்காக, நிலையான அடிப்படையில் செயற்படும் வகையில், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவானது கைத்தொழிற்துறையில் இடர் அடிப்படையில் மூலதனம் அளவைத் தொடர்ந்தது கண்காணித்தது. இடர் அடிப்படையிலான மூலதன விதிகளின் கீழ், மூலதன போதுமை தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்கு காப்புறுதியாளர்கள் குறைந்தபட்ச மொத்த கிடைக்கப்பெறும் மூலதனமாக இ.ரூபா 500 மில்லியனையும் 120% வீத மூலதன போதுமை வீதத்தையும் பேணுவதற்கு வேண்டப்படுவர். இருப்பினும், காப்புறுதி வியாபாரத்தின் தன்மை, அளவு மற்றும் சிக்கலான தன்மை மற்றும் அது வெளிப்படுத்தும் அபாயங்கள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு காப்புறுதியாளர்கள் விவேகமான மூலதனப் போதுமை விகிதம் மற்றும் போதியளவான மொத்த கிடைக்கப்பெறும் மூலதனம் என்பவற்றை பேணுதல் வேண்டும். அட்டவணைகள் 12,13 மற்றும் 14 என்பன 31 டிசம்பர் 2020 மற்றும் 2021 இல் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனம், இடர் அடிப்படையிலான மூலதனத் தேவை மற்றும் மூலதனப் போதுமை விகிதம், சார்ந்த விபரங்களை விளக்குகின்றது.

2021ஆம் ஆண்டின் இறுதியில் இடர் அடிப்படையிலா மூலதனத்திற்கு ஆதரவளிப்பதற்கான மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத்தின் போதுமையை அளவிடும் மூலதன போதுமை விகிதம் மீதான அவசியமான சராசரி 384% (2020: 366%) ஆகும். அனைத்து காப்புறுதியாளர்களும் அமுலாக்கல் மட்டமான 160% வீதம் மற்றும் குறைந்த மட்டமான 120% என்பதினுள் மூலதனப் போதுமை வீதத்தைப் பதிவு செய்தனர். 31 டிசம்பர் 2021 அன்று கைத்தொழிற்துறையின் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத்தின் மொத்தப் பெறுமதி இ.ரூபா 286,309 மில்லியன் (2020:இ.ரூபா 250,025 மில்லியன்) ஆகும்.

அனைத்து ஆயுள் காப்புறுதி ஒப்பந்தங்களும் ஒரே நேரத்தில் சரணடைந்தால், கடுமையான பாதகமான சூழ்நிலையின் அபாயத்தை நிவர்த்தி செய்யம் சரண்டர் மதிப்பு மூலதனக் கட்டணம் (SVCC), 2021ஆம் ஆண்டின் இறுதியில் இ.ரூபா 7,905 மில்லியன் (2020: இ.ரூபா 2,612 மில்லியன்) ஆக இருந்ததுடன், குறிப்பிடத்தக்க வளர்ச்சியையும் பிரதிபலித்தது.

**அட்டவணை 12**

**31 டிசம்பர் 2020 மற்றும் 2021 அன்று கம்பனி ரீதியாக கடன்தீர் நிலை - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2020 அன்று (அ) | | | | 31 டிசம்பர் 2021 அன்று (ஆ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மொ.கி.மூ (இ.ரூபா'000) | இ.அ.மூ.தே (இ.ரூபா'000) | ச.மூ.ம.க (இ.ரூபா'000) | மூ.போ.வி (%) | மொ.கி.மூ (இ.ரூபா'000) | இ.அ.மூ.தே (இ.ரூபா'000) | ச.மூ.ம.க (இ.ரூபா'000) | மூ.போ.வி (%) |
| ஏஜஏ லைப் | 27,361,515 | 5,601,570 | | 488% | 24,565,113 | 4,490,070 | | 547% |
| எலைன்ஸ் லைப் | 2,028,498 | 216,924 | 286,007 | 709% | 1,490,704 | 378,981 | 23,701 | 393% |
| அமான லைப் | 535,106 | 261,775 | | 204% | 535,349 | 275,187 | | 195% |
| ஆர்பிகோ | 1,908,450 | 459,409 | 97,174 | 415% | 2,221,252 | 476,828 | 511,232 | 434% |
| சிலிங்கோ லைப். | 72,111,874 | 17,133,081 | 3,930 | 421% | 71,664,622 | 18,048,010 | 3,238 | 397% |
| கோப்லைப் | 1,473,028 | 589,124 | | 250% | 1,497,623 | 509,721 | | 294% |
| எச்என்பி லைப் | 8,966,667 | 2,653,681 | | 338% | 11,139,698 | 4,023,288 | 694,632 | 277% |
| ஜனசக்தி லைப் | 10,132,233 | 3,331,694 | | 304% | 12,857,786 | 3,310,343 | 804,347 | 388% |
| எல்ஜசி | 485,940 | 338,702 | | 143% | 563,897 | 309,953 | | 182% |
| எல்ஓஎல்சி லைப் | 2,326,985 | 1,258,533 | | 185% | 3,464,728 | 721,459 | | 480% |
| எம்பிஎஸ்எல் | 556,357 | 76,062 | | 731% | 515,391 | 58,536 | | 880% |
| சனச லைப் | 747,344 | 377,961 | | 198% | 820,062 | 468,187 | | 175% |
| எஸ்எல்ஐசி | 79,654,571 | 17,370,300 | | 459% | 106,308,579 | 21,684,273 | | 490% |
| சொப்ட்லொஜிக் லைப் | 19,940,660 | 6,610,593 | 2,203,854 | 302% | 27,081,811 | 6,851,316 | 4,935,500 | 395% |
| யூனியன் லைப் | 21,795,969 | 6,396,436 | 20,587 | 341% | 21,582,364 | 9,468,422 | 932,135 | 228% |
| **மொத்தம்** | **250,025,198** | **62,675,846** | **2,611,551** | **366%** | **286,308,978** | **71,074,573** | **7,904,786** | **384%** |

# புள்ளிவிபர மீளாய்வு

காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத் தேவைப்பாடு - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

2015, கடன்தீர் (இடர் அடிப்படையிலான மூலதனம்) விதிகளின் படி, அடுக்கு 1 மற்றும் அடுக்கு 2 மூலதனத்தைக் கூட்டியதன் பின்னர் கழிப்பனவு எனக் குறிப்பிடப்பட்ட விடயங்களைக் கழிப்பதன் மூலம் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனம் கணிப்பிடப்படும். அட்டவணை 13 இல் காட்டப்பட்டுள்ளபடி, 31 டிசம்பர் 2021ஆம் திகதியில் நீண்ட கால காப்புறுதியாளர்களுடன் தொடர்புடைய மொத்த கிடைக்கப்பெறும் மூலதனம் எஸ்எல்ஐசி லைப் மற்றும் சொப்ட்லொஜிக் லைப் மூலம் உந்தப்பட்டு அடுக்கு 1 மூலதனம் இ.ரூபா 299,251 (2020: 258,922 மில்லியன்) ஆக அதிகரித்தமையினால் கைத்தொழிற்துறையின் அடுக்கு 1இல் ஒட்டுமொத்த மேம்படுத்தல் 14.51% வீதமாக உந்தப்பட்டு கைத்தொழிற்துறையின் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனமானது இ.ரூபா 286,309 மில்லியனைப் (2020:இ.ரூபா 250,025 மில்லியன்) பெற்றுக்கொண்டுள்ளது. மேலும், ஜனசக்தி லைப், எச்என்பி அசூரன்ஸ் மற்றும் எல்ஓஎல்சி லைப் ஆகியவற்றின் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத்தை 2020 உடன் ஒப்பிடுகையில் முக்கியமாக "அடுக்கு 1" மூலதனத்தின் அதிகரிப்பு காரணமாக 2021இன் இறுதியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை வெளிப்படுத்தியுள்ளன, எனினும் ஏஐஏ லைப் மற்றும் எலையன்ஸ் லைப் ஆகியவற்றின் அடுக்கு 1 மூலதனத்தில் கடுமையான வீழ்ச்சி பதிவாகியுள்ளதனால், இது அவர்களின் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அடுக்கு 1 மூலதனம் பங்கு மூலதனம் மற்றும் மூலதன ஒதுக்குகள், செலுத்திய திரட்சியற்ற மீளமுடியாத விருப்பபங்குகள், சீராக்கப்பட்ட தக்கவைத்திருக்கும் உழைப்புகள், ஒதுக்கப்படாத மதிப்பீட்டு மிகை என்பவற்றை உள்ளடக்கியிருப்பதுடன் பங்குபற்றல் வியாபாரத்திற்கான எதிர்காலத்திற்கு எதிர்பார்க்கப்பட்ட மிகைக் கொடுப்பனவுகளின் 50% ஆனது நட்டங்களை ஈடு செய்வதற்கு கிடைக்கப்பெறும் நிரந்தரமான மூலதனம் என வரைவிலக்கணப்படுத்தப்படும். அடுக்கு 1 மூலதனம் 15.58% வீதத்தினால் வளர்ச்சியடைந்து இ.ரூபா 299,251 மில்லியனைப் (2020: இ.ரூபா 258,922 மில்லியன்) பதிவு செய்தது.

அடுக்கு 1 இற்கு சமாந்தரமான உயர் தர மூலதன குணவியல்புகளில் சில குறைபாடுகளைக் கொண்டிருக்கும்அடுக்கு 2 மூலதனம் திரட்டிய கழிக்கமுடியாத விருப்பத்திற்குரிய பங்குகள், கழிக்கக்கூடிய விருப்பத்திற்குரிய பங்குகள், கட்டாய மூலதன கடன் கையிருப்பு மற்றும் ஏனைய ஒத்த மூலதனக் கருவிகள், சுயமாக ஈடுபடுத்தப்பட்ட ஆதனங்களுக்கான மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள் மற்றும் ஏனைய ஆதன முதலீடுகள், தக்கவைக்கப்பட்ட உழைப்புகள் கழிக்கமுடியாத கடன் உள்ளடங்கலாக வருமான ஒதுக்குகள் போன்றவற்றை உள்ளடக்கியிருக்கும்.

2021இல் நீண்ட கால காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் அடுக்கு 2 மூலதனம் 1.69% வீத எல்லை வளர்ச்சியுடன் இ.ரூபா 22,761 மில்லியனைக் (2020: இ.ரூபா 22,382 மில்லியன்) கொண்டுள்ளது.

இந்தக் கழிப்பனவுகள் பிரதானமாக கட்புலனாக அல்லது திரவத்தன்மையல்லா சொத்துக்களை உள்ளடக்கியிருப்பதுடன், 2021இல் முக்கியமாக இரு காப்புறுதியாளர்களினால் இதன் பெறுமதி இ.ரூபா 35,702 மில்லியன் (2020:இ.ரூபா 31,279 மில்லியன்) ஆவதுடன், வளர்ச்சி வீதம் 14.14% ஆகும்.

**அட்டவணை 13**
**காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத் தேவைப்பாடு - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2020ம் திகதியன்று (அ) (இ.ரூபா '000) | 31 டிசம்பர் 2021ம் திகதியன்று (ஆ) (இ.ரூபா '000) | | | |
|---|---|---|---|---|---|
| | கி.மூ.தே | அடுக்கு 1 | அடுக்கு II | கழிப்பனவுகள் | கி.மூ.தே |
| ஏஐஏ லைப் | 27,361,515 | 22,025,225 | 6,309,264 | 3,769,377 | 24,565,113 |
| எலைன்ஸ் லைப் | 2,028,498 | 2,112,045 | | 621,341 | 1,490,704 |
| அமான லைப் | 535,106 | 475,497 | 104,949 | 45,098 | 535,349 |
| ஆர்பிகோ | 1,908,450 | 2,480,289 | | 259,038 | 2,221,252 |
| சிலிங்கோ லைப். | 72,111,874 | 79,829,489 | 3,890,031 | 12,054,899 | 71,664,622 |
| கோப்லைப் | 1,473,028 | 1,550,295 | 148,393 | 201,065 | 1,497,623 |
| எச்என்பி லைப் | 8,966,667 | 13,314,033 | 381,156 | 2,555,492 | 11,139,698 |
| ஜனசக்தி லைப் | 10,132,233 | 12,404,959 | 1,795,829 | 1,343,002 | 12,857,786 |
| எல்ஐசி | 485,940 | 507,282 | 111,899 | 55,283 | 563,897 |
| எல்ஓஎல்சி லைப் | 2,326,985 | 3,460,221 | 256,134 | 251,627 | 3,464,728 |
| எம்பிஎஸ்எல் | 556,357 | 523,814 | | 8,423 | 515,391 |
| சனச லைப் | 747,344 | 1,388,894 | | 568,832 | 820,062 |
| எஸ்எல்ஐசி | 79,654,571 | 112,671,772 | 169,909 | 6,533,102 | 106,308,579 |
| சொப்ட்லொஜிக் லைப் | 19,940,660 | 24,830,945 | 3,938,987 | 1,688,121 | 27,081,811 |
| யூனியன் லைப் | 21,795,969 | 21,675,981 | 5,654,162 | 5,747,779 | 21,582,364 |
| **மொத்தம்** | **250,025,198** | **299,250,742** | **22,760,714** | **35,702,477** | **286,308,979** |

# புள்ளிவிபர மீளாய்வு

## காப்புறுதிக் கம்பனிகளின் இடர் அடிப்படையிலா மூலதனத் தேவைப்பாடுகளின் ஒப்பீடு - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

இடர் அடிப்படையிலான மூலதன விகிதம் கடன் இடர், செறிவு இடர், சந்தை இடர், மீள்காப்புறுதி இடர், பொறுப்பு இடர் மற்றும் தொழிற்பாட்டு இடரை உள்ளடக்கிய பொருண்மையான இடருக்காக தீர்மானிக்கப்பட்ட மூலதன கட்டணங்களின் மொத்தமாகும். அட்டவணை 14, இடர் அடிப்படையிலான மூலதன விதிகளின் கீழ் கணிப்பிடப்பட்ட பிரதான இடர் வகைகளை உள்ளடக்கிய இடர் அடிப்படையிலான மூலதனத் தேவைப்பாடு பற்றிய கம்பனி ரீதியான பகுப்பாய்வைக் காட்டுகின்றது.

பல்வகைப்படுத்தலுக்கு முன் இடர் அடிப்படையிலான மூலதன விகிதமானது கடந்த ஆண்டு இ.ரூபா 85,511 உடன் ஒப்பிடுகையில் இரு ஆயுட் காப்புறுதியாளர்களினால் உந்தப்பட்டு 2021இல் 10.47% வீத வளர்ச்சியை அடைந்து இ.ரூபா 94,464 மில்லியனைப் பதிவுசெய்தது. அதே நேரத்தில் பல்வகைப்படுத்தலுக்கு பின் இ.ரூபா 71,075 மில்லியன் (2020: இ.ரூபா 62,676 மில்லியன்) திரட்டப்பட்டதுடன் 13.40% வீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. கடந்த ஆண்டுகளைப் போலவே, பன்முகப்படுத்தலுக்கு முன் மொத்த இடர் அடிப்படையிலான மூலதன விகிதத்தின் 54.66% பங்கைக் கொண்ட நீண்ட கால காப்புறுதியாளர்களினால் எதிர்கொள்ளப்படும் முக்கிய இடர் வகையாக சந்தை இடர் தொடர்ந்தது. இந்த மூன்று பிரிவுகளுமே கூட்டாக மொத்த இடர் அடிப்படையிலான மூலதன விகிதத்தின் 86.65% (2020:86.22%) 86.65 (2020: 84.79% வீதத்தை பன்முகப்படுத்தலுக்கு முன் வைத்திருந்தன.

**அட்டவணை 14**

**31 டிசம்பர் 2020 மற்றும் 2021 அன்று இடர் மூலதன தேவைப்பாட்டின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு - நீண்ட கால காப்பறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2020 (அ) திகதியன்று (இ.ரூபா '000) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன் இடர் | செறிவு இடர் | சந்தை இடர் | மீள்காப்புறுதி இடர் | பொறுப்பு இடர் | தொழிற்பாட்டு இடர் | மாற்றத்திற்கு முன் இ.மூ.தே | மாற்றத்திற்கு பின் இ.மூ.தே |
| ஏஐஏ லைப் | 405,929 | 837,779 | 3,083,121 | | 3,484,467 | 717,372 | 8,528,668 | 5,601,570 |
| எலைன்ஸ் லைப் | 3,780 | 4,965 | 38,894 | 1,357 | 201,431 | 63,885 | 314,311 | 216,924 |
| அமான லைப் | 20,623 | 145,518 | 93,121 | 692 | | 30,819 | 290,774 | 261,775 |
| ஆர்பிகோ | 43,003 | 24,935 | 268,971 | 48 | 309,600 | 40,799 | 687,356 | 459,409 |
| சிலிங்கோ லைப் | 1,788,403 | 936,699 | 13,906,140 | 6,752 | 3,771,492 | 1,579,705 | 21,989,191 | 17,133,081 |
| கோப்லைப் | 84,122 | 11,727 | 300,427 | 1,936 | 432,752 | 34,918 | 865,882 | 589,123 |
| எச்என்பி லைப் | 453,841 | 300,384 | 1,697,310 | 806 | 980,410 | 258,531 | 3,691,283 | 2,653,681 |
| ஜனசக்தி லைப் | 460,431 | 250,364 | 2,479,801 | 2,220 | 922,572 | 234,465 | 4,349,854 | 3,331,694 |
| எல்ஐசி | 40,735 | 65,364 | 206,213 | 43 | 126,036 | 35,598 | 473,991 | 338,702 |
| எல்ஓஎல்சி லைப் | 33,484 | 72,585 | 1,068,704 | 6,006 | 428,801 | 76,140 | 1,685,720 | 1,258,533 |
| எம்பிஎஸ்எல் | 8,245 | 25,398 | 38,938 | 22 | 20,022 | 10,646 | 103,271 | 76,062 |
| சனச லைப் | 26,138 | 181,540 | 157,429 | 17 | 95,106 | 22,215 | 482,445 | 377,961 |
| எஸ்எல்ஐசி | 1,722,707 | 2,410,946 | 12,072,062 | | 6,011,473 | 1,721,707 | 23,938,896 | 17,370,300 |
| சொப்ட்லொஜிக் லைப் | 305,146 | 920,645 | 3,508,957 | 2,067 | 4,599,898 | 321,649 | 9,658,363 | 6,610,593 |
| யூனியன் லைப் | 550,837 | 982,231 | 4,614,727 | 184 | 1,633,884 | 668,703 | 8,450,567 | 6,396,436 |
| மொத்தம் | **5,947,425** | **7,171,081** | **43,534,817** | **22,150** | **23,017,944** | **5,817,151** | **85,510,570** | **62,675,845** |

# புள்ளிவிபர மீளாய்வு

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2021 (அ) திகதியன்று (இ.ரூபா '000)) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன் இடர் | செறிவு இடர் | சந்தை இடர் | மீள்காப்புறுதி இடர் | பொறுப்பு இடர் | தொழிற்பாட்டு இடர் | மாற்றத்திற்கு முன் இ.மு.தே | மாற்றத்திற்கு பின் இ.மு.தே |
| ஏஐஏ லைப் | 403,735 | 510,328 | 2,744,866 | | 2,500,256 | 722,278 | 6,881,463 | 4,490,070 |
| எலைன்ஸ் லைப் | 3,969 | 6,945 | 287,262 | 1,380 | 223,094 | 64,203 | 586,853 | 378,981 |
| அமான லைப் | 20,272 | 142,869 | 107,436 | 416 | 34,414 | 33,257 | 338,665 | 275,187 |
| ஆர்பிகோ | 57,884 | 20,376 | 190,809 | 67 | 391,312 | 42,480 | 702,929 | 476,828 |
| சிலிங்கோ லைப். | 2,023,077 | 811,405 | 14,630,734 | 6,683 | 4,176,320 | 1,738,317 | 23,386,536 | 18,048,010 |
| கோப்லைப் | 108,421 | 15,266 | 303,239 | 2,158 | 272,764 | 36,080 | 737,928 | 509,721 |
| எச்என்பி லைப் | 473,139 | 227,543 | 3,230,051 | | 808,262 | 287,928 | 5,026,923 | 4,023,288 |
| ஜனசக்தி லைப் | 480,563 | 267,471 | 2,352,740 | 2,290 | 1,125,374 | 250,797 | 4,479,235 | 3,310,343 |
| எல்ஐசி | 40,357 | 25,025 | 228,100 | 36 | 93,368 | 34,651 | 421,536 | 309,953 |
| எல்ஓஎல்சி லைப் | 77,563 | 123,120 | 439,121 | 560 | 318,412 | 95,129 | 1,053,905 | 721,459 |
| எம்பிஎஸ்எல் | 11,376 | 2,415 | 41,166 | 119 | 17,159 | 9,930 | 82,165 | 58,536 |
| சனச லைப் | 38,331 | 167,799 | 253,871 | | 83,280 | 25,756 | 569,036 | 468,187 |
| எஸ்எல்ஐசி | 1,772,087 | 2,510,518 | 16,403,680 | | 6,233,425 | 1,851,946 | 28,771,656 | 21,684,273 |
| சொப்ட்லொஜிக் லைப் | 493,551 | 991,029 | 2,242,839 | 848 | 5,735,787 | 375,911 | 9,839,964 | 6,851,316 |
| யூனியன் லைப் | 618,464 | 516,349 | 8,174,153 | 140 | 1,586,154 | 689,689 | 11,584,949 | 9,468,422 |
| **மொத்தம்** | **6,622,788** | **6,338,460** | **51,630,067** | **14,697** | **23,599,379** | **6,258,352** | **94,463,744** | **71,074,573** |


### விநியோகிக்கப்பட்ட மற்றும் அமுலில் இருக்கும் காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கை - நீண்ட கால காப்புறுதி வியாபாரம

2021 ஆம் ஆண்டின் இறுதியில் நடைமுறையில் உள்ள நீண்ட கால காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கை 4,297,794 (2020:4,063,568) ஆவதுடன், இது 2020இல் பதிவாகிய 20.11% வீத வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது 5.74% வீத மிதமான வளர்ச்சியைக் காட்டுகின்றது. விநியோகிக்கப்பட்ட புதிய ஆயுட் காப்புறுதிகள் 3.37% (2020: 23.04%) வீத வீழ்ச்சியைக் காட்டுவதுடன், பெறுமதி 873,762 (2020: 904,224) ஆகும், இதனை 2020 உடன் ஒப்பிடும் போது, இரண்டு ஆயுட் காப்புறுதியாளர்களால் வழங்கப்பட்ட புதிய காப்புறுதிப் பூட்கைகளின் வீழ்ச்சியால் ஏற்பட்டதாகும்.

மொத்த மக்கள் தொகையின் சதவீதமான நடைமுறையில் உள்ள ஆயுட் பூட்கையின் எண்ணிக்கை மற்றும் தொழிற்படையின் சதவீதமாக பூட்கைகளின் எண்ணிக்கை என்பன அதிகரிக்கும் போக்கினைக் காட்டுவதுடன், அவை முறையே 19.40% (2020: 18.54%) மற்றும் 50.25% (2020: 47.99%) ஆகும். விளக்கப்படம் 10 நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் உள்ள விநியோகிக்கப்பட்ட காப்புறுதிப் பூட்கைகள் மற்றும் அமுலில் உள்ள பூட்கைகளின் எண்ணிக்கையைக் காட்டுகின்றது.

# புள்ளிவிபர மீளாய்வு

**விளக்கப்படம் 10**
**விநியோகிக்கப்பட்ட மற்றும் அமுலில் இருக்கும் காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கை - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**




| | 2017 | 2018 | 2019 | 2020(அ) | 2021(ஆ) |
|---|---|---|---|---|---|
| விநியோகிக்கப்பட்ட புதிய ஆயுள் காப்புறுதி பூட்கைகளின் எண்ணிக்கை | 643,483 | 711,126 | 734,896 | 904,224 | 873,762 |
| அமுலில் உள்ள ஆயுள் காப்புறுதி பூட்கைகளின் எண்ணிக்கை | 3,068,866 | 3,199,354 | 3,383,290 | 4,063,568 | 4,297,794 |
| மொத்த சனத்தொகையில் அமுலில் உள்ள ஆயுள் காப்புறுதி பூட்கைகளின் %* | 14.31 | 14.76 | 15.52 | 18.54 | 19.40 |
| மொத்த தொழிற்படையில் அமுலில் உள்ள ஆயுள் காப்புறுதி பூட்கைகளின் %* | 37.39 | 38.14 | 39.38 | 47.99 | 50.25 |

**மூலம்: நடு ஆண்டு தொழிற்படை மற்றும் சனத்தொகை - புள்ளிவிபரவியல் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி*

## காப்புறுதி வகை ரீதியாக அமுலில் இருக்கும் மற்றும் காப்புறுதி செய்யப்பட்ட பூட்கைகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 15, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அமுலில் உள்ள தவணைக் காப்புறுதி, யுனிவேர்சல் லைப், முழுமையான ஆயுட் காப்புறுதி, உரிமை வழங்கல்கள் மற்றும் ஏனைய என வகைப்படுத்தப்பட்ட காப்புறுதி வகைகளின் சுருக்கத்தை வழங்குகின்றது. ஏனைய வகையானது பிரதானமாக சுகாதாரத் திட்டங்கள், அலகு இணைப்புகள், ஆண்டுத்தொகை, குழு ஆயுள் மற்றும் தனிப்பட்ட தவணைக் கட்டணப் பண்டங்கள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. அமுலில் உள்ள மொத்தக் காப்புறுதி தொகையானது 5.76% வீதத்தினால் மிதமான வளர்ச்சியடைந்து, 4,297,794 (2020: 4,063,568) ஆக உயர்வடைந்துள்ளது. அதேவேளையில் காப்புறுதித் தொகை இ.ரூபா 6,267 பில்லியனை (2020: இ.ரூபா 4,823 பில்லியன்) 2021 இறுதியில் வெளிப்படுத்தியது.

கடந்த ஆண்டுகளைப் போலவே, உரிமை கோரல் வகைக் காப்புறுதிப் பூட்கைள் பிரதான பூட்கைகளாக இருந்ததுடன் இவற்றின் எண்ணிக்கை 1,276,647 (2020: 1,273,095) ஆவதுடன், இது 2021இல் .028% வீத வளர்ச்சியைக் காட்டியது. எனினும், அதே வகையின் காப்புறுதித் தொகையானது இ.ரூபா 501 பில்லியனை (2020: இ.ரூபா 685 பில்லியன்) எட்டியதன் மூலம், முக்கியமாக ஒரு காப்புறுதியாரினால் குறைந்துள்ளது. யுனிவேரசல் லைப் பூட்கைகளின் எண்ணிக்கை 1,057,060 (2020: 992,360) ஆக அதிகரித்தது, அதேசமயம் காப்புறுதித் தொகை இ.ரூபா 620 பில்லியனாக (2020: இ.ரூபா 515 பில்லியன்) நான்கு ஆயுட் காப்புறுதியாளர்களால் உந்தப்பட்டது.

38.60% வலுவான வளர்ச்சியை வெளிப்படுத்தும் "பிற" வகையின் நடைமுறையில் உள்ள பூட்கைகளின் எண்ணிக்கை 1,016,278 (2020:733,250) ஆக மேம்பட்டது, அதே நேரத்தில் ஒரு ஆயுட் காப்புறுதியாளரினால் அடமானப் பாதுகாப்புத் திட்டத்தில் - ஒற்றைத் தவணைக் கட்டணம் மற்றும் சுகாதாரத் திட்டங்களில் பதிவுசெய்யப்பட்ட வளர்ச்சியின் விளைவாக காப்புறுதித் தொகை இ.ரூபா 3,422 பில்லியன் (2020: இ.ரூபா 2,066 பில்லியன்) எனப் அறிக்கையிடப்பட்டது. மேலும் அதே ஆயுட் காப்புறுதியாளரினால் ரைடர்களுக்கான காப்புறுதித் தொகையும் ஈர்க்கக்கூடிய வளர்ச்சியை வெளிப்படுத்தியது.

தவணைக் காப்புறுதி, 2021ஆம் ஆண்டில் பூட்கைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் 11.22% வீத வீழ்ச்சியைப் பதிவுசெய்து, 924,270 (2020: 1,041,132) என குறிப்பிடப்பட்டிருப்பினும், அதே வகையின் காப்பீட்டுத் தொகையானது இ.ரூபா 1,722 பில்லியன் (2020: இ.ரூபா 1,556 பில்லியன்) கணக்கின் மூலம் 10.70% வளர்ச்சி வீதத்துடன் மேம்பட்டது.


முழு ஆயுட் காப்புறுதி, பூட்கைகளின் எண்ணிக்கை மற்றும் காப்புறுதித் தொகை என்பன மேலும் வீழ்ச்சியடைந்து முறையே 23,539 (2020: 23,731) மற்றும் இ.ரூபா 1,555 மில்லியன் (2020: இ.ரூபா 1,555 மில்லியன்) என்பன இரண்டின் கேள்வியிலும் வீழ்ச்சியை பிரதிபலித்தது.

# புள்ளிவிபர மீளாய்வு

**அட்டவணை 15**
**2020 மற்றும் 2021இல காப்புறுதி வகை ரீதியாக அமுலில் இருக்கும் மற்றும் காப்புறுதி செய்யப்பட்ட பூட்கைகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதிப் பூட்கையின் வகை | 2020 | | 2021 | |
|---|---|---|---|---|
| | அமுலில் உள்ள பூட்கைகளின் எண்ணிக்கை | காப்புறுதி செய்யப்பட்ட தொகை (இ.ரூபா '000) | அமுலில் உள்ள பூட்கைகளின் எண்ணிக்கை | காப்புறுதி செய்யப்பட்ட தொகை (இ.ரூபா '000) |
| தவணை காப்புறுதி | 1,041,132 | 1,556,004,122 | 924,270 | 1,722,498,648 |
| யுனிவேர்சல் லைப் | 992,360 | 514,703,931 | 1,057,060 | 620,345,090 |
| முழு ஆயுள் | 23,731 | 1,555,115 | 23,539 | 1,554,973 |
| உரிமை வழங்குதல்கள் | 1,273,095 | 684,919,131 | 1,276,647 | 501,347,497 |
| ஏனையவை | 733,250 | 2,065,977,502 | 1,016,278 | 3,421,566,810 |
| **மொத்தம்** | **4,063,568** | **4,823,159,802** | **4,297,794** | **6,267,313,018** |

**விளக்கப்படம் 11**
**2020 மற்றும் 2021இல் அமுலில் இருக்கும் காப்புறுதி பூட்கை வகைகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**




## காலங்கடந்த காப்புறுதிப் பூட்கைகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்


தவணைக் கட்டணங்களைச் செலுத்தாததாலும், ஒப்பந்த கால அவகாசம் காலவதியானதாலும் நிறுத்தப்பட்ட பூட்கைகள் காலாவதியான காப்புறுதிப் பூட்கைகள் எனப்படுபவதுடன், இவற்றின் பெறுமதி 268,905 (2020: 273,879) ஆவதுடன, இது 1.82% வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. புதிய காப்புறுப் பூட்கைகளில் 86,170 (2020: 70,152) பூட்கைகள் காலவதியாகியுள்ளதுடன், 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், பாரம்பரிய பங்குபற்றாத மற்றும் சர்வதேச ஆயுள் வகை வியாபாரங்களினால் 22.83% வீத அதிகரிப்பு காணப்படுகின்றது.

மொத்த காப்புறுதிப் பூட்கைகள் நடைமுறையில் உள்ள மொத்தப் பூட்கைகளின் சதவீதமாக காலாவதியாகி, அதன் கீழ்நோக்கிய போக்கைத் தொடர்ந்தது, 6.26% (2020: 6.74%) வீதமாக இருந்தது. எனினும் புதிய காப்புறுதிப் பூட்கைள் விநியோகிக்கப்பட்ட பூட்கைகளின் சதவீதம், கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து வீழ்ச்சிப் பாதையைக் கொண்டுள்ளதுடன், 2021இல் 9.86% (2020:7.76%) வீதத்தினால் அதிகரித்துள்ளது.

விளக்கப்படம் 12 நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் காலங்கடந்த காப்புறுதிப் பூட்கைகளைக் காட்டுகின்றது.

# புள்ளிவிபர மீளாய்வு

**விளக்கப்படம் 12**
**காலங்கடந்த காப்புறுதிப் பூட்கைகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**




| | 2017 | 2018 | 2019 | 2020 (அ) | 2021 (ஆ) |
|---|---|---|---|---|---|
| புதிய காப்புறுதிப் பூட்கைகள் காலங்கடந்துள்ளது | 90,350 | 86,484 | 83,547 | 70,152 | 86,170 |
| மொத்தக் காப்புறுதிப் பூட்கைகள் காலங்கடந்துள்ளது | 275,039 | 268,339 | 265,256 | 273,879 | 268,905 |
| விநியோகிக்கப்பட்ட புதிய பூட்கைகள் மீது புதிய காப்புறுதிப் பூட்கைகள் காலங்கடந்துள்ளதன் வீதம் | 14.04 | 12.16 | 11.37 | 7.76 | 9.86 |
| மொத்த அமுலில் உள்ள பூட்கைகள் மீது மொத்த காப்புறுதிப் பூட்கைகள் காலங்கடந்துள்ளததன் வீதம் | 8.96 | 8.39 | 7.84 | 6.74 | 6.26 |

### காப்புறுதிக் கம்பனிகளினால் ஏற்க நேர்ந்த கோரிக்கைகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் நீண்டகால காப்புறுதியாளர்களினால் ஏற்க நேர்ந்த கோரிக்கைகள் மேலும் அதிகரித்துள்ளதுடன், ஏற்க நேர்ந்த கோரிக்கைகளின் பெறுமதியாக இ.ரூபா 46,113 மில்லியன் (2020: இ.ரூபா 37,909 மில்லியன்) அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், இது 21.64% (2020: 7.88%) வீத கவனத்தில் கொள்ளக்கூடிய வளர்ச்சியைக் காட்டுகின்றது.

விளக்கப்படம் 13இல் காட்டியவாறு, மொத்தக் கோரிக்கைகள் அங்கவீன நிதியுதவிகள், மரணத்திற்கான நிதியுதவிகள், சரணடைதல்கள், முதிர்ச்சிக் கால நிதியுதவிகள் மற்றும் ஏனைய நிதி உதவிகளாக பூட்கையாளர்களுக்கு செலுத்தப்பட்டது.


2021இல் மொத்த ஏற்க நேர்ந்த கோரிக்கைகளில் முதிர்ச்சிகால நிதியுதவிகள் 3.34% வீத மிதமான வளர்ச்சியைக் கொண்டுள்ளதுடன், மொத்தக் கோரிக்கைகளின் பெறுமதி இ.ரூபா 22,428 மில்லியனை (2020:இ.ரூபா 21,703 மில்லியன்) எட்டியுள்ளதுடன், மொத்தக் கோரிக்கைகில் 48.64% (2020:57.25%) வீதத்தைக் கொண்டுள்ளது. ஏற்க நேர்ந்த மொத்தக் கோரிக்கைகளில் தன்னொப்படைப்பாளர்களின் கோரிக்கைகள் மொத்தக் கோரிக்கைகளில் 17.58% வீதத்தைக் கொண்டிருப்பதுடன், இ.ரூபா 8,174 மில்லியனுக்கு (2020: இ.ரூபா 6,952 மில்லியன்) அதிகரித்துள்ளதுடன், இது 17.58% வீத வளர்ச்சியைக் கொண்டுள்ளது.

சுகாதார நன்மைகள், முற்பணக் கொடுப்பனவுகள், காசு மற்றும் விஸ்வாச மிகை ஊதியச் செலவுகள், என்பவற்றை உள்ளடக்கிய ஏனைய கோரிக்கைகளுக்காக இ.ரூபா 8,390 மில்லியனை (2020: இ.ரூபா 5,902 மில்லியன்) ஏற்க நேர்ந்ததுடன் இது மொத்தக் கோரிக்கைகளில் 18.19% வீதமாகவும், கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 42.14% வீதம் எனும் கூர்மையான அதிகரிப்பையும் பதிவுசெய்தது.

இறப்பு நன்மைகள் மற்றும் ஊனமுற்றோர் நலன்கள் ஆகியவை முறையே இ.ரூபா 6,196 மில்லியன் (2020: இ.ரூபா 2,647 மில்லியன்) மற்றும் இ.ரூபா 925 மில்லியன் (2020: இ.ரூபா 706 மில்லியன்) தொகைளை கொண்டிருந்தன.

# புள்ளிவிபர மீளாய்வு

**விளக்கப்படம் 13**
**காப்புறுதிக் கம்பனிகளினால் ஏற்க நேர்ந்த கோரிக்கைகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**




| | 2017 | 2018 | 2019 | 2020(அ) | 2021(ஆ) |
|---|---|---|---|---|---|
| அங்கவீன நன்மைகள் | 636,472 | 984,923 | 731,803 | 705,887 | 925,434 |
| மரணம் | 2,106,087 | 2,842,975 | 2,991,518 | 2,646,832 | 6,195,906 |
| தன்னொப்படைப்புகள் | 5,530,517 | 7,004,688 | 7,141,731 | 6,951,595 | 8,173,793 |
| முதிர்ச்சி நன்மைகள் | 14,393,605 | 18,343,285 | 18,485,420 | 21,702,673 | 22,428,031 |
| ஏனையவை | 3,704,469 | 5,240,493 | 5,788,922 | 5,902,181 | 8,389,628 |

### காப்புறுதிக் கோரிக்கைகளின் எண்ணிக்கை - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

நீண்டகால காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் மொத்த ஏற்க நேர்ந்த கோரிக்கைகளின் எண்ணிக்கையானது 544,675 (2020: 505,533) ஆகவும் மொத்த வளர்ச்சி 7.74% (2020: 15.82%) வீதத்தினாலும் சற்று உயர்ந்துள்ளது. சுகாதார நன்மைகள், முற்பணக் கொடுப்பனவுகள், இடைக்கால கொடுப்பனவுகள், காசு மற்றும் விஸ்வாத மிகை ஊதியச் செலவுகள், இரத்துசெய்தல்கள் என்பவற்றை உள்ளடக்கிய ஏனைய கோரிக்கைகளுக்காக 232,373 (2020: 173,183) கொடுப்பனவு செய்யப்பட்டு மொத்தக் கோரிக்கைகளில் அதியுயர் எண்ணிக்கையைக் கொண்டிருந்தது. முதிர்ச்சி நன்மைகள் 157,176 (2020: 153,491) தொகையுடன் 2.4% வீதத்தால் சற்று வளர்ச்சியடைந்தது.

சரணடைவார்கள் தொகையானது 18.64% வீதத்தினால் வீழ்ச்சியடைந்து 126,686 (2020:155,718) எனும் தொகையை அடைந்தது. வட்டி விகிதங்கள் குறைவடைவதால் வாடிக்கையாளர்கள் நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்களை மறுபரிசீலனை செய்யத DTA கொள்கைகளில் இது முக்கியமாகக் காணப்பட்டது. அதனால், தற்போதுள்ள DTA பூட்கைகள் சரணடையச் செய்யப்பட்டு, புதிய கடன்களுக்காக புதிய னுவுயு பூட்கைகள் எடுக்கப்பட்டன.

மேலும், இறப்பு மற்றும் ஊனமுற்றோர் நலன்கள் 2021இல் முறையே 14,454 (2020: 12,105) மற்றும் 13,986 (2020: 11,036) ஆகும்.

அட்டவணை 16 கடந்த ஐந்து வருடங்களில் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் வேறுபட்ட வகைகளின் கீழ் கோரப்பட்ட காப்புறுதி எண்ணிக்கையைக் காட்டுகின்றது

**அட்டவணை 16**
**காப்புறுதிக் கோரிக்கைகளின் எண்ணிக்கை - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| | 2017 | 2018 | 2019 | 2020 (அ) | 2021 (ஆ) |
|---|---|---|---|---|---|
| அங்கவீன நன்மைகள் | 10,749 | 10,737 | 12,251 | 11,036 | 13,986 |
| மரணம் | 11,247 | 11,935 | 12,958 | 12,105 | 14,454 |
| தன்னொப்படைப்புகள் | 47,191 | 70,412 | 75,988 | 155,718 | 126,686 |
| முதிர்ச்சி நன்மைகள் | 128,266 | 153,856 | 130,723 | 153,491 | 157,176 |
| ஏனையவை | 145,452 | 166,745 | 204,564 | 173,183 | 232,373 |
| மொத்தம் | **342,905** | **413,685** | **436,484** | **505,533** | **544,675** |

# புள்ளிவிபர மீளாய்வு

### பொது காப்புறுதி வியாபரம்

கோவிட் 19 தொற்றுநோய் இன்னும் அதன் மோசமான வடிவத்தில் தொடர்ந்தது மற்றும் இலங்கை ஏற்கனவே இருக்கும் பல சமூக பொருளாதார மற்றும் அரசியல் சவால்கள் மற்றும் பலவீனங்களால் பல ஆண்டுகளாக வேட்டையாடப்பட்ட ஒரு நாடாக, முரண்பாடுகளை எதிர்த்துப் போராடிக்கொண்டிருந்த வேளையில் 2021 ஆம் ஆண்டு ஆரம்பமானது. 2021 ஆம் ஆண்டில் டெல்டா மாறுபாட்டின் தோற்றம் எதிர்பார்த்ததை விட மிகவும் கடுமையானதாக மாறியது, இதன் விளைவாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் இறப்புகள் அதிகரித்தன, இதனால் இலங்கை மூன்று முடக்கல்களுக்கு தூண்டப்பட்டது. மேற்கூறியவற்றின் எதிரொலியாக, நாடு முழுவதிலும் வியாபாரங்கள் கணிசமாக பாதிக்கப்பட்டன. நாட்டின் பல துறைகள் காப்புறுதித் துறையுடன் சாதகமற்ற பொருளாதாரச் சூழல் காரணமாக ஏராளமான சவால்களை எதிர்கொள்ள வேண்டிருந்தது.

மோட்டார் வாகனங்கள் இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட தடை விரிவாக்கப்பட்டதனால், 2021 ஆம் ஆண்டும் புதிய வாகனப் பதிவுகள் வீழ்ச்சியடைந்தன. 2021ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின் படி, மோட்டார் வாகனங்களின் புதிய பதிவுகள் 2020ஆம் ஆண்டின் 44.8% வீதத்துடன் ஒப்பிடுகையில் 83.3% வீதத்தினால் குறைவடைந்துள்ளன, புதிய பதிவுகளில் குறிப்பிடத்தக்க குறைப்புகள் தனிக் கப் வாகனங்கள், மோட்டர் கார்கள், மோட்டார் சைக்கில்க் மற்றும் இரட்டை நோக்க வாகனங்கள் உள்ளடங்களாக அனைத்து பிரதான வாகன வகைகளிலும் வீழ்ச்சியை வெளிப்படுத்தின. இருப்பினும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மீதுமுள்ள வகுப்புகளின் பாராட்டத்தக்க செயலாற்றுகையின் உதவியுடன், முழு பொதுக் காப்புறுதித்துறையில் 2020ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 2.25% வீத சுருக்கத்திற்கு எதிராக 3.32% வீத முன்னேற்றத்தை அடைந்ததுடன் கடந்த ஐந்து ஆண்டுகளில் மிக உயர்ந்த மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தைப் பெற்றுக்கொண்டது.

பொதுக் காப்புறுதித்துறையின் சொத்துத்தளம் மற்றும் முதலீட்டு வருமானம் போதுமான மூலதனம் மற்றும் பணப்புழக்கத்துடன் முறையே 9.92% மற்றும் 9.72% வீத வளர்ச்சியைக் காட்டியது.

கடந்த ஐந்தாண்டுகளுடன் ஒப்பிடும் போது, 2021 ஆம் ஆண்டிற்கான சுகாதாரக் காப்புறுதி வணிகத்தின் உரிமைக் கோரல்கள், முந்தைய ஆண்டின் எதிர்மறையான வளர்ச்சியான 27.80% வீதத்திற்கு எதிராக 42.71% அதிகரிப்புடன் உச்சத்தில் இருந்தது. 2020ஆம் ஆண்டின் பல முடக்கல்கள் ஏற்பட்டதன் விளைவாக, 2021ஆம் ஆண்டில் எதிக எண்ணிக்கையிலான கோரிக்கைகள் தாமதமாகத் தெரியப்படுத்தப்பட்டு, அதற்கான அனுமதியை வழங்கியது, இதன் விளைவாக உடல் நலக் காப்புறுதித்துறையின் உரிமைக் கோரல்களில் தீடீர் உயர்வு ஏற்பட்டது. தவிர, புதிய கோவிட் 19 வகைகளின் பரவல் மற்றும் அவர்களின் மருத்துவத் தேவைக்கு தனிப்பட்டவர்களின் கவனம் தொடர்ச்சியாக அதிகரித்தமையான ஏற்பட்ட ஏற்றம், இது இறுதியில் உடல்நலக் காப்புறுதித்துறையின் கோரிக்கைகளை அதிகரிக்க உதவியது. பொதுக் காப்புறுதித்துறையானது, கோரிக்கைகளின் அதிகரிப்பின் காரணமாக இலாபத்தில் ஒரு சிறிய சுருங்கலைக் காட்டியது.

பரவலான தடுப்பூசித் திட்டங்களின் வெற்றி மற்றும் 2021ஆம் ஆண்டின் இறுதிக்குள் உலகளாவிய பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதால், சுரங்கப்பாதையின் முடிவில் ஒரு வெளிச்சம் தோன்றியது. தொற்றுநோயால் ஏற்பட்ட வியாபாரக் குறுக்கீடுகளைத் தோற்கடித்து, காப்புறுதித்துறை மிகவும் நேர்மறையான கண்ணோட்டத்துடன் 2021ஆம் ஆண்டில் நுழைந்தது. பல காப்புறுதியாளர்கள் டிஜிடல் செயல்முறைகளுக்கான விரைவான மற்றும் சுமூகமான மாற்றத்தைத் தொடங்கினர், எனவே கடிகாரத்தைச் சுற்றி வாடிக்கையாளர் உறவை நிலைநிறுத்தினர். எனவே, காப்புறுதியாளர்கள் ஆண்டு முழுவதும் வாடிக்கையாளர்களுக்கு தடையில்லா சேவையை வழங்க முடிந்தது. தொற்றுநோயால் முன்வைக்கப்படும் தடைகளை முறியடிப்பதற்கு ஒரு வழிமுறையாக இலங்கையில் உள்ள காப்புறுதியாளர்கள் தவணைக் கட்டண சேகரிப்பு, உரிமைக் கோரல் கொடுப்பனவுகள் போன்றவற்றில் பூட்கையாளர்களுக்கு பல நீடிக்கப்பட்ட நன்மைகளை வழங்கினர்.

### மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணம்

கோவிட்-19 தொற்றுநோயின் தீங்கு விளைவிக்கும் விளைவுகள் மற்றும் உயர் அழுத்த பொருளாதாரச் சூழல் இருந்த போதிலும், பொதுக் காப்புறுதிக் கைத்தொழிற்துறையானது கடந்த ஆண்டில 2.25% வீத பாதகமான மறை வளர்சசி போக்குடன் ஒப்பிடுகையில் 3.32% வீதத்துடன் மெலிதான முன்னேற்றத்தை அளித்தது. இது இ.ரூபா 108,760 (2000: இ.ரூபா 105,265 மில்லியன்) தவணைக் கட்டண வருமானத்தைப் பதிவுசெய்தது. பரவலான தடுப்பூசித் திட்டங்கள் மற்றும் 2021இன் பிற்பகுதியில் தொற்றுநோய் தொடர்பான கட்டுபாடுகளை தணிப்பது, முன்பு நிறுத்தப்பட்ட வணிக நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவதற்கும், முன்னேறுவதற்கும் மக்களுக்கும் வியாபாரங்களுக்கும் உதவியது. இதன் விளைவாக, பொருளாதாரத்தின் பெரும்பாலான துறைகள் சீராக இயங்கின, இது இலங்கைப் பொருளாதாரத்தில் பிரதிபலித்து, 2021இல் மொத்த தேசிய உற்பத்தி 3.7% வீதத்தை எட்டியது. அந்தக் கணக்கில், பல காப்புறுதி நிறுவனங்கள் நியாயமான செயலாற்றுகையை வெிப்படுத்தி, கடந்த ஐந்து ஆண்டுகளில் பொதுக் காப்புறுதித்துறையின் முன்னேற்றத்தைக் காட்டியது.

கடந்த ஆண்டில் இரண்டாம் இடத்தைப் பெற்றிருந்த எஸ்எல்ஐசீ ஜெனரல் 2020ஆம் ஆண்டில் பொதுக் காப்புறுதிச் சந்தையில் மிகப்பெரிய பங்களிப்பாளராக இருந்ததுடன், 2021ஆம் ஆண்டிலும் முதல் இடத்தை பிடிக்க முடிந்தது, இது மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டமாக இ.ரூபா 20,382 மில்லியனைப் (2020: இ.ரூபா 19,371 மில்லியன்) பெற்றுக் கொண்டதன் ஊடாக 18.74% (2020: 18.40%) வீத சந்தைப் பங்கை கைப்பற்றியது. தலைப்பு, தனிப்பட்ட விபத்து மற்றும் பொதுப் பொறுப்பு போன்ற நானாவித வியாபார வகுப்பின் துணைப்பிரிவுகள், 2021ஆம் ஆண்டில் திறனை மேம்படுத்தி, எஸ்எல்ஐசி ஜெனரலின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை மேம்படுத்தியுள்ளது. வெளிநாட்டு வேலைவாய்ப்பின் விரிவாக்கம் முந்தைய ஆண்டை விட தவணைக் கட்டண வசூலை உயர்த்தியது, இது நிறுவனத்தின் ஒட்டுமொத்த மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை மேலும் உயர்த்தியது.

# புள்ளிவிபர மீளாய்வு

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், பொதுக் காப்புறுதிச் சந்தையில் 17.01% வீத (2020: 17.75%) சந்தைப் பங்குடன் சிலிங்கோ ஜெனரல் இரண்டாவது இடத்திற்கு இடம் மாறியதுடன் மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணத்தில் இ.ரூபா 18,499 மில்லியனை (2020:இ.ரூபா 18,681 மில்லியன்) உருவாக்கியது. மோட்டார் வாகன காப்புறுதி வியாபாரத்தில் ஏற்பட்ட குறைவு காரணமாக மேற்குறிப்பிட்ட சிறிய வீழ்ச்சி சிலிங்கோ ஜெனரலின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் ஏற்பட்டது.

இ.ரூபா 13,365 மில்லியன் (2020: 12,052 மில்லியன்) மதிப்புள்ள மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை அடைந்து 12.29% (2020: 11.45%) வீத சந்தைப் பங்கினை பதிவுசெய்ததன் மூலம் என்ஐடீஎப் ஏணியில் ஏறி, பொதுக் காப்புறுதிச் சந்தையில் மூன்றாவது போட்டியாளராக மாறியது.

மோட்டார் காப்புறுதி வியாபாரத்தில் குறிப்பிடத்தக்க வகையில் வியாபார அளவுகளில் ஏற்பட்ட சுருங்குதல் அனைத்துப் பொதுக் காப்புறுதியாளர்களையும் மோசமாகப் பாதித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். கடந்த ஆண்டின் மூன்றாவது சந்தை ஆட்டக்காரராக இருந்த எலைன்ஸ் ஜெனரல் இதே புதிருக்குப் பதிலாகி பொதுக் காப்புறுதிச் சந்தையில் 11.48% வீத (2020 : 13.16%) சந்தைப் பங்குடன் மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணத்தில் இ.ரூபா 12,490 மில்லியனை (2020:இ.ரூபா 13,853 மில்லியன்) உருவாக்கி, நான்காவது இடத்தைப் பிடித்துக்கொண்டது.

10.95% (2020: 11.34%) சந்தைப் பங்கு மற்றும் இ.ரூபா 11,914 மில்லியனை (2020:இ.ரூபா 11,937 மில்லியன்) மதிப்புள்ள மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணத்துடன், இந்த ஆண்டுக்கான பொதுக் காப்புறுதிச் சந்தையில் ஐந்தாவது இடத்தை பெயர்பெஸ்ட் நிறுவனத்தினால் ஆக்கிரமிக்க முடிந்தது.

பொருளாதாரச் சிக்கல்களைத் தொடர்ந்து கோவிட்-19 தொற்றுநோயின் வீழ்ச்சியைப் பொருட்படுத்தாமல் நான்கு காப்புறுதியாளர்களைத் தவிர்த்து ஏனைய அனைத்து பொதுக் காப்புறுதியாளர்களும் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் முன்னேற்றத்தை வெளிப்படுத்தியுள்ளனர், இது கடந்த ஆண்டு மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்துடன் ஒப்பிடும் போது மிதமான உறுதியை அளித்தது.

அட்டவணை 17 மற்றும் வரைபு 14 என்பன பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் கம்பனி ரீதியாக மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டடம் மற்றும் சந்தைப் பங்கினை விளக்குகின்றன.

**அட்டவணை 17**


**கம்பனி ரீதியான எழுதப்பட்ட தவணைக் கட்டணம் மற்றும் சந்தைப் பங்கு - பொதுக் காப்புறுதிக் கம்பனி**

| காப்புறுதியாளர் | 2017 | | 2018 | | 2019 | | 2020 (அ) | | 2021 (ஆ) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) |
| எலைன்ஸ் ஜென. | 5,956,142 | 6.38 | 17,983,748 | 17.88 | 18,095,258 | 16.80 | 13,852,829 | 13.16 | 12,490,133 | 11.48 |
| அமான ஜென. | 1,686,270 | 1.81 | 1,841,067 | 1.83 | 1,621,461 | 1.51 | 1,631,666 | 1.55 | 2,173,073 | 2.00 |
| சிலிங்கோ ஜென. | 17,012,087 | 18.22 | 18,137,933 | 18.03 | 18,401,405 | 17.09 | 18,680,545 | 17.75 | 18,498,751 | 17.01 |
| கென்டினென்டல் | 3,892,780 | 4.17 | 4,545,405 | 4.52 | 5,002,548 | 4.65 | 4,808,964 | 4.57 | 4,888,930 | 4.50 |
| கோப்பரெட்டிவ் ஜென. | 2,966,679 | 3.18 | 3,692,397 | 3.67 | 4,192,960 | 3.89 | 4,274,397 | 4.06 | 4,374,591 | 4.02 |
| பியார்பெஸ்ட் | 9,610,990 | 10.29 | 10,980,850 | 10.92 | 11,247,669 | 10.44 | 11,937,482 | 11.34 | 11,914,064 | 10.95 |
| எச்என்பி ஜென. | 3,662,008 | 3.92 | 4,062,171 | 4.04 | 4,394,457 | 4.08 | 4,583,235 | 4.35 | 5,166,812 | 4.75 |
| ஜனசக்தி ஜென. | 11,740,185 | 12.57 | | | | | | | | |
| எல்ஓஎல்சி ஜென. | 3,795,106 | 4.06 | 4,318,721 | 4.29 | 4,954,896 | 4.60 | 5,612,894 | 5.33 | 6,562,651 | 6.03 |
| எம்பிஎஸ்எல் | 260,806 | 0.28 | (512) | 0.00 | 95,979 | 0.09 | 297,995 | 0.28 | 413,070 | 0.38 |
| என்ஐடீஎப் | 8,114,412 | 8.69 | 9,644,901 | 9.59 | 13,358,203 | 12.40 | 12,051,863 | 11.45 | 13,365,348 | 12.29 |
| ஓரியன்ட் | 1,179,000 | 1.26 | 1,376,398 | 1.37 | 1,564,902 | 1.45 | 1,628,153 | 1.55 | 2,027,885 | 1.86 |
| பீப்பள்ஸ் | 4,587,432 | 4.91 | 5,354,368 | 5.32 | 5,694,164 | 5.29 | 5,686,758 | 5.40 | 5,634,586 | 5.18 |
| சனச ஜென | 569,509 | 0.61 | 732,379 | 0.73 | 898,079 | 0.83 | 847,117 | 0.80 | 868,306 | 0.80 |
| எஸ்எல்ஐசி | 18,355,361 | 19.65 | 17,916,274 | 17.81 | 18,162,766 | 16.87 | 19,370,895 | 18.40 | 20,382,188 | 18.74 |
| **மொத்தம்** | **93,388,766** | **100** | **100,586,101** | **100** | **107,684,747** | **100** | **105,264,793** | **100** | **108,760,388** | **100** |
| **வளர்ச்சி வீதம் (%)** | **17.34** | | **7.71** | | **7.06** | | **-2.25** | | **3.32** | |

# புள்ளிவிபர மீளாய்வு

**விளக்கப்படம் 14**

**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் கம்பனி ரீதியான சந்தைப் பங்குகள் - 31 டிசம்பர் 2021ஆம் திகதியன்று பொதுக் காப்புறுதி வியாபாரம்**




### மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்திற்கான முதல் ஐந்து பங்களிப்பாளர்களும் ஏனைய காப்புறுதியாளர்களும் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

2021 பொதுக் காப்புறுதிச் சந்தையில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், சிலிங்கோ ஜெனரல், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம், எலைன்ஸ் ஜெனரல் மற்றும் பெயர்பெஸ்ட் என்பன முன்னணி ஐந்து காப்புறுதியாளர்களாவர், இவர்கள் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் இ.ரூபா 76,650 மில்லியனைப் (2020:இ.ரூபா 75,894 மில்லியன்) பெற்று முழுச் சந்தைப் பெறுமதியில் 70.48% (2020: 72.10%) வீதத்தை தன்னகப்படுத்தினர். அதேவேளையில் ஏனைய ஒன்பது காப்புறுதியாளர்களும் மொத்தச் சந்தைப் பங்கில் 29.52% (2020: 27.90%) வீதத்தைப் பெற்றுக்கொண்டதுடன், இவர்கள் பெற்றுக்கொண்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் பெறுமதி இ.ரூபா 32,110 மில்லியன் (2020:இ.ரூபா 29,371 மில்லியன்) ஆகும்.

கடந்த ஆண்டைப் போலவே, எஸ்எல்ஜசி ஜெனரல் மற்றும் சிலிங்கோ ஜெனரல் 2021ஆம் ஆண்டிலும் தொடர்ந்து பொதுக் காப்புறுதிச் சந்தையில் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைகளை வெற்றிகரமாகத் தக்கவைத்திருந்தன. எனினும் சிலிங்கோ ஜெனரலின் செயலாற்றுகை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் சற்றுக் குறைந்துள்ளது.


என்ஜடிஎப் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது, கடந்த ஆண்டைவிட சந்தைப் பங்கில் சிறிதளவு உயர்வைக் கோடிட்டுக் காட்டியது. இதற்கு மாறாக பொதுக் காப்புறுதிச் சந்தையில் நான்காவது பங்களிப்பாளரான எலையன்ஸ், 1.68% வீத சந்தைப் பங்குடன் குறிப்பிட்டத்தக்க சுருக்கத்தைப் பதிவு செய்துள்ளதுடன், கடந்த மூன்று ஆண்டுகளாக இதே போக்கைக் காட்டுகின்றது. வியாபாரத்தின் மோட்டார் மற்றும் சொத்துகளின் அளவுகளின் வீழ்ச்சியானது, எலையன் ஜெனரலின் தவணைக் கட்டண சேகரிப்பை தடைசெய்ததுடன், இதன் விளைவாக எதிர்மறையான முடிவுகள் வந்தன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெயர்பெஸ்ட் சந்தைப் பங்கில் ஒரு மெல்லிய ஒடுக்கத்தை வெளிப்படுத்தியது.

2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1.61% வீத தங்கள் சந்தைப் பங்கை மேலும் விரிவுபடுத்தியுள்ள மீதமுள்ள காப்புறுதியாளர்களில் ஒரு நியாயமான முன்னேற்றத்தைக் காணலாம். எனவே, முக்கிய ஐந்து பணிப்பாளர்கள் பொதுக் காப்புறுதிச் சந்தைப் பங்கில் சரிவை வெளிப்படுத்தி, மீதமுள்ள பங்களிப்பாளர்களுக்கு தங்கள் செல்வாக்கை நீட்டிக்க அதிக இடமளித்துள்ளனர்.

வரைவு 15 2017இல் இருந்து 2020 வரை முதல் ஐந்து பங்களிப்பாளர்கள் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்திற்கு வழங்கிய பங்களிப்பின் சந்தைப் பங்கினை வெளிப்படுத்துகின்றது.

# புள்ளிவிபர மீளாய்வு

**விளக்கப்படம் 15**
**2017இல் இருந்து 2021 வரை முதல் ஐந்து பங்களிப்பாளர்களும் ஏனைய காப்புறுதியாளர்களும் - பொதுக் காப்பறுதி வியாபாரம்**




| | சிலிங்கோ லைப் | எஸ்எல்ஐசி | ஜனசக்தி ஜென/ எலைன்ஸ் ஜெனரல் | என்ஜடீஎப் | யூனியன் ஜென/ பெயர்பெஸ்ட் | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|
| 2017 | 19.65 | 18.22 | 8.69 | 12.57 | 10.29 | 30.58 |
| 2018 | 17.81 | 18.03 | 9.59 | 17.88 | 10.92 | 25.77 |
| 2019 | 16.87 | 17.09 | 12.40 | 16.80 | 10.44 | 26.39 |
| 2020(அ) | 18.40 | 17.75 | 11.45 | 13.16 | 11.34 | 27.90 |
| 2021(ஆ) | 18.74 | 17.01 | 12.29 | 11.48 | 10.95 | 29.52 |

### மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வகுப்பு ரீதியான பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்

மோட்டார் காப்புறுதி வியாபாரம் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக இ.ரூபா 59,734 மில்லியனையும் (2020:இ.ரூபா. 61,276 மில்லியன்) பொதுக் காப்புறுதிச் சந்தையின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண சந்தைப் பங்காக 54.92% (2020: 58.21%) வீதத்தையும் அறிக்கையிட்டது. எனினும், வருந்தத்தக்க வகையில், கடந்த நான்காண்டு காலத்துடன் ஒப்பிடுகையில் மோட்டார் காப்புறுதி வியாபாரமானது, 2021 ஆம் ஆண்டில் மிகக் குறைந்த தவணைக் கட்டணத்தைப் பதிவுசெய்துள்ளது, இது அந்த ஆண்டிற்கான எதிர்மறை வீதத்தைக் கொண்ட ஒரேயொரு பொதுக் காப்புறுதி வியாபார வகுப்பைக் குறிக்கின்றது, மோட்டார் காப்புறுதி வியாபாரத்தின் சந்தைப் பங்கு படிப்படியாகக் குறைந்து, பொதுக் காப்புறுதித் துறைக்கு ஒரு ஆபத்து அலாரத்தை வழங்கியது.

மோட்டார் தவணைக் கட்டணத்தின் குறைப்பு 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், முடக்கல்களைத் தொடர்ந்து இது நாணயத் திரவத்தன்மை நெருக்கடி காரணமான மோட்டார் வாகனங்கள் மீதான நீண்டகால இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக ஒரு அளவிற்கு கட்டுப்பட்டதுடன் பயணக் கட்டுப்பாடுகள் என்பவற்றால், 2.52% வீத எதிர்மறையான வளர்ச்சி வீதத்துடன் இ.ரூபா 1,542 மில்லியனாக இருந்தது. எனவே பாதகமான பொருளாதார நிலைமைகளின் விளைவாக விரிவான பூட்கைகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த தவணைக் கட்டணத்தைக் கொண்ட மோட்டார் மூன்றாம் தரப்பு பூட்கைகளுக்கான விருப்பத்தேர்வுகள் பூட்கைதாரர்களுக்கு தேவைப்பட்டன. புதுப்பித்தலின் முடிவில், மோட்டார் வாகனங்களுக்கான மூன்றாம் தரப்பு பூட்கைகளுக்கு மோட்டார் வாகன விரிவான பூட்கைகள் மாற்றப்பட்டன. எனவே உயர் புதுப்பித்தல் மற்றும் புதிய வியாபாரக் கொள்கைகளுடன் மோட்டார் மூன்றாம் தரப்பு பூட்கைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது.

சமீபத்திய தொற்றுநோய் காரணமாக நிச்சயமற்ற தன்மைகள் தோன்றியதால், அது மக்களை சுகாதாரக் காப்புறுதியின் முக்கியத்துவத்தை பற்றி சிந்திக்க வழிவகுத்தது. எனவே சுகாதார காப்புறுதி வியாபாரமானது பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் இ.ரூபா 19,960 மில்லியனை (2020:18,878 மில்லியன்) மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாகவும் சந்தைப் பங்காக 18.35% (2020: 17.93%) வீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இரண்டாவது பெரிய வகையாக இருக்கும் சுகாதாரக் காப்புறுதி வியாபாரம் செயற்பட்டாலும், கடந்த இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் வளர்ச்சியின் கணிசமான குறைப்பு கவனிக்கத்தக்கதாகும். 2021ஆம் ஆண்டில் சுகாதார வியாபாரத்தின் வளர்ச்சி வீதம் கடந்த ஆண்டின் 13.76% வீதத்துடன் ஒப்பிடுகையில் 5.73% வீதமாக மட்டுமே காணப்பட்டது.

# புள்ளிவிபர மீளாய்வு

தீ காப்புறுதி வியாபாரத்தின் வகை 16.16% (2020:7.48%) வீதத்தினால் அதிகரித்ததுடன், இது கடந்த ஐந்து ஆண்டுகளில் அதிகபட்ச தவணைக் கட்டணத்தைப் பதிவுசெய்ததுடன், எழுதப்பட்ட தவணைக் கட்டணம் இ.ரூபா 10,325 மில்லியனைப் (2020: இ.ரூபா. 8,888மில்லியன்) ஆகும். தீ காப்புறுதி வியாபாரமானது மற்ற அனைத்து வகுப்புகளையும் விஞ்சியது மற்றும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது தவணைக் கட்டணத்தில் அதிக அதிகரிப்பைக் குறிக்க முடிந்து. இதன் மதிப்பு இ.ரூபா 1,436 மில்லியன் வளர்ச்சியுடன் பொதுக் காப்புறுதிச் சந்தைப் பங்கில் 9.49% (2020:8.44%) வீதத்தை வழங்கியது.

ஆண்டின் பிற்பகுதியில் சுற்றுலாத்துறையில் மிதமான வளர்ச்சி மட்டும் பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதன் மூலம் பல்வேறு வகை காப்புறுதி வணிகத்தின் அதிகரிப்பு மிகவும் பாதிக்கப்பட்டது. இந்த வகை காப்பறுதி அதன் செயலாற்றுகையை மேம்படுத்தி, கடந்த ஆண்டு பெற்ற 24.75% வீத எதிர்மறை வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 13.43% வீத ஈர்க்கக்கூடிய வளர்ச்சியை வெளிப்படுத்தியது, தவணைக் கட்டண மதிப்பு இ.ரூபா 8,913 மில்லியன் (2020: இ.ரூபா 7,858 மில்லியன்) மற்றும் சந்தைப் பங்கு 8.20% (2020: 7.46%) ஆகும்.

2021ஆம் ஆண்டில், கடல்சார் காப்புறுதி வியாபாரமானது, இ.ரூபா 3,074 மில்லியன் (2020: இ.ரூபா 2,276 மில்லியன்) மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை உருவாக்கியது மற்றும் முந்தைய இரண்டு ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட கீழ்நோக்கிய பாதைக்கு எதிராக 35.04% வீத வளர்ச்சியை வழங்கியது. மேலும், கடல் காப்புறுதி வியாபாரமானது 2020 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 2.16% உடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் 2.83% வீத சந்தைப் பங்கைப் பதிவுசெய்ய முடிந்தது.

கடந்த ஐந்தாண்டுகளில் அதிகபட்ட தவணைக் கட்டண மற்றும் சந்தைப்பங்கை எட்டியது மற்றும் கடந்த ஆண்டு 3.47% எதிர்மறை வளர்ச்சி வீதத்திற்கு எதிராக 10.93% வளர்ச்சி வீதத்தைக் குறிக்கின்றது.

என்ஜடீஎப் இன் வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றிலிருந்து வரும் தவணைக் கட்டணத் தொகையாக இ.ரூபா 6,754 மில்லியன் (2020: 6,088 மில்லியன்) வசூலிக்கப்பட்டதுடன் சந்தைப் பங்கு மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் 6.21% (2020:5.78%) வீதமாகும்.

மோட்டார் காப்பறுதி வியாபாரத்தை தவிர்த்து ஏனைய அனைத்து வகுப்புகளினாலும் 2021ஆம் ஆண்டில் தவணைக் கட்டணத்தில் நேர்மறையான மாற்றத்தைக் காட்ட முடிந்தது.

அட்டவணை 18 மற்றும் விளக்கப்படம் 16 பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் முக்கிய உப வகுப்புகளிலிருந்து உருவாக்கப்பட்ட தவணைக் கட்டணம் மற்றும் என்ஜடீஎப் இன் வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றிலிருந்து வரும் இடரை ஈடுகட்ட பெறப்படும் தவணைக் கட்டணம் மற்றும் அவற்றின் வளர்ச்சி வீதம் மற்றும் 2017 முதல் 2021 வரை அந்தக் காலத்திற்கான பொ்துக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்திருந்தான சதவீத பங்கு ஆகியவற்றைக் காட்டுகின்றது.

**அட்டவணை 18**
**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வகுப்பு ரீதியான பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்**


| வகுப்பு | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | 2019 | 2020 (அ) | 2021 (ஆ) |
| தீ | 8,597,489 | 8,821,655 | 8,269,991 | 8,888,258 | 10,324,853 |
| கடல் | 2,191,654 | 2,403,366 | 2,385,566 | 2,276,474 | 3,074,111 |
| மோட்டார் | 56,047,640 | 62,363,476 | 63,685,555 | 61,276,210 | 59,733,959 |
| சுகாதாரம் | 14,649,440 | 14,161,542 | 16,593,661 | 18,877,585 | 19,960,147 |
| நானாவிதம் | 7,866,260 | 8,254,421 | 10,442,624 | 7,857,768 | 8,913,184 |
| **உப மொத்தம்** | **89,352,484** | **96,004,460** | **101,377,397** | **99,176,296** | **102,006,254** |
| எஸ்ஆர்சீசீ அனட் டீ | 4,036,283 | 4,581,641 | 6,307,350 | 6,088,496 | 6,754,134 |
| **மொத்தம்** | **93,388,766** | **100,586,101** | **107,684,747** | **105,264,792** | **108,760,388** |

# புள்ளிவிபர மீளாய்வு

| வகுப்பு | வளர்ச்சி (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | 2019 | 2020 (அ) | 2021 (ஆ) |
| தீ | 14.94 | 2.61 | (6.25) | 7.48 | 16.16 |
| கடல் | 5.05 | 9.66 | (0.74) | (4.57) | 35.04 |
| மோட்டார் | 13.61 | 11.27 | 2.12 | (3.78) | (2.52) |
| சுகாதாரம் | 45.96 | (3.33) | 17.17 | 13.76 | 5.73 |
| நானாவிதம் | 10.47 | 4.93 | 26.51 | (24.75) | 13.43 |
| **உப மொத்தம்** | **17.48** | **7.44** | **5.60** | **(2.17)** | **2.85** |
| எஸ்ஆர்சீசீ அனட் டீ | 14.23 | 13.51 | 37.67 | (3.47) | 10.93 |
| **மொத்தம்** | **17.34** | **7.71** | **7.06** | **(2.25)** | **3.32** |

| வகுப்பு | சந்தைப் பங்கு (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | 2019 | 2020 (அ) | 2021 (ஆ) |
| தீ | 9.21 | 8.77 | 7.68 | 8.44 | 9.49 |
| கடல் | 2.35 | 2.39 | 2.22 | 2.16 | 2.83 |
| மோட்டார் | 60.02 | 62.00 | 59.14 | 58.21 | 54.92 |
| சுகாதாரம் | 15.69 | 14.08 | 15.41 | 17.93 | 18.35 |
| நானாவிதம் | 8.42 | 8.21 | 9.70 | 7.46 | 8.20 |
| **உப மொத்தம்** | **95.68** | **95.45** | **94.14** | **94.22** | **93.79** |
| எஸ்ஆர்சீசீ அனட் டீ | 4.32 | 4.55 | 5.86 | 5.78 | 6.21 |
| **மொத்தம்** | **100.00** | **100.00** | **100.00** | **100.00** | **100.00** |

**விளக்கப்படம் 16**
**2017 இல் இருந்து 2021 வரை மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வகுப்பு ரீதியான பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்**




| | 2017 | 2018 | 2019 | 2020 (a) | 2021 (b) |
|---|---|---|---|---|---|
| எஸ்ஆர்சீசீ அனட் டீ | 4.32 | 4.55 | 5.86 | 5.78 | 6.21 |
| நானாவிதம் | 8.42 | 8.21 | 9.70 | 7.46 | 8.20 |
| சுகாதாரம் | 15.69 | 14.08 | 15.41 | 17.93 | 18.35 |
| மோட்டார் | 60.02 | 62.00 | 59.14 | 58.21 | 54.92 |
| கடல் | 2.35 | 2.39 | 2.22 | 2.16 | 2.83 |
| தீ | 9.21 | 8.77 | 7.68 | 8.44 | 9.49 |
| கைத்தொழிற்துறை வளர்ச்சி | 17.34 | 7.71 | 7.06 | (2.25) | 3.32 |

# புள்ளிவிபர மீளாய்வு

### நானாவித காப்புறுதி வியாபாரத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வகுப்பு ரீதியான பகுப்பாய்வு

அட்டவணை 19, 2020 மற்றும் 2021 இல் நானாவித காப்புறுதி வியாபாரத்தின் கீழ் வேறுபட்ட காப்புறுதி வகைகளில் உருவாக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை விளக்குகின்றது.

கோவிட்-19 தொற்றுநோய் ஒட்டுமொத்த கைத்தொழிற்துறையையும் பாதித்தாலும், பல்வேறு வகையான வியாபாரங்கள் பொருளாதார சீர்குலைவு மற்றும் உறுதியற்ற தன்மையால் வித்தியாசமாக பாதிக்கப்பட்டன. 2021ஆம் ஆண்டில் மொவேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் என்பவற்றைத் தவிர்த்து ஏனைய காப்புறுதியில் இருந்து உருவாக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணம் இ.ரூபா 8,913 மில்லியன் (2020: இ.ரூபா 7,858 மில்லியன்) ஆகும். ஏனைய காப்புறுதி வியாபார வகைகள் கடந்த ஆண்டை விட மேம்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட பாதகமான வளர்ச்சியைக் கடந்து, 2021இல் தனிப்பட்ட விபத்து மற்றும் எயர் கிரா∴ப்ட் ஹல் போன்ற உப பிரிவுகள் சிறப்பாக செயற்பட்டன. எயர் கிரா∴ப்ட் ஹல் வகை வியாபாரம் இ.ரூபா 687 மில்லியனைப் (2020: இ.ரூபா 467 மில்லியன்) பதிவுசெய்கையில் தனிப்பட்ட விபத்து வகை இ.ரூபா 1,445 மில்லியனைப் (2020: இ.ரூபா 1,298 மில்லியன்) பதிவுசெய்து, முறையே 47.05% மற்றும் 11.27% வீத வளர்ச்சியைப் வெளிப்படுத்தின.

நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயுமான பயணம் மற்றும் சுற்றுலாத்துறைகளில் கடந்த ஆண்டு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக, பல்வேறு காப்புறுதிப் பிரிவுகள் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன, துணைப்பிரிவான பயணக் காப்புறுதி, 2021இல் மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணமாக இ.ரூபா 219 மில்லியனைப் (2020: இ.ரூபா 200) 9.38% வீத மெலிதான முன்னேற்றத்தைக் காட்டியது.

வேலையில்லாத் திண்டாட்டம், பணி நிறுத்தம் மற்றும் சிறிய வியாபாரங்களின் திவால்நிலை போன்ற தொற்றுநோயின் விளைவுகள் தவிர்க்க முடியாதவை, எனவே இதர வகை வியாபாரத்தின் தொழிலாளர்களின் இழப்பீட்டுப் பிரிவில் திடீரென முழ்கியது தவிர்க்க முடியாததாகும்.

தனிப்பட்ட விபத்து, எயர் கிராப்ட் ஹல், பயணக் காப்புறுதி, தொழில்முறை இழப்பீடு மற்றும் தலைப்பு ஆகியவை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை வெளிப்படுத்தியுள்ளன. எனவே ஒரு சில பிரிவுகளைத் தவிர ஏனைய வியாபாரங்கள் கடந்த ஆண்டைவிட சிறப்பாக செயல்பட்டது என்று முடிவுக்கு வரமுடியும்.

**அட்டவணை 19**
**2020 மற்றும் 2021 இற்கு நானாவித காப்புறுதி தவணக் கட்டணங்களின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வகுப்பு ரீதியான பகுப்பாய்வு**

| வகை | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் '000 | |
|---|---|---|
| | 2020 (அ) | 2021 (ஆ) |
| உயில் நட்டக் காப்புறுதி | 320,719 | 451,618 |
| தனிப்பட்ட விபத்து | 1,298,399 | 1,444,673 |
| ஒப்பந்ததாரர்களின் அனைத்து இடர்கள் | 684,871 | 774,805 |
| நிபுணத்துவ நட்டஈடு | 457,580 | 590,741 |
| பயணக் காப்புறுதி | 200,359 | 219,156 |
| நம்பகத்தன்மை உத்தரவாதம் | 85,470 | 86,145 |
| களவு | 360,929 | 350,996 |
| பாதுகாப்பான காசு உள்ளடங்களாக காசு இடமாற்றம் | 429,854 | 402,520 |
| பண்ட போக்குவரத்து | 89,536 | 96,516 |
| பண்டப் பொறுப்பு | 166,807 | 189,736 |
| அரசுப் பொறுப்பு | 444,852 | 473,320 |
| வங்கியாளர்களின் காப்பீடு | 421,349 | 489,309 |
| எயர்கிராப்ட் ஹல் | 466,924 | 686,625 |
| பணியாளர்களுக்கான நட்டஈட்டுக் காப்புறுதி | 555,011 | 546,340 |
| தேசிய இயற்கை இடர் காப்புறுதி முறைமை | 2,555,699 | 3,218,280 |
| **உப மொத்தம** | **8,538,359** | **10,020,780** |
| கழி: என்ஜடீஎப்ற்கான எஸ்ஆர்சீசீ அன்ட டீ | (610,936) | (1,015,369) |
| துணைக் காப்புறுதி தவணைக் கட்டணம் | (69,649) | (92,227) |
| **மொத்தம்** | **7,857,774** | **8,913,184** |

# புள்ளிவிபர மீளாய்வு

### காப்புறுதியாளர்களின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம், மீள்காப்புறுதி தவணைக் கட்டணம் மற்றும் தக்கவைத்தல் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 20 மற்றும் விளக்கப்படம் 17 2017 இல் இருந்து 2021 வரை பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் பிரதான வகுப்புகளில் காப்புறுதிக் கம்பனிகளினால் உருவாக்கப்பட்ட மொத்த எழுத்தப்பட்ட தவணைக் கட்டணம், காப்புறுதியாளர்களுக்கு விட்டுக் கொடுக்கப்பட்ட மீள்காப்புறுதித் தவணைக் கட்டணம் என்பவற்றைக் காட்டுகின்றது.

அட்டவணை 20 மற்றும் விளக்கப்படம் 17 2017 இல் இருந்த மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத் தொகையின் வடிவத்தைப் பின்பற்றி 2021இல் பொது காப்புறுதி வியாபாரத்தினால் விட்டுக் கொடுக்கப்பட்ட மீள்காப்புறுதித் தொகை (எஸ்ஆர்சீசீ அனட் டீ தவிர்த்து) இ.ரூபா 20,478 மில்லியன் (2020:இ.ரூபா 18,511 மில்லியன்) ஆகும்.

ஏனைய வகுப்புகளுடன் ஒப்பிடுகையில், 2021ஆம் ஆண்டில் தீ மற்றும் நானாவிதம் என்பன உயர் மீள்காப்புறுதித் தவணைக் கட்டணங்களைக் கொண்டிருந்தன.

மோட்டார் வாகன வகை வீழ்ச்சியை வெளிப்படுத்துகையில், கடல் மற்றும் சுகாதார மீள்காப்புறதித் தவணைக் கட்டணங்களும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மேம்பட்டது, இதனை காப்புறுதி வகுப்பு வாரியான மொத்த எழுதப்பட்ட தவணக்கட்டணங்களும் காட்டின.

2021 ஆம் ஆண்டிற்கான பிரிவின் எஸ்ஆர்சீசீ அனட் டீ பிரிவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட மீள்காப்புறுதித் தவணைக் கட்டணம் இ.ரூபா 78 மில்லியன் (2020: இ.ரூபா 32 மில்லியன்) ஆகும். இருப்பினும், இது 01 ஒகஸ்ட் 2020 தொடக்கம் 31 ஜனவரி 2022 வரை தொடங்கிய, எஸ்ஆர்சீசீ அனட் டீயின் காப்பீட்டிற்காக தக்கவைக்கப்பட்ட மீள்காப்புறுதித் தவணைக் கட்டணத்தின் உண்மையான வெளிப்பாட்டைக் குறிக்கின்றது.

பொதுக் காப்புறுதித்துறையானது 79.92% (எஸ்ஆர்சீசீ அனட் டீ தவிர்த்து) ஒட்டுமொத்த தக்கவைப்பு வீதத்தை காட்டுகின்றது. இது கடந்த ஆண்டின் தக்கவைப்பு வீதமான 81.33% வீதத்துடன் ஒப்பிடுகையில் 1.41% வீத வீழ்ச்சியை பிரதிபலிப்பதுடன் தக்கவைப்பு தவணைக் கட்டணம் இ.ரூபா 81,528 மில்லியன் (இ.ரூபா 80,665 மில்லியன்) ஆக உள்ளது. முழுமையான தக்கவைப்பு விதிமானது 81.10% (2020:82.38%) வீதமாக இருக்கையில், இது கடந்த ஐந்து ஆண்டுகளில் உள்ள மிகக் குறைந்த தக்கவைப்பு வீதத்தைப் பிரதிபலிக்கின்றது.

2021ஆம் ஆண்டில் எதிர்மறையான வளர்ச்சியை உருவாக்கிய ஒரே பொதுக் காப்புறுதித் உப பிரிவாக இருந்தாலும், மோட்டார் வியாபாரக் காப்புறுதியானது, 93.93% (2020:92.89%) வீத தக்கவைப்பு வீதத்தைப் பதிவுசெய்ததன் மூலம், கடந்த ஆண்டைவிட சற்று மேம்பட்டுள்ளது.

கடந்த காலப் போக்கைப் பின்பற்றி, சுகாதாரக் காப்புறுதி வியாபாரபாமானது 91.67% (2020: 91.28%)என்ற இரண்டாவது மிகப் பெரிய தக்கவைப்பு வீதத்தைப் பிரதிபலிக்கின்றது.

2021ஆம் ஆண்டில், பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மற்ற மூன்று வகைகளான தீ, கடல்சார் மற்றும் நானாவித வகைகள் முறையே 22.54%, 38.66% மற்றும் 40.47% வீத தக்கவைப்புகளை வெளிப்படுத்தின.

**அட்டவணை 20**
**காப்புறுதியாளர்களின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம், மீள்காப்புறுதி தவணைக் கட்டணம் மற்றும் தக்கவைத்தல் - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

| வகுப்பு | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா '000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | 2019 | 2020 (அ) | 2021 (ஆ) |
| தீ | 8,597,489 | 8,821,655 | 8,269,991 | 8,888,258 | 10,324,853 |
| கடல் | 2,191,654 | 2,403,366 | 2,385,566 | 2,276,474 | 3,074,111 |
| மோட்டார் | 56,047,640 | 62,363,476 | 63,685,555 | 61,276,210 | 59,733,959 |
| சுகாதாரம் | 14,649,440 | 14,161,542 | 16,593,661 | 18,877,585 | 19,960,147 |
| நானாவிதம் | 7,866,260 | 8,254,421 | 10,442,624 | 7,857,768 | 8,913,184 |
| **உப மொத்தம்** | **89,352,484** | **96,004,460** | **101,377,397** | **99,176,296** | **102,006,254** |
| எஸ்ஆர்சீசீ அனட் டீ | 4,036,283 | 4,581,641 | 6,307,350 | 6,088,496 | 6,754,134 |
| **மொத்தம்** | **93,388,766** | **100,586,101** | **107,684,747** | **105,264,792** | **108,760,388** |

# புள்ளிவிபர மீளாய்வு


| வகுப்பு | மீள்காப்புறுதித் தவணைக் கட்டணம் (இ.ரூபா'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | 2019 | 2020 (அ) | 2021 (ஆ) |
| தீ | 6,947,675 | 6,103,609 | 6,061,855 | 6,609,886 | 7,997,992 |
| கடல் | 1,177,400 | 1,200,069 | 1,224,829 | 1,352,679 | 1,885,798 |
| மோட்டார் | 2,152,508 | 4,296,451 | 4,229,915 | 4,356,260 | 3,625,979 |
| சுகாதாரம் | 2,682,617 | 1,771,091 | 1,480,482 | 1,645,816 | 1,662,947 |
| நானாவிதம் | 3,840,459 | 4,462,894 | 4,813,310 | 4,546,844 | 5,305,779 |
| **உப மொத்தம்** | **16,800,660** | **17,834,113** | **17,810,391** | **18,511,486** | **20,478,495** |
| எஸ்ஆர்சீசீ அனட் டீ | 108,750 | 81,656 | 55,564 | 32,283 | 77,523 |
| **மொத்த மீள்காப்புறுதித் தவணைக்கட்டணம்** | **16,909,410** | **17,915,770** | **17,865,954** | **18,543,769** | **20,556,018** |

| வகுப்பு | தக்கவைத்தல் தவணைக் கட்டணம் (இ.ரூபா'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | 2019 | 2020 (அ) | 2021 (ஆ) |
| தீ | 1,649,814 | 2,718,046 | 2,208,136 | 2,278,372 | 2,326,860 |
| கடல் | 1,014,254 | 1,203,297 | 1,160,737 | 923,795 | 1,188,314 |
| மோட்டார் | 53,895,132 | 58,067,024 | 59,455,641 | 56,919,950 | 56,107,980 |
| சுகாதாரம் | 11,966,823 | 12,390,451 | 15,113,179 | 17,231,770 | 18,297,200 |
| நானாவிதம் | 4,025,800 | 3,791,528 | 5,629,314 | 3,310,924 | 3,607,405 |
| **உப மொத்தம்** | **72,551,823** | **78,170,347** | **83,567,006** | **80,664,810** | **81,527,759** |
| எஸ்ஆர்சீசீ அனட் டீ | 3,927,533 | 4,499,984 | 6,251,787 | 6,056,213 | 6,676,611 |
| **மொத்த தேறிய எழுதப்பட்ட தவணைக்கட்டணம்** | **76,479,356** | **82,670,331** | **89,818,793** | **86,721,023** | **88,204,370** |

| வகுப்பு | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் தக்கவைத்தல் வீதம் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | 2019 | 2020 (அ) | 2021 (ஆ) |
| தீ | 19.19 | 30.81 | 26.70 | 25.63 | 22.54 |
| கடல் | 46.28 | 50.07 | 48.66 | 40.58 | 38.66 |
| மோட்டார் | 96.16 | 93.11 | 93.36 | 92.89 | 93.93 |
| சுகாதாரம் | 81.69 | 87.49 | 91.08 | 91.28 | 91.67 |
| நானாவிதம் | 51.18 | 45.93 | 53.91 | 42.14 | 40.47 |
| **உப மொத்தம்** | **81.20** | **81.42** | **82.43** | **81.33** | **79.92** |
| எஸ்ஆர்சீசீ அனட் டீ | 97.31 | 98.22 | 99.12 | 99.47 | 98.85 |
| **மொத்த தக்கவைத்தல் வீதம்** | **81.89** | **82.19** | **83.41** | **82.38** | **81.10** |

# புள்ளிவிபர மீளாய்வு

**விளக்கப்படம் 17**
**காப்புறுதியாளர்களினால் செலுத்தப்பட்ட மீள்காப்புறுதித் தவணைக் கட்டணம் மற்றும் தக்கவைத்தல் தொகை - பொதுக் காப்புறுதி வியாபாரம்**




பொதுக் காப்புறுதித்துறையின் மொத்த சொத்துக்களின் அளவைக் கருத்தில் கொண்டால், வட்டி வீதம் மற்றும் பங்குச் சந்தையின் ஏற்றத் தாழ்வுகள், கடன் சிக்கல்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய சந்தை இடர்கள் போன்ற பல பொருளாதாரச் சவால்களைப் பொருட்படுத்தாமல், மேற்கூறிய வளர்ச்சியைக் காண்பது நிம்மதி அளிக்கின்றது. ஆயினும் கூட, பல காப்புறுதியாளர்கள் இத்தகைய தடைகளைத் தாண்டி தங்கள் தனிப்பட்ட சொத்துத் தளங்களில் வளர்ச்சியை அடைந்துள்ளனர்.

31 டிசம்பர் 2021 மற்றும் 2020இல் உள்ள பொதுக் காப்புறுதி நிறுவனங்களிடையே சொத்துக்களின் விநியோகத்தை அட்டவணை 21இல் சித்தரிக்கின்றது

### மொத்த சொத்துக்களின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்

எண்ணிக்கையற்ற சவால்கள் காணப்பட்ட போதிலும், பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்த சொத்துக்கள் இ.ரூபா 22578 மில்லியனுடன 9.92% வீதம் எனும் திருப்திகரமான வளர்ச்சியைக் காட்டியது. டிசம்பர் 31, 2021 அன்று இந்தத்துறையின் மொத்த சொத்துத்தளம் இ.ரூபா 250,217 மில்லியனாக (2020: இ.ரூபா 227,640 மில்லியன்) உள்ளது.

**அட்டவணை 21**
**மொத்த சொத்துக்களின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | 2020 (அ) | | 2021 (ஆ) | |
|---|---|---|---|---|
| | (இ.ரூபா '000) | % | (இ.ரூபா '000) | % |
| எலைன்ஸ் ஜென. | 28,024,882 | 12.31 | 27,968,687 | 11.18 |
| அமான ஜென. | 2,945,567 | 1.29 | 3,402,269 | 1.36 |
| சிலிங்கோ ஜென. | 32,061,287 | 14.08 | 36,648,668 | 14.65 |
| கென்டினென்டல் | 7,866,408 | 3.46 | 8,455,319 | 3.38 |
| கோப்பரெட்டிவ் ஜென. | 7,935,838 | 3.49 | 9,806,005 | 3.92 |
| பியார்பெஸ்ட் | 18,046,123 | 7.93 | 19,312,806 | 7.72 |
| எச்என்பி ஜென. | 6,855,077 | 3.01 | 7,568,781 | 3.02 |
| எல்ஓஎல்சி ஜென. | 9,891,278 | 4.35 | 11,999,920 | 4.80 |
| எம்பிஎஸ்எல் | 1,426,185 | 0.63 | 1,399,160 | 0.56 |
| என்ஐடீஎப் | 21,487,172 | 9.44 | 24,444,867 | 9.77 |
| ஓரியன்ட் | 2,612,380 | 1.15 | 3,194,603 | 1.28 |
| பீப்பள்ஸ் | 10,783,719 | 4.74 | 11,251,468 | 4.50 |
| சனச ஜென | 1,303,081 | 0.57 | 1,372,239 | 0.55 |
| எஸ்எல்ஐசி | 76,400,546 | 33.56 | 83,392,699 | 33.33 |
| மொத்தம் | **227,639,542** | **100** | **250,217,491** | **100** |

# புள்ளிவிபர மீளாய்வு

பொதுக் காப்புறுதித்துறையின் மொத்தச் சொத்துக்களில் பாதிக்கும் மேற்பட்டவை மூன்று காப்புறுதியாளர்களைச் சுற்றியே உள்ளன, துல்லியமாக எஸ்எல்ஐசீ ஜெனரல், சிலிங்கோ ஜெனரல் மற்றும் அலையன்ஸ் ஜெனரல் ஆகிய மூன்று பொதுக் காப்புறுதி நிறுவனங்களும் மொத்துக் சொத்துக்களில் 33.33%, 14.65% மற்றும் 11.18% வீதத்தைக் கொண்டிருப்பதுடன் 2021இல் முறையே இ.ரூபா 83,393 மில்லியன், இ.ரூபா 36,649 மில்லியன் மற்றும் இ.ரூபா 27,969 மில்லியன் மதிப்புள்ள சொத்துக்களைக் கொண்டுள்ளன.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் பொதுக் காப்புறுதியாளர்களிடையே பெரிய சொத்துப் பங்கினைக் கொண்டிருந்ததுடன், இரண்டாவது இடத்தில் இருந்த சிலிங்கோ ஜெனரலை விட குறிப்பிடத்தக்க (கிட்டத்தள்ள இ.ரூபா 46,774 மில்லியன்) வகையில் இ.ரூபா 83,393 மில்லியன் (2020: இ.ரூபா 76,401 மில்லியன்) சொத்துக்களுடன் முன்னின்றது. எஸ்எல்ஐசி ஜெனரலின் சொத்துக்கள் இ.ரூபா 6,992 மில்லியன் பெறுமதியான சொத்து அதிகரிப்புடன் 9.15% வீத அபரிதமான வளர்ச்சியைக் கொண்டிருந்ததுடன், அறிக்கையிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி இ.ரூபா 6,992 மில்லியன் ஆவதுடன், இவ்வதிகரிப்பானது முக்கியமாக நிதியியல் முதலீடுகளினால் ஏற்பட்டதாகும்.

செலிங்கோ ஜெனரல் சொத்துக்களின் மதிப்பின் அடிப்படையில் அடுத்த இடத்தில் சொத்துக்களை வைத்திருந்ததுடன், இதன் பெறுமதி இ.ரூபா 36,649 மில்லியன் (2020 : இ.ரூபா 32,061 மில்லியன்) ஆவதுடன் இது இ.ரூபா 4,587 மில்லியன் அதிகரிப்பை அறிக்கையிட்டது. இந்த வளர்ச்சிக்கு நிதியியல் முதலீடுகள், மீள்காப்புறுதி கிடைப்பனவுகள் மற்றும் பூட்கையாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய தவணைக் கட்டணங்கள் காரணமாகியது.

NITR ஆனது 2021ஆம் ஆண்டில் 13.76% வீதத்தினால் மட்டுமே உயர்ந்துள்ளதுடன், இதன் சொத்து மதிப்பு 24.445 மில்லியன் ஆகும். என்ஐஊஎப் இன் சிறந்த செயலாற்றுகைப் பிரிவாக SRCC & T++ பிரிவின் சொத்துக்கள் அமைந்திருந்தன, இந்த சொத்துக்கள் மொத்த சொத்தில் 96.21% வீதத்தை (இ.ரூபா 23,519 மில்லியன்) பிரதிநிதித்துவப்படுத்தின.


பொதுக் காப்புறுதித்துறையின் மொத்த சொத்துக்களில் மூன்றாம் இடத்தை தக்க வைத்துக்கொள்ள முடிந்த போதிலும், ஏலையன்ஸ் ஜெனரல் எதிர்மறையான வளர்ச்சியைக் காட்டியது.

ஆறு காப்புறுதியாளர்கள் மதிப்பின் அடிப்படையில் சொத்துக்களின் இ.ரூபா 1 பில்லியனைத் தாண்டியதன் மூலம் மேம்பட்ட செயலாற்றுகை வெளிப்படுத்தியுள்ளனர். அதேநேரத்தில், இரண்டு காப்புறுதியாளர்கள் மட்டுமே எதிர்மறையான வளர்சியைக் காட்டியுள்ளனர்.

வரைபு 18, 31 டிசம்பர் 2021 மற்றும் 2020 நிலவரப்படி மொத்த சொத்துக்களின் நிறுவன ரீதியான பகுப்பாய்வைக் காட்டுகின்றது.

வரைபடம் 18

**மொத்த சொத்துக்களின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்**




### பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்களின் பரம்பல்

பொதுக் காப்புறுதித்துறையின் பல்வகைப்பட்ட சொத்துக்களில் நிதி முதலீகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. பெரும்பாலானவை, அண்ணளவாக மொத்த சொத்துக்களில் 65.43% வீத அரச கடன் பத்திரங்கள், வைப்புத்தொகைகள், கூட்டிணைந்த கடன்கள் மற்றும் அலகு நம்பிக்கைகளைத் தொடர்ந்து முதன்மை பங்களிப்பாளர் தலைமையிலான நிதி முதலீகளைக் குறிக்கின்றது.

2021ஆம் ஆண்டில் மொத்த சொத்துக்களில் 30.59% (2020:28.99%) வீதம் அதாவது இரூபா 76,226 மில்லியனாக (2020: இ.ரூபா 65,700 மில்லியன்) அரசாங்க கடன் பத்திரங்களில் முதலீட்டில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். 2021இல், ஐந்து காப்புறுதியாளர்கள் அரசாங்க கடன் பத்திரங்களில் தங்கள் முதலீடுகளை ஒவ்வொருவரும் கிட்டத்தட்ட 1 பில்லியனால் பலப்படுத்தினர், அதனால் மொத்த அரசாங்க கடன் பத்திரங்களின் பெறுமதி இ.ரூபா 10,526 மில்லியனாகியதுடன், 16.02% வீத வளர்ச்சியையும் வெளிப்படுத்தியது. ஒரு சிறந்த இடர் இல்லாத முதலீடாகவும் பணத்தின் திரவத்தன்மையில் நீண்ட கால வருமானத்தை தருவதாகவும் அமைந்துள்ளதனால், அரசாங்க கடன் பத்திரங்கள் சொத்துப்பட்டியலில் நம்பிக்கையில் முதலிடத்தைப் பெறுகின்றன.

உரிமைப்பங்கு முதலீடுகள் 7.39% வீத வளர்ச்சியை வெளிப்படுத்தி, முதலீடுகள் இ.ரூபா 34,972 மில்லியன் (2020: இ.ரூபா 32,567 மில்லியன்) மற்றும் மொத்த சொத்துக்களில் 14.03% வீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இரண்டாவது இடத்தைப் பிடித்தன, குறைந்த வட்டி வீதங்களின் தொடர்ச்சி காப்புறுதியாளர்களை உரிமைப்பங்கு முதலீடுகளை மேற்கொள்வதற்கு ஈர்த்தது, இதனால் பங்குச் சந்தையை நோக்கிய வெளிப்பாடு விரிவடைந்தது.

பூட்கைதாரர்கள் மற்றும் இடைத்தரர்களிடமிருந்து பெறப்பட்ட தவணைக் கட்டண வரவுகள் காப்புறுதியாளர்களில் இருப்புநிலைக்

# புள்ளிவிபர மீளாய்வு

குறிப்பில் ஒரு விரிவான பங்கை ஆக்கிரமித்துள்ளது. 2021இல் கிடைக்கப்பட வேண்டிய தொகையான இ.ரூபா 28,674 மில்லியன் (2020:இ.ரூபா 27,576 மில்லியன்) மொத்த சொத்துக்களில் 11.51% (2020:12.17%) வீதமாக காணப்பட்டது. பொதுக் காப்புறுதித்துறையின் மொத்த சொத்துக்களில் மூன்றாவது பெரிய சதவீதமாக மாறியது. கோவிட்-19 தொற்றுநோய் சிக்கலை ஏற்படுத்தியதில் இருந்து, தவணைக் கட்டண சேகரிப்பு மற்றும் காப்புறுதியாளர்கள் கட்டுப்பாட்டாளர்களின் வழிகாட்டுதலுடன் கஷ்டங்களை அனுபவித்த பூட்கையாளர்களுக்கு நிவாரணம் அளித்தமையே இதற்கான பிரதான காரணம் எனக் குறிப்பிட முடியும்.

2021ஆம் ஆண்டில் வைப்புத் தொகைகள் பிரபல்யமற்றதாகக் காணப்பட்டது, மேலும் காப்புறுதியாளர்கள் முக்கிய பெறுபேறுகள் மற்றும் சிறந்த வருமானங்களை வழங்கும் பிற வாய்ப்புக்களைக் கண்டுபிடிப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். உறுதிமொழியை வழங்கும் வகையில், முந்தைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் வைப்புகில் முதலீடுகள் 8.55% வீதத்தால் எதிர்மறையான வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளன. வைப்புகள் மொத்த சொத்துக்களில் 9.42% (2020: 11.32%) வீதப் பங்கைப் பதிவுசெய்து, 2021ஆம் ஆண்டின் இறுதியில் இ.ரூபா 23,471 மில்லியனைக் (2020:இ.ரூபா 25,664 மில்லியன்) கொண்டிருந்தது.

கூட்டிணைந்த கடன்கள் மற்றும் அலகு நம்பிக்கைகூறுகளும் முறையே 12.80% மற்றும் 12.33% வீத வளர்ச்சியை வெளிப்படுத்தி இ.ரூபா 20,092 மில்லியன் (2020: இ.ரூபா 17,812 மில்லியன்) மற்றும் இ.ரூபா 7,357 மில்லியன் (இ.ரூபா 6,549 மில்லியன்) பெறுமதியான சொத்துக்களைக் கொண்டிருந்தன. கடந்த ஆண்டு உயர்ந்த வளர்ச்சியை வெளிப்படுத்திய அலகு நம்பிக்கைகள், 2021இல் மிதமான வளர்ச்சியை வெளிப்படுத்தியது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள், பிற சொத்துக்கள், மீள்காப்புறுதி வரவுகள் மற்றும் காணி மற்றும் கட்டிடங்கள் போன்ற மிகுதி முதலீட்டு வகைகள் காசில் ஒரு முன்னேற்றத்தை சித்தரித்தது, மேலும் காசுக்கு சமனானவை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 26.47% மிக உயர்நத வளர்ச்சி வீதத்தைக் காட்டியர். வைப்புகளில் உள்ள முதலீடுகள் மட்டுமே 2021இல் வளர்சியடையாத ஒரே முதலீட்டு வகையாகும், முதன்மையாக ஒரு காப்புறுதியாளரினால் வைப்புகளில் உள்ள முதலீடுகள் குறைக்கப்பட்டது.

31 டிசம்பர் 2020 மற்றும் 2021இல் உள்ள சொத்துக்களின் செறிவு பற்றிய தகவலை அட்டவணை 22 மற்றும் விளக்கப்படம் 19 வழங்குகின்றது.


**அட்டவணை 22**
**31 டிசம்பர் 2020 மற்றும் 2021ஆம் திகதியன்று சொத்துக்களின் பரம்பல் - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

| சொத்துகளின் வகை | 2020 (அ) | | 2021 (ஆ) | |
|---|---|---|---|---|
| | (இ.ரூபா ' 000) | % | (இ.ரூபா ' 000) | % |
| அரசாங்க கடன் பிணையங்கள் | 65,700,091 | 28.99 | 76,226,076 | 30.59 |
| உரிமைப் பங்குகள் | 32,566,853 | 14.37 | 34,972,269 | 14.03 |
| கூட்டிணைந்த கடன் பத்திரங்கள் | 17,812,377 | 7.86 | 20,092,438 | 8.06 |
| நிலம் மற்றும் கட்டிடங்கள் | 1,964,966 | 0.87 | 2,203,600 | 0.88 |
| வைப்புகள் | 25,664,111 | 11.32 | 23,470,757 | 9.42 |
| அலகு நம்பிக்கைகள் | 6,549,296 | 2.89 | 7,356,946 | 2.95 |
| மீள்காப்புறுதி கிடைப்பனவுகள் | 12,974,157 | 5.72 | 14,966,120 | 6.01 |
| காப்புறுதிப் பூட்கையாளர்கள: மற்றும் இடைத்தரகர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய தவணைக் கட்டணங்கள் | 27,576,167 | 12.17 | 28,673,779 | 11.51 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 18,628,155 | 8.22 | 20,783,833 | 8.34 |
| ஏனைய சொத்துகள் | 13,017,177 | 5.74 | 15,177,549 | 6.09 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | 4,186,189 | 1.85 | 5,294,128 | 2.12 |
| **மொத்தம்** | **226,639,539** | **100** | **249,217,495** | **100** |

குறிப்பு : ஏன்ஜஎஎப் இன் பிரிவின் பெறத்தக்க மற்றும் செலுத்த வேண்டிய நிலுவையின் காரணமாக ஆதனம், பொறி மற்றும் உபகரண வேறுபாட்டுடன் பயன்படுத்துவதற்கான உரிமை சேர்க்கப்பட்டுள்ளது.

# புள்ளிவிபர மீளாய்வு

**விளக்கப்படம் 19**
**31 டிசம்பர் 2020 மற்றும் 2021ஆம் திகதியன்று சொத்துக்களின் பரம்பல் - பொதுக் காப்புறுதி வியாபாரம்**




### முதலீட்டு வருமானம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

சந்தை வட்டி வீதங்கள் 2020இன் முதல் பகுதியிலிருந்து 2021 நடுப்பகுதி வரை கணிசமாக குறைந்தன. எனினும், இலங்கை மத்திய வங்கி தனது நாணயக் கொள்கையை கடுமையாக்கியதால், 2021ஆம் இறுதியில் சந்தை வட்டி விகிதங்கள் படிப்படியாக அதிகரித்தன. இதன் விளைவாக சந்தை வட்டி வீதங்கள், வரலாற்று குறைந்த மட்டங்கள் சரிந்து, படிப்படியாக மேல்நோக்கி சரிசெய்யத் தொடங்கின. பெரும் பொருளாதார தாங்கங்களுக்கு மத்தியில், பொர் காப்புறுதி வியாபாரத்தின் ஒட்டுமொத்த முதலீட்டு வருமானம் 2020இல் இ.ரூபா 10,282 மில்லியனிலிருந்து 2021இல் இ.ரூபா 11,282 மில்லியனாக அதிகரித்துள்ளது மற்றும் 2020இல் பதிவான 18.29% வீத எதிர்மறையான வளர்ச்சியை விஞ்சி 9.72% வளர்ச்சியை வழங்கியுள்ளது. முதலீட்டு வருமானத்தின் வளர்ச்சியானது பெரும்பாலும் உரிமைப்பங்கு வகையால் இயக்கப்படுகின்றது, முக்கியமாக ஒற்றைக் காப்புறுதியாளர் 2020இல் பதிவுசெய்யப்பட்ட இ.ரூபா 316 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2021 இல் இ.ரூபா 1,147 மில்லியன் மூலதன ஆதாயத்தை பெற்றதன் காரணமாகவாகும்.

2021இல் காப்புறுதி வியாபாரத்தின் சராசரி முதலீடு 11.20% வீதத்தால் அதிகரித்து இ.ரூபா 159,061 மில்லியனாக (2020: இ.ரூபா 143,034 மில்லியன்) அதிகரித்துள்ளது. எனவே, பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் முக்கிய முதலீட்டு வகை, அரசாங்கக் கடன் பத்திரங்களின் முதலீடு 2021ஆம் ஆண்டின் இறுதியில் 17.79% வளர்ச்சியைப் பதிவுசெய்து இ.ரூபா 70,963 மில்லியானக (2020: இ.ரூபா 60,248 மில்லியன்) இருந்தது.

இரண்டாவது பெரிய முதலீட்டு வகை உரிமைப் பங்கு முதலீடு ஆகும், இது சராசரியாக இ.ரூபா 33,770 மில்லியன் (2020: இ.ரூபா 32,387 மில்லியன்) முதலீட்டைப் பதிவுசெய்தது, இது 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 4.27% வீதம் மெதுவான வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்றது.

வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து உருவாக்கப்பட்ட வைப்புகள் முதலீட்டின் அடுத்த பெரிய வகையாகும், அதேநேரத்தில் சராசரியாக இ.ரூபா 24,567 மில்லியன் முதலீட்டைப் பதிவுசெய்தது, இது 2020இல் காணப்பட்ட 24,807 மில்லியனிலிருந்து சிறிது குறைந்துள்ளது. இதற்கிடையில், 2021ஆம் ஆண்டில், வருடம் முழுவதிலும் வங்கி வைப்புகளுக்கு குறைந்த வட்டி வீதம் நிலவியதால், வங்கி வைப்புத்தொகை வருமானமானது வீழ்ச்சியைப் பதிவுசெய்ததுடன் வருமானமானது இ.ரூபா 1,390 மில்லியனால் (2020: இ.ரூபா 1,917) குறைந்து 23.93% வீதத்தினால் முதலீடு வீழ்ச்சியடைந்துள்ளது.

கூட்டிணைந்த கடன் இ.ரூபா 2,334 மில்லியன் (2020: இ.ரூபா 2,080 மில்லியன்) முதலீட்டு வருமானத்தை உருவாக்கியுள்ளது, இது 12.21% வீதம் வளர்ச்சியடைந்ததுடன் இரண்டு ஆண்டுகளுக்கான அனைத்து நிதி முதலீடுகளும் 12% வீத அதிகபட்ச வட்டி வீதத்தைப் பதிவுசெய்தன.

அதேநேரத்தில் பொதுக் காப்புறுதியாளர்கள் அலகு நம்பிக்கை கூறுகளில் முதலீடு செய்வதை விரும்பினர் மற்றும் சராசரி முதலீட்டில் இ.ரூபா 6,953 மில்லியன் (2020: இ.ரூபா 4,256 மில்லியன்) முன்னேற்றத்தைப் பதிவுசெய்தனர். முதலீட்டு வருமானமும் இ.ரூபா 178 மில்லியனாக (2020:இ.ரூபா 161 மில்லியன்) அதிகரித்தது.

2020இல் 7.19% வீதமாக இருந்த மொத்த முதலீட்டு வருமானம் 2021இல் 7.09% வீதமாக குறைந்தது.

# புள்ளிவிபர மீளாய்வு

**அட்டவணை 23**
**முதலீட்டு வருமானம் மற்றும் சராசரி முதலீடுகளின் சுருக்கம் - பொதுக் காப்பறுதி வியாபாரம்**

| வகை | 2020 (அ) | | 2021 (ஆ) | |
|---|---|---|---|---|
| | முதலீட்டு வருமானம் (இ.ரூபா '000) | சராசரி வருமானம (இ.ரூபா '000) | முதலீட்டு வருமானம் (இ.ரூபா '000) | சராசரி வருமானம (இ.ரூபா '000) |
| **அரசாங்க கடன் பிணையங்கள** | 4,404,110 | 60,247,654 | 4,648,430 | 70,963,084 |
| - திறைசேரி பிணையங்கள் | 2,157,968 | | 1,964,914 | |
| - திறைசேரி உண்டியல்கள் | 999,323 | | 1,303,595 | |
| - ஏனையவை (ரிபோ) | 1,246,819 | | 1,379,921 | |
| **உரிமைப் பங்கு** | 898,981 | 32,387,148 | 1,991,517 | 33,769,561 |
| - மூலதன ஈட்டுகை/நட்டங்கள் | 71,609 | | 263,904 | |
| - பங்குலாபம் | 26,057 | | 64,052 | |
| **கூட்டிணைந்த கடன் பத்திரங்கள்** | 2,079,777 | 17,208,530 | 2,333,726 | 18,952,408 |
| - தொகுதிக்கடன | 1,991,480 | | 2,220,056 | |
| - வணிகப் பத்திரம் | 88,297 | | 100,632 | |
| **நிலம் மற்றும் கட்டிடங்கள்** | | 2,937,537 | | 2,084,283 |
| **வைப்புகள** | 2,411,947 | 24,806,714 | 1,834,701 | 24,567,434 |
| - வங்கி | 1,917,425 | | 1,389,995 | |
| - நிதி கம்பனிகள் | 494,521 | | 431,673 | |
| **அலகு நம்பிக்கை** | 160,778 | 4,255,684 | 177,610 | 6,953,121 |
| **ஏனையவை** | 326,826 | 1,190,753 | 296,175 | 1,770,844 |
| **மொத்தம்** | **10,282,419** | **143,034,019** | **11,282,159** | **159,060,733** |
| **சராசரி முதலீட்டு வருமானம்** | **7.19%** | | **7.09%** | |

**காப்புறுதிக் கம்பனிகளின் கடன்தீர் நிலை - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

இந்த ஆண்டில் முன்னோடில்லாத சவால்களை எதிர்கொண்ட போதிலும், இலங்கை காப்புறுதி ஆணைக்குழு காப்புறுதித்தியானது பொதுக் காப்புறுதியாளர்களின் இடர் அடிப்படையிலான மூலதன அளவை தொடர்ந்து அளந்து கண்காணித்து, அதன் மூலம் முறையாக நிர்வாகிக்கப்பட்ட காப்புறுதித்துறையின் மூலம் பூட்கையாளர்களைப் பாதுகாப்பதை மேம்படுத்தல். சுடீஊ விதிகளின் கீழ், காப்புறுதியாளர்கள் குறைந்தபட்சம் இ.ரூபா 500 மில்லியன் மொத்தக் கிடைக்கப்பெறும் மூலதனம் இ.ரூபா 500 மில்லியன் மற்றும் 120% மூலதன கிடைக்கப்பெறும் வீதத்தின் மூலதனத் தேவைகளுக்கு இணங்க வேண்டும்.

அதன்படி, காப்புறுதியாளர்களின் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனம் (TAC) இ.ரூபா 74,960 மில்லியனைப் பதிவுசெய்ததுடன் 2020ஆம் ஆண்டில் இ.ரூபா 65,041 மில்லியனில் இருந்து தே.கா.ந.நிதியம் தவிர்த்து, ஒட்டுமொத்த மொத்த கிடைக்கப்பெறும் மூலதனம் 15.25% வீத வளர்ச்சி வீதத்தை வெளிப்படுத்தியது. அட்டவணை 24 இல் விபரிக்கப்பட்டவாறு, எஸ்எல்ஐசீ ஜெனரல் 2021 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத்தில் 44.57% வீதப் பங்குடன் முதலிடத்தைப் பிடித்தது மற்றும் 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 21.75% வீதத்தில் அதிகரித்து இ.ரூபா 33,407 மில்லியன் (இ.ரூபா 27,440 மில்லியன்) ஆக உள்ளது.

இரண்டு காப்புறுதியாளர்களைத் தவிர்த்து, ஏனைய அனைவரும் கொந்தளிப்பான காலகட்டத்திற்கு மத்தியில் மதிப்பின் அடிப்படையில் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத்தில் முன்னேற்றத்தை வெளிப்படுத்தியுள்ளனர். மேலும், ஒரு காப்புறுதியாளரைத் தவிர, ஏனைய அனைத்து பொதுக் காப்புறுதியாளர்களும் 31 டிசம்பர் 2021இல் குறைந்தபட்ச மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத் தேவையான இ.ரூபா 500 மில்லியனுடன் நிலையாக இருந்தனர், மேலும் அவர்களின் பெரும்பாலானோர் தங்கள் மூலதனத்தை ஆரோக்கியமான அளவில் பராமரித்தனர்.

2021ஆம் ஆண்டு பொதுக் காப்புறுதியாளர்களின் சராசரி மூலதனப் போதுமையளவு வீதம் (CAR) 250% (2020:249%) ஆக இருந்தது. அனைத்து பொதுக் காப்புறுதிக் கம்பனிகளும் 31 டிசம்பர் 2021 க்கான குறைந்தபட்ச மூலதன சராசரி வீதத் தேவைப்பாட்டை பூர்த்திசெய்தனர். மேலும், அனைத்துக் காப்புறுதியாளர்களும் 160% வீத அமுலாக்க நிலைக்கும் மூலதனக் கிடைக்கப்பெறும் வீதத்தைப் பதிவு செய்துள்ளனர்.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் முறையே 600% (2020: 562%) வீத மூலதன சராசரி வீதத்தையும் மற்றும் இ.ரூபா 15,799 மில்லியன் (2020: இ.ரூபா 13,010 மில்லியன்) மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத்தையும் பதிவு செய்துள்ளது. இது அட்டவணை 24இல் சேர்க்கப்படவில்லை.

# புள்ளிவிபர மீளாய்வு

அட்டவணை 24, 25 மற்றும் 26ஆம் அட்டவணைகள் 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளுக்கான பொதுக் காப்புறுதியாளர்களின் இடர் அடிப்படையிலான மூலதனம் (RBC) தொடர்பான விபரங்களை விளக்குகின்றது.

**அட்டவணை 24**
**31 டிசம்பர் 2020 மற்றும் 2021 அன்று கம்பனி ரீதியாக கடன்தீர் நிலை - பொதுக் காப்பறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2020 அன்று (அ) | | | 31 டிசம்பர் 2021 அன்று (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | மொ.கி.மூ (இ.ரூபா'000) | இ.அ.மூ.தே (இ.ரூபா'000) | ச.மூ.ம.க (இ.ரூபா'000) | மூ.போ.வி (%) | மொ.கி.மூ (இ.ரூபா'000) | இ.அ.மூ.தே (இ.ரூபா'000) |
| எலைன்ஸ் ஜென. | 8,426,064 | 3,978,744 | 212 | 9,577,256 | 3,438,763 | 279 |
| அமான ஜென. | 525,369 | 279,610 | 188 | 677,630 | 369,517 | 183 |
| சிலிங்கோ ஜென. | 7,472,104 | 4,081,902 | 183 | 7,792,202 | 3,918,202 | 199 |
| கென்டினென்டல் | 2,629,220 | 904,617 | 291 | 2,729,200 | 861,759 | 317 |
| கோப்பரெட்டிவ் ஜென. | 2,550,823 | 1,024,217 | 249 | 3,604,790 | 1,138,230 | 317 |
| பியார்பெஸ்ட் | 5,055,284 | 2,692,148 | 188 | 5,244,163 | 2,510,774 | 209 |
| எச்என்பி ஜென. | 1,840,729 | 722,199 | 255 | 1,903,450 | 732,013 | 260 |
| எல்ஓஎல்சி ஜென. | 2,946,390 | 978,112 | 301 | 3,549,395 | 1,925,844 | 184 |
| எம்பிஎஸ்எல் | 422,154 | 135,852 | 311 | 317,546 | 157,521 | 202 |
| ஓரியன்ட் | 941,383 | 346,306 | 272 | 1,065,529 | 389,562 | 274 |
| பீப்பள்ஸ் | 4,162,922 | 1,369,045 | 304 | 4,471,464 | 1,432,832 | 312 |
| சனச ஜென | 628,444 | 247,000 | 254 | 620,364 | 231,398 | 268 |
| எஸ்எல்ஐசி | 27,440,331 | 12,307,698 | 223 | 33,407,280 | 13,898,660 | 240 |
| **மொத்தம்** | **65,041,217** | **29,067,450** | **249** | **74,960,269** | **31,005,075** | **250** |

### மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத்தின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு - பொதுக் காப்பறுதி வியாபாரம்

மொத்த கிடைக்கப்பெறும் மூலதனமானது அடுக்கு 1 மற்றும் அடுக்கு II மூலதனத்தைக் கூட்டியதன் அளவிடப்படுகின்றதுடன் இழப்புகளை ஈடுகட்ட பொதுவாக கிடைக்காத அருவ மற்றும் திரவ சொத்துக்களை உள்ளடக்கிய கழிவுகளை கழிப்பதன் மூலம் அளவிடப்படுகின்றது. அட்டவணை 25இல் காட்டப்பட்டுள்ளபடி, கைத்தொழிற்துறையில் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனம் இ.ரூபா 74,960 மில்லியனாக (2020: இ.ரூபா 65,041 மில்லியன்) பதிவுசெய்யப்பட்டதுடன் முந்தைய ஆண்டைவிட செறிவூட்டப்பட்ட 15.25% வீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது.

கைத்தொழிற்துறையின் அடுக்கு 1 மூலதனத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றதால் இந்த வளர்ச்சி பெரிதும் உந்தப்பட்டது. டிசம்பர் 31, 2020 இல் உள்ள இ.ரூபா 90,870 மில்லியனுடன் ஒப்பிடும் போது, 31 டிசம்பர் 2021இல் இ.ரூபா 99,878 மில்லியனாக இருந்த அடுக்கு 1 மூலதனம் 9.91% வீதத்தால் அதிகரித்துள்ளது.

அடுக்கு 11 மூலதனமானது, மீளப்பெற முடியாத விருப்பப் பங்குகள், இறையிலி சொத்துக்கான மீள்மதிப்பீட்டு இருப்புகள் போன்றவற்றைக் கொண்டுள்ளது. இது இ.ரூபா 11,069 மில்லியன் (2020: இ.ரூபா 8,640 மில்லியன்) 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டு 28.11% வீத கணிசமான வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது. எஸ்எல்ஐசி ஜெனரலின் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனமானது 2021இல் விரிவாக அதிகரித்தது, இது முறையே அடுக்கு 1 மற்றும் அடுக்கு 11 மூலதனத்தின் "தக்கவைக்கப்பட்ட வருவாய்கள்" மற்றும் "இறையிலி சொத்துக்கான மீள்மதிப்பீட்டு ஒதுக்கீடு" ஆகியவற்றின் வளர்ச்சியால் உந்தப்பட்டது. எம்பிஎஸ்எல் மற்றும் சனச ஜெனரல் ஆகிய இரண்டு நிறுவனங்களைத் தவிர, மற்ற அனைத்துக் காப்புறுதியாளர்களும் 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத்தின் வளர்ச்சியை முக்கியமாக அடுக்க 1 மூலதனத்தால் இயக்கியுள்ளனர். பொதுவாக அருவமான அல்லது பணமதிப்பற்ற சொத்துக்களை உள்ளடக்கிய விலக்குகள் இ.ரூபா 35,987 மில்லியன் (2020: இ.ரூபா 34,469 மில்லியன்) ஆகும். மற்றும் 2021ஆம் ஆண்டில் 4.40% வீதத்தால் சற்று மேம்பட்டது.

# புள்ளிவிபர மீளாய்வு

**அட்டவணை 25**
**31 டிசம்பர் 2020 மற்றும் 2021 அன்று மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத் தேவைப்பாட்டின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2020ம் திகதியன்று (அ) கி.மூ.தே (இ.ரூபா '000) | 31 டிசம்பர் 2021ம் திகதியன்று (ஆ) (இ.ரூபா '000) | | | |
|---|---|---|---|---|---|
| | | அடுக்கு 1 (இ.ரூபா '000) | அடுக்கு II (இ.ரூபா '000) | கழிப்பனவுகள் (இ.ரூபா '000) | கி.மூ.தே (இ.ரூபா '000) |
| எலைலன்ஸ் ஜெனா. | 8,426,064 | 12,218,928 | | 2,641,672 | 9,577,256 |
| அமான ஜெனா. | 525,369 | 1,448,646 | 439,596 | 1,210,612 | 677,630 |
| சிலிங்கோ ஜெனா. | 7,472,104 | 12,722,935 | 468,226 | 5,398,959 | 7,792,202 |
| கென்டினென்டல் | 2,629,220 | 3,354,351 | | 625,152 | 2,729,199 |
| கோப்பரெட்டிவ் ஜெனா. | 2,550,823 | 4,013,499 | 734,928 | 1,143,638 | 3,604,789 |
| பியார்பெஸ்ட் | 5,055,284 | 6,849,598 | | 1,605,435 | 5,244,163 |
| எச்என்பி ஜெனா. | 1,840,729 | 2,189,999 | | 286,549 | 1,903,450 |
| எல்ஓஎல்சி ஜெனா. | 2,946,390 | 3,956,370 | | 406,975 | 3,549,395 |
| எம்பிஎஸ்எல் | 422,154 | 431,171 | 4,192 | 117,817 | 317,546 |
| ஓரியன்ட் | 941,383 | 1,120,556 | | 55,027 | 1,065,529 |
| பீப்பள்ஸ் | 4,162,922 | 4,944,181 | | 472,718 | 4,471,464 |
| சனச ஜென | 628,444 | 730,759 | | 110,396 | 620,363 |
| எஸ்எல்ஐசி | 27,440,331 | 45,897,050 | 9,422,000 | 21,911,770 | 33,407,280 |
| **மொத்தம்** | **65,041,217** | **99,878,043** | **11,068,942** | **35,986,720** | **74,960,266** |

### காப்புறுதிக் கம்பனிகளின் இடர் அடிப்படையிலான மூலதனத் தேவைப்பாட்டின் பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்

இடர் மூலதன அடிப்படையிலான தேவைப்பாடு கடன் இடர், செறிவு இடர், சந்தை இடர், மீள்காப்புறுதி இடர் மற்றும் தொழிற்பாட்டு இடர்களை உள்ளடக்கியிருக்கும். அட்டவணை 26, 31 டிசம்பர் 2020 மற்றும் 2021ஆம் திகதியன்று இடர் அடிப்படையிலான மூலதனத் தேவைப்பாடு தொடர்பான கம்பனி ரீதியான வேறுபட்ட இடர் கட்டணங்களின் கலவையைக் காட்டுகின்றது.

பிரிந்து செல்வதற்கு முன்னர் மற்றும் பின்னர் பொதுக் காப்புறுதிக் கம்பனிகளினால் பதிவு செய்யப்பட்ட மொத்த இடர் மூலதனத் தேவைப்பாட்டின் பெறுமதி முறையே இ.ரூபா 42,368 மில்லியன் (2020: இ.ரூபா 39,920 மில்லியன்) மற்றும் இ.ரூபா 31,005 மில்லியன் (2020: இ.ரூபா 29,035 மில்லியன்) ஆவதுடன், இவை மொத்த இடர் மூலதனக் கட்டணங்களில் முறையே 6.13% மற்றும் 6.78% வீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. கடந்த ஆண்டைப் போலவே, செறிவு இடர், சந்தை இடர் மற்றும் பொறுப்பு இடர் ஆகியவை பொதுக் காப்புறுதித்துறையில் இடர் மூலதனத் தேவைப்பாட்டின் மிக உயர்ந்த கலவையைக் கொண்டிருந்தன மற்றும் பல்வகைப்படுத்தலுக்கு முன் மொத்த இடர் மூலதனத் தேவைப்பட்டில் 89.82% (2020: 90.14%) வீதம் பங்களிப்பு செய்தன. மேலும், கொள்கையினால் நிலவும் சந்தை நிலைமைகள் காரணமாக நிச்சயமற்ற தன்மை மற்றும் பலவீனமான பாரிய பொருளாதார சூழல் உருவானதனால் சொத்து மற்றும் பொறுப்புக் காலங்களின் பொருத்தமின்மை காரணமாக வட்டி அபாயக் கட்டணங்கள் அதிகரித்ததன் விளைவாக, 2020ஆம் ஆண்டில் இ.ரூபா 10,641 மில்லியனிலிருந்து 2021ஆம் ஆண்டில் இ.ரூபா 12,632 மில்லியனாக கைத்தொழிற்துறையில் சந்தை இடர் அதிகரித்துள்ளது.

அட்வணையில் 26இல் சேர்க்கப்படாத தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம், 31 டிசம்பர் 2021இல் முடிவடைந்த ஆண்டிற்கு முறையே இ.ரூபா 3,939 மில்லியன் (2020: இ.ரூபா 3,442 மில்லியன்) மற்றும் இ.ரூபா 2,633 மில்லியன் (2020: 2,316 மில்லியன்) இடர் மூலதன தேவைப்பாடு பல்வகைப்படுத்தலுக்கு முன்னும் பின்னும் உள்ளது.

.

# புள்ளிவிபர மீளாய்வு

**அட்டவணை 26**

**31 டிசம்பர் 2020 மற்றும் 2021 அன்று இடர் மூலதனத் தேவைப்பாட்டின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2021 (அ) திகதியன்று (இ.ரூபா ’000) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன் இடர் | செறிவு இடர் | சந்தை இடர் | மீள்காப்புறுதி இடர் | பொறுப்பு இடர் | தொழிற்பாட்டு இடர் | பிரிந்துசெல்வதற்கு முன் இ.மூ.தே | பிரிந்துசெல்வதற்கு பின் இ.மூ.தே |
| எலைன்ஸ் ஜென. | 102,501 | 2,665,343 | 502,633 | 32,584 | 2,202,872 | 259,886 | 5,765,820 | 3,978,744 |
| அமான ஜென. | 20,821 | 155,490 | 14,344 | 8,341 | 144,798 | 26,585 | 370,379 | 247,534 |
| சிலிங்கோ ஜென. | 262,027 | 2,240,028 | 943,650 | 221,688 | 1,770,939 | 275,549 | 5,713,881 | 4,081,902 |
| கெண்டினென்டல் | 98,013 | 317,117 | 314,862 | 24,340 | 494,275 | 70,767 | 1,319,374 | 904,617 |
| கோப்பரெட்டிவ் ஜென. | 156,866 | 173,732 | 493,406 | 14,530 | 583,482 | 73,693 | 1,495,709 | 1,024,217 |
| பியார்பெஸ்ட் | 52,320 | 1,253,312 | 833,750 | 348,916 | 1,016,716 | 149,395 | 3,654,409 | 2,692,148 |
| எச்என்பி ஜென. | 78,508 | 224,018 | 168,735 | 24,755 | 521,326 | 61,308 | 1,078,650 | 722,199 |
| எல்ஓஎல்சி ஜென. | 27,268 | 229,491 | 393,645 | 38,397 | 689,523 | 82,542 | 1,460,866 | 978,112 |
| எம்பிஎஸ்எல் | 10,548 | 53,429 | 13,849 | 6,112 | 105,870 | 14,198 | 204,006 | 135,852 |
| ஓரியன்ட் | 26,681 | 238,859 | 2,319 | 4,153 | 213,025 | 23,620 | 508,657 | 346,306 |
| பீப்பள்ஸ் | 192,721 | 523,220 | 327,517 | 19,335 | 857,117 | 100,517 | 2,020,428 | 1,369,045 |
| சனச ஜென | 12,223 | 141,767 | 79,877 | 1,647 | 73,370 | 12,598 | 321,482 | 247,000 |
| எஸ்எல்ஐசி | 162,613 | 4,994,508 | 6,552,587 | 77,164 | 3,460,241 | 758,831 | 16,005,944 | 12,307,698 |
| **மொத்தம்** | **1,203,110** | **13,210,314** | **10,641,174** | **821,962** | **12,133,554** | **1,909,489** | **39,919,605** | **29,035,374** |

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2021 (அ) திகதியன்று (இ.ரூபா ’000) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன் இடர் | செறிவு இடர் | சந்தை இடர் | மீள்காப்புறுதி இடர் | பொறுப்பு இடர் | தொழிற்பாட்டு இடர் | பிரிந்துசெல்வதற்கு முன் இ.மூ.தே | பிரிந்துசெல்வதற்கு பின் இ.மூ.தே |
| எலைன்ஸ் ஜென. | 80,925 | 2,104,555 | 706,492 | 49,792 | 1,761,594 | 260,576 | 4,963,934 | 3,438,763 |
| அமான ஜென. | 26,175 | 243,938 | 38,540 | 9,347 | 185,514 | 31,665 | 535,179 | 369,517 |
| சிலிங்கோ ஜென. | 274,996 | 1,829,593 | 1,000,586 | 294,496 | 1,926,146 | 290,700 | 5,616,517 | 3,918,202 |
| கெண்டினென்டல் | 109,191 | 209,470 | 392,901 | 28,551 | 434,697 | 76,815 | 1,251,625 | 861,759 |
| கோப்பரெட்டிவ் ஜென. | 173,171 | 112,193 | 690,495 | 15,763 | 551,718 | 88,652 | 1,631,992 | 1,138,230 |
| பியார்பெஸ்ட் | 62,557 | 984,517 | 815,478 | 361,452 | 1,154,715 | 156,293 | 3,535,012 | 2,510,774 |
| எச்என்பி ஜென. | 84,074 | 173,859 | 191,437 | 29,482 | 549,587 | 67,056 | 1,095,495 | 732,013 |
| எல்ஓஎல்சி ஜென. | 78,137 | 634,157 | 956,236 | 28,739 | 903,945 | 105,059 | 2,706,273 | 1,925,844 |
| எம்பிஎஸ்எல் | 7,119 | 99,289 | 6,530 | 4,373 | 104,223 | 13,728 | 235,262 | 157,521 |
| ஓரியன்ட் | 36,069 | 221,051 | 40,114 | 6,560 | 242,247 | 28,005 | 574,046 | 389,562 |
| பீப்பள்ஸ் | 155,016 | 587,246 | 380,411 | 30,565 | 844,042 | 103,158 | 2,100,438 | 1,432,832 |
| சனச ஜென | 13,490 | 106,951 | 96,935 | 2,466 | 71,094 | 12,641 | 303,577 | 231,398 |
| எஸ்எல்ஐசி | 173,616 | 5,793,956 | 7,316,338 | 117,270 | 3,591,404 | 826,414 | 17,818,998 | 13,898,660 |
| **மொத்தம்** | **1,274,536** | **13,100,775** | **12,632,493** | **978,856** | **12,320,926** | **2,060,762** | **42,368,348** | **31,005,075** |

# புள்ளிவிபர மீளாய்வு

**தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணம், தேறிய ஏற்கநேர்ந்த கோரிக்கைகள், தேறிய செலவுகள், தேறிய செலவுகள் விகிதம் மற்றும் தேறிய கலவை விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

அட்டவணை 27 மற்றும் வரைவு 20இல் விபரிக்கப்பட்டவாறு, வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம், நட்டஈடு மற்றும் பயங்கரவாதம் உள்ளடங்கலாக பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் பிரதான உப வகைகளின் மொத்த உழைக்கப்பட்ட தேறிய வருமானம் இ.ரூபா 86,981 மில்லியனாக இருந்தது மற்றும் இது 2020இல் பதிவு செய்த இ.ரூபா 86,490 மில்லியன் உடன் ஒப்பிடுகையில் சிறியதோர் வளர்ச்சியை வெளிப்படுத்தியது. 2021ஆம் ஆண்டு முழுவதுமான முடக்கல் தொடர்ச்சி, நடமாட்டத்தின் மீதான கட்டுபாடுகள் மற்றும் வியாபாரங்களுக்கான தடைகள் என தொற்றுநோய்களின் ஆதரவுடன் எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் மிதமான வளர்ச்சி தடைப்பட்டது. கடந்த ஆண்டுகளைப் போலவே, பொதுக் காப்பறுதிச் சந்தையின் உந்து சக்தியாக மோட்டார் காப்புறுதியானது இ.ரூபா 56,002 மில்லியனாக (2020: இ.ரூபா 57,930 மில்லியன்) அதிக தேறிய ஈட்டப்பட்ட தவணைக் கட்டணத் தொகையை பதிவுசெய்தது மற்றும் மொத்த தேறிய ஈட்டிய தவணைக் கட்டணத்தில 69.42% (2020: 72.12%) ஆகும். வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம், நட்டஈடு மற்றும் பயங்கரவாதத்தைத் தவிர்த்து, 2021இல் 3.33% வீத எதிர்மறையான வளர்ச்சியைக் குறிக்கின்றது. சுகாதார காப்புறுதி வியாபாரம் தேறிய ஈட்டப்பட்ட தவணைக் கட்டணத் தொகையான இ.ரூபா 18,078 மில்லியன் (2020: இ.ரூபா 14,996 மில்லியன்) 22.41% வீதம் (2020:18.67%) தேறிய ஈட்டிய தவைணக் கட்டணத்தில் (வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம், நட்டஈடு மற்றும் பயங்கரவாதத்தைத் தவிர்த்து) பதிவு செய்துள்ளது. இந்த வளர்ச்சியானது முக்கியமாக குறிப்பிட்ட ஆண்டின் பிற்பகுதியில் தொடங்கப்பட்ட சுரக்'ர காப்புறுதித் திட்டத்தின் காரணமாகக் பதிவுசெய்யப்பட்டது.

மேலும், 2019 தொடக்கம் 2021 வரையிலான ஆண்டுகளைக் கருத்தில் கொள்ளும் போது, 2021இல் இதர மற்றும் தீ வகை வியாபாரங்களுடன் தொடர்புடைய தேறிய ஈட்டப்பட்ட தவணைக் கட்டண புள்ளிவிபரங்கள் கீழ் நோக்கிய போக்கைக் காட்டியுள்ளன.

மேலும், 2019 தொடக்கம் 2021 வரையிலான ஆண்டுகளைக் கருத்தில் கொள்ளும் போது, இதர மற்றும் தீ வகை வியாபாரங்களுடன் தொடர்புடைய தேறிய ஈட்டப்பட்ட தவணைக் கட்டண புள்ளிவிபரங்கள் கீழ்நோக்கிய போக்கைக் காட்டியுள்ளதுடன், 2021இல் முறையே இ.ரூபா 3,307 மில்லியன் (2020:இ.ரூபா 4,110 மில்லியன்) மற்றும் இ.ரூபா 2,144 மில்லியன் (2020: இரூபா 2,321 மில்லியன்) ஆகும். மறுபுறம் (வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம், நட்டஈடு மற்றும் பயங்கரவாதத்தைத் தவிர்த்து) ஈட்டிய தவணைக்கட்டணம் கடந்த ஐந்து ஆண்டுகளில் படிப்படியாக அதிகரித்து 2017 முதல் 2021 வரை 69.09% வீத வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.

2021ஆம் ஆண்டில், வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம், நட்டஈடு மற்றும் பயங்கரவாதத்தைத் தவிர்த்து, பொதுக் காப்புறுதித்துறையின் மொத்த தேறிய உரிமைக்கோரல்கள் இ.ரூபா 48,317 மில்லியனாக இருந்தது, இது 2020இல் இ.ரூபா 42,534 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 13.60% அதிகரிப்பைக் காட்டுகின்றது. "சுரக்ஷா" காப்புறுதித் திட்டம் மற்றும் "அக்ரஹார" மருத்துவக் காப்புறுதித் திட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட வியாபார வகுப்பின் கீழ் பதிவுசெய்யபட்ட கோரிக்கைகளினால் நிகர உரிமைக்கோரல்களின் வளர்ச்சி உந்தப்பட்டது. இதற்கிடையில், மோட்டார் வாகனங்கள் மீதான உரிமைக்கோல்கள் குறைவான நிகழ்வுகளின் விளைவாக, 2021ஆம் ஆண்டில் மோட்டார் வகை வியாபாரத்தின் கீழ் பெறப்பட்ட நிகர உரிமைக்கோரல்கள் 1.13% வீதமாக குறைந்துள்ளது. எவ்வாறாயினும், 2021ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிகர உரிமைக் கோரல்களில் வணிக காட்சிப்படுத்தப்பட்ட பரஸ்பர வகுப்புகள் பெருகி வருவது குறிப்பிடத்தக்கது.

தேறிய உரிமைக்கோரல் விகிதம் என்பது தேறிய ஈட்டப்பட்ட தவணைக் கட்டணத்தின் (SRCC & T தவிர்த்து) சதவீதமாக உறற்றப்பட்ட தேறிய கோரிக்கையானது 59.90% (2020:52.95%) வீதமாக இருந்தது. 2020ஆம் ஆண்டில் தேறிய உரிமைக்கோரல் விகிதத்தில் 6.95% அதிகரிப்பு, தீ காப்புறுதி வியாபாரத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்ட 2021ஆம் ஆண்டில் மே, ஜுன் மற்றும் நவம்பர் மாதங்களில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் சூறாவளி புயல் நிகழ்வுகளால் ஏற்பட்டது எனக் குறிப்பிட முடியும். அதன்படி, காப்புறுதி வியாபாரமானது 113.40% என்ற அதிகபட்ட உரிமைக்கோரல் விகிதத்தைப் பதிவுசெய்துள்ளது, இது 2020இல் 87.87% வீதத்திலிருந்து விரிவாக அதிகரித்துள்ளது.

2021ஆம் ஆண்டில் 95.52% (2020:80.69%) வீதம் என்ற தேறிய உரிமைக்கோரல் விகிதம் அதிகமாக இருந்த அனைத்து காப்புறுதி நிறுவனங்களுக்கும் சுகாதார வியாபாரத்தின் அதிக செலவு சவாலாக இருந்தது. முந்தைய ஆண்டுகளின் காப்புறுதி மற்றும் இதர காப்பறுதி வியாபரங்களைப் போலவே 2021இல் முறையே 45.71% மற்றும் 45.68% என்ற குறைந்த உரிமைக்கோரல்களை பதிவுசெய்துள்ளன.

அட்டவணை 27இல் காட்டப்பட்டுள்ளதைப் போலவே, பொதுக் காப்புறுதியாளர்களால் ஏற்படும் செலவுகள் 2020ஆம் ஆண்டிலிருந்து மெதுவாக 2.08% வீதமாக அதிகரித்தது, மேலும், இது 2021இல் 1.34% வீதமாகக் குறைந்ததுடன் இ.ரூபா 34,419 மில்லியன் (2020: இ.ரூபா 33,961 மில்லியன்) ஆக உயர்ந்தது. பொதுக் காப்புறுதிப் பிரிவில் ஒரு வருடத்திற்கு முன்பு 39.27% வீதமாக இருந்த மொத்த தேறிய செலவு விகிதம் 39.57% வீதமாக அதிகரித்துள்ளது.

உயர் உரிமைகோரல் விகிதத்தின் தாக்கம் 2020இல் 88.43% ஆக இருந்த கைத்தொழில்துறையின் ஒருங்கிணைந்த விகிதத்தை 2021இல் 95.16% ஆக மோசமாக்கியுள்ளது, மேலும் இது எஸ்ஆர்சீசீ அன்ட் டீ இல்லாமல் மேலும் மோசமாகி 101.21% (2020:93.85%) பதிவு செய்துள்ளது. அதன்படி, பொதுக் காப்புறுதி நிறுவனங்களின் நிதிச் செயல்பாட்டிற்கு அழுத்தம் கொடுத்த உயர் கூட்டு விகிதம் 2021இல் உருவாக்கப்பட்ட முதலீட்டு வருமானத்துடன் ஓரளவு சிறப்பாக செயல்பட முடிந்தது.

# புள்ளிவிபர மீளாய்வு

**அட்டவணை 27**
**தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணம், தேறிய ஏற்கநேர்ந்த கோரிக்கைகள், தேறிய செலவுகள், தேறிய செலவுகள் விகிதம் மற்றும் தேறிய கலவை விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபரம்**

| வகை | தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா '000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | 2019 | 2020 (அ) | 2021 (ஆ) |
| தீ | 1,721,160 | 1,957,237 | 2,183,650 | 2,320,976 | 2,144,141 |
| கடல் | 991,573 | 1,104,376 | 1,175,289 | 973,261 | 1,135,974 |
| மோட்டார் | 50,580,010 | 56,891,349 | 58,724,480 | 57,930,115 | 56,001,558 |
| சுகாதாரம் | 11,435,476 | 12,386,134 | 15,153,049 | 14,995,566 | 18,077,560 |
| நானாவிதம் | 3,891,564 | 4,492,033 | 4,942,850 | 4,109,992 | 3,307,351 |
| உப மொத்தம் | **68,619,783** | **76,831,128** | **82,179,319** | **80,329,911** | **80,666,585** |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ரீ | 3,734,321 | 4,031,846 | 5,568,739 | 6,159,888 | 6,314,379 |
| மொத்தம் | **72,354,104** | **80,862,975** | **87,748,058** | **86,489,799** | **86,980,964** |

| வகை | தேறிய ஏற்கநேர்ந்த கோரிக்கைகள் (இ.ரூபா '000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | 2019 | 2020 (அ) | 2021 (ஆ) |
| தீ | 1,640,062 | 1,696,698 | 2,546,301 | 2,039,484 | 2,431,448 |
| கடல் | 345,331 | 453,917 | 500,555 | 277,372 | 519,210 |
| மோட்டார் | 31,134,209 | 34,681,762 | 34,501,309 | 26,891,271 | 26,587,890 |
| சுகாதாரம் | 10,511,212 | 12,148,224 | 16,759,694 | 12,099,917 | 17,267,200 |
| நானாவிதம் | 4,186,860 | 3,457,623 | 3,148,570 | 1,225,842 | 1,510,957 |
| உப மொத்தம் | **47,817,674** | **52,438,224** | **57,456,428** | **42,533,886** | **48,316,704** |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ரீ | (10,519) | 76,068 | 692,927 | (14,382) | 36,899 |
| மொத்தம் | **47,807,154** | **52,514,292** | **58,149,354** | **42,519,504** | **48,353,603** |

| வகை | தேறிய கோரிக்கைகளின் வீதம் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | 2019 | 2020 (அ) | 2021 (ஆ) |
| தீ | 95.29 | 86.69 | 116.61 | 87.87 | 113.40 |
| கடல் | 34.83 | 41.10 | 42.59 | 28.50 | 45.71 |
| மோட்டார் | 61.55 | 60.96 | 58.75 | 46.42 | 47.48 |
| சுகாதாரம் | 91.92 | 98.08 | 110.60 | 80.69 | 95.52 |
| நானாவிதம் | 107.59 | 76.97 | 63.70 | 29.83 | 45.68 |
| உப மொத்தம் | **69.68** | **68.25** | **69.92** | **52.95** | **59.90** |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ரீ | (0.28) | 1.89 | 12.44 | (0.23) | 0.58 |
| மொத்தம் | **66.07** | **64.94** | **66.27** | **49.16** | **55.59** |


# புள்ளிவிபர மீளாய்வு

| விபரம் | தேறிய செலவுகள் (இ.ரூபா '000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | 2019 | 2020 (அ) | 2021 (ஆ) |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ரீ தவிர்து அனைத்து பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் தேறிய செலவுகள் | 24,491,746 | 29,490,544 | 31,855,625 | 32,858,828 | 33,327,292 |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ரீ | 732,786 | 842,515 | 1,411,974 | 1,102,435 | 1,091,603 |
| மொத்தம் | **25,224,532** | **30,333,059** | **33,267,599** | **33,961,263** | **34,418,895** |

| விபரம் | தேறிய செலவுகளின் வீதம் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | 2019 | 2020 (அ) | 2021 (ஆ) |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ரீ தவிர்து அனைத்து பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் தேறிய செலவுகள் | 35.69 | 38.38 | 38.76 | 40.90 | 41.31 |
| எஸ்ஆர்சீசீ அன்ட் | 34.86 | 37.51 | 37.91 | 39.27 | 39.57 |

| விபரம் | தேறிய கலவை வீதம் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | 2019 | 2020 (அ) | 2021 (ஆ) |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ரீ தவிர்து அனைத்து பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் தேறிய கலவை வீதம் | 105.38 | 106.63 | 108.68 | 93.85 | 101.21 |
| பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் தேறிய கலவை வீதம் | 100.94 | 102.45 | 104.18 | 88.43 | 95.16 |

**விளக்கப்படம் 20**
**தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணம், தேறிய ஏற்கநேர்ந்த கோரிக்கைகள், தேறிய செலவுகள், தேறிய செலவுகள் விகிதம் மற்றும் தேறிய கலவை விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபரம்**



# புள்ளிவிபர மீளாய்வு

## மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தைப் பிரதிபலிக்கும் பூட்கைகளின் எண்ணிக்கை - பொது காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 28, 2021இல் எழுதப்பட்ட மொத்த தவணைக் கட்டணத்தை உருவாக்குவதற்கு பங்களிப்பு செய்த பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் வேறுபட்ட உப வகுப்புகளில் உள்ள 6,620,274 காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கையைப் பிரதிபலிக்கின்றது. பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் அனைத்து உப வகுப்புகளிலும் உள்ள மொத்த காப்புறுதிப் பூட்கையின் எண்ணிக்கை 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 80,719 ஆக அதிகரித்துள்ளது. மேலும், பூட்கைகளின் மொத்த எண்ணிக்கை கடந்த ஐந்து ஆண்டுகளில் மெதுவாக அதிகரித்து, 2017 இல் இருந்து 2021 இல் 8.04% வீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. முந்தைய ஆண்டுகளைப் போலவே, பெரும்பான்மையானவர்கள் 3,285,221 (2020: 3,067,955) இன் மூன்றாம் தரப்பு காப்புறுதிக் கொள்கைகளையும் 2,671,816 (2020:2,849,393) இன் விரிவான பூட்கைகளையும் உள்ளடக்கிய மோட்டார் துணைப் பிரிவை பிரதிநிதித்துவப்படுத்தினர். எனினும், 2020ஆம் ஆண்டில் காணப்பட்ட கீழ்நோக்கிய பாதையைத் தொடர்ந்து விரிவான பூட்கைகள் 6.23% வீதத்தினால் குறைந்துள்ளன. மேலே குறிப்பிட்டுள்ள விரிவான கொள்கைகளுக்கு மாறாக மூன்றாம் தரப்புக் கொள்கைகள் 7.08% வீதத்தினால் உயர்வடைந்துள்ளது. ஆயினும்கூட, இதர வணிக வகைகளைத் தவிர, 2020 மற்றும் 2019 ஆகிய இரண்டிலும் பதிவுசெய்யப்பட்ட சுருக்கங்களுடன் ஒப்பிடும் போது, 2021இல் வியாபாரத்தின் மற்ற அனைத்து துணைப்பிரிவுகளுக்குமான மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணத்தைக் குறிக்கும் பூட்கைகளின் எண்ணிக்கை அதிகரித்ததுள்ளது.

## புதிய, புதுப்பிக்கப்பட்ட மற்றும் அமுலில் உள்ள காப்புறுதிப் பூட்கைகளின் விபரம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 29 மற்றும் விளக்கப்படம் 21 என்பன 2021 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் புதிய, புதுப்பிக்கப்பட்ட மற்றும் அமுலில் உள்ள பூட்கைகளின் விபரத்தை வெளிப்படுத்துகின்றன. தேக்கமான சந்தை நிலைமைகளுக்கு மத்தியில் பொது காப்புறுதித்துறையின் செயல்திறன் 2021ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட புதிய பூட்கைகளின் எண்ணிக்கையை குறைவடைந்ததன் மூலமும், 3.69% வீத எதிர்மறையான வளர்ச்சியைப் பதிவுசெய்ததன் மூலமும் வெளிப்படுத்தப்படுகின்றது. அந்நியச் செலவாணி வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக மோட்டார் வாகனங்கள் இறக்குமதி மீது அரசாங்கம் விதித்த கட்டுப்பாடுகளின் விளைவாக மோட்டார் காப்புறுதிப் பூட்கைகளினால் இந்த சரிவு பிரதானமாகத் தூண்டப்பட்டது. மேற்கூறியபடி, புதிய விரிவான கொள்கைகள் குறைக்கப்பட்டன, அதற்கு நேர்மாறாக மூன்றாம் தரப்புக் கொள்கைகள் அதிகரித்தன, மேலும் மோட்டார் வகையின் கீழ் வழங்கப்பட்ட பூட்கைகளின் எண்ணிக்கை 2,364,055 (2020:2,471,051) ஆக இருந்தது.

மேலும், சுகாதார மற்றும் நானாவித காப்புறுதி வியாபாரங்களின் கீழ் புதிய பூட்கைகள் முறையே 13.74% மற்றும் 14.14% எதிர்மறையான வளர்ச்சியைப் பதிவுசெய்தன. மாறாக தீ மற்றும் கடல் காப்புறுதி வியாபாரங்களின் கீழ் வழங்கப்பட்ட புதிய பூட்கைகள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 15,179 மற்றும் 11,525 ஆக முன்னேற்றத்தை வெளிப்படுத்தியுள்ளன.

2021ஆம் ஆண்டில், காப்புறுதிக் கம்பனிகள் எழுதப்பட்ட 3,884,354 (2020:3,664,333) புதிய பூட்கைகளைக் கொண்டிருந்ததுடன், இது நடுநிலையான வளர்ச்சியாக 6.00% வீத அதிகரிப்பை பதிவு செய்துள்ளதுடன், இது மோட்டார் வாகன காப்புறுதிப் பூட்கைகளினால் உந்தப்பட்டுள்ளது. மேலும், பொதுக் காப்புறுதித்துறையில் நடைமுறையில் உள்ள பூட்கைகளின் எண்ணிக்கை 2020இல் 6,478,167 ஆக இருந்து தற்போது 6,595,661 ஆக உயர்ந்துள்ளதுடன் 2021இல் 1.81% வீத மெதுவான வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.

**அட்டவணை 28**

**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பூட்கைகளின் எண்ணிக்கை - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

| வகுப்பு | பூட்கைகளின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | 2019 | 2020 (அ) | 2021 (ஆ) |
| தீ | 241,884 | 245,027 | 234,408 | 220,196 | 236,361 |
| கடல் | 172,733 | 187,338 | 179,001 | 137,093 | 160,258 |
| வாகனம் | 5,390,222 | 5,614,901 | 5,937,989 | 5,917,348 | 5,957,037 |
| மூன்றாம் தரப்பு | 2,784,920 | 2,821,529 | 2,919,884 | 3,067,955 | 3,285,221 |
| விரிவான | 2,605,302 | 2,793,372 | 3,018,105 | 2,849,393 | 2,671,816 |
| சுகாதாரம் | 11,893 | 17,267 | 23,237 | 28,985 | 31,380 |
| நானாவிதம் | 311,084 | 427,470 | 329,509 | 235,933 | 235,238 |
| **மொத்தம்** | **6,127,816** | **6,492,003** | **6,704,144** | **6,539,555** | **6,620,274** |


# புள்ளிவிபர மீளாய்வு

**அட்டவணை 29**

**புதிய, புதுப்பிக்கப்பட்ட மற்றும் அமுலில் உள்ள காப்புறுதிப் பூட்கைகளின் விபரம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

| வகுப்பு | 2020 (அ) | | | 2021 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | புதிய பூட்கைகள் | புதுப்பிக்கப்பட்ட பூட்கைகள் | வருட இறுதியில் அமுலில் உள்ள பூட்கைகள் | புதிய பூட்கைகள் | புதுப்பிக்கப்பட்ட பூட்கைகள் | வருட இறுதியில் அமுலில் உள்ள பூட்கைகள் |
| தீ | 71,135 | 149,084 | 216,847 | 86,314 | 152,071 | 234,193 |
| கடல் | 134,232 | 3,726 | 130,828 | 145,757 | 15,065 | 153,877 |
| வாகனம் | 2,471,051 | 3,424,277 | 5,863,856 | 2,364,055 | 3,602,840 | 5,935,088 |
| மூன்றாம் தரப்பு | 1,531,788 | 1,515,051 | 3,049,797 | 1,603,102 | 1,682,388 | 3,288,442 |
| விரிவான | 939,263 | 1,909,226 | 2,814,059 | 760,953 | 1,920,452 | 2,646,646 |
| சுகாதாரம் | 19,146 | 9,829 | 29,670 | 16,515 | 14,796 | 32,465 |
| நானாவிதம் | 157,610 | 77,417 | 236,966 | 135,320 | 99,579 | 240,038 |
| மொத்தம் | **2,853,174** | **3,664,333** | **6,478,167** | **2,747,961** | **3,884,351** | **6,595,661** |

**விளக்கப்படம் 21**
**புதிய, புதுப்பிக்கப்பட்ட மற்றும் அமுலில் உள்ள காப்புறுதிப் பூட்கைகளின் விபரம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்**




## மீள்காப்புறுதி வியாபாரம்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம், இலங்கையில் செயற்படும் அனைத்து முதன்மை காப்புறுதி நிறுவனங்களுக்கு அதன் முதன்மை நோக்கமான தேசிய காப்புறுதியாளராக இருப்பதற்காக 2008ஆம் ஆண்டிலிருந்து மீள்காப்புறுதி இடரை ஏற்றுக் கொள்கின்றது. அதற்கமைவாக, 2012 டிசம்பர் 31 வெளியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானி இலக்கம் 1791/4இற்கு அமைவாக 2013இல் இருந்து அனைத்து பிரதான காப்புறுதியாளர்களும் அவர்களுடைய பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்தப் பொறுப்பில் முப்பது வீதத்தை மீள்காப்புறுதியாக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

2021இல், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் உருவாக்கப்பட்ட மீள்காப்புறுதி தவணைக் கட்டண வருமானத்தின் பெறுமதி இ.ரூபா 3,549 மில்லியன் ஆவதுடன், 2020ஆம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட இ.ரூபா 3,235 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 9.68% வீதத்தினால் அதிகரித்துள்ளது. மீள்காப்புறுதி தவணைக் கட்டண வருமானம் 2020ஆம் ஆண்டில் குறைந்துள்ளது, ஏனெனில், 31 மார்ச் 2020 முதல் நடைமுறைக்கு வரக்கூடிய தேர்வுரிமையுள்ள மீள்காப்புறுதி விட்டுக் கொடுத்தல்களை ஏற்றுக்கொள்ளாமையினால், மீட்டளிப்பு காப்பீடுகள் இல்லாமல் போனமையாகும். எனினும் 01 ஒகஸ்ட் 001ஆம் திகதியில் இருந்து மீட்டளப்பு காப்பீடுகள் மீள ஆரம்பிக்கப்பட்டமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் தேர்வுரிமையுள்ள மீள்காப்புறுதிகளை ஏற்றுகொள்ளலை மீளத் தொடங்கியதுடன், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீள்காப்புறுதி தவணைக் கட்டண வருமானம் மீளத்தொடங்கியதுடன், 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வளர்ச்சியையும் வெளிப்படுத்தியது.

2020ஆம் ஆண்டில் மீள்காப்புறுதியாளர்களுக்கு கொடுக்கப்பட்ட மீட்டளிப்பு தவணைக் கட்டணங்களின் தேறிய வெளிப்பாடு, 2020ஆம் ஆண்டுடன் தொடர்புடைய மீட்டளிப்பு காப்பீட்டின் குறைந்தபட்ட வைப்பு தவணைக் கட்டணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இ.ரூபா 275 மில்லியனாக இருந்தது. 2021இல் செலுத்தப்பட்ட தவணைக்கட்டணங்களின் தேறிய வெளிப்பாடு கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இ.ரூபா 1,120 மில்லியனாக அதிகரித்துள்ளது. ஏனெனில் இந்த

# புள்ளிவிபர மீளாய்வு

ஆண்டில் இ.ரூபா 466 மில்லியன் மதிப்பிலான சரிசெய்தல் தவணைக் கட்டண மீட்டளிப்பு பதிவாகியுள்ளது.

2020இல் இ.ரூபா 1,505 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இல் இ.ரூபா 2,379 மில்லியன் பெறுமதியான கோரிக்கையை ஏற்கநேர்ந்துள்ளதுடன், காப்புறுதியாளர்களுக்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் விட்டுக்கொடுக்க நேர்ந்த சில பெரிய கோரிக்கைகளின் காரணமாக ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் குறிப்பிட்டுக்கூடிய 58% வீத வளர்ச்சியைக் காட்டுகின்றது. எனினும், ஆண்டின் இரண்டாம் பாதியில் தீர்க்கப்பட்ட பல பெரிய உரிமைக் கோரல்களின் காரணமாக, 2021இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைக் கோரல்களின் பெறுமதி கணசமான அளவு அதிகரித்துள்ளது. பொருளாதார நடவடிக்கைகளின் படிப்படியான இயல்பாக்கம் மற்றும் முடக்கல் கட்டுப்பாடுகளை நீக்குதல் ஆகியவை 2021ஆம் ஆண்டில் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் ஒட்டுமொத்த உரிமைக்கோரல்களை அதிகரிப்பதோடு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு அறிவிக்கப்பட்ட மீள்காப்புறுதி உரிமைக்கோரல்களில் பாதகமான தாக்கங்களை உருவாக்கியுள்ளன. ஏற்பட்டுள்ள உரிமைக்கோரல்களின் அதிகரிப்புக்கு ஏற்ப மீள்காப்புறுதி வியாபாரமானது, 2021ஆம் ஆண்டில் இ.ரூபா 774 மில்லியன் எழுத்துறுதி நட்டத்தையும் இ.ரூபா 525 மில்லியன் வரிக்கு முந்தைய நட்டத்தையும் உருவாக்கியது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மீள்காப்புறுதி வியாபாரத்தின் மொத்த சொத்து போட்ர்போலியா 2021ஆம் ஆண்டில் இ.ரூபா 6,066 மில்லியனில் இருந்து இ.ரூபா 5,533 மில்லியனாக குறைந்துள்ளது. 31 டிசம்பர 2021ஆம் திகதியன்று, நிதி முதலீடுகள், தவணைக் கட்டணங்கள் பெறத்தக்கவைகள், மீள்காப்புறுதி வியாபாரத்தின் மொத்த சொத்துக்களில் முறையே 37.73%, 28.75% மற்றும் 19.56% ஆகியவற்றைக் குறிக்கும். 2021ஆம் ஆண்டின் இறுதிக்குள் அரச பிணையங்களில் முதலீடு செய்யப்பட்ட மீள்காப்புறுதி வியாபாரத்தின் மொத்த நிதிச் சொத்துக்கள் இ.ரூபா 2,088 மில்லியனாகும். இருப்பினும், 31 டிசம்பர் 2021இல் மீள்காப்புறுதி வியாபாரத்திற்கு ஆதரவளிக்க போதுமான நிதிச் சொத்துக்கள் இல்லாததனால், மீள்காப்புறதிப் பொறுப்பில் 63% வீதம் மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட முதலீடுகள் மூலம் ஈடுசெய்யப்பட்டுள்ளது.

### காப்புறுதி தரகர் கம்பனிகள்

காப்புறுதித் தரகு நிறுவனங்கள் இடைத்தரகர்களாக வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் வேறுபட்ட தேவைகளுக்கு ஏற்ப பொருத்தமான காப்புறுதிக் கொள்கைகளை வாங்க உதவுகின்றன. மேலும் அவர்கள் ஒரு குறிப்பிட்ட வகை காப்புறுதித் தீர்வில் கவனம் செலுத்தலாம் அல்லது பல்வேறு வகையான காப்புறுதித் தீர்வுகள் குறித்து லாசனைகளை வழங்கலாம். காப்புறுதி முகவர்களைப் போலவே பல செயற்பாடுகளைச் செய்யும்போது, பூட்கையாளர்களின் லனுக்காக

அவர்கள் செயற்படும் முகவர்களிடமிருந்து வேறுபடுகிறார்கள். காப்புறுதித் தரகர்கள் ஒன்று அல்லது பல காப்புறுதி நிறுவனங்களின் கீழ் பூட்கைகளை விற்கின்றார்கள், இது 2020ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டின் இறுதியில், சந்தையில் அறுபத்தியேட்டு காப்புறுதி தரகர் கம்பனிகள் தொழிற்பட்டதுடன், இவை இ.ரூபா 30,286 மில்லியன் (2020:இ.ரூபா 28,912 மில்லியன்) பெறுமதியான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை உழைத்துக்கொண்டன. மேலும், இந்த முழுமையான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமானது நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரங்களில் இருந்து பெறப்பட்ட முறையே இ.ரூபா 1,812 மில்லியன் (2020: இ.ரூபா 1,422 மில்லியன்) மற்றும் இ.ரூபா 28,474 மில்லியன் (2020: இ.ரூபா 27,470 மில்லியன்) தொகைகளை உள்ளடக்கியிருந்தது. உருவாக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் பொதுக் காப்புறுதி வியாபாரம் 94.02% வீதத்தையும் நீண்ட கால காப்புறுதி வியாபரம் 5.98% வீதத்தையும் கொண்டிருந்தன.

2020 இல் உருவாக்கப்பட்ட இ.ரூபா 28,912 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இல் காப்புறுதித் தரகு வியாபாரத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணம் 4.75% வீத வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தாலும், நாட்டின் தொற்றுநோய் சூழ்நிலையுடன் ஆயுள் காப்புறுதிக் கொள்கைகளுக்கான அதிகரித்த கோரிக்கைகள் காரணமாக

நீண்டகால காப்புறுதி வணிகத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு 27.42% வீதமாக இருந்தது.

இடைத்தரகராக, காப்புறுதித் தரகர் கம்பனிகள் �ளுசுஊஊரூவு தவணைக் கட்டணம் உள்ளடங்களாக, பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் கணிசமான மொத்தத் தவணைக் கட்டணத்தை உருவாக்குவதற்கு (ரூபா 108,760 மில்லியன்) பங்களித்துள்ளன. கடந்த வருடத்தைப் போல் இவ்வருடமும், 2021இல் நீண்டகால காப்புறுதி வியாபாரத்திற்கு வழங்கப்பட்ட பங்களிப்பு மிகக்குறைவாகவே இருந்தது. தரகர் கம்பனிகளினால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், 1.45% வீதப் பங்களிப்பை மட்டுமே மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக (இ.ரூபா 124,752 மில்லியன்) உருவாக்கியிருந்தது.

2021இல், முப்பத்து நான்கு காப்புறுதி தரகர் கம்பனிகள் ரூபா 100 மில்லியனை விட அதிகமான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களை உழைத்திருந்ததுடன், இவை ஒன்று சேர்ந்து இ.ரூபா 28,801 மில்லியனை பெற்றிருந்தன. மிகுதி முப்பத்து நான்கு காப்புறுதி தரகர் கம்பனிகளும் அட்டவணை 30இல் வெளிப்படுத்தியவாறு ரூபா 1,485 மில்லியனைப் பெற்றுள்ளன.

மேலும், காப்புறுதி தரகு நிறுவனங்கள் மீள்காப்புறுதி தரகுச் சேவைகளுக்கு இடைத்தரகர்களாக செயற்படும் அவர்களுடைய கைகளை விரிவுபடுத்தியுள்ளனர். அதன்படி சில தரகு நிறுவனங்கள் 2021ஆம் ஆண்டில் கணிசமான, அதாவது இ.ரூபா 1,409 மில்லியன் (2020: இ.ரூபா 463 மில்லியன்) தவணைக் கட்டணங்களையும் தரகினையும் பெற்றுள்ளன.

# புள்ளிவிபர மீளாய்வு

**அட்டவணை 30**


**காப்புறுதி தரகு கம்பனியின் ஊடாக உற்பத்தி செய்யப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் - 2021**

| இல | தரகருடைய பெயர் | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நீண்ட கால காப்புறுதி வியாபாரம் | | பொதுக் காப்புறுதி வியாபாரம் | | மொத்தம் | |
| | | இ.ரூபா'(000) | சந்தைப் பங்கு (%) | இ.ரூபா'(000) | சந்தைப் பங்கு (%) | இ.ரூபா'(000) | சந்தைப் பங்கு (%) |
| 1 | ஏடிஎஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 54,989 | 3.03 | 1,707,105 | 6.00 | 1,762,094 | 5.82 |
| 2 | எயிட்கன் ஸ்பென்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | | | 911,379 | 3.20 | 911,379 | 3.01 |
| 3 | அல்பின்கோ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 130 | 0.01 | 1,043,716 | 3.67 | 1,043,846 | 3.45 |
| 4 | அலியோன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட். | 43,697 | 2.41 | 75,850 | 0.27 | 119,547 | 0.39 |
| 5 | அஸ்கி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட். | 35 | 0.00 | 2,256,371 | 7.92 | 2,256,406 | 7.45 |
| 6 | அஸட்லைன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 36,714 | 2.03 | 1,669,485 | 5.86 | 1,706,199 | 5.63 |
| 7 | ஏஎக்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | | | 112,368 | 0.39 | 112,368 | 0.37 |
| 8 | பிமா லங்கா இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 69,991 | 3.86 | 181,631 | 0.64 | 251,622 | 0.83 |
| 9 | சினர்ஜி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 57,919 | 3.20 | 116,285 | 0.41 | 174,204 | 0.58 |
| 10 | சிஎப் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 231 | 0.01 | 2,602,795 | 9.14 | 2,603,026 | 8.59 |
| 11 | கொலொம்போர் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 6,008 | 0.33 | 330,547 | 1.16 | 336,555 | 1.11 |
| 12 | கொமர்'ல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 43,538 | 2.40 | 1,795,924 | 6.31 | 1,839,462 | 6.07 |
| 13 | டெல்மேஜ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 141,106 | 7.79 | 1,373,135 | 4.82 | 1,514,241 | 5.00 |
| 14 | ஈகுவிட்டி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | | | 112,937 | 0.40 | 112,937 | 0.37 |
| 15 | ஈசாலி கரிம்ஜி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 24,697 | 1.36 | 633,877 | 2.23 | 658,574 | 2.17 |
| 16 | போர் மோஸ்ட் இன்சூரன்ஸ் அன்ட் ரீஇன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 2,204 | 0.12 | 100,850 | 0.35 | 103,054 | 0.34 |
| 17 | ஜோர்ஜ் ஸ்டுவர்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 28,380 | 1.57 | 1,994,783 | 7.01 | 2,023,163 | 6.68 |
| 18 | குளோபல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் அன்ட் சேர்விஸ் (பிறைவட்) லிமிடட் | 15,859 | 0.88 | 115,881 | 0.41 | 131,740 | 0.43 |
| 19 | ஐஐஆர்எம் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 67,989 | 3.75 | 1,055,616 | 3.71 | 1,123,605 | 3.71 |
| 20 | இன்சூர்மீ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 50,213 | 2.77 | 1,047,764 | 3.68 | 1,097,977 | 3.63 |
| 21 | லைப் அன்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் சிலோன் (பிறைவட்) லிமிடட் | 61,544 | 3.40 | 325,860 | 1.14 | 387,404 | 1.28 |
| 22 | மேர்கன்டைல் போர்சூன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட | 28,961 | 1.60 | 929,417 | 3.26 | 958,378 | 3.16 |
| 23 | மேர்கன்டைல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட். | 41,087 | 2.27 | 523,210 | 1.84 | 564,297 | 1.86 |
| 24 | மை இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | | | 109,372 | 0.38 | 109,372 | 0.36 |
| 25 | நே'ன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 86,626 | 4.78 | 1,561,137 | 5.48 | 1,647,763 | 5.44 |
| 26 | பிரியோரிட்டி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 156,325 | 8.63 | 105,763 | 0.37 | 262,088 | 0.87 |
| 27 | புரோகெயர் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 55,433 | 3.06 | 328,907 | 1.16 | 384,340 | 1.27 |
| 28 | புரெட்டெக்ஸன் அன்ட் அட்மோஸட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 82,658 | 4.56 | 564,851 | 1.98 | 647,509 | 2.14 |
| 29 | ரிலைன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 134,684 | 7.43 | 982,482 | 3.45 | 1,117,166 | 3.69 |
| 30 | சேனாரத்ன இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 59,309 | 3.27 | 998,275 | 3.51 | 1,057,584 | 3.49 |
| 31 | செங்கடகல இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | | | 850,634 | 2.99 | 850,634 | 2.81 |
| 32 | ஸ்ரடர்ஜிக் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 49,979 | 2.76 | 119,392 | 0.42 | 169,371 | 0.56 |
| 33 | வோலங்கா இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 168,312 | 9.29 | 124,143 | 0.44 | 292,455 | 0.97 |
| 34 | ஸெனித் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 100,585 | 5.55 | 369,959 | 1.30 | 470,544 | 1.55 |
| | **ஏனைய காப்புறுதித் தரகர் கம்பனிகள் (34)** | **142,704** | **7.88** | **1,341,810** | **4.71** | **1,484,514** | **4.90** |
| | **மொத்தம்** | **1,811,907** | **100.00** | **28,473,511** | **100.00** | **30,285,418** | **100.00** |

# புள்ளிவிபர மீளாய்வு

**விளக்கப்படம் 20**

**2012 இருந்து 2021 வரை காப்புறுதி தரகர் கம்பனிகளின் ஊடாக உருவாக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்**




| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நீண்டகால காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம். (இ.ரூபா.மில்லியன்) | 195 | 191 | 158 | 206 | 263 | 341 | 655 | 1,095 | 1,422 | 1,812 |
| பொதுக் காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம். (இ.ரூபா.மில்லியன்) | 12,532 | 14,189 | 14,559 | 16,124 | 17,518 | 22,083 | 24,408 | 28,222 | 27,490 | 28,474 |
| மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் தரகர்களின் பங்களிப்பு % | 14.0 | 14.3 | 13.9 | 13.2 | 12.4 | 13.5 | 15.1 | 16.1 | 13.8 | 12.9 |

# தொழிற்பாடுகளின் மீளாய்வு

## மேற்பார்வை மீளாய்வு

### காப்புறுதிக் கம்பனிகள்

### 1. விபரத்திரட்டுகளின் மீளாய்வு

#### அ) வருடாந்த நியதிச் சட்ட விபரத்திரட்டுகள், கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் மற்றும் காப்புறுதிக் கணிப்பீட்டு அறிக்கைகள்

2017 மார்ச் 13ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட 14 மற்றும் 15ஆம் தீர்மானங்களுக்கு அமைவாக சகல காப்புறுதி வழங்குனர்களும் தமது வருடாந்த நியதிச் சட்ட விபரத்திரட்டு மற்றும் நிதிசார் கணக்காய்வுக் கூற்றுக்கள் ஆகியவற்றை குறிப்பிட்ட நிதி ஆண்டு நிறைவடைந்து அடுத்து வருகின்ற நான்கு மாதங்களினுள் சபைக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என வேண்டப்படுகின்றனர். மேலும், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுகின்ற காப்புறுதி வழங்குனர்கள் காப்புறுதிக் கணக்கீட்டு அறிக்கை ஒன்றையும் மற்றும் வருடாந்த நியதிச் சட்ட விபரத்திரட்டுடன் தொடர்புடைய சாராம்சம் ஒன்றையும் சட்டத்திற்கு அமைவாக சமர்ப்பிக்க வேண்டும்.

ஆணைக்குழு விபரத்திரட்டுகள் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதைக் கண்காணிப்பதுடன், அவற்றின் செம்மை மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளுடன் இணங்குவதையும் உறுதிப்படுத்துவதற்கு அவற்றைப் பரீட்சிக்கின்றது. மீளாய்வின் போது அவதானிக்கப்படும் நியதிச் சட்டத் தேவைகளில் இருந்தான விலகல்களை குறிப்பிட்ட காலத்திற்குள் நிவர்த்தி செய்யுமாறு காப்பறுதிக் கம்பனிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்படுகின்றது. அவசியமாயின், பின்னூட்டு நடவடிக்கைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், விபரத்திரட்டுகளின் மீளாய்வின் போது அவதானிக்கப்படும் பிரச்சினைகள் அமைவிடத்திலான பரீட்சித்தல்களின் போதும் உரிய கம்பனிகளுக்கு அறிவிக்கப்படுகின்றது.

#### ஆ) காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் குழுக்களின் நிதிப் பாதிப்பின் மதிப்பீடு

காப்புறுதி வழங்குனர்கள் அவர்களுடைய வருடாந்த விபரத்திரட்டின் ஒரு பகுதியாக, இடர் மதிப்பீட்டு அறிக்கையை ஆணைக்குழுவிற்கு ஒவ்வொரு வருடமும் சமர்ப்பிப்பதற்கு கோரப்படுகின்றனர். அதற்கமைவாக, காப்புறுதிக் கம்பனிகளின் தொழிற்பாடுகள் தொடர்பான மேலோட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்காக, இந்த வருடம் இடர் மதிப்பீட்டு அறிக்கையில் நிறுவனக் கட்டமைப்பு மற்றும் உரிமை, வியாபார சுருக்கக் குறிப்பு, சிரேஸ்ட முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகம், கோரிக்கைகள் நிர்வாகம், இடர் முகாமைத்துவம் போன்றவை தொடர்பாக உள்ள தகவல்களை ஆணைக்குழு மீளாய்வு செய்தது.

#### இ) மீள்காப்புறுதி ஒழுங்குகள்

சட்டத்தின் பிரிவு 31(1) நியதிகளுக்கு அமைவாக காப்புறுதியாளர்கள் அதன் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் இணங்கும் வகையில் ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் அவர்களுடைய மீள்காப்புறுதி ஒழுங்குபடுத்தல்கள் தொடர்பாக 15 மார்ச் 2021ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்குமாறு கோரப்பட்டனர். இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் கோவிட் - 19 நோய்ப்பரவலைக் கருத்தில் கொண்டு மின் பதிப்பு மூலம் அதைப் பெறுவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மேலும், அனைத்துக் காப்புறுதியாளர்களும், அவர்களுடைய தன்விரும்பி மீள்காப்புறுதி ஒழுங்குபடுத்தல்களை காலாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டனர்.

மேற்குறிப்பிட்ட ஒழுங்குபடுத்தல்களை ஆணைக்குழு மீளாய்வு செய்ததுடன், அதில் அதானிக்கப்பட்ட ஏதேனும் விலகல்களை குறிப்பிட்ட காலத்தினுள் நிவர்த்தி செய்வதற்காக கம்பனிகளுக்கு அறிவிக்கப்படுகின்றது.

#### ஈ) காலாண்டு விபரத்திரட்டுகள்

சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்து நாற்பத்தைந்து தினங்களுக்குள் காலாண்டு விபரத்திரட்டினை ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு காப்புறுதிக் கம்பனிகள் வேண்டப்படுகின்றன.

2020ஆம் ஆண்டுக்கு சமர்ப்பிக்கப்பட்ட காலாண்டு விபரத்திரட்டுகள் ஆணைக்குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டதுடன், சட்டத்தின் ஒழுங்குவிதிகளுடன் அவர்களுடைய காலாண்டு செயற்பாடுகள் மற்றும் இணக்கப்பாடுகளின் இணக்கம் உறுதிப்படுத்தப்பட்டது.

காப்புறுதி வழங்குனர்களின் சொத்து மற்றும் பொறுப்பு நிலை, மூலதனப் போதுமை (கடன்தீர் நிலை), திரவத்தன்மை மற்றும் ஏனைய இடர் பரப்புகள் என்பவற்றைப் பகுப்பாய்வு செய்வதன் ஊடாக ஒவ்வொரு காலாண்டும் ஒவ்வொரு காப்புறுதிக் கம்பனிகளினதும் நிதியியல் நிலை தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டது. காலாண்டு விபரத்திரட்டுகளில் அவதானிக்கப்பட்ட இணக்கப்பாடின்மை மற்றும் குறிப்பிடக்கூடிய வேறுபாடுகள் உரிய காப்புறுதிக் கம்பனிகளுக்கு குறிக்கப்பட்ட கால எல்லையினுள் திருத்தப்படுவதற்காக அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

ஒவ்வொரு காப்புறுதிக் கம்பனியினதும் காலாண்டு செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்காக, ஆணைக்குழு பொது மற்றும் நீண்ட கால காப்புறுதிக் கம்பனிகளின் தவணைக் கட்டண வருமானம், உத்தரவாதமளிக்கப்பட்ட இலாபம் மற்றும் தேறிய இலாபம் என்பனவற்றை விபரத்திரட்டின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்தது. மேலும், முழுமையான பகுப்பாய்வு விகிதங்கள் பயன்படுத்தப்பட்டு இலாபத்தன்மை, செலவினங்கள் மற்றும் கோரிக்கைகள் போன்றன குறித்த காப்புறுதி வழங்குனர்களின் காலாண்டு செயற்பாட்டின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டதுடன், முன்னைய காலாண்டு எச்சரிக்கை விகிதங்களுடன் ஒப்பீடும் செய்யப்பட்டது.

2006ஆம் ஆண்டு 6ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும், சபையின் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் அவர்கள் இணங்குகின்றார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காகவும் காப்புறுதி வழங்குனர்கள் காலாண்டு விபரத்திரட்டுகளுடன் இணக்கப்பாட்டு சான்றிதழினை வழங்குமாறு கோரப்படுகின்றனர்.

#### உ) மாதாந்த அறிக்கையிடல்கள்

2021ஆம் ஆண்டில், இரண்டு நிறுவனங்கள் அவ்வப்போது அறிக்கையிடப்பட்ட இணக்கமின்மையின் அடிப்படையில் சட்டபூர்வ அறிக்கைகள், இடர் அடிப்படையிலான மூலதன நிலை போன்றவற்றைச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளன. அதன்படி, இந்த நிறுவனங்களின் நிதி நிலைச் சட்டம், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் விதிகளுக்கு

# மேற்பார்வை மீளாய்வு

இணங்குவதை உறுதி செய்வதற்காக, இந்த நிறுவனங்கள் சமர்ப்பித்த மாதாந்த விபரத்திரட்டுகளை ஆணைக்குழு பகுப்பாய்வு செய்தது.

## 2. கடன்தீர் எல்லை விதிகளுடனான (இடர் அடிப்படையிலான மூலதனம்) இணக்கப்பாட்டினைக் கண்காணித்தல்

2015 கடன்தீர் எல்லை (இடர் அடிப்படையிலான மூலதனம்) விதிகளுக்கு அமைவாக, ஒவ்வொரு காப்புறுதி வியாபாரமும் குறைந்தபட்ச மூலதனப் போதுமை விகிதத்தையும் (CAR) மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத்தையும் (TAC) பொது மற்றும் நீண்ட கால காப்புறுதி வியாபாரங்கள் இரண்டும் பேணுதல் வேண்டும் என்பதுடன் அவர்களின் கடன்தீர் எல்லைக் (இடர் அடிப்படையிலான மூலதனம்) கணிப்பீட்டினை மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த விபரத்திரட்டுகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும். கடன்தீர் எல்லை விதிகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கு ஆணைக்குழு இவ்வாறான கணிப்பீட்டினை பகுப்பாய்வு மற்றும் மீளாய்வு செய்கின்றது. காப்புறுதி வழங்குனர்கள் அவசியமான கடன்தீர் எல்லையைப் பூர்த்திசெய்வதற்குத் தவறும் பொழுதில் அல்லது கணிப்பீடானது தவறாக இருக்கும் சந்தர்ப்பத்தில், குறிப்பிட்ட காலவரையறைக்குள் அதனை சீர்செய்வதற்கும் மற்றும் கடன்தீர் எல்லையுடன் (இடர் அடிப்படையிலான மூலதனம்) இணங்குவதற்குமான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு சபை அவர்களுக்கு அறிவுறுத்தும்.

## 3. முதலீட்டு குறித்துரைப்புகளுடனான இணக்கப்பாட்டினைக் கண்காணித்தல்

### அ) அரச பிணையங்களில் முதலீடு

அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளும் அவர்களுடைய காப்புறுதி நிதிகளை அரசாங்க பிணையங்களில் முதலீடு செய்யுமாறு கோரப்படுகின்றனர். சட்டத்தின் 25ஆம் பிரிவுக்கு அமைவாக, அரச பிணையங்களில் தொழில்நுட்ப ஒதுக்குகளின் சொத்துக்களில் 20% வீதத்திற்குக் குறையாத தொகையையும் நீண்ட கால காப்புறுதி நிதியத்தின் சொத்துக்களில் 30% வீதத்திற்குக் குறையாத தொகையையும் முதலீடு செய்யுமாறு கோரப்படுகின்றனர். குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் வழங்கப்பட்ட விபரத்திரட்டுகள் மற்றும் உரிய துணை ஆவணங்கள் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்காக அரச பிணையங்களில் முதலீடுகளை ஆணைக்குழு மிகவும் உன்னிப்பாகக் கண்காணிக்கின்றது.

யாதேனும் இணக்கப்பாடின்மை அல்லது வேறுபாடுகள் அவதானிக்கப்படின், குறிப்பிட்ட கால வரையறைக்குள் உரிய திருத்தத்திற்கான நடவடிக்கையை எடுக்குமாறு உரிய காப்புறுதிக் கம்பனிகளுக்கு ஆணைக்குழுவினால் அறிவுறுத்தல் வழங்கப்படும்.

### ஆ) தீர்மானம் 1 இற்கு அமைவாக ஏனைய முதலீடுகள்

ஒவ்வொரு காப்புறுதி வழங்குனர்களும் அவர்களின் தொழில்நுட்ப ஒதுக்குகளின் சொத்துக்கள் மற்றும் நீண்ட கால காப்புறுதி நிதியத்தின் மீதிகளை 2011 மார்ச் 01ஆம் திகதி 1ஆவது தீர்மானத்திற்கும் மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைவாகவும் முதலீடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். ஆணைக்குழு 1ஆம் தீர்மானத்திற்கு அமைவாக காப்புறுதி வழங்குனர்களினால் முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் அவர்கள் வழங்கிய விபரத்திரட்டுகளை அடிப்படையாகக் கொண்டு தொழில்நுட்ப ஒதுக்குகள் மற்றும் நீண்ட கால காப்புறுதி நிதியத்தின் முதலீட்டு விபரங்களை மீளாய்வு செய்கின்றது.

இந்த வருடம் 1ஆம் தீர்மானத்துடன் வேறுபட்டமை மற்றும் இணக்கப்பாடின்மை ஒரு காப்புறுதி வழங்குனரிடம் அவதானிக்கப்பட்டது. அதற்கமைவாக, கம்பனிக்கு உடனடியாக தீர்மானம் 1இற்கு அமைவாக அவசியமான நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கம்பனி, தீர்மானம் 1இற்கு அமைவாக அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

## 4. கடன்தீர் எல்லை (இடர் அடிப்படையிலான மூலதனம்) மீதான அமுலாக்கல் உபாயமார்க்கம்

காப்புறுதிக் கம்பனி கடன்தீர் எல்லை (இடர் அடிப்படையிலான மூலதனம்) விதிகளுக்கு அமைவாக மூலதன போதுமை தேவைப்பாடுகளை பராமரிப்பதற்குத் தவறின், ஆணைக்குழு தலையீட்டை மேற்கொண்டு, அந்தக் கம்பனி இடர் அடிப்படையிலான மூலதனத்தின் மீது அமுலாக்கப்பட்டுள்ள உபாயமார்க்கத்தின் அடிப்படையில் சரிசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இதற்குக் காரணம், காப்புறுதிக் கம்பனிகளை முதல் கட்டத்திலேயே அடையாளம் காணல் மற்றும் குறிப்பிடத்தக்க அமுலாக்கல் பிரச்சினை வருவதற்கும் மற்றும் அவர்களுடைய கட்டுப்பாட்டை மீறுமளவிற்கு வளருவதற்கு முன்னர் வினைத்திறனான ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகும். இது காப்புறுதி நிறுவனங்களின் செயற்திறனை உன்னிப்பாகக் கண்காணிக்க, நிதி நிலைமை அல்லது கடன்தொகையில் ஏதேனும் குறிப்பிடத்தக்க சரிவு ஏற்படுவதையும் நெருக்கடி நிலைக்கு இட்டுச்செல்வதையும் தடுப்பதற்கு வழிவகுக்கும். இவ்வருடம் நான்கு நிறுவனங்கள் 120மு இருந்து 160மு வீதமான மூலதனப் போதுமை விகிதத்தை அறிவித்தன, அதன்படி ஆணைக்குழு அமுலாக்க உபாயமார்க்கத்தின் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகளை எடுத்தது.

## 5. அமைவிட பரீட்சித்தல்

2021ஆம் ஆண்டு, கோவிட்-19 நோய்ப்பரவல் காரணமாக ஏற்பட்ட குறிப்பிடத்தக்க இடையூறு காரணமாக, காப்புறுதி நிறுவனங்களின் அமைவிட ஆய்வுகள் மேற்கொள்வதைப் பிரிவு தற்காலிகமாக ஒத்திவைத்துள்ளது. எனினும், பிரிவு இரு காப்புறுதி நிறுவனங்களில் தொலைநிலை ஆய்வை முடித்துள்ளது. இந்த ஆய்வின் நோக்கம், முதலீடுகள், இடர் முகாமைத்துவம், நிதி நிலை போன்ற நிறுவனங்களின் மையப்படுத்தப்பட்ட பகுதிகளை மதிப்பீடு செய்வதாகும். அமைவிட ஆய்வுகளின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பரிந்துரைகளுடன் அவர்களின் பதிலளிப்புக்காக மேம்படுத்தலை மேற்கொள்வதற்காக காப்புறுதியாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

## 6. இலங்கை மத்திய வங்கிக்குத் தகவல்களை வழங்குதல்

ஆணைக்குழு காலாண்டு விபரத்திரட்டுகளில் இருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில் பெற்றுக்கொண்ட,

# மேற்பார்வை மீளாய்வு

விபரங்களை காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் காலாண்டு செயற்பாடுகள் தொடர்பான நிதியியல் தகவல்களை இலங்கை மத்திய வங்கியின் நிதி முறைமை நிலைப்படுத்தல் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கும்.

## 7. நிதி அமைச்சிடம் முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பித்தல்

இப்பிரிவு காலாண்டு அடிப்படையில் பிரிவின் பெறுபேறுகளின் முன்னேற்றம் குறித்த அறிக்கையைத் தயாரித்து நிதி அமைச்சிடம் சமர்ப்பித்தது. இது காலாண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரிவின் மேற்பார்வை நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளது.

## 8. கைத்தொழில் கைநூல் 2020

இலங்கை காப்புறுதி கைத்தொழில் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு தயாரிப்பு நோக்கத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட தணிக்கை செய்யப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் புள்ளிவிபரங்களின் அடிப்படையில் 2020ஆம் ஆண்டிற்கான தொழில் கையேடு புத்தகத்தை (ஈ-புத்தகம்) பிரிவு தயாரித்துள்ளது. அதன்படி, கைத்தொழில் கையேடு புத்தகத்தில் மற்றும் நிறுவனங்கள் வாரியான இருப்புநிலை அறிக்கைகள், வருமான அறிக்கைகள், சொத்துக்களின் செறிவு போன்றவற்றுக்குப் பொருத்தமான புள்ளிவிபரங்கள் உள்ளன. இலங்கை காப்புறுதி கைத்தொழில் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு இதனை இணையத்திலும் வெளியிட்டது.

## 9. இடர் கருவி

வருடாந்த விபரத்திரட்டுகள் மற்றும் காலாண்டு விபரத்திரட்டுகளின் ஊடாக காப்புறுதி வழங்குனர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதி மற்றும் ஏனைய தகவல்களின் அடிப்படையில், முன்னராக எச்சரிக்கை முறைமையாக ஒவ்வொரு கம்பனியினதும் பிரதான இடர்களை அடையாளம் காண்பதற்கு உள்ளக இடர் கருவியினை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு அபிவிருத்தி செய்துள்ளது. இடர் விபரக்குறிப்பு ஆயுள் மற்றும் பொதுக் கம்பனிகளுக்குத் தனித்தனியாக முக்கியமாக நிதி மற்றும் இணக்கக் கண்ணோட்டத்தில் வகைப்படுத்தப்பட்டது, பின்னர் இடர் மதிப்பீட்டு அறிக்கையுடன் இணைத்து அதனை மாற்றியமைத்தது. பிரதான நிதி அளவுகோள்களாக கருதப்படுபவைகளில் மூலதனம், சொத்துகள், இலாபம், சந்தைப் பங்குகள் போன்றன உள்ளடங்குவதுடன் இணக்கக் கண்ணோட்டத்தில் கடன்தீர் தேவைப்பாடுகள், மீள்காப்புறுதி நியதிகள் மற்றும் நிபந்தனைகள், தீர்மானம் 1, சமர்ப்பிப்பதில் தாமதங்கள் என்பன உள்ளடங்கும்.

அதன்படி, காப்புறுதி நிறுவனங்கள் மதிப்பெண்களின் அடிப்படையில் “உயர்”, “நடுத்தர” மற்றும் “குறைந்த” இடருள்ள நிறுவனங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேற்கூறிய இடர் வகைகளின் படி வகைப்படுத்துவதற்காக, அந்தந்தக் காப்புறுதி நிறுவனங்களின் வருடாந்திர செயற்திறனைப் பிரிவு பயன்படுத்துகின்றது. “அதிக இடருள்ள” என வகைப்படுத்தப்பட்ட காப்புறுதி நிறுவனங்களின் செயற்திறனை இப்பிரிவு உன்னிப்பாகக் கண்காணிக்கும். இடர் அடிப்படையிலான அணுகுமுறை, நிறுவனம் சார்ந்த ஒழுங்குமுறைத் தேவைகள் மற்றும் மேற்பார்வையின் அளவு ஆகியவை காப்புறுதியாளரின் இடர் மதிப்பெண்ணைப் பொறுத்து மாறுபடும்.

## 10. பணத்தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடலுக்கு எதிர்த்துப் போராடல் நடவடிக்கைகள் (AML/CFT)

### அ. அவ்விடத்துக்குச் சென்று ஆய்வு செய்தல்

இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் புலன்விசாரணைப் பிரிவுடன் இணைந்து ஆணைக்குழு மூன்று பணத்தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடலுக்கு எதிர்த்துப் போராடல் தொடர்பான கள விசாரணைகளை 2006ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க நிதியியல் பரிமாற்றங்கள் தொடர்பான அறிக்கையிடல் சட்டத்தின் 18ஆம் பிரிவுடன் இணைந்து வாசிக்க வேண்டிய பிரிவு 15(1) (உ) இற்கு அமைவாக, நிதியியல் பரிமாற்றங்கள் தொடர்பான அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் உள்ள சட்டம் மற்றும் ஒழுங்குவிதித் தேவைப்பாடுகளுடன் காப்புறுதிக் கம்பனிகள் ஒழுகுகின்றனவா என்பதை மதிப்பீடு செய்வதற்காக நடாத்தியது. அவர்களுடைய பதிலைப் பெறுவதற்காக உரிய காப்புறுதியாளர்களுக்கு கள விசாரணை தொடர்பான அவதானிப்புகள் தெரிவிக்கப்பட்டன.

### ஆ. இடர் கருவி

2006ஆம் ஆண்டு நிதி சார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து நிதியியல் உளவறிதல் அலகுடன் இணைந்து அனைத்து ஆயுள் காப்புறுதிக் கம்பனிகளினது பணத்தூய்தாக்கல் பாதிப்புகளை மதிப்பிடலை ஆரம்பித்துள்ளதுடன் அதற்காக AML/CFT இடரைக் கண்டறிவதற்கான இடர் கருவியை அபிவிருத்தி செய்துள்ளது.

அதற்கமைவாக, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு 01 ஒக்டோபர் 2020 தொடக்கம் 30 செப்டெம்பர் 2021 வரையிலான காலப்பகுதிக்கான பண்டங்கள், வாடிக்கையாளர்கள், PEP's, விநியோக ஊடகம், கூட்டிணைந்த ஆளுகை, கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், இடர் முகாமைத்துவம், பணியாளரின் விடாமுயற்சி, இணக்கம், உள்ளக கட்டுப்பாடுகள் போன்ற ஒவ்வொரு கம்பனிகளினதும் பரந்துபட்ட தகவல்களைச் சேகரிக்கும் நோக்கத்துடன் ஆயுள் காப்புறுதிக் கம்பனிகளிடையே கேள்வித்தாள்களை சுற்றுநிருபம் செய்துள்ளது. இந்த தகவல்களின் அடிப்படையில், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு ஆயுள் காப்புறுதி நிறுவனங்களின் AML/CFT இடரினை கண்டறியவும் 2022 இல் உன்னிப்பாக அவதானிக்கவும் இடர் கருவியினைப் புதுப்பித்துள்ளது.

### இ. பணத்தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடலின் தேசிய இடர் மதிப்பீடு

2021இல், இலங்கை மத்திய வங்கியன் நிதியியல் உளவறிதல் பிரிவு பணத்தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலின் தேசிய இடர் மதிப்பீட்டை இற்றைப்படுத்தலுடன் தொடர்புபட்ட பணிகளை ஆரம்பித்துள்ளது. இதற்காக, காப்புறுதித்துறை தொடர்பாக பணத்தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை மதிப்பீடு செய்வதற்கு, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, நிதியியல் உளவறிதல் பிரிவு மற்றும் காப்புறுதியாளர்களை உள்ளடக்கிய பணிக்குழு இடர் மதிப்பீட்டு மாதிரியுடன் இணைந்த கேள்வித்தாளைத்

# மேற்பார்வை மீளாய்வு

தயாரித்துள்ளது. அதற்கமைவாக, இந்தக் கேள்வித்தாள் அனைத்துக் காப்புறுதி கம்பனிகளுக்கும் அனுப்பப்பட்டு சேகரிக்கப்பட்டு, அவசிய நடவடிக்கைகளுக்காக நிதியியல் உளவறிதல் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## 11. காப்புறுதித்துறையின் தொழிற்பாடு மற்றும் வியாபாரத் தொடர்ச்சிக்கு கோவிட் - 19 இன் தாக்கம்

பல காப்புறுதி மேற்பார்வையாளர்களாக, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவானது, சாத்தியமான கோவிட் 19 வீழ்ச்சியிலிருந்து பெரும் நிச்சயமற்ற தன்மைகளுக்கு எதிராக வணிகத் தொடர்ச்சி மற்றும் பூட்கையாளர்களுக்கு நெகிழ்வான சிகிச்சையை உறுதிசெய்ய ஒழுங்குமுறை நடவடிக்கைகளை விவேகத்துடன் எடுத்துள்ளது. 11 ஏப்பிரல் 2020 திகதியிடப்பட்ட கடிதத்தின் அடிப்படையில், "கோவிட் 19 நோய்ப்பரவலுக்கு இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிடமிருந்து பூட்கையாளர்களுக்கு நிவாரணம் மற்றும் ஆதரவு அவசியம்" என்பதன் கீழ் 31 மார்ச் 2020இல் முடிவடைந்த திகதியில் இருந்து ஒவ்வொரு மாதமும் கீழ்வருவனவற்றை அறிக்கையிடும்படி அனைத்து காப்புறுதியாளர்களும் கோரப்பட்டனர்

(அ) மூலதனப் போதுமை தேவைப்பாட்டின் நிலை, அதாவது, TAC, RCR, SVCC மற்றும் CAR

(ஆ) பணிப்புரை # 1தேவைக்கு இணங்குவதை முதன்மை அலுவலர் சான்றழிக்கவும், இணங்கவில்லை என்றால், நிறுவனத்தின் முதன்மை அலுவலரினால் விபரங்களும் வழங்கப்படுதல் வேண்டும்.

அதற்கமைவாக, அவசியமான தேவைப்பாடுகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கு 2021ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த நிலைகள் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டது. மேலும், இந்தப் பிரிவு இடர் அடிப்படையிலான மூலதனம் மற்றும் தீர்மானம் # 1 இன் உடன் இணங்குவதற்கு சிரமங்களைக் கொண்டுள்ள கம்பனிகளுக்கு பல்வேறுபட்ட முக்கிய நடவடிக்கைகளை அமுலாக்கல் உபாயமார்க்க நியதிகளின் கீழ் மேற்கொண்டது.

## 12. முன்மொழியப்பட்ட பங்குலாப விநியோகம்

"பங்குலாப பிரகடனம் மற்றும் விநியோகம்" எனும் 10 மார்ச் 2021 மற்றும் 30 ஒகஸ்ட் 2021 (திருத்தம்) திகதியிடப்பட்ட பணிப்புரையின் கீழ், அனைத்துக் காப்புறுதியாளர்களும் பணிப்புரை 1 இன் கீழ் விபரிக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் பங்குலாபங்கள் பிரகடனப்படுத்தப்படுதல் வேண்டும் எனக் கோரப்பட்டது. மேலும் காப்புறுதிக் கம்பனியின் பணிப்பாளர் சபை பணிப்புரையில் குறிப்பிடப்பட்ட அனைத்து நியதிகள் மற்றும் நிபந்தனைகள் கவனத்தில் கொள்ளப்பட்டது எனும் உறுதிப்படுத்தலையும் மற்றும் பங்குதாரர்களுக்கு பங்குலாபத்தை பிரகடனப்படுத்துவதற்கு குறைந்தது 2 வாரங்களுக்கு முன்னர், முன்மொழியப்பட்ட பங்குலாபப் பெறுமதியைக் குறிப்பிட்டு கையொப்பத்தை இடுதலும் வேண்டும்.

## காப்புறுதித் தரகர் கம்பனிகள்

### 1. காலாண்டு விபரத்திரட்டுகள், இடைக்கால நிதியியல் கூற்றுகள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களின் மீளாய்வு

2010 பெப்பரவரி 25ஆம் திகதி வெளியிடப்பட்ட 1642/16 (முதலாம் அட்டவணை) வர்த்தமானி அறிவித்தலின் நியதிகளுக்கு அமைவாக, ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்து நாற்பத்து ஐந்து நாட்களினுள் காப்புறுதித் தரகர் கம்பனிகள் அவர்களின் காலாண்டு விபரத்திரட்டுகளை ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்க வேண்டும் எனக் கோரப்படுகின்றனர்.

2021ஆம் ஆண்டு, அனேகமான காப்புறுதி தரகர் கம்பனிகள் தங்கள் காலாண்டு விபரத்திரட்டுகளை ஆணைக்குழுவிற்கு இறுதி நாளுக்கு முன்னராக சமர்ப்பித்தன. அவர்களின் நிதியியல் நிலைமையை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் அவை சட்டம், ஏனைய ஒழுங்குவிதிகளுடன் இணங்குகின்றமையை கண்காணிப்பதற்கும் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட காலாண்டு விபரத்திரட்டுகள் ஆணைக்குழுவினால் மீளாய்வு செய்ப்பட்டது. யாதேனும் இணக்கப்பாடின்மை அல்லது விலகல்கள் ஆணைக்குழுவினால் அவதானிக்கப்பட்டதாயின், குறிப்பிட்ட காலவரையறைக்குள் அவற்றினைத் திருத்துமாறு உரிய காப்புறுதி தரகர் கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

காப்பறுதி கைத்தொழிற்துறை ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் பிரிவு 86 (2)இற்கு அமைவாக நிதியாண்டு முடிவடைந்ததும் அதிலிருந்து ஆறு மாதங்களுக்குள் காப்புறுதி தரகர் கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுகளை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றனர். சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுகள் ஆணைக்குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டது. யாதேனும் இணக்கப்பாடின்மை அல்லது விலகல்கள் ஆணைக்குழுவினால் அவதானிக்கப்பட்டதாயின் அவற்றினைத் திருத்துமாறு நடவடிக்கை எடுக்குமாறு உரிய காப்புறுதி தரகர் கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

### 2. பதிவினைப் புதுப்பித்தல்

2022ஆம் ஆண்டுக்கான அவற்றின் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கான விண்ணப்பங்கள் காப்புறுதித் தரகர் கம்பனிகளிடமிருந்து கிடைக்கப் பெற்றது. புதுப்பிப்பதற்கு முன்னர் அவற்றின் நிதியியல் நிலைமையை தீர்மானிப்பதற்காக, கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகள் மற்றும் காலாண்டு விபரத்திரட்டுகள் என்பனவற்றை ஆணைக்குழு பகுப்பாய்வு செய்தது. .

### 3. புதிய காப்புறுதித் தரகர் கம்பனிகளைப் பதிவு செய்தல்

இவ்வருடத்தினுள் காப்புறுதித் தரகர் கம்பனிகளாக பதிவினைப் பெற்றுக்கொள்வதற்கு முன்மொழியப்பட்ட காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றது. ஆணைக்குழு பதிவிற்கு விதப்புரை செய்வதற்கு முன்னர், விண்ணப்பிக்கப்பட்ட கம்பனியின் விற்பனை மற்றும் நிதியியல் முன்மதிப்பீடு, நிறுவனத்தின் கட்டமைப்பு, கிடைக்கப்பெறும் உட்கட்டமைப்பு வசதி மற்றும் வெளிவாரி கணக்காய்வாளரின் சான்றிதழ் உள்ளடங்கலாக வியாபாரத் திட்டத்தைப் பகுப்பாய்வு செய்தது.

# ஒழுங்குமுறைப்படுத்தல் மீளாய்வு

### காப்புறுதித் தரகர் கம்பனிகள்

இவ்வருடம் ஆணைக்குழு புதிய பதிவுகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. ஒரு காப்புறுதிக் கம்பனி அதன் கலைத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றதுடன், அதனுடன் சேர்த்து பதிவுசெய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகளின் எண்ணிக்கை 28 ஆகும்.

**இணைப்பு I**: ஆணைக்குழுவில் பதிவுசெய்துள்ள அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளின் பெயர்களையும் அவை கொண்டு நடாத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட வியாபார வகை/வகைகள் என்பவற்றையும் வழங்கும்.

### அமுலாக்கல் நடவடிக்கைகள்

### காப்புறுதிக் கம்பனிகள்

### இடைநிறுத்தல்கள்

சிலிங்கோ டக்காபுல் லிமிடட் நிறுவனத்திற்கு 2009 இல் விதிக்கப்பட்டுள்ள இடைநிறுத்தல் 2020 வரை தொடர்கின்றது. அத்துடன், ஆணைக்குழுவினால் நியாயமான கோரிக்கைகள் என அடையாளம் காணப்பட்ட கோரிக்கைகள் அனைத்தையும் நிறுவனம் தீர்த்து வைத்திருந்தாலும், சிலிங்கோ டக்காபுல் லிமிடட் மீது நீதிமன்ற வழக்குகள் தொடர்ந்து நடைபெற்று வருவதனால், உரிமைகோரல் தீர்வு செயன்முறையை முடிக்க முடியவில்லை.

சட்டத்தின் பிரிவு 18(1)இன் படி, ஒரு குறிப்பிட்ட வகை அல்லது காப்புறுதி வியாபாரத்தின் துணை வகை மற்றவற்றுடன் கடனைத் தக்கவைக்கத் தவறியதாக ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்பட்ட அல்லது சட்டத்தின் எந்தவொரு விதிமுறையையும் அல்லது எந்தவொரு விதியையும் அல்லது விதிக்கப்பட்ட நிபந்தனையையும் அல்லது சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட எந்தவொரு பணிப்புரையையும் அல்லது தீர்மானத்தையும் மீறியமைக்காக ஒரு காப்புறுதியாளரின் பதிவை ஆணைக்குழு இரத்து செய்யலாம் அல்லது நிறுத்தி வைக்கலாம்.

### பணிப்புரைகள்

1. ஆணைக்குழு இடைக்கால பங்குலாபங்கள் உள்ளடங்கலாக பங்குலாபங்களைப் பிரகடனப்படுத்தும் போதும் மற்றும் விநியோகிக்கும் போதும் காப்புறுதிக் கம்பனியின் பணிப்பாளர் சபை கவனத்தில் கொள்ள வேண்டிய நியதிகள் மற்றும் நிபந்தனைகளைக் குறித்துரைத்து பணிப்புரையை வழங்கியது. மேலும், பங்குலாப பிரகடனத்தை வெளியிடுவதற்கு இரண்டு வாரங்களின் முன்னர் காப்புறுதி நிறுவனத்தின் பணிப்பாளர்கள் மற்றும் பிரதான அலுவலர் இணக்கச் சான்றிதழின் உறுதிப்படுத்தலை சமர்ப்பித்தல் வேண்டும் என மேற்குறிப்பிடப்பட்ட பணிப்புரையில் கோரப்பட்டுள்ளது.

   மேலும், கைத்தொழிற்துறையில் இருந்து மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளைக் கவனத்தில் கொண்டு, ஆணைக்குழு பணிப்புரையில் அயிட்டம் 1(பி) இனை பதிலீடு செய்வதற்கு பணிப்புரையை விநியோகித்ததுடன், மேற்குறிப்பிட்ட பணிப்புரையில்: 1. பரந்த கட்டமைப்பின் அடிப்படையில் சரியான ஆய்வுக்குப் பின் நிறுவனத்தால் தற்செயலான பொறுப்புகள் குறித்த முடிவுகள் எடுக்கப்பட்டன மற்றும் நிறுவனத்தின் நிதி நிலை மற்றும் கடனீட்டு நிலையின் நிலைத்தன்மைக்கு எதிராக அதனுடன் தொடர்புடைய அபாயத்தை மதிப்பிடுகின்றன. 2. பங்குதாரர்களுக்கு முன்மொழியப்பட்ட ஊதியத்தை கருத்தில் கொண்டு நிதியியல் மற்றும் கடனளிப்பு நிலை மீதான தாக்கம். உரிய கணக்கீட்டு நியமங்களுடன் காப்புறுதியாளர்கள் இணங்குவதின் கீழ் உட்பட்டது. மேற்குறிப்பிட்ட பணிப்புரை உடனடியாக அமுலுக்கு வந்தது.

2. அனைத்துக் காப்புறுதியாளர்களுக்கும் தரகர்களுக்குக்கும் குறியீடுகளை வழங்குதல் மற்றும் குறியீடுகளை மாற்றுதல் மீதான கட்டுப்பாட்டினை விதித்து ஆணைக்குழுவினால் பணிப்புரை விநியோகிக்கப்பட்டது. பணிப்புரைக்கு அமைவாக காப்புறுதியாளர்கள் காப்புறுதித் தரகர்களுக்கும் காப்புறுதி முகவர்களுக்கு மாத்திரம் குறியீடுகளை வழற்குவதற்கு அனுமதிக்கப்படுகின்ற அதேவேளையில் தரகர்கள் காப்புறுதி முகவர்களுக்கு மாத்திரமே குறியீடுகளை வழங்க முடியும். அத்துடன் கம்பனிகள் வங்கிகள், நிதி மற்றும் குத்தகைக் கம்பனிகளுக்கு குறியீடுகளை வழங்குதல் தடைசெய்யப்பட்டுள்ளது. மேலும், காப்புறுதியாளர்கள் காப்புறுதித் தரகர் மற்றும் காப்புறுதி முகவரின் எழுத்து மூலமான சம்மதமின்றி தற்போதுள்ள குறியீடுகளை மாற்றுவதற்கு காப்புறுதியாளர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனினும், காப்புறுதிப் பூட்கையாளர் தற்போதுள்ள முகவர் அல்லது தரகரை மாற்றுவதற்கு விரும்பின், எழுத்து மூலமான சம்மதம் தேவையில்லை.

3. இந்த வருடம் ஆணைக்குழு, நிதியினை தவறாகக் கையாளுதல் அல்லது மோசடி காரணமாக சேவை இடைநிறுத்தப்பட்ட ஒருவரை எந்தவொரு பணிக்கும் ஊழியராக நியமதிப்பதைத் தடைசெய்து காப்புறுதி கைத்தொழிற்துறை ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் கீழ் நபர்களைப் (காப்புறுதியாளர்கள், தரகர்கள் மற்றும் நட்ட சீராக்கலாளர்) பதிவுசெய்தல் பணிப்புரையினைத் திருத்தியது. எனினும், ஒரு நபரின் பணிநீக்கம் காப்புறுதியாளர், தரகர், நட்ட சீராக்கலாளர் மூலம் மேற்கொள்ளப்படும் பட்சத்தில், அத்தகைய நபர்கள் உரிய செயல்முறையைப் பின்பற்றுதல் வேண்டும், குறிப்பாக இயற்கை நீதியில் கொள்கைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

4. ஆணைக்குழு, தொலைதொடர்பு சேவை வழங்குனர்களின் தளங்களைப் (மொபைல் இன்சூரன்ஸ்) பயன்படுத்துவதை இடைநிறுத்துவது மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் குறித்து அனைத்து காப்புறுதியாளர்களுக்கும் உத்தரவினை வழங்குவதற்கு முடிவுசெய்துள்ளது.

   மேற்குறிப்பிட்ட பணிப்புரை மொபைல் மற்றும் நிலையான லைன்கள் போன்ற தொலைதொடர்பு சேவை வழங்குனர்களின் சேவைத்தளத்தைப் பயன்படுத்தி சாத்தியமான காப்புறுதிப் பூட்கையாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு காப்புறுதியாளர்கள் காப்புறுதிப் பண்டங்களை விற்பனை செய்வதை தடைசெய்துள்ளது. அத்துடன் காப்புறுதியாளர்கள் அவர்களுடைய பண்டங்களை அவர்களுடைய சொந்த சந்தைப்படுத்தல் தொழில்நுட்பம் மற்றும் உபாயமார்க்கங்களைப் பயன்படுத்தி விற்பனை செய்வதற்கு அறிவுறுத்தப்படுகின்றனர். உரிய காப்புறுதியாளரின் பயிற்சி அளிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள், தரகர்கள் அல்லது காப்புறுதி முகவர்கள் மாத்திரம் காப்புறுதிப் பண்டங்களை விற்பனை செய்வதற்கு அனுமதிக்கப்படுவர். காப்புறுதி சேவையைத் தொடர்வது தொடர்பான பொறுப்பு ஏற்பட்டால், தொலைதொடர்பு சேவை வழங்குனர்களின் தளங்களைப் பயன்படுத்தி விற்கப்பட்ட காப்புறுதிகள் அந்தந்தக்

# ஒழுங்குமுறைப்படுத்தல் மீளாய்வு

காப்புறுதி நிறுவனங்களினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

5. காப்புறுதியாளர் மற்றும் காப்புறுதித் தரகர் நிறுவனத்தின் பிரதான அலுவலர் கம்பனியின் வியாபார நடவடிக்கைகள் தொடர்பான பொதுவான கட்டுப்பாடு, பணிப்புரை மற்றும் மேற்பார்வை என்பனவற்றுக்கு பொறுப்பான பிரதான நிறைவேற்று அலுவலர்/முகாமைத்துவப் பணிப்பாளராக இருத்தல் வேண்டும் எனக் கோரி 13 மே 2016ஆம் திகதி வெளியிடப்பட்ட பணிப்புரை #9 திருத்தப்பட்டது. இந்தத் தேவைப்பாடு 2022 நவம்பர் மாதத்தில் இருந்து அமுலுக்கு வந்தது.

6. ஆணைக்குழு காப்புறுதியாளருக்கு வழங்கப்பட்ட காரணம் கேட்கும் குறிப்பாணைக் கடிதங்களை பரிசோதனை செய்ததன் பின்னர் காப்புறுதிக் கைத்தொழிற்துறை ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் 57ஆம் பிரிவுக்கு அமைவாக, அந்தக் கம்பனியின் பிரதான நிறைவேற்று அலுவலர் அவருக்கு எதிராக வழங்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவருடைய தற்போதைய பதவியில் இருந்து நீக்கப்படாததற்கு குறிப்பிட்ட காப்புறுதியாளர் திருப்திகரமான நியாயத்தை/காரணத்தை வழங்குவதற்கு தவறிவிட்டார் என்பதை அவதானித்தது. மேற்குறிப்பிட்டவற்றைக் கவனத்தில் கொண்டு, ஆணைக்குழு உடனடியாக பிரதான நிறைவேற்று அலுவலரை அந்தப் பதவியில் இருந்து நீக்குமாறு காப்புறுதிக் கம்பனிக்கு பணிப்புரையினை வழங்கியது. .

7. இதேபோன்ற இன்னொரு சந்தர்ப்பத்தில், ஆணைக்குழு இன்னொரு காப்புறுதியாளருக்கு காப்புறுதி கைத்தொழிற்துறை ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் 57ஆம் பிரிவின் கீழ் அதனுடைய குறிப்பிட்ட அலுவலர் காப்புறுதி கைத்தொழிற்துறை ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் 94ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக பிரதான அலுவலர் பதவிக்கான நியதிச்சட்ட வகிபாகத்தை உரிய முறையில் செய்வதற்குத் தவறியமையினால் அவரை அதிலிருந்து நீக்குமாறு பணிப்புரையினை வழங்கியதுடன் காப்புறுதி கைத்தொழிற்துறை ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் 32ஆம் பிரிவுக்கு அமைவாக உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அந்தப் பதவி வெற்றிடம் அமுலுக்கு வருதல் வேண்டும் என்பதுடன் உரிய ஆவணங்களுடன் அவை ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

### புதிய காப்புறுதி தரகர் கம்பனிகளின் பதிவு மற்றும் காப்புறுதித் தரகர் கம்பனிகளின் பதிவைப் புதுப்பித்தல்.

காப்புறுதி தரகர்களாகப் பதிவுசெய்ய ஆர்வமுள்ள ஆட்களிடமிருந்து இந்த ஆண்டில் புதிய வியாபாரத் திட்டங்களை ஆணைக்குழு பெற்றது. இந்த வருடம் ஆணைக்குழு பத்து (10) ஆட்களுக்கு கம்பனியாக கூட்டிணைப்பு செய்வதற்கு பெயர் அனுமதியை வழங்கியது. அத்துடன் ஆணைக்குழு மூன்று கம்பனிகளுக்கு இந்த வருடத்தில் காப்புறுதித் தரகுக் கம்பனிகளாக செயற்படுவதற்கான பதிவியினையும் வழங்கியது. மேலும் தற்போதுள்ள இரு கம்பனிகளுக்கு (பொதுக் காப்புறுதி வியாபாரத்தைக் கொண்டு நடாத்தும்) நீண்ட கால காப்புறுதி தரகர் வியாபாரத்தைக் கொண்டு நடாத்துவதற்கான பதிவு வழங்கப்பட்டது.

2022ஆம் ஆண்டுக்கு அவர்களுடைய புதுப்பித்தல்களை மேற்கொள்வதற்கு 67 காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதுடன், சட்டத்தின் தேவைப்பாட்டுக்கு அமைவாக இணங்கியமையினால் அதில் 67 கம்பனிகளுக்கும் பதிவைப் புதிப்பித்தலுக்கான அனுமதி வழங்கப்பட்டது.

**இணைப்பு II:** ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட அனைத்துக் காப்புறுதித் தரகர் கம்பனிகளின் பெயர்கள் மற்றும் அவை காப்புறுதி வியாபாரத்தைக் கொண்டு நடாத்துவதற்கான அதிகாரமளிக்கப்பட்ட வகை/வகைகள் என்பவற்றையும் வழங்குகின்றது.

### அமுலாக்கல் நடவடிக்கைகள்

### காப்புறுதித் தரகர் கம்பனிகள்

### எச்சரிக்கைகள்

இந்த வருடம் கம்பனிகளுக்கு அல்லது பிரதான அலுவலருக்கு எந்தவொரு எச்சரிக்கைக் கடிதமும் விநியோகிக்கப்படவில்லை.

### இடைநிறுத்தல்கள்

இந்த வருடம் இடைநிறுத்தல்கள் ஏதும் அமுல்படுத்தப்படவில்லை.

### இரத்துசெய்தல்கள்

இந்த வருடம் இரத்துச்செய்தல்கள் ஏதும் அமுல்படுத்தப்படவில்லை

### காப்புறுதி நட்ட சீராக்கலாளர்களைப் பதிவு செய்தல் மற்றும் காப்புறுதி நட்ட சீராக்கலாளர்களின் பதிவினைப் புதுப்பித்தல்.

வுஇவ்வருடத்தினுள் ஆணைக்குழு நான்கு நபர்களுக்கு நட்டச் சீராக்கலாளர்களாகப் பதிவு செய்வதற்கு அனுமதியினை வழங்கியது. அத்துடன், ஆணைக்குழு இவ்வருடத்தினுள் இருபத்தி ஐந்து நபர்களின் பதிவினை நட்டச் சீராக்கலாளர்களாகப் புதுப்பிப்பதற்கான அங்கீகாரத்தையும் வழங்கியது.

சட்டத்தின் பிரிவு 114(1)ஆம் பிரிவுக்கு அமைவாக, “நட்டச் சீராக்கலாளர்” என்பவர் அலசியாராய்வதில் விசேட அறிவினைக் கொண்டுள்ளவராகவும் காப்புறுதிக் கோரிக்கைகளில் இருந்து எழும் நட்டங்களை மதிப்பிடக்கூடியவராகவும் சட்டத்தின் கீழ் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக நட்டச் சீராக்கலாளர்களாகவும் பதிவு செய்யப்பட்டவர் ஆவார்.

**இணைப்பு III:** ஆணைக்குழுவில் நட்டச் சீராக்கலாளர்களாகப் பதிவு செய்தவர்களின் பெயர்களையும் அனுமதிப்பத்திரத்தின் செயல்வலுத் திகதியையும் வழங்கும்.

### ஒழுங்குமுறைப்படுத்தல் / ஆலோசனை நடவடிக்கைகள்

1. ஆணைக்குழு திருத்தப்பட்ட சட்டத்திற்கு அமைவாக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஏற்பாடுகளின் நியதிகளின் கீழ் பணிப்பாளர்களை நியமிப்பதற்கு காப்புறுதிக் கம்பனிகளால் சமர்ப்பிக்கப்பட்ட பல்வேறு விண்ணப்பங்களுக்கு அங்கீகாரத்தை வழங்கியது. எனினும் கூட்டிணைந்த ஆளுகைச் சட்டத்தின் மீதான 17ஆம் பணிப்புரையுடன் இணங்காமை காரணமாக பல விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்படவில்லை.

2. சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக காப்புறுதி மற்றும் காப்புறுதித் தரகுக் கம்பனிகளுக்கான தலைமை அலுவலர்களை நியமிப்பதற்கு கோரிக்கை விடுத்து சமர்ப்பிக்கப்பட்ட பல விண்ணப்பங்களுக்கு ஆணைக்குழு ஒப்புதலை வழங்கியுள்ளது.

# ஒழுங்குமுறைப்படுத்தல் மீளாய்வு

3. மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துடன் இணைந்து "2004ஆம் ஆண்டு 01ஆம் இலக்க வீதிப் பாதுகாப்பு நிதி ஒழுங்குவிதியை" திருத்துவதன் ஊடாக மூன்றாம் தரப்பினருக்கான காப்பீட்டு தவணைக் கட்டணத்தை 1% வீதத்திலிருந்து 2% வீதமாக அதிகரிப்பதற்கு மேற்குறிப்பிட்ட திருத்தத்தைக் கூட்டிணைப்பதற்கு தேசிய வீதிப் பாதுகாப்புக்கான சபையினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையை போக்குவரத்து அமைச்சருக்கு செயலாளரின் ஊடாக அனுப்புவதற்கு ஆணைக்குழு விருப்பத்தைக் கொண்டுள்ளது.

4. ஒரு காப்புறுதியாளர் 31 டிசம்பர் 2019இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்றில் "ஏனைய தொழிற்பாட்டு வருமானம்" என்பதன் கீழ் "காலம் தாழ்த்தப்பட்ட பூட்கைகள்" ஆக ரூபா 14 மில்லியனைப் பதிவுசெய்துள்ளதையும் அதில் ரூபா 2.6 மில்லியன் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் (நீண்டகால நிலுவை) மற்றும் ரூபா 12 மில்லியன் வரையறுக்கப்படாத வைப்புகள் உள்ளதையும் ஆணைக்குழு அவதானித்தது. இது ஆணைக்குழுவினால் 08 ஜனவரி 2020 விநியோகிக்கப்பட்ட, 2019 நிதியாண்டிலிருந்து அமுலுக்கு வரும் வகையில், காப்புறுதிப் பூட்கையாளர்கள் / முன்மொழிவாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தவணைக் கட்டண வைப்புகளை, அதாவது மிகை, முற்பண, அடையாளம் காணப்படாத, முன்மொழியப்பட்ட மற்றும் காலாவதியான போன்ற வேறுபட்ட வடிவங்களில் பெறப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை பொறுப்பு மீதியை வருமானக்கூற்றில் மீள்எழுதல் / மாற்றுதல் செய்வதற்கு காப்புறுதிக் கம்பனிகளுக்கு தடைவிதித்து கடிதத்திற்கு முரணாக இருந்தது.

   அந்தக் காப்புறுதியாளருக்கு, காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் 57ஆம் பிரிவுக்கு அமைவாக ஆணைக்குழுவின் 08 ஜனவரி 2020 கடிதத்திற்கு இணங்கும் வகையில் ஐந்தொகைக் கூற்றில் நீண்ட கால காப்புறுதி நிதியின் கீழ் அடையாளம் காணப்படாத வைப்புகளாக பெறுப்பாக அடையாளம் காணப்படாத வைப்புகளாக பராமரிக்கும் வகையில் மீள்திருத்துமாறு பணிப்புரையை ஆணைக்குழு வழங்கியது.

5. காப்புறுதித் தரகர் கம்பனிகளின் காலாண்டு விபரத்திரட்டுகளுக்கான வடிவத்தை ஆணைக்குழு திருத்தியதுடன், திருத்திய வடிவம் 31 மார்ச் 2021ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வந்தது.

6. ஒரு காப்புறுதியாளரினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளைக் கவனத்தில்கொண்டு, நிபந்தனைகளுக்கு அமைவாக சேலான் வங்கி பிஎல்சி நிறுவனத்திடமிருந்து ரூபா 200 மில்லியன் கடன் வசதியைப் பெற்றுக்கொள்வதற்கு அனுமதியை வழங்குவதற்குத் தீர்மானித்தது.

7. ஆணைக்குழு, காப்புறுதி கைத்தொழில் சட்டம் மற்றும் அதன் துணைச் சட்ட தேவைப்பாடுகளில் குறிப்பிடப்பட்ட இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து சட்டத் தேவைப்பாடுகளையும் கம்பனி பூர்த்தி செய்வதன் கீழ் முதிர்ச்சியிலிருந்தான REPO வேண்டுகோளுக்கு, அதன் ஹோல்டிங் கம்பனியின் தொகுதிப்பங்குகளில் ரூபா 90 மில்லியனை முதலீடு செய்வதற்கு, ஒரு காப்புறுதியாளரினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்கு அனுமதியை வழங்குவதற்கு 13 ஒக்டோபர் 2015 இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட கடிதத்துடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய பிரித்தலுக்கான அனுமதியை வழங்குதல் தொடர்பாக இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் 28 பெப்பரவரி 2019ஆம் திகதி வழங்கப்பட்ட கடிதத்தின் நிபந்தனை # VII மீளய்வு செய்தது.

8. சுற்றுநிரூபம் # 36 இன் நிபந்தனைகளுக்கு அமைவாக வெளிநாட்டில் உள்ள சுகாதார காப்புறுதிப் பண்டங்களின் புதுப்பித்தலுக்கு காப்புறுதி தரகர்களின் வேண்டுகோளை மீளாய்வு செய்து, அங்கீகாரத்தை மேலும் வருடத்திற்கு நீடித்தது.

   சுற்றுநிரூபம் # 36 வெளிநாட்டு காப்புறுதிப் பூட்கைகளைக் கொண்டிருப்பதற்கு விருப்பம் கொண்டுள்ள காப்புறுதி தரகர் கம்பனி, அதனைக் கொள்வனவு செய்வதற்கு முன்னர் ஆணைக்குழுவிடம் அனுமதி பெறுதல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

9. 2010 ஒக்டோபர் 05ஆம் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி 1674/4 ஆல் திருத்தப்பட்ட, 2002 செப்டெம்பர் 23ஆம் திகதி வெளியிடப்பட்ட 1255/3 ஆம் இலக்க வர்த்தமானியின் விதி 2(c)(ii) இற்கு அமைவாக டெல்லி, இடைநிலை கல்வி மத்திய சபையினால் வழங்கப்பட்ட இடை நிலை பாடசாலை கல்விச் சான்றிதழ் இலங்கை கல்வித் திணைக்கழத்தினால் வழங்கப்படும் க.பொ.த (சாதாரண தரம்) சான்றிதழுக்கு சமனானது என ஆணைக்குழு ஏற்றுக்கொண்டு அங்கீகரித்தது.

10. ஸ்ரீலங்கா ஷிப்பிங் கம்பனி லிமிடட் அடுத்த 5 வருடங்களுக்கு காப்புறுதி கைத்தொழில் ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் 101ஆம் பிரிவுக்கு அமைவாக வெளிநாட்டு காப்புறுதியாளர்களுடன் ஹல், இயந்திர மற்றும் போர் காப்புறுதிப் பூட்கை 31 மே 2021 காலாவதியாவதனால் அதனைப் புதுப்பிப்பதற்கு அனுமதியைக் கோரியது. தேசிய நலனைக் கருத்தில் கொண்டு ஆணைக்குழு, ஸ்ரீலங்கா ஷிப்பிங் கம்பனி லிமிடட் நிறுவனத்தினால் குறிப்பிடப்பட்ட பிரிடிஷ்மரையின் உடனான பூட்கை அல்லது ஏனைய காப்புறுதியாளர்கள் இலங்கையில் பதிவு செய்யாமையினால் அதனை நிராகரிப்பதற்கு முடிவுசெய்தது.

11. கலவைக் காப்புறுதிக் கம்பனிகளினால் இரு வியாபாரங்களாக (நீண்ட காலம் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம்) இரு வேறுபட்ட கம்பனிகளாகப் பிரிப்பதற்கு, 2011ஆம் ஆண்டு 03ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழிற்துறை ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தில் 53ஆம் பிரிவுக்கு இணங்கும் வகையில் உள்ளமையை உறுதிப்படுத்தலில் அரச காப்புறுதி நிறுவனங்களுக்கு பல நீடிப்புகளை வழங்கியது. எனினும் பல நீடிப்புகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட போதிலும், அவற்றுடன் இணங்குவதற்கு குறிப்பிட்ட கம்பனி தவறியது. எனவே, பிரிவினைக்கான சட்டப்பூர்வ தேவைக்கு விலக்கு அளிக்கப்படுவதை ஆணைக்குழு பரிசீலிக்க மாட்டாது என்றும், கட்டாய சட்டபூர்வ தேவைகளுக்கு இணங்க காப்புறுதி கைத்தொழிற்துறை ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத் தேவைகளுக்கு இணங்க காப்புறுதியாளர் உடனயாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஆணையம் தீர்மானித்தது.

12. ஒரு காப்புறுதியாளரினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளைக் கருத்தில் கொண்டு, நிபந்தனைகளுக்கு உட்பட்டு அவர்களுடைய கம்பனியை மீள்கட்டமைப்பு செய்வதற்கு அனுமதியை வழங்க முடிவுசெய்தது.

# விசாரணை மீளாய்வு

காப்புறுதிப் பூட்கையாளர்களின் நன்மைகளைப் பாதுகாக்கும் நோக்கத்தின் கீழ், காப்புறுதி வழங்குனர்கள் மற்றும் கோரிக்கையாளர்கள் இருவருக்கிடையில் தோன்றும் முரண்பாடுகளை தீர்த்துவைப்பதற்காக கோரிகையாளர்கள் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கும் கோரிக்கைகளைத் தீர்த்து வைப்பதற்கான அதிகாரம் ஆணைக்குழுவிற்கு உள்ளது. அத்துடன், யாரேனும் காப்புறுதியாளர், தரகர் அல்லது முகவருக்கு எதிராக யாதேனும் தவறான நடவடிக்கைகள் அல்லது ஒழுங்கீனங்கள் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளதா என ஆணைக்குழு புலனாய்வு செய்யும்.


ஆணைக்குழுவிற்கு யாதேனும் முரண்பாடுகள் அல்லது முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதும் (காப்புறுதியாளர், காப்புறுதித் தரகருக்கு அல்லது முகவருக்கு எதிராக), எதிர்த் தரப்பினருக்கு அவர்களின் தீர்மானம் தொடர்பாக அதற்கான காரணத்தை சான்றளிக்கும் தகவல்கள் மற்றும் ஆவணங்களுடன் கட்டியெழுப்புமாறு கோரப்படுவர். அவசியமாயின் ஆணைக்குழு தீர்மானத்திற்கு வருவதற்காக மூன்றாம் தரப்பினரிடமிருந்து உறுதிப்படுத்தல்களையும் தனிப்பட்ட நிபுணர்களிடமிருந்து கருத்துகளையும் பெற்றுக்கொள்ளும்.

## மொத்தப் பரிந்துரைகளின் சுருக்கம்

மீளாய்வுக்குட்பட்ட இவ்வருடத்தில் மொத்தமாக 410 புதிய முறைப்பாடுகள் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப்பெற்றதுடன், அதில் 446 விடயங்கள் ( கடந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டு முன்கொண்டுவரப்பட்ட முறைப்பாடுகள் உள்ளடங்கலாக) இவ்வருடத்தினுள் தீர்க்கப்பட்டது. தீர்க்கப்பட்ட விடயங்களில் ஆணைக்குழுவின் தலையீடு காரணமாக 118 கோரிக்கைகள் காப்புறுதி பூட்கையாளர்களுக்குச் சார்பாக தீர்க்கப்பட்டதுடன் அவற்றின் பெறுமதி இ.ரூபா 48.35 மில்லியன் ஆகும்.


கடந்த ஐந்து வருடங்களில் ஆணைக்குழுவுக்கு மொத்தமாக 1,766 விடயங்கள் கிடைக்கப்பெற்றன. விளக்கப்படம் 1இல் காட்டப்பட்டுள்ளவாறு, கடந்த ஆண்டுடன் (446) ஒப்பிடுகையில் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை (410) கணிசமானளவில் குறைந்துள்ளது. இந்த வருடம் முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகள் குறைந்ததற்கு கோவிட் - 19 இன் தாக்கத்தினால் முடக்கல்கள் மற்றும் தபால் தாமதங்கள் என்பன காரணமாக இருக்கக்கூடும்.

**விளக்கப்படம் 2: 2021 இனுள் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் மாதாந்தப் பகுப்பாய்வு**





இந்த ஆண்டினுள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கையை மாதாந்த அடிப்படையில் விளக்கப்படம் 2 காட்டுகின்றது. அதிகப்படியான முறைப்பாடுகள் பெப்பரவரி மாதத்தில் (67) கிடைக்கப்பெற்றதுடன், ஜூன் மாதத்தில் (15) மிகக் குறைந்த முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. சாராசரியாக மாதத்திற்கு 34 முறைப்பாடுகள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்றுள்ளதுடன், பெப்பரவரி, மார்ச், ஏப்பிரல், ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் சராசரிக்கும் மேலாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

**விளக்கப்படம் 3: 2021இன் மொத்த பரிந்துரைகளின் வகைப்படுத்தல**




2021ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற மொத்த பரிந்துரைககளின் வகைப்படுத்தல் விளக்கப்படம் 3இல் காட்டப்பட்டுள்ளது. இந்த மொத்த முறைப்பாடுகளில் முறையே 299 (72.93%) பரிந்துரைகள் பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பாகவும் 81 (19.75%) பரிந்துரைகள் நீண்டகாலக் காப்புறுதி வியாபாரம் தொடர்பாகவும் கிடைக்கப்பெற்றவையாகும். இங்கு வழங்கப்பட்டவற்றில் 30 (7.32%) பரிந்துரைகள் பொது முறைப்பாடுகளாகும், இவற்றை காப்புறுதி வியாபாரத்துடன் வகைப்படுத்துவதற்கு முடியாது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், கிடைக்கப்பெற்ற பரிந்துரைகளில் பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பான பரிந்துரைகள் 68மு (2020இல்) வீதத்தில் இருந்து 72.93% வீதத்தினால் அதிகரித்துள்ளதுடன் நீண்ட கால வியாபாரம் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் பரிந்துரைகள் 24% (2020இல்) வீதத்தில் இருந்து 19.75% வீதத்தினால் குறைந்துள்ளது. ஏனைய பரிந்துரைகளின் வீதமானது 8% (2020) வீதத்தில் இருந்து 7.32% வீதமாக சற்றுக் குறைவடைந்துள்ளது.

**விளக்கப்படம் 01 :கடந்த ஐந்து வருடங்களில் கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகள்**



# விசாரணை மீளாய்வு

### பொதுக் காப்புறுதி வியாபாரம் மீதான பரிந்துரைகளின் பகுப்பாய்வு

ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப் பெற்ற பிரச்சினையின் வகையை அடிப்படையாகக் கொண்டு பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வு தொடர்பான விபரங்கள் அட்டவணை1இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 1: பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பான பரிந்துரைகள்: பிரச்சினைகள் ரீதியாக

| பிரச்சினை | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| முரண்பாட்டுக் கோரிக்கை | 268 | 89.63 |
| பொறுப்பினை ஏற்றுக்கொள்ளாமை | 102 | 34.11 |
| வழங்கப்பட்ட கோரிக்கைக் கொடுப்பனவு தொடர்பாக திருப்தியின்மை | 16 | 5.35 |
| கோரிக்கைக் கொடுப்பனவுகளை வழங்குவதில் தாமதம | 150 | 50.17 |
| ஏனைய முறைப்பாடுகள் | 31 | 10.37 |
| **மொத்தம்** | **299** | **100.0** |

அட்டவணை 1இல் காட்டப்பட்டவாறு, பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் கீழ் உள்ள மொத்த முறைப்பாடுகளில் (299) 268 (89.63%) முறைப்பாடுகள் உரிமைகோரல் முரண்பாடுகள், மீதமுள்ள 31 (10.37%) முறைப்பாடுகள் இடைக்கால கொள்கை இரத்து போன்ற பிற புகார்கள், கேள்விகளுக்கு பதிலளிக்கவில்லை, தவணைக் கட்டணத்தை மீளப்பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கைகள் மற்றும் பூட்கை ஆவணங்களை பெறாதது போன்றவையாகும். உரிமை கோரல் முறைப்பாடுகளின் கீழ் முறைப்பாடுகளுக்கான (50.17%) முக்கிய பிரச்சினை கோரிக்கைகளில் உள்ள காலதாமதமாகும்.

பரிந்துரைக்கான ஆணிவேர், மோட்டார் வாகனக் காப்புறுதிக் கோரிக்கைகளை நிராகரிப்பதற்கான பிரதான காரணம் வெளிப்படுத்தாமை அல்லது விபத்துகள் தொடர்பான பிரதான காரணங்களை தவறான முறையில் சித்தரித்தமை (உள்ளடங்காத பயன்பாடு, குடித்துவிட்டு வாகனம் ஓட்டுதல், சாரதிக்கு முறையான சாரதி அனுமதிப்பத்திரம் இன்மை அல்லது காப்புறுதி செய்தவர் வாகன விற்பனையின் போது காப்புறுதி செய்வதற்கான விருப்பினைக் கொண்டிராமை போன்றன), விபத்து பற்றிய விளக்கத்துடன் சேதங்கள் பொருந்தாமை, முழுத் தவணைக் கட்டணத்திற்கான கட்டணத்தைச் செலுத்தாமையினால் விபத்து நடந்த வேளையில் பூட்கை இரத்து செய்யப்பட்டிருத்தல் போன்றன என்பது கண்டுபிடிக்கப்பட்டது. அரசாங்க ஆய்வாளர் திணைக்களம், காவல் நிலையங்கள், மருத்துவமனைகள் மற்றும் மூன்றாம் சாட்சிகளிடமிருந்து (அவசியமானால்) அவதானிப்புகளை அழைப்பதன் மூலம் உரிமைகோரல் மறுப்பு தொடர்பாக விரிவான விசாரணைகள் நடாத்தப்பட்டன. பூட்கை இழப்புக் காரணத்தை உள்ளடக்கிய சந்தர்ப்பங்களில், உரிமைகோரல் தொடர்பான பொருள் உண்மைகளை மோசடி அல்லது வேண்டும் என்றே சித்தரிக்காத வேளைகளில் ஆணைக்குழு உரிமைகோருபவர்களுக்கு உதவியது.

உரிமைகோரல் முரண்பாடுகளின் கீழ் பரிந்துரைகளுக்கு (34.11%) வீதம் கோரப்பட்டதற்கு முக்கிய காரணமாக பொறுப்பினை ஏற்றுக்கொள்ளாமையும் அமைந்திருந்தது. கோரிக்கைகள் மீது மேலும் விசாரணைகளை மேற்கொள்வதே காலதாமதத்திற்குக் காரணமாக அமைந்திருந்தது. அத்துடன், உரிமைகோரல்கள் குறித்து மேலதிக விசாரணைகளை இறுதியாக்குவதற்குத் தகவல்களையும் ஆவணங்களையும் வழங்குவதில் காப்புறுதியாளர்கள் அல்லது பழுதுபார்ப்பவர்களின் தாமதங்கள் காரணமாக பெரும்பாலான தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. மீதி பதினாறு (16) முறைப்பாடுகளும் வழங்கப்பட்ட / செலுத்தப்பட்ட உரிமைக் கோரலின் அதிருப்தி காரணமானவையாகும். பூட்கை சொற்களின் தவறான புரிதல் மற்றும் இழப்பு சரிசெய்தல் / விலக்குகள் குறித்து காப்புறுதியாளர்கள் வழங்கிய விளக்கங்களில் தெளிவு இல்லாமை ஆகியவை இந்த பரிந்துரைகளுக்கு முக்கிய காரணங்களாக இருந்தன.

### நீண்டகால காப்புறுதி வியாபாரம் மீதான பரிந்துரைகளின் பகுப்பாய்வு

கீழே அட்டவணை 2இல், நீண்ட கால காப்புறுதி வியாபாரம் தொடர்பாக கொடுக்கப்பட்ட பரிந்துரைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 2 - நீண்டகாலக் காப்புறுதி வியாபாரம் தொடர்பான பரிந்துரைகள்: பிரச்சினைகள் ரீதியாக**

| பிரச்சினை | Numbers | Percentage |
|---|---|---|
| முரண்பாட்டுக் கோரிக்கைகள் | 21 | 26 |
| பொறுப்பினை ஏற்றுக்கொள்ளாமை | 8 | 39 |
| முதிர்ச்சி மற்றும் சரணடைதல் நன்மைகள | 10 | 47 |
| வழங்கப்பட்ட கோரிக்கைக் கொடுப்பனவுத் தொகை தொடர்பாக திருப்தியின்மை | 3 | 14 |
| ஏனைய முரண்பாடுகள | 60 | 74 |
| மீள்செலுத்தல்/ இரத்துச்செய்தல் அல்லது புதுப்பித்தல் கோரிக்கைகள | 24 | 40 |
| தகவலுக்கான ஏற்பாடு | 4 | 6.67 |
| தவணைக் கட்டணங்களின் தவறான கையாளுகை/ மோசடி | 1 | 1.67 |
| ஏனையவை | 31 | 51.66 |
| **மொத்தம்** | **81** | **100.0** |

# விசாரணை மீளாய்வு

அட்டவணை 2இற்கு அமைவாக, நீண்டகாலக் காப்புறுதி தொடர்பான மொத்தப் பரிந்துரைகளில் (81) கோரிக்கை தொடர்பான முரண்பாடுகள் (26%) மற்றும் ஏனைய முறைப்பாடுகள் (74%) வீதமும் இருந்தன.

கோரிக்கை முரண்பாடுகளில் (47%) பெரும்பான்மையானவை முதிர்ச்சி நன்மைகள் மற்றும் சரணடைதல் நன்மைகள் தொடர்பானவையாகும். அவ்வாறான முரண்பாடுகளுக்குப் பிரதான காரணம் பூட்கை சொல்லமைப்புக் கொண்ட பந்திகள் மற்றும் காப்புறுதியாளர்களினால் வழங்கப்படும் விளக்கங்களின் பற்றாக்குறையாகும். இந்த முரண்பாடுகளில் பெரும்பாலானவை உரிமை கோருபவர்களுக்கு எழுத்துமூலமாக அல்லது ஆணைக்குழுவில் நடைபெற்ற கலந்துரையாடல்களில் தேவையான விளக்கங்களை வழங்குவதன் மூலம் தீர்க்கப்படுகின்றது.

ஏனைய 39% வீதமான கோரிக்கை முரண்பாடுகள் காப்புறுதியாளரினால் பொறுப்புக்கள் ஏற்றுக்கொள்ளாமையுடன் தொடர்புடையவையாகும். கொள்கையின் தொடக்கத்திலோ அல்லது புதுப்பித்தலிலோ பொருள் உண்மைகளை வெளிப்படுத்தாது அல்லது தவறாகச் சித்தரிப்பதை அடிப்படையாகக் கொண்டது. காப்புறுதி ஒப்பந்தங்களின் காப்புறுதியின் அடிப்படைச் சட்டக்கொள்கை ரடிநசசஐயுந கனைநை (பரிபூரண நம்பிக்கை) ஆவதுடன், ஒப்பந்தத்தின் இரு தரப்பினருக்கும் நேர்மாறாக செயற்படுகின்றது. அதாவது காப்புறுதியாளர் மற்றும் காப்புறுதி செய்யப்பட்டவர் இருவருக்கும் இது பொதுவானது. ஒரு காப்புறுதியாளர் முன்மொழிவுப் படிவத்தில் முன்மொழிந்தவர் வெளிப்படுத்திய தகவல்களின் அடிப்படையில், முன்மொழிவாளரின் உயிருக்கான ஆபத்தை ஏற்றுக்கொள்வது மற்றும் தொடர்புடைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைத் தீர்மானிக்கின்றார். எனவே பொருள் உண்மைகளை வெளிப்படுத்தாத அல்லது தவறாகச் சித்தரிப்பது காப்புறுதியாளர்களினால் பரிபூரண நம்பிக்கையை மீறுவதாகும்.

சில நிகழ்வுகளில், முன்மொழிவாளர்களினால் உண்மைகளை வெளிப்படுத்தாததற்கும் தவறாகச் சித்தரிப்பதற்கும் காரணம் தொடர்புடைய காப்புறுதிக் கொள்கைகள் குறித்த விழிப்புணர்வு இல்லாதது மற்றும் பொருள் தகவல்களை வெளிப்படுத்த வேண்டிய கடமை பற்றிய தெரியாமையாகும். ஆகையால் காப்புறுதியாளர்கள் வருங்கால பூட்கையாளர்களுக்கு தங்களது வெளிப்படுத்தல் கடமை மற்றும் அவ்வாறு செய்யத் தவறினால் ஏற்படும் பாதகமான விளைவுகள் குறித்து முறையாக அறிவிக்கப்படுவதை உறுதி செய்ய கூடுதல் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஆணைக்குழுவினால் வெளிப்படுத்தாமை அல்லது தவறாகச் சித்தரிக்கப்பட்டமை வேண்டுமென்றே மேற்கொள்ளப்படவில்லை என்பதை உறுதிப்படுத்திய சில நிகழ்வுகளுக்கு மட்டுமே ஆணைக்குழுவினால் உதவ முடிந்தது.

காப்புறுதிப்பூட்கையாளர்களுக்கு காப்புறுதிப்பூட்கை ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் ஒழுங்குமுறையில் தவணைக் கட்டணங்களை செலுத்தியுள்ளமையை உறுதிப்படுத்துவதற்கான கடமையுள்ளது. பூட்கைகள் காலவதியானால், தவணைக் கட்டணங்கள் செலுத்தப்படாவிட்டால் கோரிக்கைகள் நிராகரிக்கப்படும். முரண்பாடுகள் எழுந்தால், அவர்களுடைய கொடுப்பனவுகளை உறுதிப்படுத்துவதற்கு கொடுப்பனவுகள் உரிய திகதியில் செலுத்தப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கு பூட்கையாளர்கள் கோரப்படுவர். அதற்கமைவான, தவணைக் கட்டணங்கள் கொடுப்பனவு செய்யப்பட்டமை அல்லது தாமதமாக கொடுப்பனவு செய்யப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டால் மாத்திரமே ஆணைக்குழுவினால் உதவ முடியும். அனேகமான முரண்பாடுகளில் (14%) கோரிக்கைத் தொகை தொடர்பாக திருப்தியடையாமை காரணமாக இருந்ததுடன், அதற்கு கோரிக்கையாளர்களுக்கு காப்புறுதிப் பூட்கையை வழங்கும் போது காப்புறுதியாளர்களினால் தெளிவுபடுத்தல்கள் அல்லது விளக்கங்கள் சரியான முறையில் வழங்கப்படாமை அவதானிக்கப்பட்டது.

ஏனைய முறைப்பாடுகளில் பெரும்பாலானவை (51.66%) ஏனைய வகைகளில் கீழ் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. பூட்கைகளை இரத்துச் செய்து தவணைக்கட்டணங்களை திரும்பப்பெறுதல் அல்லது பூட்கைகளுக்கு புத்துயிர் பெறுவதற்கான கோரிக்கைகள் தொடர்பாக நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட பிற புகார்களின் முக்கிய காரணம் பூட்கைகளை இரத்துச்செய்து தவணைக் கட்டணங்களை மீளப்பெறுவதற்கான கோரிக்கைகள் தொடர்பான விடயங்களில் உதவ முடியாது, ஏனெனில் அதற்குரிய காலம் முடிந்த பின்னர், அதாவது பூட்கை ஆவணம் கிடைத்த நாளிலிருந்து 21 நாட்களினுள் இல்லை எனில் பூட்கையாளர்களுக்கு அத்தகைய உரிமையில்லை, எனினும் பூட்கையாளர்கள் அல்லது உரிமைகோருபவர்கள் அனுபவிக்கும் க்'டங்கள் தெளிவாகத் தெரிந்த இடத்தில் நிவாரணம் வழங்க காப்புறுதியாளர்கள் ஒப்புக்கொண்டனர். புத்துயிர் பெறுவதற்கான கோரிக்கைகள் குறிப்பிட்ட காலத்தில் காலாவதியான பிறகு செய்யப்படும் பூட்கைக்கு புத்துயிர் அளிக்க நடவடிக்கை எடுக்கும் தாமதங்களை பூட்கையாளர்கள் நியாயப்படுத்தக்கூடிய இடத்தில் மட்டுமே உதவ முடியும். ஆயுட் காப்புறுதிப் பூட்கையாளர்கள் மீள்கொடுப்பனவை கேட்பதற்குப் பிரதான காரணமாக பூட்கையாளர்களுக்கு ஆயுட் காப்புறுதிப் பூட்கையின் முக்கியத்துவம் விளங்குவதற்கு போதிய அறிவு காணப்படாமை மற்றும் நாளாந்தக் கட்டணங்களை செலுத்துவதற்கு எதிர்கொள்ளும் நிதிப்பிரச்சினைகள் அமைந்திருந்தன.

### ஏனைய முறைப்பாடுகள்

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், வியாபாரத்துடன் குறிப்பிடப்படாத 30 பிற விடயங்கள் முக்கியமாக நியாயமற்ற பணி நீக்கம்/ தடுப்புப்பட்டியல் மற்றும் முகவர்களின் கல்வித் தகுதிகள் புகார்தாரர்களுக்கு உதவ அல்லது விவகாரங்களைத் தீர்ப்பதற்கான சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில், சாத்தியமான இடங்களில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

# சந்தை அபிவிருத்தி மற்றும் வெளித்தரப்பு உறவுகள் மீளாய்வு

விழிப்புணர்வை உருவாக்கல் என்பது காப்புறுதி கைத்தொழிற்துறையின் வளர்ச்சிக்கும் காப்புறுதிப் பூட்கையாளர்களின் நலன்களின் பாதுகாப்பிற்கும் முக்கிய அம்சமாகக் கருதப்படுகின்றது. தற்போதுள்ள மற்றும் உத்தேச காப்புறுதிப்பூட்கையாளர்கள் காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் பிரதான பங்குதாரர்களாவர், அதனால் அவர்கள் காப்புறுதி ஒப்பந்தத்திற்குள் நுழையும் போது, அவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காகவும், தகவலறிந்த முடிவெடுக்கும் நிலையில் இருக்கவும், அறிவாற்றலுடன் வலுவூட்டப்படுதல் வேண்டும்.

2021 கோவிட் 19 வைரஸின் பரவல் காரணமாக திட்டமிடப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் / செயற்பாடுகளை நடாத்துவதற்கு 2021ஆம் ஆண்டு சவாலான ஆண்டாக அமைந்திருந்தது. அதனால், 2021ஆம் ஆண்டில், ஆணைக்குழு சந்தை அபிவிருத்தி மற்றும் வெளிவாரி தொடர்புகள் நடவடிக்கைகளுக்கு அச்சடித்த, மின்னிலத்திரனியல் மற்றும் சமூக வலைத்தளம் போன்ற ஊடகங்கள் ஊடாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துவதில் தன் கவனத்தைக் கொண்டிருந்தது ஆணைக்குழு காப்புறுதிக் காப்பீடு தொடர்பான உரிமைகள், காப்புறுதியின் முக்கியத்துவம், காப்புறுதி கைத்தொழிற்துறை மற்றும் அதன் தற்போதைய அபிவிருத்திகள், பொருத்தமான காப்புறுதிப் பண்டங்களைத் தேர்ந்தெடுத்தல், தற்போதுள்ள காப்புறுதிப் பூட்கையாளர்களின் குறை தீர்க்கும் வழிமுறைகள் மீதான அறிவினை மேம்படுத்துவதன் ஊடாக தற்போதைய மற்றும் உத்தேச பூட்கையாளர்களின் விருப்பத்தைப் பாதுகாப்பதற்காக இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. இந்த நோக்கத்தைத் தொடர, இலக்கு பார்வையாளர்களை அடைவதற்கு ஆணைக்குழு பல்வேறு தகவல் தொடர்பு ஊடகங்களைப் பயன்படுத்தியது. மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் பயன்படுத்தப்பட்ட தகவல் தொடர்பு ஊடகங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் விபரங்கள் பின்வருமாறு:

### அச்சு மற்றும் மின்னிலத்திரனியல் ஊடகத்தின் ஊடாக தகவல்களைப் பரப்புதல்

#### அச்சு ஊடகம்

மீளாய்வின் கீழ் உள்ள காலகட்டத்தில் பல்வேறுபட்ட விளம்பரங்கள் மற்றும் ஊடக வெளியீடுகளை ஆணைக்குழு வெளியிட்டது.

#### ஊடக விளம்பரங்கள்

மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக "ஆயுள் காப்புறுதி தொடர்பாக நீங்கள் அறிந்துள்ளீர்களா", "சுகாதாரக் காப்புறுதி தொடர்பாக நீங்கள் அறிந்துள்ளீர்களா", "மோட்டார் வாகன காப்புறுதியை சிறந்த விளக்கத்துடன் பெற்றுக்கொள்ளுங்கள்" மற்றும் "பதிவு செய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள், காப்புறுதித் தரகர் கம்பனிகள் மற்றும் நட்ட சீராக்கலாளர்கள்" போன்ற விளம்பரங்கள் 2021ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

#### ஊடக வெளியீடுகள்

இந்த வருடம் கீழ்வரும் செய்தி வெளியீடுகள் வெளியிடப்பட்டது.

- காப்புறுதி கைத்தொழிற்துறை செயற்பாடுகள் 03ஆம் காலாண்டு 2020
- காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் 20ஆம் ஆண்டினை அடைந்தது.
- காப்புறுதி கைத்தொழிற்துறை செயற்பாடுகள் - 2020
- காப்புறுதி கைத்தொழிற்துறை செயற்பாடுகள் 01ஆம் காலாண்டு 2021
- காப்புறுதி கைத்தொழிற்துறை செயற்பாடுகள் 2021 முதல் அரையாண்டு

#### மின்னிலத்திரனியல் ஊடகம்

#### வானொலி நிகழ்ச்சிகள்

இவ்வருடம் இரண்டு வானொலி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டது. இலங்கை வானொலிக் கூட்டுத்தாபனத்தின் சிட்டி சனலின் ஊடாக சிங்கள மொழியில் காப்புறுதி தொடர்பாகவும், காப்புறுதிப்பூட்கையாளர்களின் உரிமை தொடர்பாகவும் பதிவுசெய்யப்பட்ட குறுஞ்செய்திகள் ஒலிபரப்பப்பட்டது. இரண்டாவது நிகழ்ச்சியாக இலங்கை வானொலிக் கூட்டுத்தாபனத்தின் உள்ளுர் சேவையில் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.

- 01 நேரடி நிகழ்ச்சி / கலந்துரையாடல் 2021
- 02 மாதாந்த விழிப்புணர்வு விளம்பரப் பிரசாரம்

### டிஜிடல் ஊடகம் ஊடான விழிப்புணர்வு

#### சமூக ஊடகம்

காப்புறுதி தொடர்பான முக்கிய விடயங்கள் தொடர்பாகவும் காப்பறுதிப் பூட்கையாளரின் உரிமைகள் தொடர்பாகவும் அதனுடைய சமூக ஊடகத்தின் ஊடாக விழிப்புணர்வுகளை ஆணைக்குழு உருவாக்கியது. முக்கியமான உள்ளடக்கங்களை தொடர்ச்சியாக சேர்ப்பதன் விளைவாக LinkedIn மற்றும் Facebook பக்கங்களைப் பின்தொடர்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் செயற்பாடுகள் பற்றிய செய்தி வெளியீடுகள், ஊடக சந்திப்புகள் மற்றும் தேசிய காப்புறுதி நாள்/ மாதம் தொடர்பான செய்திகள் என்பன உள்ளடக்கத்தில் சிலவாகும்.

#### இணையத்தைப் புதுப்பித்தல்

ஆணைக்குழு, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் தற்போதைய இணையப்பக்கத்தை மீளாய்வு செய்ததுடன் ஈ அதனை மேலும் தகவல் பெறும் வகையிலும் பயன்பெறுனர்கள் விரும்பும் வகையிலும் மாற்றியமைக்க பரிந்துரை செய்தது. 20ஆம் ஆண்டு கொண்டாட்டதுடன் 2021 மார்ச் மாதத்தில் புதிய வடிவ வெப்தளம் அறிமுகப்படுத்தப்பட்டது.

#### ஈ - செய்தித்தாள்

காப்புறுதி, காப்புறுதிப் பூட்கையாளரின் உரிமைகள், காப்புறுதி கைத்தொழிற்துறையின் பிரதான பங்குதாரின் பொறுப்புகள், காப்புறுதி கைத்தொழிற்துறையின் புள்ளிவிபரங்கள் போன்ற விபரங்களை உள்ளடக்கி ஈ - செய்தித்தாள்களின் இரண்டு பதிப்புகள் தயாரிக்கப்பட்டது. இரண்டு பதிப்புகளும் 2021ஆம் ஆண்டு 500,000 மின்னஞ்சல்களுக்கு அனுப்பப்பட்டது.

#### குறுஞ்செய்தி ஊடாக விழிப்புணர்வு

"IRCSL"எனும் பெயருடன் காப்புறுதியின் முக்கியத்துவம், ஆயுள் காப்புறுதி, மோட்டார் காப்புறுதி, சுகாதாரக் காப்புறுதி போன்ற செய்திகளை உள்ளடக்கி 12 குறுஞ்செய்திகளை ஆணைக்குழு அனுப்பி குறுஞ்செய்திப் பிரச்சாரத்தை நடாத்தியதுடன் 1500 கைத்தொலைபேசி இலக்கங்களை உள்ளடக்கிய தரவுத்தளத்தையும் உருவாகியது

# சந்தை அபிவிருத்தி மற்றும் வெளித்தரப்பு உறவுகள் மீளாய்வு

**ADB TA - 9213 SRI: மூலதன சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (CMDP) - காப்புறுதி கல்வி ஆக்கக்கூறு**

**காப்புறுதி அறிவினை மேம்படுத்தவதற்காகவும் நுகர்வோர் பாதுகாப்பை உறுதிப்படுத்த தற்போதுள்ள இணையத்தளத்தை பலப்படுத்தல் மற்றும் யூடியூப் இற்கு இணைப்பதன் ஊடாக தகவல் பரிமாற்றத் திட்டத்தை விரிபடுத்தல**

இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவின் வகிபாகம், சுகாதாரக் காப்புறுதி, ஆயுள் காப்புறுதி, மோட்டார் காப்புறுதி, ஆதனக் காப்புறுதி மற்றும் பயணக் காப்புறுதி தொடர்பான செய்திகளை உள்ளடக்கி 06 வீடியோக்கள் பதிவேற்றம் செய்யப்பட்டது.

**சந்தைப் பிரிவின் கீழ் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கு காப்புறுதி அறிவினை வழங்குவதற்கு காப்புறுதியாளர்களுக்கு பணிப்புரையை வழங்குதல்.**

நுகர்வோர் கல்வி உபாயமார்க்க விநியோகக் கட்டமைப்பின் கீழ் தேவைப்படுத்தப்படும் வகையில், ஆண்டு முழுவதும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு ஆறு (06) விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்தவும், 2021 இரண்டாம் காலாண்டில் திட்டங்களைத் தொடங்கவும் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவது தொடர்பான அனைத்துப் பின்புல பணிகளும் பூர்த்தியடைந்துள்ளன. எனினும், நாட்டில் காணப்படும் நோய்ப்பரவல் காரணமாக குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சிகள் எதுவும் நடாத்தப்படவில்லை.

**பின் - பாடசாலைக் கல்வி / பயிற்சி நிறுவனங்களின் மாணவர்களுக்கு காப்புறுதி விழிப்புணர்வு நிகழ்சிகளை வழங்குவதற்கு வசதியளித்தல்**

நுகர்வோர் கல்வி உபாயமார்க்க விநியோகக் கட்டமைப்பின் கீழ் தேவைப்படுத்தப்படும் வகையில், 2021இல் தேசிய கல்வி நிறுவனத்துடன் இணைந்து ஆசிரியர்களுக்கும் பயிற்சி ஆசிரியர்களுக்கும் நான்கு (04) விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்த ஆணைக்குழு தீர்மானித்தது. பின்புல பணிகள் அனைத்தும் பூர்த்திசெய்யப்பட்டது. எனினும், நாட்டில் காணப்படும் நோய்ப்பரவல் காரணமாக தேசிய கல்வி நிறுவனத்துடன் உடன்பட்டவாறு குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சிகள் எதுவும் நடாத்தபடவில்லை.

**பவெளியீடுகள் மற்றும் கொண்டு நடாத்தப்பட்ட செயற்பாடுகளின் படம்**

**20வது ஆண்டு நிறைவு கொண்டாட்டத்தின் வெளியீடுகள் மற்றும் செயல்பாடுகளின் படங்கள் - புதுப்பிக்கப்பட்ட இணையத்தளம்,** Facebook & LinkedIn pages and YouTube Channel








**பத்திரிகை வெளியீடுகள் மற்றும் விளம்பரங்கள்**



Daily News

"Education key towards increasing awareness on Insurance Industry"



Daily News

GWP increases by Rs 11,778 mn with 5.99% growth

Performance of the Insurance Industry – 2020






# சந்தை அபிவிருத்தி மற்றும் வெளித்தரப்பு உறவுகள் மீளாய்வு

ஈ - செய்தித்தாள்




**காப்புறுதி கைத்தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதற்கு சந்தை அபிவிருத்தி மற்றும் விதப்புரை வழங்குதல் ஊடாக காப்புறுதி கைத்தொழிற்துறையில் செயலாற்றுகையை உந்தும் பல்வேறு காரணிகளை அடையாளம் காணல்**

### எண்ணக்கரு ஆராய்ச்சி

கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு நம்பிக்கை மட்டம் மீதான ஆய்வினை மேற்கொள்வதற்கான இலக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆணைக்குழு தொழில்நுட்ப உப குழுவின் விதப்புரை மீது கொழும்பு பல்கலைக்கழகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு முன்மொழிவுக்கு அனுமதியை வழங்கியுள்ளது. ஆய்வு 2022ஆம் ஆண்டு நடாத்தப்படும்.

### பிரதான ஆராய்ச்சி

“எண்ணக்கரு”, “பண்ட அபிவிருத்தி” மற்றும் “கோரிக்கையைத் தீர்த்தல்” போன்ற விடயங்கள் தொடர்பாக பாரியளவிலான ஆய்வினை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சி நிறுவனத்திற்கு இது தொடர்பாக குறிப்பு விதிமுறைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. பிரதான ஆய்வின் நோக்கம் முடிவுசெய்யப்பட்டுள்ளதுடன் ஆணைக்குழுவின் தொழில்நுட்ப உப குழுவின் விதப்புரைக்கு அமைவாக இது காப்புறுதிப் பூட்கையாளர்களை மட்டுமே கவனத்தில் கொள்வதுடன், இந்த ஆய்வு 2022இல் நடாத்தப்படும்.

### நாடுகளின் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்துனர்கள் பின்பற்றும் சிறந்த நடைமுறைகளை அடையாளம் காணல

ஆணைக்குழு, உள்;ர் கைத்தொழிற்துறைக்கு ஏனைய காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்துனர்களின் சிறந்த நடைமுறைகளை சேர்த்துக்கொள்ளும் நோக்கத்துடன், காப்புறுதி விளம்பரங்களுக்கு வழிகாட்டுதல்கள் சில தயாரித்துள்ளது. காப்புறுதி விளம்பரங்களை ஒழுங்குமுறைப்படுத்துதல் காப்புறுதியாளர்கள் மற்றும் இடைத்தரகர்கள் (காப்புறுதி கைத்தொழிற்துறை ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பதிவு செய்யப்பட்ட காப்புறுதி தரகர் கம்பனிகள் மற்றும் அனுமதியளிக்கப்பட்ட காப்புறுதி முகவர்கள்) நியாயமான, நேர்மையான மற்றும் வெளிப்படைத்தன்மையுள்ள நடைமுறைகளைப் பின்பற்றுகின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதுடன் பொது மக்களின் நம்பிக்கையைக் குலைக்கும் மற்றும் தேவையற்ற போட்டி நன்மையைத் தவிர்க்கும். குறிப்பிட்ட வழிகாட்டல் 2022இல் அமுல்படுத்தப்படும்.

### நிதியியற் துறை நவீனமயப்படுத்தல் கருத்திட்டம் (FSMP)

சந்தை அபிவிருத்தி மற்றும் வெளிவாரி உறவுகள் பிரிவின் கீழ் ஒதுக்கப்பட்ட ஆக்கக்கூறுகள் தொடர்பான காப்புறுதிக் கணிப்பீடு தொடர்பான பணிகளை ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது

- ஆக்ககூறு # 11 (a) - இறப்பு மற்றும் நோயுள்ள அட்டவணைகளை உருவாக்க தகவல்களை சேகரிக்க மையப்படுத்தப்பட்ட தரவுக் கட்டமைப்பை உருவாக்கல்
- ஆக்ககூறு # 13 – மோட்டார், தீ மற்றும் சுகாதாரக் காப்புறுதி பண்டங்களின் இடைவெளிப் பகுப்பாய்வு அறிக்கைகள் தொடர்பான விதப்புரைகளின் உள்ளடக்கத்தை மீளாய்வு செய்தல் மற்றும் அமுல்படுத்துவதற்கு வசதியளித்தல்.

### தேசிய நிதி சேர்த்தல் உபாயமார்க்கம (NFIS)

நிதியியல் அறிவினை மேம்படுத்துவதன் மீதான தொழிற்பாட்டுக் குழுக் கூட்டங்கள் இரண்டில் ஆணைக்குழுவின் அலுவலர்கள் பங்குபற்றினர். தேசிய நிதி சேகரித்தல் உபாயமார்க்கத்தின் கீழ் சந்தை அபிவிருத்தி மற்றும் வெளிவாரி உறவுகள் பிரிவின் பிரதான இலக்குகள்

- கல்வி பாடவிதானத்தில் மேலும் புத்தாக்க மற்றும் பிரயோக விதத்தில் நிதியியல் கல்வியைக் கூட்டிணைத்தல்
- நிதியியல் கல்வி முன்னெடுப்புக்கு கோட்பாடுகள், வழிகாட்டல்கள் மற்றும் தர நியமங்கள் மீதான வடிவமைப்பை அபிவிருத்தி செய்தல் மற்றும் அமுல்படுத்தல்
- பங்குதாரர்களுடன் ஆலோசனைகளை மேற்கொண்டு, நிதியியல் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு பாதை வரைபடத்தை அபிவிருத்தி செய்தல்.

இலங்கை மத்திய வங்கிக்கு உதவும் இரண்டாம் நிலை அமுலாக்க நிறுவனமாக நிதி கல்வியறிவு முயற்சிகளின் ஒருங்கிணைப்பை மேம்படுத்தும் நோக்கில் ஆணைக்குழு பணிகளை ஆரம்பித்துள்ளது.

### ஏனைய ஈடுபாடுகள்

#### பொதுமக்கள் விசாரணைகளுக்குப் பதிலளித்தல்

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், காப்புறுதி கைத்தொழிற்தொடர்பான தகவல்கள் மற்றும் வழிகாட்டல்களைக் கோரி பொது மக்கள், காப்புறுதி பூட்கை உரிமையாளர்கள் மற்றும் பல்வேறுபட்ட நலன்விரும்பிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற விசாரணைகளுக்குக் கம்பனி பதிலளித்தது.

# நிர்வாக மீளாய்வு

### ஊழியர்கள்

எந்த ஒரு நிறுவனத்தின் வெற்றியும் அதன் நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட மக்களின் திறமையிலேயே பெரும் அளவில் தங்கி இருக்கின்றது. எனவே, சபையின் வெற்றிகரமான உத்திகளுக்கு முதுகெலும்பாக இருப்பது மனித மூலவளம் என நாங்கள் நம்புகின்றோம். உலக வங்கியின் நிதியில் துறை நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ் 2021 ஒக்டோபரில் மனித வள ஆலோசனையாளர் நியமிக்கப்பட்டார

காப்புறுதி வைப்பாளர்கள் மற்றும் உத்தேச காப்புறுதி வைப்பாளர்கள் அனைவரது ஆர்வங்களையும் பாதுகாக்கும் நோக்கத்துடன். இலங்கையின் காப்புறுதி கைத்தொழில் நேர்மையுடன் நடத்தப்படுவதை உறுதி செய்யும் ஒட்டு மொத்த நோக்கத்தை அடைவதற்கு தனது கடமையை நிறைவேற்ற அவசியமான நடவடிக்கைகளை அடையாளம் காணுகின்ற வகையில் தனது நிறுவனக் கட்டமைப்பை ஆணைக்குழு நிறுவியுள்ளது.

தேவைப்படும் தொழில் சார்ந்தவர்களை ஏற்ற நேரத்தில் நியமிப்பதன் ஊடாக, மனித வளத்தை வலுப்படுத்தும் நோக்கத்துடன். மீளாய்வின் கீழ் வரும் ஆண்டின் போது அனேக முக்கியமான முன்னெடுப்புகளை சபை எடுத்தது. இத்தகைய முன்னெடுப்புகளை சந்திப்பதற்காக, மீளாய்வு ஆண்டில் நிரந்தர பதவிகளுக்கு உதவிக் காப்புறுதிக் கணிப்பாளரும் நிறைவேற்றுதர அலுவலரும் நியமிக்கப்பட்டனர். 2021 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு, சபையின் மொத்த பணியாட் தொகுதியினரின் எண்ணிக்கை 49 ஆகும

ஊழியர்களின் கல்வி விபரங்கள் கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது:

| மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை | கல்வி / தொழில்சார் தகைமை கொண்டுள்ள ஊழியர்களின் எண்ணிகை | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பட்டபின் படிப்பு, முதல் பட்டம் மற்றும் தொழில்சார் தகைமைகள் | பட்டபின் படிப்பு, மற்றும் தொழில்சார் தகைமைகள் | பட்டபின் படிப்பு மற்றும் முதல் பட்டத் தகைமைகள் | முதல் பட்டம் மற்றும் தொழில்சார் தகைமைகள் | முதல் பட்டம் | தொழில்சார் தகைமைகள் |
| 49 | 11 | 04 | 06 | 05 | 08 | 03 |

### பயிற்சி

நிறுவனத்தின் இலக்குகளை அடைவதற்கு ஊழியர்கள் அறிவையும் தொழில்சார்ந்த திறனையும் மேம்படுத்திக் கொள்வதற்கு பயிற்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது சபையின் பூட்கையாகும். இந்த வருடம் கோவிட் 19 நோய்பரவல் காரணமாக, ஒன்லைன் ஊடான பயிற்சி சந்தர்ப்பங்கள் மட்டுமே ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது.

### ஊழியர்களுக்கான நலன்புரி நடவடிக்கைகள்

நிறுவனத்தின் பணியாளர்களின் நலன்களில் அக்கறை காட்டுவது, அவர்கள் மத்தியில் ஊக்குவிப்பை உருவாக்குவதிலும் அவர்களின் நேர்மையை அதிகரிப்பதிலும் முக்கிய காரணியாக செயற்படுகின்றது. எனவே, உள்ளேயும், வெளியிலும் கிடைக்கும் மருத்துவத் திட்டங்கள், சுய விபத்து காப்புறுதிப் பூட்கை, வாகனம் மற்றும் துயரிடர் கடன் திட்டங்கள், பண்டிகை முற்பணக் கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக கவர்ச்சிகரமான நலன்புரி பொதிகள் ஆகியவற்றை சபை வழங்குகின்றது. மேலும் கோவிட் - 19 நோய்ப்பரவலில் இருந்து ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் உடல் நலத்தைப் பாதுகாப்பதற்காக ஆணைக்குழு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

# நிதியியல் மீளாய்வு

## பூட்கையாளர் பாதுகாப்பு நிதியம (PPF)


பூட்கையாளர் பாதுகாப்பு நிதியத்திற்காக சேகரிக்கப்பட்ட செஸ் 2021இல் வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டதை மொத்த வட்டி வருமானத்தைக் குறைத்த போதிலும் முகம்கொடுக்கும் வகையில் அதிகரித்த வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில் விவேகமான முறையில் முதலீடு செய்யப்பட்டது. வரைபு 1 2017 தொடக்கம் 2021ஆம் ஆண்டு வரை செஸ் சேகரிப்பு மற்றும் முதலீட்டு வருமானம் என்பவற்றைக் காட்டுகின்றது. கோவிட் - 19 நோய்ப்பரவலின் மத்தியிலும் செஸ் வருமானம் சற்று அதிகரித்துள்ளது

கடந்த ஐந்து ஆண்டுகளில் செஸ் வருமானம் அதிகரித்துள்ளதை வரைபு 1 காட்டுகின்றது. சாதகமான சந்தை நிலைமை காரணமாக 2017 இருந்து 2019 வரை குறிப்பிடத்தக்க முதலீட்டு வருமான அதிகரிப்பைக் காட்டுகின்றது, எனினும் 2021 ஆம் ஆண்டின் பெரும் பகுதியில் குறைந்த பட்ச வட்டி வீதங்கள் காணப்பட்டதால் 2021 ஆண்டு முழுவதிலும் குறைந்தளவு வருமானமே காணப்பட்டது.

பூட்கையாளர் பாதுகாப்பு நிதியத்தின் பெறுமதி கடந்த ஐந்து ஆண்டுகளில் அதிகரித்துள்ளதுடன், அதனை வரைபு 2 காட்டுகின்றது. நிதியத்தின் நிலையான வளர்ச்சிக்கு நீண்ட கால முதலீட்டுக்கு உயர் வட்டி வீதங்களுடன் இணைந்து 2020 வரை ஆணைக்குழுவின் தேறிய மிகைப் பரிமாற்றத்தின் பங்களிப்பு காரணமாகியது.

**விளக்கப்படம் 1**


2017 - 2021 வரை செஸ் வருமானம் மற்றும் முதலீட்டு வருமானம்




| | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|
| செஸ் வருமானம் (இ.ரூ.மில்) | 418 | 479 | 493 | 506 | 546 |
| முதலீட்டு வருமானம் (இ.ரூ.மில்) | 372 | 455 | 574 | 622 | 516 |

**விளக்கப்படம் 2**

2017 - 2021 வரையான காலப்பகுதியில் பூட்கையாளர் பாதுகாப்பு நிதியத்தின் பெறுமதிகள்





| | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|
| நிதிப் பெறுமதி (இ.ரூ.மில்) | 4,110 | 5,043 | 6,253 | 7,469 | 8,444 |

கீழே 31 டிசம்பர் 2021 அன்று நிதியத்தின் சொத்துக்களின் கலவை காட்டப்பட்டுள்ளது

**விளக்கப்படம் 3**

31 டிசம்பர் 2021 அன்று பூட்கையாளர் பாதுகாப்பு நிதியத்தின் சொத்துக் கலவை



# நிதியியல் மீளாய்வு

## ஆணைக்குழுவின் வருமானம்

ஆணைக்குழு கீழ்வரும் மூலங்களில் இருந்து வருமானங்களைப் பெற்றுக்கொள்கின்றது.:

- காப்புறுதியாளர்கள், காப்புறுதி தரகர் கம்பனிகள் மற்றும் நட்ட சீராக்கலாளர்களைப் பதிவு செய்தல் கட்டணம்
- காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து அறவிடப்படும் வருடாந்தக் கட்டணம்
- காப்புறுதி தரகர் கம்பனிகளின் பதிவினைப் புதுப்பித்தலுக்கான வருடாந்தக் கட்டணம்
- மிகை நிதி முதலீடு செய்வதிலிருந்தான வட்டி வருமானம்
- நிதியில் துறை நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்தில் இருந்தான வருமானம்

கீழே உள்ள விளக்கப்படம் 4 2017 தொடக்கம் 2021 வரையிலான காலப்பகுதிக்குப் பெறப்பட்ட மொத்த வருமானத்தை வெளிப்படுத்துகின்றது.1.


## ஆணைக்குழுவின் செலவுகள்

ஊழியர் செலவு மற்றும் தொழிற்பாட்டுச் செலவு அதிகரித்தமையினால் மொத்த செலவு 12% வீதத்தினால் அதிகரித்தது. புதிய ஊழியர் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு காரணமாக ஊழியர் செலவு அதிகரித்ததுடன் மீள்மதிப்பீட்டைத் தொடர்ந்து தேய்மானத்தின் காரணமாக தொழிற்பாட்டு செலவு அதிகரித்தது.

கீழே உள்ள விளக்கப்படம் 5 2017 தொடக்கம் 2021 வரையிலான காலப்பகுதிக்கான ஆணைக்குழுவின் மொத்தச் செலவை வெளிப்படுத்துகின்றது.

**விளக்கப்படம் 4**


2017 - 2021 காலப்குதிக்கான ஆணைக்குழுவின் வருமானம்




| | | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|---|
| ■ | வருடாந்தக் கட்டணங்கள் (இ.ரூ.மில்) | 142 | 168 | 224 | 245 | 258 |
| ■ | பதிவு மற்றும் புதுப்பித்தல் கட்டணங்கள் (இ.ரூ.மில்) | 9 | 8 | 14 | 14 | 15 |
| ■ | ஏனைய வருமானம் (இ.ரூ.மில்) | 3 | 8 | 16 | 13 | 13 |
| ■ | மானியங்களின் அடையாளம் காணல் (இ.ரூ.மில்) | 1 | 2 | 84 | 16 | 0 |
| ■ | மொத்த வருமானம் (இ.ரூ.மில்) | 155 | 186 | 339 | 288 | 286 |

**விளக்கப்படம் 5**

2017 - 2021 வரையான காலப்பகுதிக்குரிய ஆணைக்குழுவின் மொத்தச் செலவுகள்




| | | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|---|
| ■ | மொத்தச் செலவு (இ.ரூ.மில்) | 125 | 143 | 188 | 178 | 200 |



# நிதி தகவல்கள்

# கணக்காளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. | INS/A/02/IRCSL/AR/2021 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | | දිනය / திகதி / Date | 30 November 2022 |

தலைவர்

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் 2021 டிசம்பர் 31 திகதியில் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்று தொடர்பான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆவது பிரிவுக்கமைய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.

## 1. நிதி கூற்று

### 1.1. உள்ளவாறான விளக்க கருத்து

இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் 2020 டிசம்பர் 31 திகதிய நிதிநிலை கூற்று மற்றும் அத்திகதியில் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதி செயலாற்றுகை கூற்று, உரித்து மாற்றமடையும் கூற்று மற்றும் அத்திகதியில் நிறைவடையும் ஆண்டுக்கான நிதிப்பாய்ச்சல் கூற்று, நிதி கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், சாராம்சங்கங்கள் முக்கியமான கணக்கீட்டு தராதரங்களை உள்ளடக்கிய 2020 டிசம்பர் 31 நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்று இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154 (1) பிரிவுடன் இணைத்து வாசிக்க வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971ஆம் ஆண்டு 38ஆம் இலக்க நிதி சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய எனது ஆணையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரைக்கமைய எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் உள்ளவாறான விளக்க கருத்துக்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர, நிதியத்தின் 2021 டிசம்பர் 31 திகதிய நிதிநிலை மற்றும் அத்திகதியில் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதி செயலாற்றுகை மற்றும் நிதிப்பாய்ச்சல் இலங்கை அரச துறை கணக்கீட்டு தராதரங்களுக்கு அமைவாக உண்மையான, நியாயமான நிலையை வெளிப்படுத்துகிறது என்பது எனது கருத்தாகும்.

### 1.2 உள்ளவாறான விளக்க கருத்துக்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு தராதரங்களுக்கு (இ.க.த) அமைவாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தராதரங்களின் கீழ் எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிகூற்று கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துக்கான அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெறப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதுமானதும், பொருத்தமானதுமாகும் என நம்புகிறேன்.

### 1.3 ஆணைக்குழுவின் 2020ஆம் ஆண்டு ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

ஏனைய தகவல்கள் ஆணைக்குழுவின் 2021 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களை உள்ளடக்கியுள்ளது ஆனால் நிதியியல் கூற்றுகளையும் கணக்காய்வாளர் நாயகத்தின் இந்த அறிக்கையின் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் என என்னால் கருதப்பட்ட, எனது கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையையும் உள்ளடக்கவில்லை. முகாமைத்துவம் ஏனைய தகவல்களுக்குப் பொறுப்பாகும்.

# கணக்காளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

நிதியியல் கூற்றுகள் மீதான எனது கருத்துகள் ஏனைய தகவல்களை உள்ளடக்காது மற்றும் அதுதொடர்பாக எவ்வித வடிவத்திலும் உத்தரவாதத்தையும் நான் வெளிப்படுத்தமாட்டேன்.

நிதியியல் கூற்றுகளின் எனது கணக்காய்வுடன் தொடர்புடைய, மேலே அடையாளம் காணப்பட்ட பிற தகவல்கள் கிடைக்கும் போது அவற்றைப் படிப்பதே, அவ்வாறு செய்யும் போது மற்றத் தகவல்கள் நிதிநிலைக் கூற்று அல்லது கணக்காய்வில் பெறப்பட்ட எனது அறிவு அல்லது வேறுவிதமாக முரணானதாக உள்ளதா என்பதைக் கருத்தில் கொள்ளவும் அல்லது பொருள் தவறாகக் கூறப்படுகின்றது என வெளிப்பட்டால் அதனை அறிதலே எனது பொறுப்பாகும்,

ஆணைக்குழுவின் 2021 ஆண்டறிக்கையை நான் வாசிக்கும் போது, அதில் பொருள் தவறான அறிக்கைகள் உள்ளன என்று நான் முடிவு செய்தால், நான் திருத்தம் செய்ய ஆளுகைக்கு பொறுப்பானவர்களுக்கு அந்த விடயத்தைத் தெரிவிக்க வேண்டும். மேலும் பொருள் திருத்தப்படாவிட்டால் தவறான அறிக்கைகள் உள்ளன, அவை உறுப்புரை 154 (6) இல் உள்ள விதிகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கையில் சேர்க்கப்படும் அரசியலமைப்பின் சரியான நேரத்தில் தாக்கல் செய்யப்படும்.

### 1.4 நிர்வாக தரப்பினரின் பொறுப்புகள் மற்றும் நிதிக்கூற்றுக்கான ஆளுகைக்குப் பொறுப்பானவர்கள்

இந்த நிதிக்கூற்று இலங்கை அரச துறை கணக்கீட்டு தராதரங்களுக்கு அமைய தயாரிக்கப்படுதல், நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி, தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய குறிப்பிடத்தக்களவு பொய்யான கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றை தயாரிப்பதற்கு தேவையான உள்ளக நிர்வாக தீர்மானங்களை மேற்கொள்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றை தயாரிக்கும் போது, நிதியத்தை தொடர்ச்சியாக பேணிச்செல்லும் இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும் என்பதுடன், நிதியத்தை குலைப்பதற்கு முகாமைத்துவம் கருதினாலோ அல்லது வேறு மாற்று தெரிவகள் இல்லாவிட்டால் செயற்பாடுகளை நிறுத்த நடவடிக்கை எடுத்தால் அன்றி தொடர்ச்சியாக இயக்கும் அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் ஆணைக்குழுவை தொடர்ச்சியாக இயக்குவதற்கான விடயங்கள் தொடர்பில் வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயற்பாடுகள் தொடர்பான பொறுப்பு, நிர்வகிக்கும் தரப்பினரால் வகிக்கப்படுகிறது.

2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) உப பிரிவுக்கமைய நிதியத்தின் வருடாந்த மற்றும் சமகால நிதிக்கூற்றை தயாரிக்க கூடிவாறு தமது வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் உரியவாறான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேண வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்று கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு.

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்று மோசடி, தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய குறிப்பிடத்தக்களவு பொய்யான கூற்றுக்கள் அற்றதென நியாயமான சான்று வழங்குதல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குதல் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுபடுத்தல், உயர் தரத்தில் சான்றுபடுத்திய போதிலும், இலங்கை கணக்காய்வு தராதரங்களுக்கு அமைய கணக்காய்வை மேற்கொள்ளும் போது அது எப்போதும் குறிப்பிடத்தக்களவு கூறப்படாதவைகளை வெளிப்படுத்தியதாக சான்றுபடுத்தப்படவில்லை. மோசடி, தவறுகளின் தனியான அல்லது கூட்டான தாக்கம் காரணமாக குறிப்பிடத்தக்களவு வெளிப்படுத்தப்படாதவை இருக்கலாம் என்பதுடன், இந்த நிதிக்கூற்றை அடிப்படையாக கொண்டு பரிசோதித்தவர்களால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பில் தாக்கம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

என்னால் தொழில்வாண்மையான தீர்ப்பு மற்றும் தொழில்வாண்மையான சந்தேகத்துடன் இலங்கை கணக்காய்வு தராதரங்களுக்கு அமை கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- மோசடிகள், தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுகளில் ஏற்படக்கூடிய குறிப்பிடத்தக்களவு பொய்யான கூற்றுக்களின் ஆபத்தை இனங்காணும் போதும், மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்தக்கு ஏற்றவாறு பொருத்தமான கணக்காய்வு ஒழுங்குவிதிகளை

# கணக்காளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

திட்டமிடுவதன் மூலம் மோசடிகள், தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் தவிர்ப்பதற்கு, போதுமான மற்றும் பொருத்தமான சான்றுகளை பெறுதல் எனது கருத்துக்கு அடிப்படையானதாகும். குறிப்பிடத்த பொய்யான கூற்றுக்களால் ஏற்படும் தாக்கங்களை விடவும் சோடிகளால் ஏற்படும் தாக்கம் பலமானது. போலி ஆவணங்கள் தயாரித்தல், வேண்டுமென்றே தவிறவிடுதல் மற்றும் உள்ளக கட்டப்பாட்டின் தவறவிடுதல்கள் மோசடிகள் ஏற்பட காரணமாகும்.

- சந்தர்ப்பத்தக்கு ஏற்றவாறு பொருத்தமான கணக்காய்வு ஒழுங்குவிதிகளை திட்டமிடுவதற்காக நிதியத்தின் உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் தெளிவடைந்த போதிலும், உள்ளக கட்டுப்பாட்டின் பயன்மிகு தன்மை தொடர்பில் கருத்து தெரிவிக்கப்படவில்லை.
- பாவிக்கப்பட்ட கணக்கீட்டு தராதரங்கள், கணக்கிடப்பட்ட செலவு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளை வெளிப்படுத்தல்கள் தராதரம் பாராட்டப்படுகிறது.
- சம்பவங்கள் அல்லது நிலமைகள் காரணமாக நிதியத்தை தொடர்ச்சியாக பேணுதல் தொடர்பில் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக தொடர்ச்சியான இருப்பு தொடர்பான அடிப்படை பாவிக்கப்படும் தொடர்புடைய தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதுமானளவு நிச்சயமற்ற தன்மை காணப்படுவதாக நான் தீர்மானித்தால் நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், அந்த வெளிப்படுத்தல் போதுமானதல்ல எனின், எனது கருத்து கணக்காய்வு செய்யப்பட வேண்டும். இருந்தபோதிலும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலமைகள் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்பு முடிவடையலாம்.
- வெளிப்படுத்தலை உள்ளடக்கிய நிதிக்கூற்றுகளை சமர்ப்பித்தல், விளக்கம் மற்றும் உள்ளடக்கம் மதிப்பீடு செய்யப்பட்டது. அதற்கு அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதி கூற்றுக்களில் உள்ளடக்கியது பாராட்டப்படுகிறது. எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டபிடிப்புகள்,பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிர்வாக தரப்பினர் தெளிவுபடுத்தப்பட்டனர்.

**2. ஏனைய சட்டபூர்வ மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2.1 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

2.1.1 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய கணக்காய்வுக்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெறப்பட்டன. எனது பரிசீலனையில் தெரியவருவதற்கு அமைய உரிய நிதி அறிக்கை நிறுவனத்தால் பேணப்பட்டு வந்துள்ளது.

2.1.2 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (III) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய நிதியத்தால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்று கடந்த ஆண்டுக்கு ஏற்புடையதாகிறது.

2.1.3 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (IV) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட விதந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பெறப்பட்ட சாட்சிகள் அடிப்படையிலும், போதுமானளவு விடயங்களுக்கு வரையறுத்து பின்வரும் கூற்றுக்களை செய்வதற்கு போதுமான எதுவும் எனது கவனத்துக்கு உட்படவில்லை.

2.2.1 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய நிதிய கட்டுப்பாட்டு சபையின் எவராவது உறுப்பினருக்கு நிதியம் தொடர்பில் நேரடியாகவோ, ஏனைய வழிகளிலோ சாதாரண வியாபார நிலமைக்கு புறம்பான தொடர்புகள் இருப்பதாகவும்,

# கணக்காளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| **நலனின் தன்மை** | **கருத்து** |
|---|---|
| மருத்துவக் காப்புறுதிக் காப்பீடு | இரு பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் காப்புறுதிக் காப்பீட்டினைப் பெற்றுக்கொண்டுள்ளனர். இந்தக் காப்பீட்டுக்காக ஆணைக்குழுவினால் 2021ஆம் ஆண்டிற்குரிய தவணைக்கட்டணமாக ரூபா 111,830 செலுத்தப்பட்டுள்ளது. |

2.2.2 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய ஏதாவது தொடர்புடைய எழுத்து மூல சட்டத்துக்கு அல்லது நிறுவனத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட வேறு பொதுவான அல்லது விஷேட ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதல்லாத வகையில் செயற்பட்டுள்ளதாக,

| **சட்ட / பணிப்புரை உசாவல்** | **விபரம்** |
|---|---|
| (அ) ஜனாதிபதி செயலாளரின் 10 டிசம்பர் 2020 திகதியிடப்பட்ட சுற்றுநிருப இலக்கம் PS/GPA/Circular/36/2020, 04 டிசம்பர் 20 திகதியிடப்பட்ட வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருப இலக்கம் 07/2019, 17 ஜுன் 2019 திகதியிடப்பட்ட வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருபம் 4/2019. | சுற்றுநிருப அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, உத்தியோகபூர்வ.'. கடமை சார்ந்த பங்கேற்பு அத்தியாவசியமானதாக இருந்தாலன்றி, அதிகாரிகள் உள்;ர் நிதியைச் செலவழித்து கருத்தரங்குகள் / பயிற்சிப் பட்டறைகளில் போற்றவற்றில் பங்குபற்றல் கூடாது. எனினும் ஆணைக்குழு, அதன் 20வது வருடாந்த நிகழ்வினை 29 மார்ச் 2021ஆம் திகதி ரூபா 411,454 செலவில் ஹொட்டலில் நடாத்தியது. ஆணைக்குழுவின் 20வது வருடாந்த கொண்டாட்டத்திற்கு ஆணைக்குழுவின் நிதியில் இருந்து ரூபா 952,600 உறற்றப்பட்டு 16 ஊழிய அங்கத்தவர்களுக்கு தங்க நாணயம் வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) 27 ஜனவரி 2020 திகதியிடப்பட்ட பொது தொழில்முயற்சி சுற்றுநிருப இலக்கம் PED 01/2020 யின் பிரிவு 1. 3 | சுற்றறிக்கையின் படி, மாதத்தில் நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொள்ளாது, ஒரு மாதத்திற் பங்களிப்பு கொடுப்பனவாக செய்யக்கூடிய உச்சளவான தொகை ரூபா 25,000 ஆகும். எனினும் 2021 ஒக்டோபரில் ஐந்து (05) ஆணைக்குழு அங்கத்தவர்களுக்கு மேலதிகமாக ரூபா 245,460 கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன் உப கூட்டங்களில் பங்கேற்றமைக்காக 2021 டிசம்பரில் நான்கு (04) அங்கத்தவர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. |
| (இ) 02 ஜுன் 2003ஆம் திகதி வெளியடப்பட்ட சிறந்த ஆளுகைக்காக அறிமுகப்படுத்தப்பட்ட வழிகாட்டி சுற்றுநிருபம் PED/12இன் 9.14.2ஆம் பந்தி. | வழிகாட்டியின் படி, தயாரிக்கப்பட்ட கையேடுகள் சபையினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும், அதன் பின்னர் திறைசேரி செயலாளரின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்வதற்கு பொது தொழில்முயற்சி திணைக்களம், பொது திறைசேரி என்பவற்றின் ஊடாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். எனினும், ஆணைக்குழுவினால் அவ்வாறு தயாரிக்கப்பட்ட கையேட்டிற்கு அத்தகைய அங்கீகாரம் பெறப்படவில்லை. எனவே தாபனக் கோவை சட்டத்தின் ஏற்பாடுகளை இதற்கு பிரயோகிக்க முடியும். எனினும், அங்கீகரிக்கப்படாத கையேட்டின் படி, ஆணைக்குழு 31 டிசம்பர் பொது நிர்வாக சுற்றநிருப இலக்கம் 14/99த்திற்கு அமைவாக இ.ரூபா 250,000 உச்சளவை விஞ்சி ரூபா 325,000 தொடக்கம் ரூபா 500,000 வரை இடர் கடன் ஆணைக்குழுவினால் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, வழங்கப்படும் இடர்கடனுக்கு மிகையாக ரூபா 662,500. செலுத்தப்பட்டுள்ளது. |

# கணக்காளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| | |
|---|---|
| (ஈ) தாபனக் கோவையுயில் - பிரிவின் அத்தியாயம் XXIV | அத்துடன், நிர்வாகப் பிரிவு ஊழியர்களுக்கு வாகனங்கள் வாங்குவதற்கு வங்கிகள் மூலம் கடன் வாங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும், வாகனக் கடன் தொகையாக ரூபா 1,200,000 மூன்று ஊழியர்களுக்கு ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து இவ்வருடம் வழங்கப்பட்டுள்ளது. |
| (உ) 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசியக கணக்காய்வுச் சட்டத்தின் உறுப்புரை 40(3) மற்றும் நிதிப் பிரமாணம் 134(1). | குறிப்பிட்ட விதிகளின் படி, உள்ளக கணக்காய்வாளர்கள் நேரடியாக தலைவர் அல்லது ஆளுகை குழுவிடம் அறிக்கையிடுதல் வேண்டும். எனினும் பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்க பொறுப்புகளைப் புகாரளிப்பதற்கான விதிமுறைகள் குறிப்பு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. மேற்கூறிய விதிகளுக்கு மாறாக 2019ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் 06 ஜுலை 2021ஆம் அன்ற பணிப்பாளர் நாயகத்திடம் கையளிக்கப்பட்டது. |
| (ஏ) 18 ஜுலை 2018ஆம் திகதியிடப்பட்ட முகாமைத்துவ சேவை சுற்றுநிரூப இலக்கம். 03/2018 | பொது திறைசேரியின் முன் அனுமதியின்றி ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்வதையும் சம்பளம் மற்றும் பணியாளர்களை அதிகரிப்பதையும் அனைத்து அமைச்சுகளும் ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரரிகளும் தவிர்க்க வேண்டும் என சுற்றறிக்கை அறிவுறுத்தியுள்ளது. இருப்பினும் ஒரு (01) பணிப்பாளர், பதின்மூன்று (13) முகாமையாளர் / உதவி முகாமையாளர் மற்றும் ஒரு (01) செயலாளர் பதவிகள் பொது திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்படவில்லை. |
| (எ) 16 நவம்பர் 2021 திகதியிடப்பட்ட அரச தொழில்முயற்சிகள் சுற்றுநிரூப இலக்கம் 01/2021. | கணக்காய்வுக் குழுவின் அழைப்பாளர் பணிப்பாளர் - நிதி மற்றும் நிர்வாகம் ஆவர். இந்த சுற்றறிக்கையின் கீழ் வெளியிடப்பட்ட அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கான கூட்டிணைந்த ஆளுகை வழிகாட்டுதலின் 4.2 இன் கீழ் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக, கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதிநிதிகள் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களுக்கு தொடர்ந்து அழைக்கப்படவில்லை. |

# கணக்காளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

2.2.3 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய ஆணைக்குழுவின் அதிகாரம், பணிகள் மற்றும் கருமங்களுக்கு அமைவாக இல்லாத வகையில் செயற்படுத்தப்பட்டுள்ளதாக,

(அ) 2010ஆம் ஆண்டிலிருந்து ஒரு செயலாற்றுகை ஊக்கத்தொகை பொதுத் திறைசேரியின் அனுமதியின்றி செலுத்தப்பட்டது.

(ஆ) இந்தத் திட்டம், ஒரு மாத அடிப்படை சம்பளத்தின் ஊக்குவிப்பு கொடுப்பனவு அடிப்படையில் வழங்கப்பட்ட தொகை 2019ஆம் ஆண்டிலிருந்து திறைசேரியின் அனுமதியின்றி ஒன்றரை (1 ½) மாதச் சம்பளமாக மாற்றப்பட்டுள்ளது. இதன் காரணமாக, மொத்த ஊக்கத்தொகை ரூபா 4,605,381, இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டைவிட 105மூ வீதம் அதிகமாகும். அதனால், உண்மையான செயலாற்றுகை மதிப்பீடு ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

(இ) 02 ஜுன் 2003 திகதியிடப்பட்ட அரச தொழில்முயற்சிகள் சுற்றுநிருப இலக்கம் PED/12 ற்கு அமைவாக, வழிகாட்டியின் படி, தயாரிக்கப்பட்ட கையேடுகள் சபையினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும், அதன் பின்னர் திறைசேரி செயலாளரின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்வதற்கு பொது தொழில்முயற்சி திணைக்களம், பொது திறைசேரி என்பவற்றின் ஊடாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். எனினும், ஆணைக்குழுவினால் அவ்வாறு தயாரிக்கப்பட்ட கையேட்டிற்கு அத்தகைய அங்கீகாரம் பெறப்படவில்லை. அதனால், விடுமுறையை காசாக்கும் கொடுப்பனவான ரூபா 1,639,753 உரிய அனுமதியின்றி வழங்கப்பட்டள்ளது அவதானிக்கப்பட்டது.

2.2.4 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய கீழே குறிப்பிடப்படும் அவதானிப்புகள் தவிர ஆணைக்குழுவின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் உற்பத்தித்திறனாக காலப்பகுதியில் சட்ட விதிகளுக்கு அமைவாக பெறுகை செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு பாவிக்கப்பட்டிருக்கவில்லை என,

(அ) ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் வெளியகக் கட்டடத்தில் மேற்கொள்ளப்பட்டன, மேலும் சிக்கனமான இடமொன்று தேடப்படாமல், 2021ஆம் ஆண்டுக்கு ரூபா 48,109,101 குத்தகை வாடகையாக கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆணைக்குழு ஒரு நிறுவனமாக, இது 2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதி கைத்தொழிற்துறை ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் வகிபாகத்தை செயற்படுத்துவதற்கு பொது மக்களுடன் நெருக்கமாக பணியாற்றுவதற்கு ஏற்ற வகையில் இருத்தல் வேண்டும். எனினும், தற்போதை அதன் இருப்பிடம், கலாச்சாரம் மற்றும் அதன் கதவுகள் பொது மக்கள் அவர்களை இலகுவாக அணுகுவதற்கு கடினமான வகையில் கடுமையான பாதுகாப்பின் கீழ் உள்ளது. மேலும், ஆணைக்குழுவின் வளாகத்தில் நுழையும் பொது மக்களுக்கு உதவுவதற்கு முன் கருமபீடத்தில் எந்தவொரு அலுவலரும் இல்லை என்பது பல சந்தர்ப்பங்களில் அவதானிக்கப்பட்டது. மேலும் இணையத்தளத்தில் உள்ள அனைத்து விபரங்களும் ஆங்கில மொழியில் மட்டும் உள்ளது அவதானிக்கப்ட்டது.

(இ) **பணிப்பாளர் சபைக்கூட்ட முகாமைத்துவ தீர்வின் பெறுகை பணிப்பாளர் சபைக்கூட்ட முகாமைத்துவ தீர்வின் பெறுகை**

(i) 2019ஆம் ஆண்டில் ஒரு பணிப்பாளர் சபைக்கூட்டத்தில் உரிய முறையில் செலவு-நன்மை பகுப்பாய்வு ஏதுமின்றி ரூபா 1,013,000 மற்றும் ரூபா 923,000 விற்கு முறையே மென்பொருள் மற்றும் ஆண்டு சந்தாவிற்கான கொள்வனவுத் தீர்வு எடுக்கப்பட்டுள்ளது. கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட ஆகுசெலவு பகுப்பாய்வுக்கு அமைவாக, 2020 மற்றும் 2021இல் நடைபெற்ற 01 பணிப்பாளர் சபைக்கான மென்பொருள் செலவு ரூபா 63,533.00 ஆகும். இத்துடன், சபைக்கூட்ட ஆவணங்களை இந்த கூட்டத்தீர்வின் ஊடாக பரிமாறுவதற்கான ஒரு சபைக் கூட்டத்திற்கான சராசரிச் செலவு ரூபா 92,995 ஆகும். அதனால், இந்தத் தீர்வு ஆகுசெலவு வினைத்திறன் முறைமையுடையதா எனும் சந்தேகம் உள்ளது.

# கணக்காளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

(ii) மேற்கூறிய தகவல் தொழில்நுட்பத் திட்டம் ரூபா 6,044,647 பெறுமதியுடையதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும், 10 செப்டெம்பர் 2020 திகதியிடப்பட்ட அரச நிதிச் சுற்றுநிருப இலக்கம் 03/2020 இன் 2.5ஆம் பந்திக்கு அமைவாக, இந்த கொள்முதலில் தொழில்நுட்ப விடயங்கள் மற்றும் தெளிவற்ற விடயங்கள் தொடர்பாக தகவல் மற்றும் தொடர்பாமல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்துடன் (ICTA) கலந்து ஆலோசித்ததாகத் தெரியவில்லை.

(iii) ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமிக்கும் போது மற்றும் இராஜினாமா செய்யம் போது அவர்களுக்கு iPad மற்றும் தொடர்புடைய உபகரணங்களை வழங்குதல் மற்றும் பெறுதல் தொடர்பாக முறையான ஆவணப்படுத்தல் செயன்முறையை ஆணைக்குழு கொண்டிருக்கவில்லை.

(iv) பணிப்பாளர் சபைக்கூட்ட முகாமைத்துவ தீர்வைப் பெறுகை செய்வதற்கு திருத்தப்பட்ட பெறுகை நேர அட்டவணைக்கு ஆணைக்குழுவின் அனுமதிக்கான சான்று கணக்காய்வின் போது வழங்கப்படவில்லை.

(v) பெறுகை வழிகாட்டுதலின் வழிகாட்டி 2.7.5இன் படி, வரிசை அமைச்சின் செயலாளர், திணைக்களத்தின் பெறுகைக் குழுவை (DPC) நியமித்தல் வேண்டும். எனினும், பெறுகைக் வழிகாட்டுதலுக்கு அமைவாக மேற்குறிப்பிட்ட குழு நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பான சான்று கணக்காய்வின் போது கிடைக்கப்பெறவில்லை.

**2.3 ஏனைய விடயங்கள்**

**(அ) உள்ளக கணக்காய்வு சேவையின் பெறுகை**

(i) 2007 ஓகஸ்ட் ஆலோசனையாளர்களின் தேர்வு மற்றும் பணிக்கமர்த்தல் வழிகாட்டிக்கு அமைவாக 19 செப்டெம்பர் 2019 அன்று பிரதான கணக்காய்வு அலுவலரினால் (CAO) நியமிக்கப்பட்ட ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட திணைக்கள ஆலோசனைப் பெறுகைக் குழு (CPCD), பொது நடைமுறையில் உள்ள கணக்காய்வு நிறுவனத்திடமிருந்து கணக்காய்வு பெற்றுக்கொள்வதற்கான பெறுகை மேற்கொள்ளப்பட்டது. திணைக்கள ஆலோசனைக் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிர்வாகக் கையேட்டின் படி அது அதன் பணிகளைத் தொடரவும் தீர்மானித்தது. ஆலோசனைப் பெறுகைக் குழுவில் அங்கத்தவர்களாக பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் நிதி மற்றும் நிர்வாகம் இருந்ததுடன், அவர்களின் செயற்பாடுகள் மற்றும் விவகாரங்கள் உள்ளக கணக்காய்வாளரின் மேற்பார்வையின் கீழ் இருந்தமையினால், இந்த நியமனத்திற்கான சுயாதீனம் கேள்விக்குரியதாகும். அதனால், உள்ளக கணக்காய்வாளரை நியமிக்கும் போது வெளிப்படைத்தன்மை நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை. அதனால் ஆணைக்குழுவிற்கு உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமிக்கும் போது வெளிப்படையான நடைமுறை பின்பற்றப்படவில்லை. எனவே உள்ளக கணக்காய்வாளரின் சுயாதீனம் மற்றும் புறநிலை பாதிக்கப்படலாம்.

(ii) மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வாளரை நியமிக்கும் போது, உள்ளக கணக்காய்வாளருக்கான அறிக்கையிடல் காலங்கள் மற்றும் அளிக்கையிடல் நேர இலக்குகள் வரையறுக்கப்படவில்லை.

(iii) ஆணைக்குழுவிற்கு உள்ளக கணக்காய்வு ஆலோசகரைத் தேர்ந்தெடுப்பதற்கு பெறுகையில் உள்ள முன்மொழிவுகளுடன் உள்ளக கணக்காய்வு வேலைத்திட்டம் பெறப்படவில்லை. அதைத் தொடர்ந்து ஆலோசகையாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளின் மதிப்பீட்டக்காக மதிப்பீட்டுக் கட்டத்தில் ஒரு வேலைத் திட்டம் மீளக் கோரப்பட்டது.

(iv) உள்ளக கணக்காய்வு சேவையின் பெறுகை தொர்பான பெறுகை குழு அறிக்கையில், கேள்விப்பத்திரமானது 18 டிசம்பர் 2019 திறக்கப்பட்டுள்ளது. எனினும் கேள்விப் பத்திர மதிப்பீடு 16 ஜுன் 2021 இல் மேற்கொள்ளப்பட்டள்ளது. வழிகாட்டுதல்கள் தேர்வு மற்றும் ஆலோசகர்களை பணியமர்த்துதல் ஆகியவற்றின் பிரிவு 8.4.1இன் படி முன்மொழிவு மதிப்பீடு விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும், தேவையான அனைத்து முறையான அனுமதிகளைப் பெறுவதற்கு

# கணக்காளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

போதுமான அனுமதிகளைப் பெறுவதற்கு கால அவகாசம் உள்ளது. எனவே, முன்மொழிவுகள் பெறுகை நேர அட்டவணையில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எனினும், முன்மொழிவுகளின் மதிப்பீடுகள் ஏலம் திறக்கப்பட்ட திகதியில் இருந்து ஆறு மாதத்தின் பின்னரே தாமதத்துடன் மேற்கொள்ளப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

(v) ஆலோசனையாளர்களின் தேர்வு மற்றும் பணிக்கமர்த்தல் வழிகாட்டுதலின் பிரிவு 6.5.9ற்கு அமைவாக, RFP யினை அழைப்பதற்கு முன் மதிப்பீட்டு அளவுகோல்கள் மற்றும் துணை அளவுகள் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். உள்ளக கணக்காய்வாளரைத் தேர்ந்தெடுப்பதற்கான குறுகிய பட்டியல் மற்றும் மதிப்பீட்டு அளவுகோல்களுடன் புள்ளிப் பட்டியல் ஏலம் திறக்கப்பட்டதன் பின்னர் வரையறுக்கப்பட்டது. இந்த வரையறைகள் பெறுகைக் குழுவினால் 16 ஜுன் 2020 அன்று அங்கீகரிக்கப்பட்டது.

(ஆ) பணிப்பாளர் நாயகத்தின் செயற்பாடுகளின் மதிப்பீடு தலைவரினால் மேற்கொள்ளப்பட்டது. இது ஆணைக்குழுவில் உள்ள இரண்டு சக்திவாய்ந்த பதவிகளுக்கு இடையேயான கூட்டுக்கு வழிவகுக்கும் மற்றும் சாதகமற்ற முடிவுகளை எடுக்க வழிவகுக்கும். பணிப்பாளர் நாயகத்தின் செயலாற்றுகை ஆணைக்குழுவினால் மதிப்பிடப்படுதல் சிறந்த நடைமுறையாகும். மேலும், பணிப்பாளர் நாயகத்தின் செயலாற்றுகை மதிப்பீட்டுப் படிவம் கணக்காய்வுக்கு கிடைக்கவில்லை.

(இ) காப்பறுதி மையக் கோட்பாடுகள் (ICPs) என்பது சர்வதேச காப்புறுதி மேற்பார்வையாளர்கள் மூலம் உருவாக்கப்பட்டு உலகளாவிய ரீதியல் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளில் கட்டமைப்பாகும். காப்புறுதி ஒழுங்குபடுத்துனர்களின் ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வ தரத்தை மதிப்பிடுவதற்கும் நாட்டில் காப்புறுதித்துறைக்கான விதிமுறைகளை அறிமுகப்படுத்தவதற்கான கட்மைப்பாக பயன்படுத்துவதற்கும், அந்தந்தக் கொள்கைகள் முக்கியமாகும். ஐஏஐஎஸ் உறுப்பினராக ஆணைக்குழு ரூபா 4,124,500 வை 2020ஆம் ஆண்டுக்கு செலுத்தியுள்ளது. ஆணைக்குழுவினால் காப்புறுதி மையக் கோட்பாடுகளுடன் இணங்கும் முறையினை அடையாளம் காண்பதற்கான தகவல்கள் கோரப்பட்டது. எனினும், கோரப்பட்ட விபரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) ஆணைக்குழு 2020ஆம் ஆண்டு வரை, ஆணைக்குழுவின் மிகை நிதியை பூட்கையாளர் நிதியத்திற்கு மாற்றியது. எனினும், மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் இந்தக் கொள்கை திடீரொன மாற்றப்பட்டு, ஆணைக்குழு நிதியில் மிகையானது திரட்டப்பட்ட நிதியாக முன்னோக்கி கொண்டு செல்லப்பட்டது. எனினும், இது தொடர்பான ஆணைக்குழுவின் அனுமதி கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இந்த நிதியை முறையான கண்காணிப்பு செய்யாவிடில், நிதியை தவறாகப் பயன்படுத்துதற்கு வாய்ப்புள்ளது.

(உ) **நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் கருத்திட்டம்**

(i) நிதியில் துறை நவீனமயப்படுத்தல் ஒப்பந்தத்திற்கு அவைாக திட்ட அமுலாக்கம் முழுவதும் செயல்படுத்தும் நிறுவனம், சர்வதேச மேம்பாட்டு சங்கத்திற்கு வருடாந்த வேலைத் திட்டம் மற்றும் ஒவ்வொரு அடுத்த நிதியாண்டு திட்டத்தின் கூறு 2(சீ) இன் கீழ் செயல்பாடுகளுக்கான வரவுசெலவுத்திட்டத்தையும் ஆனால் நவம்பர் 30ற்கு பின்னல்லாது, விரைவில் ஒப்புதலுக்காக விரைாவக வழங்க வேண்டும். எனினும், 2020 மற்றும் 2021ஆம் ஆண்டிற்கான வருடாந்த வேலைத்திட்டங்கள் கணக்காய்வுக்கு வழங்கப்படவில்லை மற்றும் ஆவணங்கள் IDA ற்கு சமர்ப்பிக்கப்பட்டதா என அறிவதற்கு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) இந்தத் திட்டத்தின் கீழ் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் மேற்பார்வையின் கீழ் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி வியாபாரங்களைப் பிரிப்பதற்காக 945,450 அமெரிக்க டொலர்கள் (SDR. 0.67 million) ஒதுக்கப்பட்டது. எனினும், இந்த நோக்கத்திற்கு இந்த நிதி பயன்படுத்தப்படவில்லை.

# கணக்காளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

(iii) இந்தக் கருத்திட்டத்தின் கீழ் ஆணைக்குழுவின் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் இயலளவைப் பலப்படுத்துவதற்கான விரிவான பணித்திட்டம் கணக்காய்வுக்கு கிடைக்கவில்லை.

(iv) கருத்திட்டத்தின் நோக்கத்தை அடைவதற்கு, நிபுணர்களும் ஆலோசனையாளர்களும் இணைந்து பணிபுரிதல் வேண்டும். எனினும், காலத்திற்கு காலம் ஆலோசனையாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதுடன், இந்தக் கருத்திட்டத்தின் பொது நோக்கத்தை அடைவதற்கு அவர்களிடையே பலமானதொரு உள்ளக்தொடர்பு இருந்ததை அவதானிக்க முடியவில்லை. இந்த நலிவான கருத்திட்ட முகாமைத்துவம் காரணமாக, எதிர்பார்க்கப்பட்ட கருத்திட்ட நோக்கங்களும் பெறுபேறுகளும் அடையப்படவில்லை.

(v) காப்புறுதி கணிப்பீட்டாளர் தனது ஒப்பந்தத்தை 29 மார்ச் 2022ஆம் திகதி முதல் இடைநிறுத்தியுள்ளார். காப்புறுதி கணிப்பீட்டு ஆலோசனையாளரின் 24 ஜனவரி 2020 இல் “இன்று வரையிலான காப்புறுதி (கணிப்பீட்டு) திட்டத்தின் ஆலோசகரின் மதிப்பீடு” எனப் பெயரிடப்பட்ட அறிக்கையின் படி, பணிநீக்கம் செய்யப்பட்டதற்கான காரணங்கள் நிர்வாகத்தால், அவரது பரிந்துரைகளுக்கு கருத்துக்களை வழங்கவில்லை, எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. செயல்திட்டங்களை செயல்படுத்தவும், பின்னூட்டல் செய்யவும் ஆணைக்குழுவினால் அவரது முன்மொழிவுகளுக்கு நியாயமான வாதங்களுடன் பதிளளிக்கப்படவில்லை, இந்த கருத்திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட வேண்டிய காப்புறுதி நிபுணரின துணையின்றி, காப்புறுதிக் கணிப்பீட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது, ஆணைக்குழு காப்பறுதி மற்றும் தகவல் தொழில்நுட்ப நிபுணர்களை வழங்குதல் வேண்டும், ஆனாலும் வழங்கவில்லை, எவ்வித சரியான விளகங்களும் அளிக்கப்படாது அவருடைய ஆலோசனைகள் தவிர்க்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அவதானிப்புகளின் படி, ஆலோசனை கணிப்பீட்டாளருக்கு செலுத்தப்பட்ட 168,000 அமெரிக்க டொலர் கொடுப்பனவானது பொருளாதார நன்மையற்ற கொடுப்பனவதாக அவதானிக்கப்படுகின்றது.

(vi) கணக்காய்வுக்கு கிடைக்கப்பெற்ற தகவலின்படி, காப்புறுதிக் கணிப்பீட்டு ஆலோசகர் எந்த அறிக்கையையும் வெளியிடவில்லை அல்லது கொடுக்கப்பட்ட வேலைத்திட்டத்தின் படி கூறுகளுக்கு வேலை செய்யவில்லை. அதனால், 17 கூறுகளில் 14 கூறுகளுக்கான இறுதி மற்றும் வரைவு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. கணக்காய்வுக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, இந்த அறிக்கைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படவில்லை மற்றும் ஒழுங்குபடுத்துனராக ஆரம்பித்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் கொள்கைகளை உருவாக்குவதற்கு பொறுப்பானவர்கள் இந்த அறிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடியமைக்கு எவ்வித சான்றுகளும் இல்லை.

(vii) பணித்திட்டத்தின்படி, காப்புறுதிக் கணிப்பீட்டு ஆலோசகரின் பணியானது, காப்புறுதி மற்றும் தகவல்தொழில்நுட்பம் போன்ற பிற ஆலோசகர்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே, அந்த ஆலோசகர்களிடைெய ஒருங்கிணைக்க ஆணைக்குழு அவர்களுக்கு வசதி செய்யவில்லை என்பதை நாங்கள் அவதானித்தோம்.

(viii) னிதவள ஆலோசகருக்கு ஒதுக்கப்பட்ட பணியின்படி, ஆலோசகரின் பணியைச் செய்யும் போது வாடிக்கையாளரின் எதிர்கால முன்னேற்றங்களைப் பற்றிய கருத்துக்களைப் பெறுவதற்காக, திட்டத்தின் கீழ் பணியமர்த்தப்பட்ட பிற ஆலோசகர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்பது இறுதிப் பணியாகும். திட்ட முன்னேற்றத்தின் படி, செயல் ஆலோசகர் மட்டுமே நியமிக்கப்பட்டார். இந்த திட்டத்தில் மனிதவள ஆலோசகர் மற்ற ஆலோசகர்களுடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடினார் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. அதனால், ஆலோசனையாளர்களுக்கு இடையில் உரிய ஒருங்கிணைப்பு இல்லாமையினால், இந்த கருத்திட்டம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றை அடையவில்லை.

(ix) டிசம்பர் 31, 2021ற்கான முன்னேற்ற அறிக்கை மற்றும் நவம்பர் 29, 2021 உலக வங்கி பிரதிநிதியிடமிருந்து பெறப்பட்ட மின்னஞ்சலின் படி, FSMP திட்டம் ஜுன் 30, 2022 இலிருந்து முடிவடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், திட்டத்தை நிறுத்துவதற்கு எடுக்கப்பட்ட முடிவின் திகதி, திட்டத்தை நிறுத்தவதற்கான முடிவை எடுக்கும் அதிகாரம், திட்டத்தை நிறுத்துவதற்கான காரணங்கள் கணக்காய்வுக்கு கிடைக்கவில்லை.

# கணக்காளர் நாயகத்தின் அறிக்கை



(ஊ) 2020 மற்றும் 2021ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் 20 ஒக்டோபர் 2022 வரை கிடைக்கப்பெறவில்லை. அதனால், அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு காண்பதற்கு ஆணைக்குழுவினால் முடியாமல் போகும். மேலும், வெளிவாரி கணக்காள்வாளரின் திட்டங்கள் மற்றும் செயலாற்றுகைகளை மேற்கொள்வதற்கு, உள்ளக கணக்காய்வாளரின் பணிகளைப் பயன்படுத்துவதற்கு, வெளிவாரி கணக்காய்வாளரினால் இயலாமல் போகும்.

(எ) சட்டமா அதிபரின் கருத்தின் அடிப்படையில், ஆணைக்குழு தமது சொந்த பணிக்குழு மற்றும் சம்பளத் திட்டத்தை தீர்மானித்துள்ளது. 31 மே 2019, விஞ்ஞாபனத்தின் ஊடாக, பணிப்பாளர் நாயகம் 01 ஜுலை 2018 முதல் அமுலுக்கு வரும் வகையில் ஆணைக்குழு ஊழியர்களுக்கு, சம்பள சீராக்கம், பதவியணி திருத்தம், ரூபா 7,800 வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு, அடிப்படை சம்பளத்தில் 15% வீத தகுதிக் கொடுப்பனவு மற்றும் ரூபா 12,500 விசேட வாழ்க்கை தரக் கொடுப்பனவு என்பவற்றுக்கான அனுமதியைக் கோரியுள்ளார். ஆணைக்குழுவானது நிதி அமைச்சின் விடயப்பரப்பினுள் வரும் ஒரு நிறுவனமாக இருந்த போதிலும், அவர்களுடைய பதவியணி மற்றும் சம்பள மற்றும் கொடுப்பனவு அதிகரிப்பு தொடர்பாக இணைவானையை அல்லது சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை.

(ஏ) ஜுலை 18, 2018ஆம் திகதியிடப்பட்ட 03.∴2048 முகாமைத்துவ சேவை சுற்றறிக்கைக்கு மாறாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அனுமதியைப் பெறாமல் சட்டமா அதிபரின் கருத்தின் அடிப்படையில் 2019ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் சம்பளம் 12.98% இருந்து 59.73% வீதமாக அதிகரித்துள்ளது. சபையிலுள்ள திறைசேரிப் பிரதிநிதி, இது தொடர்பில் சபைக்கு தனது சுயாதீனமான கருத்தைக் கொண்டுவந்து பொது நலனைப் பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

(ஐ) ஆணைக்குழு தமது ஊழியர்களுக்கு சுய பங்களிப்புக் காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. ஆணைக்குழு அவர்களின் நிதியில் ரூபா 6.2 மில்லியனை 2021ஆம் ஆண்டுக்காக ஊழியர்களின் பங்களிப்பு ஏதுமின்றி காப்புறுதிக் காப்பீட டைப் பெற்றுக்கொள்வதற்காக செலவளித்துள்ளது. எனினும், 2017ஆம் ஆண்டு, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் சுய பங்களிப்பு காப்புறுதித் திட்டத்தை பகுதியளவு அரச துறை ஊழியர்களுக்கும், ஊழியரிடமிருந்து ரூபா 1000.00 பங்களிப்புடன் விரிவுபடுத்தியது.

(ஒ) 2021ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட நலன்புரிச் செலவு ரூபா 3,036,000 ஆனால் உண்மையான செலவு ரூபா 3,477,654.00 ஆகும். அதற்கமைவாக ரூபா 441,654 (12.7 சதவீதம்) வரவுசெலவுத்திட்டத்தை விட அதிகமாக செலவழிக்கப்பட்டுள்ளது. மேலும், மீளாய்வுக்குட்பட்ட ஆண்டு, போக்குவரத்துக்கான நலன்புரி செலவு தவிர்த்து, ஏனைய நலன்புரிச் செலவாக ஆணைக்குழு ரூபா 36,640.00ஐ ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலவழித்துள்ளது.

**டபில்யூ.பீ.சீ.விக்ரமரத்ன**
கணக்காய்வாளர் நாயகம்

# கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் 2021ஆம் ஆண்டுக்கான ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பதில்கள்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பதிலளிப்பு |
|---|---|---|
| 2.2.1 | 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (d) இன் தேவைக்கு அமைவாக, சாதாரண வியாபாரக் காரணத்திற்கு புறம்பாக, ஆணைக்குழு செய்துகொண்ட ஒப்பந்தத்தில், ஆணைக்குழுவின் ஆளுகை குழுவைச் சேர்ந்த எந்தவொரு அங்கத்தவரும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆர்வம் கொண்டுள்ளார் எனக் குறிப்பிடுவது மட்டுமன்றி,<br><br>மருத்துவக் காப்புறுதிக் காப்பீடு<br><br>இரு பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் காப்புறுதிக் காப்பீட்டினைப் பெற்றுக்கொண்டுள்ளனர். இந்தக் காப்பீட்டுக்காக ஆணைக்குழுவினால் 2021ஆம் ஆண்டிற்குரிய தவணைக்கட்டணமாக ரூபா 111,830 செலுத்தப்பட்டுள்ளது | 2021 நோய்ப்பரவல் சூழ்நிலை காரணமாக, ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் சிலர், ஆணைக்குழுவின் கூட்டங்களில் கலந்துகொள்ளும் போது, அவர்கள் ஆபத்துக்கு உள்ளானமையினால், கோவிட் 19 நோய்த் தாக்கத்தைக் குறைக்கும் வகையில், தங்களுக்கு தேவையான சூழ்நிலைகளின் கீழ், காப்புறுதித் தொகையை நீட்டிக்க கோரிக்கை விடுத்தனர். காப்பீட்டை செயல்படுத்துவதற்கு அதிக முன்னுரிமை அளிக்கப்படுவதால், ஆணைக்குழுவின் ஒப்புதல் மற்றும் PED சுற்றுநிரூபங்கள் அங்கத்தவர்களுக்கு காப்புறுதிக் காப்பீட்டினை வழங்குவது தொடர்பாக மௌனமாக இருப்பதன் அடிப்படையில் அது வழங்கப்பட்டது. தலைவர் மற்றும் மூன்று பதவிவழிசார் அங்கத்தவர்கள் இந்த வசதியைப் பயன்படுத்தவில்லை. . |
| 2.2.2 | 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (f) இன் தேவைக்கு அமைவாக, ஆணைக்குழுவின் ஆளுகை குழுவினால் பிரயோகிக்கப்படக்கூடிய எழுதப்பட்ட சட்டங்கள், பொது மற்றும் விசேட பணிப்புரைகளுடன் ஆணைக்குழு இணங்கவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது | |
| அ) | ஜனாதிபதி செயலாளரின் 10 டிசம்பர் 2020 திகதியிடப்பட்ட சுற்றுநிரூப இலக்கம் PS/GPA/Circular/36/2020, 04 டிசம்பர் 20 திகதியிடப்பட்ட வரவுசெலவுத்திட்ட சுற்றுநிரூப இலக்கம் 07/2019, 17 ஜுன் 2019 திகதியிடப்பட்ட வரவுசெலவுத்திட்ட சுற்றுநிரூபம் 4/2019.<br><br>சுற்றுநிரூப அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, உத்தியோகபூர்வ/ கடமை சார்ந்த பங்கேற்பு அத்தியாவசியமானதாக இருந்தாலன்றி, அதிகாரிகள் உளளூர் நிதியைச் செலவழித்து கருத்தரங்குகள் / பயிற்சிப் பட்டறைகளில் போன்றவற்றில் பங்குபற்றல் கூடாது. எனினும் ஆணைக்குழு, அதன் 20வது வருடாந்த நிகழ்வினை 29 மார்ச் 2021ஆம் திகதி ரூபா 411,454 செலவில் ஹொட்டலில் நடாத்தியது. ஆணைக்குழுவின் 20வது வருடாந்த கொண்டாட்டத்திற்கு ஆணைக்குழுவின் நிதியில் இருந்து ரூபா 952,600 உறற்றப்பட்டு 16 ஊழிய அங்கத்தவர்களுக்கு தங்க நாணயம் வழங்கப்பட்டுள்ளது | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆண்டுகுழுவில் அதன் இருபது (20) ஆண்டுகளில் முதன் முறையாக வருடாந்தக் கொண்டாட்டம் நடைபெற்றது. இது ஊழியர்களை நிறுவனத்திற்கு தங்களால் இயன்ற பங்களிப்பை வழங்குவதற்கு தூண்டுகின்றது. முதன்முறையாக நடாத்தப்படும் இத்தகைய நிறுவன நிகழ்விற்கு அவர்களின் பங்களிப்பு இன்றியமையததாக இருந்ததால், இந்த நிகழ்வில் பங்கேற்குமாறு முழு ஊழியர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. மேலும், கடிதத்தில் கூறப்பட்டுள்ளவாறு, இது கருத்தரங்குகளோ / பயிற்சிப் பட்டறையோ அல்ல<br><br>சேவைக்கான விருது என்பது ஒரு பணியாளருக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வியாபரத்திற்கு வழங்கிய சேவைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ஒரு விருது வழங்கலாகும். ஒரு விருது ஊழியர்களுக்கு அவர்கள் நிறுவனத்தின் மதிப்புமிக்க உறுப்பினர்கள் என்பதையும், அவர்களின் அர்ப்பணிப்பு அங்கீகரிக்கப்படாமல் போகவில்லை என்பதையும், அவர்களின் சேவை பாராட்டப்படுகின்றது என்பதையும் காட்டுகின்றது. ஊழியர்கள் நிறுவனத்தில் நீண்ட காலம் இருக்க ஊக்குவிப்பதே இதன் நோக்கம். புதிய பணியாளர்களை பணியமர்த்துவதற்கும் பயிற்சியளிப்பதற்கும் நேரம், மனவழுத்தம் மற்றும் ஆட்சேர்ப்பு செய்வதற்கான செலவு மற்றும் புதிய ஊழியர்களுக்கான பயிற்சி மற்றும் ஊழியர் புரள்வு ஆகியவை நிறுவனத்தின் பெறுபேறுகளில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.<br><br>பெறுகை நடைமுறையைப் பயன்படுத்தி, இடம் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் அரசுக்கு சொந்தமான ஹில்டன் ஹொட்டல் நியாயமான தொகையான இ.ரூபா 280,000 விற்குப் பெறப்பட்டது. |

# கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் 2021ஆம் ஆண்டுக்கான ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பதில்கள்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பதிலளிப்பு |
|---|---|---|
| ஆ) | 27 ஜனவரி 2020 திகதியிடப்பட்ட பொது தொழில்முயற்சி சுற்றுநிரூப இலக்கம் PED 01/2020 யின் பிரிவு 1. 3<br><br>சுற்றறிக்கையின் படி, மாதத்தில் நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொள்ளாது, ஒரு மாதத்திற் பங்களிப்பு கொடுப்பனவாக செய்யக்கூடிய உச்சளவான தொகை ரூபா 25,000 ஆகும். எனினும் 2021 ஒக்டோபரில் ஐந்து (05) ஆணைக்குழு அங்கத்தவர்களுக்கு மேலதிகமாக ரூபா 245,460 கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன் உப கூட்டங்களில் பங்கேற்றமைக்காக 2021 டிசம்பரில் நான்கு (04) அங்கத்தவர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. . | PED 01/2020 இன் பிரிவு 1.3இன் படி, பொது நிறுவனங்களின் சுற்றறிக்கை எண் PED 3/2015இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் தலைவர்கள், நிறைவேற்று மற்றும் நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கான கொடுப்பனவுகள் மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கைப்படி வழங்குதல் வேண்டும். எனினும் ஒரு மாதத்தில் ஆணைக்குழு உறுப்பினர் அல்லது பார்வையாளர் கலந்துகொண்ட சபைக் கூட்டங்களின் எண்ணிக்கையை கவனத்தில் கொள்ளாமல் ஒரு மாதத்தில் நடாத்தப்படும் சபைக் கூட்டங்களுக்கான அமர்வுக்கான மொத்தக் கொடுப்பனவு ரூபா 25,000ஐ விஞ்சாது இருக்க வேண்டும். பணிப்பாளர் சபைக்கூட்டத்திற்கான கொடுப்பனவுகள் ரூபா 25,000ஐ விஞ்சவில்லை.<br><br>சுற்றுநிரூபத்தின் படி, துணைக்குழுக் கூட்டங்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்ட மற்ற அனைத்துக் கட்டணங்களுக்கும் உச்சவரையறை என்பது இல்லை. உங்கள் கடித்தில் குறிப்பிடப்பட்ட சபை உறுப்பினர்களுக்கு செலுத்தப்பட்ட தொகை சரியானதாகும |
| இ) | 02 ஜுன் 2003ஆம் திகதி வெளியடப்பட்ட சிறந்த ஆளுகைக்காக அறிமுகப்படுத்தப்பட்ட வழிகாட்டி சுற்றுநிரூபம் PED/12இன் 9.14.2ஆம் பந்தி.<br><br>வழிகாட்டியின் படி, தயாரிக்கப்பட்ட கையேடுகள் சபையினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும், அதன் பின்னர் திறைசேரி செயலாளரின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்வதற்கு பொது தொழில்முயற்சி திணைக்களம், பொது திறைசேரி என்பவற்றின் ஊடாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். எனினும், ஆணைக்குழுவினால் அவ்வாறு தயாரிக்கப்பட்ட கையேட்டிற்கு அத்தகைய அங்கீகாரம் பெறப்படவில்லை. எனவே தாபனக் கோவை சட்டத்தின் ஏற்பாடுகளை இதற்கு பிரயோகிக்க முடியும். எனினும், அங்கீகரிக்கப்படாத கையேட்டின் படி, ஆணைக்குழு 31 டிசம்பர் பொது நிர்வாக சுற்றநிரூப இலக்கம் 14/99த்திற்கு அமைவாக இ.ரூபா 250,000 உச்சளவை விஞ்சி ரூபா 325,000 தொடக்கம் ரூபா 500,000 வரை இடர் கடன் ஆணைக்குழுவினால் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, வழங்கப்படும் இடர்கடனுக்கு மிகையாக ரூபா 662,500. செலுத்தப்பட்டுள்ளது. | ஆணைக்குழுவின் கையேடு நீண்ட காலத்திற்கு முன்னே தயாரிக்கப்பட்டுள்ளது. இது ஒரே தலைமைத்தவத்தின் கீழ் தொழிற்பட்ட (முன்னர் இலங்கை காப்புறுதி சபை), பிரதானமாக இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் கையேட்டின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டள்ளது. இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் ஒப்புதலுடன் தொடக்கத்திலிருந்தே இதையே ஏற்றுக்கொண்டது. தேவையின் அடிப்படையில், சபை/ ஆணைக்குழுவின் ஒப்புதலுடன் மேற்படி கையேட்டில் அவ்வப்போது மாற்றங்கள் இணைக்கப்பட்டுள்ளன. சிறந்த ஆளுகைக்காக அறிமுகப்படுத்தப்பட்ட வழிகாட்டி சுற்றுநிரூபத்திற்கு அமைவாக நிதி மற்றும் ஊடக அமைச்சின் அங்கீகாரத்திற்காக நிர்வாக கையேடு 23 ஒக்டோபர் 2012இல் அனுப்பப்பட்டதுடன் காலத்திற்கு காலம் ஞாபகமூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. |

# கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் 2021ஆம் ஆண்டுக்கான ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பதில்கள்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பதிலளிப்பு |
|---|---|---|
| ஈ) | தாபனக் கோவையில் 7 பிரிவின் அத்தியாயம் XXIV<br><br>அத்துடன், நிர்வாகப் பிரிவு ஊழியர்களுக்கு வாகனங்கள் வாங்குவதற்கு வங்கிகள் மூலம் கடன் வாங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும், வாகனக் கடன் தொகையாக ரூபா 1,200,000 மூன்று ஊழியர்களுக்கு ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து இவ்வருடம் வழங்கப்பட்டுள்ளது. | 05 ஏப்பிரல் 2018அன்று, பின்பற்ற வேண்டிய நடைமுறைகளின் சிக்கல் காரணமாக நிர்வாக கையேட்டுக்கான அனுமதியை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அரச தொழில்முயற்சித் திணைக்களம் ஆணைக்குழுவிற்கு அறிவித்தது. மேலும், கையேட்டை அங்கீகரிப்பது குறித்து பரிசீலிக்கும் வரை, கையேட்டில் உள்ள பகுதிகள் தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளை ஏற்றுக்கொள்ளுமாறு அரச தொழில்முயற்சித் திணைக்களம் கோருகின்றது எனத் தெரிவித்திருந்தனர்.<br><br>அதன்படி, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் ஊழியர்களுக்கு வழங்கப்படும் வசதிகள் மற்றும் அரச விதிமுறைகள்/ சுற்றறிக்கைகள் ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாடுகளை ஆணைக்குழு ஒப்பிட்டுப்பார்த்தது. இதன் விளைவாக, வசதிகள் கணிசமாக வேறுபடுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.<br><br>அரசாங்கத்தின் சுற்றறிக்கைகளை ஏற்றுக்கொள்ளமை குறித்து விளக்கமளிப்பது விவேகமானது என ஆணைக்குழு தீர்மானித்தது. கடுமையான மாற்றங்கள் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் சுமூகமான செயல்பாட்டுக்கு கடுமையான இடையூறுகளை ஏற்படுத்தும் என்பதால் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிர்வாகக் கையேட்டின் படி அது அதன் பணிகளைத் தொடரவும் தீர்மானித்தது.<br><br>சட்டமா அதிபர் உறுதிப்படுத்தியபடி, பணியாளர்களின் ஊதியம் மற்றும் வேலைக்கான நிபந்தனைகளை நிர்ணயிக்க முழு அதிகாரம் கொண்ட ஆணைக்குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டள்ளது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். |
| உ) | 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசியக கணக்காய்வுச் சட்டத்தின் உறுப்புரை 40(3) மற்றும் நிதிப் பிரமாணம் 134(1).<br>குறிப்பிட்ட விதிகளின் படி, உள்ளக கணக்காய்வாளர்கள் நேரடியாக தலைவர் அல்லது ஆளுகை குழுவிடம் அறிக்கையிடுதல் வேண்டும். எனினும் பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்க பொறுப்புகளைப் புகாரளிப்பதற்கான விதிமுறைகள் குறிப்பு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. மேற்கூறிய விதிகளுக்கு மாறாக 2019ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் 06 ஜுலை 2021ஆம் அன்ற பணிப்பாளர் நாயகத்திடம் கையளிக்கப்பட்டது | நாங்கள், 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுக்கான அறிக்கையை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுப்புமாறு, உள்ளகக் கணக்காளரைக் கோரினோம். . |
| ஊ) | 18 ஜுலை 2018ஆம் திகதியிடப்பட்ட முகாமைத்துவ சேவை சுற்றுநிரூப இலக்கம். 03/2018<br><br>பொது திறைசேரியின் முன் அனுமதியின்றி ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்வதையும் சம்பளம் மற்றும் பணியாளர்களை அதிகரிப்பதையும் அனைத்து அமைச்சுகளும் ஏனைய சம்பந்தப்பட்ட அதிகராரிகளும் தவிர்க்க வேண்டும் என சுற்றறிக்கை அறிவுறுத்தியுள்ளது. இருப்பினும் ஒரு (01) பணிப்பாளர், பதின்மூன்று (13) முகாமையாளர் / உதவி முகாமையாளர் மற்றும் ஒரு (01) செயலாளர் பதவிகள் பொது திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்படவில்லை. | சட்டத்தினால் வழங்கப்பட்ட பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் அதிகாரத்தின் அடிப்படையில் ஆணைக்குழு செயல்பட்டுள்ளது. |

# கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் 2021ஆம் ஆண்டுக்கான ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பதில்கள்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பதிலளிப்பு |
|---|---|---|
| எ) | 16 நவம்பர் 2021 திகதியிடப்பட்ட அரச தொழில்முயற்சிகள் சுற்றுநிரூப இலக்கம் 01/2021.<br>கணக்காய்வுக் குழுவின் அழைப்பாளர் பணிப்பாளர் - நிதி மற்றும் நிர்வாகம் ஆவர். இந்த சுற்றறிக்கையின் கீழ் வெளியிடப்பட்ட அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கான கூட்டிணைந்த ஆளுகை வழிகாட்டுதலின் 4.2 இன் கீழ் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக, கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதிநிதிகள் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களுக்கு தொடர்ந்து அழைக்கப்படவில்லை. | கணக்காய்வுக் குழுவின் புதிய அழைப்பாளர் (உதவிப் பணிப்பாளர், சட்டம்) அடுத்த கூட்டத்தில் இருந்து பணியைத் தொடங்குவார் என்பதால், இப்போது திருப்தி அடைவதாக குறிப்பிடப்பட்டது. |
| 2.2.3 | 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (g) இன் தேவைக்கு அமைவாக, ஆணைக்குழு அதன் அதிகாரங்கள், செயல்பாடுகள் மற்றும் கடமைகளை செய்யவில்லை என்பதைக் குறிப்பிடுவதற்கு | |
| (அ) | 2010ஆம் ஆண்டிலிருந்து ஒரு செயலாற்றுகை ஊக்கத்தொகை பொதுத் திறைசேரியின் அனுமதியின்றி செலுத்தப்பட்டது. | திறைசேரிக்கு திட்டம் பல தடவைகள் அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) | இந்தத் திட்டம், ஒரு மாத அடிப்படை சம்பளத்தின் ஊக்குவிப்பு கொடுப்பனவு அடிப்படையில் வழங்கப்பட்ட தொகை 2019ஆம் ஆண்டிலிருந்து திறைசேரியின் அனுமதியின்றி ஒன்றரை (1 ½) மாதச் சம்பளமாக மாற்றப்பட்டுள்ளது. இதன் காரணமாக, மொத்த ஊக்கத்தொகை ரூபா 4,605,381, இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டைவிட 105% வீதம் அதிகமாகும். அதனால், உண்மையான செயலாற்றுகை மதிப்பீடு ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. | ஊழியர்கள் செயலாற்றுகையில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை எட்டியிருந்தால் ஊக்குவிப்புத் தொகையை வழங்குதல் வேண்டும் எனத் திட்டத்தில் உள்ளது.. |
| (இ) | 02 ஜுன் 2003 திகதியிடப்பட்ட அரச தொழில்முயற்சிகள் சுற்றுநிரூப இலக்கம் PED/12 ற்கு அமைவாக, வழிகாட்டியின் படி, தயாரிக்கப்பட்ட கையேடுகள் சபையினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும், அதன் பின்னர் திறைசேரி செயலாளரின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்வதற்கு பொது தொழில்முயற்சி திணைக்களம், பொது திறைசேரி என்பவற்றின் ஊடாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். எனினும், ஆணைக்குழுவினால் அவ்வாறு தயாரிக்கப்பட்ட கையேட்டிற்கு அத்தகைய அங்கீகாரம் பெறப்படவில்லை. அதனால், விடுமுறையை காசாக்கும் கொடுப்பனவான ரூபா 1,639,753 உரிய அனுமதியின்றி வழங்கப்பட்டள்ளது அவதானிக்கப்பட்டது. | விடுமுறையை காசாக்குவதை உள்ளடக்கிய ஆணைக்குழுவின் நிர்வாகக் கையேடு, சிறந்த ஆளுகைக்காக அறிமுகப்படுத்தப்பட்ட வழிகாட்டி சுற்றுநிரூபத்திற்கு அமைவாக நிதி மற்றும் ஊடக அமைச்சின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. இந்த நிர்வாக கையேடு 23 ஒக்டோபர் 2012இல் அனுப்பப்பட்டதுடன் காலத்திற்கு காலம் ஞாபகமூட்டல் கடிதங்கள் அனுப்ப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களும் அறிவிக்கப்பட்டுள்ளது.<br>05 ஏப்பிரல் 2018அன்று, பின்பற்ற வேண்டிய நடைமுறைகளின் சிக்கல் காரணமாக நிர்வாக கையேட்டுக்கான அனுமதியை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அரச தொழில்முயற்சித் திணைக்களம் ஆணைக்குழுவிற்கு அறிவித்தது.<br>அதன்படி, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் நிர்வாகக் கையேட்டில் உள்ள ஏற்பாடுகள் செயல்படுத்தப்பட்டது |

# கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் 2021ஆம் ஆண்டுக்கான ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பதில்கள்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பதிலளிப்பு |
|---|---|---|
| 2.2.4 | 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (h) இன் தேவைக்கு அமைவாக, பொருந்தக்கூடிய சட்டங்களுக்கு இணங்க, ஆணைக்குழுவின் வளங்கள் பொருளாதார ரீதியாகவும், திறமையாகவும், திறம்படவும் காலவரையறைக்குள் வாங்கப்பட்டு பயன்படுத்தப்படவில்லை என்பதைத் தவிர | |
| (அ) | ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் வெளியகக் கட்டடத்தில் மேற்கொள்ளப்பட்டன, மேலும் சிக்கனமான இடமொன்று தேடப்படாமால், 2021ஆம் ஆண்டுக்கு ரூபா 48,109,101 குத்தகை வாடகையாக கொடுக்கப்பட்டுள்ளது. | 2024 செப்டெம்பர் மாதத்துடன் முடிவடையும் தற்போதைய குத்தகைக் காலம் முடிவடைந்ததுடன் ஓவர்சீஸ் ரியலிட்டி (சிலோன்) பிஎல்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள கோரிக்கையை ஏற்றுக்கொள்வது என ஆணைக்குழுவின் 224 வது கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. எனினும், இரண்டு வருட காலம் முடிவடைவதற்குள் அதற்கு சொந்தமான வளாகத்தை கொள்வனவு செய்வதற்கான சாத்தியக்கூறுகளைக் கவனத்தில் கொள்ளும். |
| (ஆ) | ஆணைக்குழு ஒரு நிறுவனமாக, இது 2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதி கைத்தொழிற்துறை ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் வகிபாகத்தை செயற்படுத்துவதற்கு பொது மக்களுடன் நெருக்கமாக பணியாற்றுவதற்கு ஏற்ற வகையில் இருத்தல் வேண்டும். எனினும், தற்போதை அதன் இருப்பிடம், கலாச்சாரம் மற்றும் அதன் கதவுகள் பொது மக்கள் அவர்களை இலகுவாக அணுகுவதற்கு கடினமான வகையில் கடுமையான பாதுகாப்பின் கீழ் உள்ளது. மேலும், ஆணைக்குழுவின் வளாகத்தில் நுழையும் பொது மக்களுக்கு உதவுவதற்கு முன் கருமபீடத்தில் எந்தவொரு அலுவலரும் இல்லை என்பது பல சந்தர்ப்பங்களில் அவதானிக்கப்பட்டது. மேலும் இணையத்தளத்தில் உள்ள அனைத்து விபரங்களும் ஆங்கில மொழியில் மட்டும் உள்ளது அவதானிக்கப்ட்டது. | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் ஆங்கிலத்தில் உள்ள அனைத்து உள்ளடக்கங்களையும் சிங்கள மற்றும் தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், இலங்கை காப்பறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் ஊழியர்கள் கடிதம், தொலைபேசி அல்லது உத்தியோகபூர்வ தேவைகளுக்கு வருகை தரும் போது பொதுமக்களுக்கு அவர்களுக்கு சௌகரியமான (சிங்கம், தமிழ் அல்லது ஆங்கில) மொழிகளில் சேவைகளை வழங்குகின்றனர்.<br><br>இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவானது, இதில் பாதிக்கப்படக்கூடிய குழுவைச் சென்றடையக்கூடிய சேவைகளைப் பெறும் வகைகளையும் உள்ளடக்கி அனைத்து வசதிகளையும் பொது மக்களுக்கு வழங்கியுள்ளது, |
| (இ) | பணிப்பாளர் சபைக்கூட்ட முகாமைத்துவ தீர்வின் பெறுகை | |

# கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் 2021ஆம் ஆண்டுக்கான ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பதில்கள்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பதிலளிப்பு |
|---|---|---|
| (i) | 2019ஆம் ஆண்டில் ஒரு பணிப்பாளர் சபைக்கூட்டத்தில் உரிய முறையில் செலவு-நன்மை பகுப்பாய்வு ஏதுமின்றி ரூபா 1,013,000 மற்றும் ரூபா 923,000 விற்கு முறையே மென்பொருள் மற்றும் ஆண்டு சந்தாவிற்கான கொள்வனவுத் தீர்வு எடுக்கப்பட்டுள்ளது. கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட ஆகுசெலவு பகுப்பாய்வுக்கு அமைவாக, 2020 மற்றும் 2021இல் நடைபெற்ற 01 பணிப்பாளர் சபைக்கான மென்பொருள் செலவு ரூபா 63,533.00 ஆகும். இத்துடன், சபைக்கூட்ட ஆவணங்களை இந்த கூட்டத்தீர்வின் ஊடாக பரிமாறுவதற்கான ஒரு சபைக் கூட்டத்திற்கான சராசரிச் செலவு ரூபா 92,995 ஆகும். அதனால், இந்தத் தீர்வு ஆகுசெலவு வினைத்திறன் முறைமையுடையதா எனும் சந்தேகம் உள்ளது. . | பணிப்பாளர் சபைக்கூட்ட முகாமைத்துவ தீர்வு ஆனது கீழ்வரும் நன்மைகளுக்காக வடிவமைக்கப்பட்டஉள்ளது.<br>• விரைவான அணுகல்<br>• அணுகல் மற்றும் கருத்துக்களைப் பரிமாறுவதற்கு உதவல;<br>• தொலைநிலை அணுகல்<br>• பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பங்களிப்பினை அதிகரித்தல்.<br>• கடந்த கால கூட்ட பதிவேடுகளுக்கதன விரைவான அணுகல் போன்றவை.<br>எவ்வாறாயினும், உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றோம், ஒரு கூட்டத்திற்கான மென்பொருள் செலவு இதன் விலை ரூபா 2,859,000 எனக் கருதப்பட்டது, இது ரூபா 38,120 எனத் திருத்தப்படுதல் வேண்டும். பணிப்பாளர் சபைக்கூட்ட முகாமைத்துவ தீர்வு ஆனது, அதிக எண்ணிக்கையிலான தாள்கள், டோனர்கள், காகிதங்களை பிரதி எடுப்பதற்கான நேர விரயம் என்பவற்றை உள்ளடக்கி நிகழ்ச்சிநிரலை அச்சிடுவதற்கான செலவைக் குறைப்பதற்கு ஆணைக்குழுவினால் இயலுமானது. மேலும் பணிபாளர் சபைத் தாள்கள் மற்றும் சபைத் தீர்மானங்கள் தன்னியக்கமாக காப்பகப்படுத்தப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட காரணங்களினால் ஏனைய அரசாங்க நிறுவனங்களினாலும் மேற்குறிப்பிட்ட வகைத் தீர்வுகள் பயன்படுத்தப்படுகின்றன. அதற்கமைவாக, ஆகுசெலவுடன் ஒப்பிடும் போது உச்சளவான பயனை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு பெற்றுக்கொள்கின்றது. |
| (ii) | மேற்கூறிய தகவல் தொழில்நுட்பத் திட்டம் ரூபா 6,044,647 பெறுமதியுடையதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும், 10 செப்டெம்பர் 2020 திகதியிடப்பட்ட அரச நிதிச் சுற்றுநிருப இலக்கம் 03/2020 இன் 2.5ஆம் பந்திக்கு அமைவாக, இந்த கொள்முதலில் தொழில்நுட்ப விடயங்கள் மற்றும் தெளிவற்ற விடயங்கள் தொடர்பாக தகவல் மற்றும் தொடர்பாமல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்துடன் (ICTA) கலந்து ஆலோசித்ததாகத் தெரியவில்லை | மேற்குறிப்பிட்ட சுற்றுநிருபம் 2020 செப்டெம்பரில் வெளியிடப்பட்டது, ஆனால் 2019 இல் இந்த சபை கூட்டத் தீர்வு, சுற்றுநிருப தேவைப்பாடு வருவதற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டது. |
| (iii) | ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமிக்கும் போது மற்றும் இராஜினாமா செய்யும் போது அவர்களுக்கு ஙீயன மற்றும் தொடர்புடைய உபகரணங்களை வழங்குதல் மற்றும் பெறுதல் தொடர்பாக முறையான ஆவணப்படுத்தல் செயன்முறையை ஆணைக்குழு கொண்டிருக்கவில்லை. | ஆணைக்குழுவின உறுப்பினர்களுக்கு ஙீயன மற்றும் தொடர்புடைய உபகரணங்களை வழங்குதல் தொடர்பாக முறையான ஆவணங்கள் உள்ளன. |
| (iv) | பணிப்பாளர் சபைக்கூட்ட முகாமைத்துவ தீர்வைப் பெறுகை செய்வதற்கு திருத்தப்பட்ட பெறுகை நேர அட்டவணைக்கு ஆணைக்குழுவின் அனுமதிக்கான சான்று கணக்காய்வின் போது வழங்கப்படவில்லை. | பணிப்பாளர் சபைக்கூட்ட முகாமைத்துவ தீர்வு பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், இதில் வன்பொருள் மற்றும் மென்பொருள் உள்ளடங்கியுள்ளது. |

# கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் 2021ஆம் ஆண்டுக்கான ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பதில்கள்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பதிலளிப்பு |
|---|---|---|
| (v) | பெறுகை வழிகாட்டுதலின் வழிகாட்டி 2.7.5இன் படி, வரிசை அமைச்சின் செயலாளர், திணைக்களத்தின் பெறுகைக் குழுவை (DPC) நியமித்தல் வேண்டும். எனினும், பெறுகைக் வழிகாட்டுதலுக்கு அமைவாக மேற்குறிப்பிட்ட குழு நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பான சான்று கணக்காய்வின் போது கிடைக்கப்பெறவில்லை. | 2019ஆம் ஆண்டுக்கான திணைக்களத்தின் பெறுகைக் குழு (DPC) நியமிக்கப்பட்டது. |
| 2.3 | ஏனைய விடயங்கள் | |
| (அ) | உள்ளக கணக்காய்வு சேவையின் பெறுகை | |
| (i) | மற்றும் 2007 ஒகஸ்ட் ஆலோசனையாளர்களின் தேர்வு மற்றும் பணிக்கமர்த்தல் வழிகாட்டிக்கு அமைவாக 19 செப்டெம்பர் 2019 அன்று பிரதான கணக்காய்வு அலுவலரினால் (CAO) நியமிக்கப்பட்ட ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட திணைக்கள ஆலோசனைப் பெறுகைக் குழு (CPCD), பொது நடைமுறையில் உள்ள கணக்காய்வு நிறுவனத்திடமிருந்து கணக்காய்வு பெற்றுக்கொள்வதற்கான பெறுகை மேற்கொள்ளப்பட்டது. திணைக்கள ஆலோசனைக் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிர்வாகக் கையேட்டின் படி அது அதன் பணிகளைத் தொடரவும் தீர்மானித்தது. ஆலோசனைப் பெறுகைக் குழுவில் அங்கத்தவர்களாக பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் நிதி மற்றும் நிர்வாகம் இருந்ததுடன், அவர்களின் செயற்பாடுகள் மற்றும் விவகாரங்கள் உள்ளக கணக்காய்வாளரின் மேற்பார்வையின் கீழ் இருந்தமையினால், இந்த நியமனத்திற்கான சுயாதீனம் கேள்விக்குரியதாகும். அதனால், உள்ளக கணக்காய்வாளரை நியமிக்கும் போது வெளிப்படைத்தன்மை நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை. அதனால் ஆணைக்குழுவிற்கு உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமிக்கும் போது வெளிப்படையான நடைமுறை பின்பற்றப்படவில்லை. எனவே உள்ளக கணக்காய்வாளரின் சுயாதீனம் மற்றும் புறநிலை பாதிக்கப்படலாம். | வழிகாட்டுதல்களுக்கு இணங்க திணைக்கள ஆலோசனைப் பெறுகைக் குழு (CPCD) நியமிக்கப்பட்டுள்ளது. எனினும் கணக்காய்வு வழங்கிய கருத்துக்களைக் கவனத்தில் கொண்டு கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுவின் பரிந்துரைகள் மற்றும் ஆணைக்குழுவின் ஒப்புதலைப் பெற்று 2022 தொடக்கம் 2024 வரையிலான ஆண்டுகளுக்கு உள்ளக கணக்காய்வாளரை நியமிப்பதற்கான ஏற்பாடுகளை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு மேற்கொள்ளும். . |
| (ii) | மீளாய்வுக்கு உள்பட்ட ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வாளரை நியமிக்கும் போது, உள்ளக கணக்காய்வாளருக்கான அறிக்கையிடல் காலங்கள் மற்றும் அளிக்கையிடல் நேர இலக்குகள் வரையறுக்கப்படவில்லை | TOR கணக்காய்வு திட்ட / பணி அட்டவணை கோரியுள்ளது. Tech 8 விபரங்களை உள்ளடக்கியுள்ளது |
| (iii) | ஆணைக்குழுவிற்கு உள்ளக கணக்காய்வு ஆலோசகரைத் தேர்ந்தெடுப்பதற்கு பெறுகையில் உள்ள முன்மொழிவுகளுடன் உள்ளக கணக்காய்வு வேலைத்திட்டம் பெறப்படவில்லை. அதைத் தொடர்ந்து ஆலோசகையாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளின் மதிப்பீட்டக்காக மதிப்பீட்டுக் கட்டத்தில் ஒரு வேலைத் திட்டம் மீளக் கோரப்பட்டது. | அனைத்து ஆதரவாளர்களும் கணக்காய்வுப் பணித்திட்டத்தை முன்மொழிவுகளுடன் சமர்ப்பிக்க வேண்டும். M/s Barker Tilly அவர்களின் முன்மொழிவை அனுப்பும் போது முறைமை மற்றும் பணித் திட்டம் என்பவற்றை சமர்ப்பித்துள்ளார். |
| (iv) | உள்ளக கணக்காய்வு சேவையின் பெறுகை தொர்பான பெறுகை குழு அறிக்கையில், கேள்விப்பத்திரமானது 18 டிசம்பர் 2019 திறக்கப்பட்டுள்ளது. எனினும் கேள்விப் பத்திர மதிப்பீடு 16 ஜுன் 2021 இல் மேற்கொள்ளப்பட்டள்ளது. வழிகாட்டுதல்கள் தேர்வு மற்றும் ஆலோசகர்களை பணியமர்த்துதல் ஆகியவற்றின் பிரிவு 8.4.1இன் படி முன்மொழிவு மதிப்பீடு விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும், தேவையான அனைத்து முறையான அனுமதிகளைப் பெறுவதற்கு போதுமான அனுமதிகளைப் பெறுவதற்கு கால அவகாசம் உள்ளது. எனவே, முன்மொழிவுகள் பெறுகை நேர அட்டவணையில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எனினும், முன்மொழிவுகளின் மதிப்பீடுகள் ஏலம் திறக்கப்பட்ட திகதியில் இருந்து ஆறு மாதத்தின் பின்னரே தாமதத்துடன் மேற்கொள்ளப்பட்டதை அவதானிக்க முடிந்தது. | கோவிட் 19 நோய்ப்பரவல் காரணமாக, அனேக பணிகள் வீட்டிலிருந்தே வீட்டிலிருந்து பணிபுரியும் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டது. அதனால், வழமைபோல் அல்லாது செயன்முறையானது நீண்டகாலம் எடுத்தது. |

# கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் 2021ஆம் ஆண்டுக்கான ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பதில்கள்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பதிலளிப்பு |
|---|---|---|
| (v) | ஆலோசனையாளர்களின் தேர்வு மற்றும் பணிக்கமர்த்தல் வழிகாட்டுதலின் பிரிவு 6.5.9ற்கு அமைவாக, RFP யினை அழைப்பதற்கு முன் மதிப்பீட்டு அளவுகோல்கள் மற்றும் துணை அளவுகள் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். உள்ளக கணக்காய்வாளரைத் தேர்ந்தெடுப்பதற்கான குறுகிய பட்டியல் மற்றும் மதிப்பீட்டு அளவுகோல்களுடன் புள்ளிப் பட்டியல் ஏலம் திறக்கப்பட்டதன் பின்னர் வரையறுக்கப்பட்டது. இந்த வரையறைகள் பெறுகைக் குழுவினால் 16 ஜூன் 2020 அன்று அங்கீகரிக்கப்பட்டது | குறிப்பு விதிமுறைகளின் (ToR) கீழ் மதிப்பீட்டு அளவுகோல்கள் மற்றும் புள்ளிப்பட்டியல் தெளிவாக குறிப்பிடப்பட்டு, ஆலோசனையாளருக்கு முன்மொழிவுகளுக்கான கோரிக்கையை அனுப்பும் போது ஆலோசகர்களுக்கு தெரிவிக்கப்டப்பட்டு, விபரங்களுக்கான பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டது. |
| (ஆ) | பணிப்பாளர் நாயகத்தின் செயற்பாடுகளின் மதிப்பீடு தலைவரினால் மேற்கொள்ளப்பட்டது. இது ஆணைக்குழுவில் உள்ள இரண்டு சக்திவாய்ந்த பதவிகளுக்கு இடையேயான கூட்டுக்கு வழிவகுக்கும் மற்றும் சாதகமற்ற முடிவுகளை எடுக்க வழிவகுக்கும். பணிப்பாளர் நாயகத்தின் செயலாற்றுகை ஆணைக்குழுவினால் மதிப்பிடப்படுதல் சிறந்த நடைமுறையாகும். மேலும், பணிப்பாளர் நாயகத்தின் செயலாற்றுகை மதிப்பீட்டுப் படிவம் கணக்காய்வுக்கு கிடைக்கவில்லை | பணிப்பாளர் நாயகத்தின் உடனடி மேற்பார்வையாளர், தலைவராவர், இவர் பணிப்பாளர் நாயகத்தின் பணியினை மதிப்பீடு செய்கின்றார். மனிதவள ஆலோசனையாளர் நேருக்கு நேரான மதிப்பீட்டு முறையை விதப்புரை செய்துள்ளார்.<br><br>செயலாற்றுகை மதிப்பீட்டு படிவங்கள் தனிப்பட்ட கோப்புகளில் கோப்பிடப்படுகின்றதுடன், பணிப்பாளரின் கோப்பு தலைவரின் பாதுகாப்பில் வைக்கப்படுகின்றது. பணிப்பாளர் நாயகத்தின் தனிப்பட்ட கோப்பு மற்றும் கணக்காய்வுக்கான செயலாற்றுகை மதிப்பீடுகள் பெறப்படாதது பணிப்பாளர், நிதி மற்றும் நிர்வாகம் அல்லது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்படவில்லை, அவர்கள் கணக்காய்வுக்கு கிடைப்பதற்கு வழி செய்திருப்பார்கள். அவை கிடைக்காமை கடிதத்தின் பின்னரே தெரிந்தது. |
| (இ) | காப்பறுதி மையக் கோட்பாடுகள் (ICPs) என்பது சர்வதேச காப்புறுதி மேற்பார்வையாளர்கள் மூலம் உருவாக்கப்பட்டு உலகளாவிய ரீதியல் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளில் கட்டமைப்பாகும். காப்புறுதி ஒழுங்குபடுத்துனர்களின் ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வ தரத்தை மதிப்பிடுவதற்கும் நாட்டில் காப்புறுதித்துறைக்கான விதிமுறைகளை அறிமுகப்படுத்தவதற்கான கட்மைப்பாக பயன்படுத்துவதற்கும், அந்தந்தக் கொள்கைகள் முக்கியமாகும். ஐஏஐஎஸ் உறுப்பினராக ஆணைக்குழு ரூபா 4,124,500 வை 2020ஆம் ஆண்டுக்கு செலுத்தியுள்ளது. ஆணைக்குழுவினால் காப்புறுதி மையக் கோட்பாடுகளுடன் இணங்கும் முறையினை அடையாளம் காண்பதற்கான தகவல்கள் கோரப்பட்டது. எனினும், கோரப்பட்ட விபரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவானது ICPஇன் சில சக மதிப்பாய்வுகளின் ஒரு பகுதியாகும். அவை ICP 1,2,9,10 ஆகும், அங்கு மதிப்பீடு பெரும்பாலும் கவனிக்கப்படுகின்றது. 2019ஆம் ஆண்டில் காப்புறுதி ஒழுங்குபடுத்துனர்களின் சர்வதேச அமைப்பினால் 25 ICP அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ICP 1,2 களின் மேலும் ஆய்வு, காப்புறுதி தொழில் ஒழுங்குமுறைச் சட்டம் மற்றும் துணைச் சட்டத்திற்கு பொருத்தமான விதிகளை திருத்துவதில் / அமைப்பதில் IC யின் மீளாய்வுகள் மேற்கொள்ளப்படும். |

# கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் 2021ஆம் ஆண்டுக்கான ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பதில்கள்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பதிலளிப்பு |
|---|---|---|
| (ஈ) | ஆணைக்குழு 2020ஆம் ஆண்டு வரை, ஆணைக்குழுவின் மிகை நிதியை பூட்கையாளர் நிதியத்திற்கு மாற்றியது. எனினும், மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் இந்தக் கொள்கை திடீரென மாற்றப்பட்டு, ஆணைக்குழு நிதியில் மிகையானது திரட்டப்பட்ட நிதியாக முன்னோக்கி கொண்டு செல்லப்பட்டது. எனினும், இது தொடர்பான ஆணைக்குழுவின் அனுமதி கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இந்த நிதியை முறையான கண்காணிப்பு செய்யாவிடில், நிதியை தவறாகப் பயன்படுத்துதற்கு வாய்ப்புள்ளது. | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு இரண்டு நிதியங்களைக் கொண்டுள்ளது, அவையாவன ஆணைக்குழு நிதியம் மற்றும் பூட்கையாளரின் பாதுகாப்பு நிதியம் ஆகும். இரண்டு நிதியங்களும் 2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதி கைத்தொழிற்துறை ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் கீழ் உள்ள நியதிகளின் கீழ் நிறுவப்பட்டது. ஆணைக்குழுவின் நிதியத்தில் உள்ள நிதி, அதன் அதிகாரத்தை செயற்படுத்துவதற்கும், அதன் பணிகளை மேற்கொள்வதற்கும் செயலாற்றுகைகளை ஆற்றுவதற்கும் அவசியமான செலவுகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்படுகின்றது.<br><br>பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் உத்தேச மற்றும் பூட்கையாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் நிறுவப்பட்டுள்ளது. காப்புறுதியாளரிகளிடமிருந்தான செஸ் தீர்வை மற்றும் முதலீட்டு வருமானங்கள் பூட்கையாளர் பாதுகாப்பு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுகின்றது. பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் நிறுவல் நோக்கமானது ஆணைக்குழுவின் நிதிய நிறுவலின் நோக்கத்திலிருந்து வேறுபடுகின்றது.<br><br>153 மற்றும் 160வது ஆணைக்குழு கூட்டங்களில் இது தீர்மானிக்கப்பட்டது, அந்த வருடங்களில் மிகை இருந்தது.<br><br>சபையின் கணக்கில் ஏதேனும் மிகையை நீக்கி, மிகையானது பூட்கையாளர் பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்றப்படும், மேலும் தேவைப்படும் போது, பூட்கையாளர் பாதுகாப்பு நிதியத்தின் வருடாந்திர வட்டி வருமானத்தில் 20மூக்கு உட்பட்டு, செலவுகளை ஈடுகட்ட அது மீண்டும் அனுப்பப்படும். மேலும் மூலதனச் செலவுகளை ஈடுகட்ட பூட்கையாளர் பாதுகாப்பு நிதியத்திலிருந்து நிதி பரிமாற்றம் முந்தைய நடைமுறையில் செய்யப்படும்.<br><br>இந்த நடைமுறை 2021ஆம் நடைபெற்ற 3வது கணக்காய்வுக் குழுக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன் இரண்டு நிதியத்தினையும் வெவ்வாறாக பராமரிப்பது என தீர்மானிக்கப்பட்டது. பூட்கையாளர் பாதுகாப்பு நிதியம் தொடர்பான விரிவான அறிக்கை அடுத்த கணக்காய்வு கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும். |
| (உ) | நிதித்துறை நவீனமயமாக்கல் திட்டம் | |
| (i) | திட்ட அமுலாக்கம் முழுவதும் செயல்படுத்தும் நிறுவனம், சர்வதேச மேம்பாட்டு சங்கத்திற்கு வருடாந்த வேலைத் திட்டம் மற்றும் ஒவ்வொரு அடுத்த நிதியாண்டு திட்டத்தின் கூறு 2(சீ) இன் கீழ் செயல்பாடுகளுக்கான வரவுசெலவுத்திட்டத்தையும் ஆனால் நவம்பர் 30ற்கு பின்னல்லாது, விரைவில் ஒப்புதலுக்காக விரைாவக வழங்க வேண்டும். எனினும், 2020 மற்றும் 2021ஆம் ஆண்டிற்கான வருடாந்த வேலைத்திட்டங்கள் கணக்காய்வுக்கு வழங்கப்படவில்லை மற்றும் ஆவணங்கள் IDA ற்கு சமர்ப்பிக்கப்பட்டதா என அறிவதற்கு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை | ஆண்டு வேலைத்திட்டம் மற்றும் வரவுசெலவுத்திட்டம் ஆகியவை ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 30ஆம் திகதிக்குள் தேவைக்கு இணங்க மத்திய திட்ட ஒருங்கிணைப்பு பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. வரவுசெலவுத் திட்டத்துடன் நடந்துகொண்டிருக்கும் பெறுகைகள், தேவைகளுக்கு இணங்க அவ்வப்போது உலக வங்கியின் முறையான கண்காணிப்பு முறைமையில் (STEP) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. |

# கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் 2021ஆம் ஆண்டுக்கான ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பதில்கள்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பதிலளிப்பு |
|---|---|---|
| (ii) | இந்தத் திட்டத்தின் கீழ் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் மேற்பார்வையின் கீழ் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி வியாபாரங்களைப் பிரிப்பதற்காக 945,450 அமெரிக்க டொலர்கள் (SDR. 0.67 மில்லியன்) ஒதுக்கப்பட்டது. எனினும், இந்த நோக்கத்திற்கு இந்த நிதி பயன்படுத்தப்படவில்லை. | உலக வங்கி, CPCU இடையே நடைபெற்ற கருத்திட்ட மீளாய்வுக் கூட்டங்களில் தலைவர், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் எனத் தொடங்கப்பட்ட கடிதத்தில், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளர் சபை கடைசியாக அதன் காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி என இரண்டாகப் பிரிப்பதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டது எனவும், உலக வங்கியிடமிருந்து இந்நோக்கத்திற்கு தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக்கொள்வதில்லை எனவும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம், பிரிப்பதற்கான அதன் முன்மொழிலை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டவுடன், ஆணைக்குழுவின் னுடுஜ தொடர்பான பொறுப்பு ஆரம்பிக்கப்பட்டிருக்கும். தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் முன்மொழிவைச் சமர்ப்பித்திருந்தால், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் நம்பிக்கை நிதியம் அதனை மீளாய்வு செய்ய வேண்டும் மற்றும் DLI அடைவது தொடர்பாக ஆட்சேபணையில்லை என்பதை வழங்குதல் வேண்டும். எனினும் NITF பிரிப்பதற்கான அதனுடைய முன்மொழிவை ற்கு அதனுடைய பகுதியை பூர்த்திசெய்வதற்கு வழங்கவில்லை. நாங்கள் NITF இன் பிரிப்பதை கைவிடுதல் எனும் தீர்மானத்தை உறுதிப்படுத்துமாறு கோரினோம். NITF இன் தீர்மானத்திற்கு காத்திருக்கின்றோம். எனினும், இக்கருத்திட்டம் இரத்துசெய்யப்பட்டுள்ளது. |
| (iii) | இந்தக் கருத்திட்டத்தின் கீழ் ஆணைக்குழுவின் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் இயலளவைப் பலப்படுத்துவதற்கான விரிவான பணித்திட்டம் கணக்காய்வுக்கு கிடைக்கவில்லை. | ஆண்டு வேலைத்திட்டம் மற்றும் வரவுசெலவுத்திட்டம் ஆகியவை ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 30ஆம் திகதிக்குள் தேவைக்கு இணங்க மத்திய திட்ட ஒருங்கிணைப்பு பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. வரவுசெலவுத் திட்டத்துடன் நடந்துகொண்டிருக்கும் பெறுகைகள், தேவைகளுக்கு இணங்க அவ்வப்போது உலக வங்கியின் முறையான கண்காணிப்பு முறைமையில் (STEP) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. |

# கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் 2021ஆம் ஆண்டுக்கான ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பதில்கள்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பதிலளிப்பு |
|---|---|---|
| (iv) | கருத்திட்டத்தின் நோக்கத்தை அடைவதற்கு, நிபுணர்களும் ஆலோசனையாளர்களும் இணைந்து பணிபுரிதல் வேண்டும். எனினும், காலத்திற்கு காலம் ஆலோசனையாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதுடன், இந்தக் கருத்திட்டத்தின் பொது நோக்கத்தை அடைவதற்கு அவர்களிடையே பலமானதொரு உள்ளக்தொடர்பு இருந்ததை அவதானிக்க முடியவில்லை. இந்த நலிவான கருத்திட்ட முகாமைத்துவம் காரணமாக, எதிர்பார்க்கப்பட்ட கருத்திட்ட நோக்கங்களும் பெறுபேறுகளும் அடையப்படவில்லை | ஒப்பந்தம்/ பெறுகைத்திட்டங்கள் போன்றவற்றின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஆலோசனை சேவைகளுக்கான நடைமுறையை பிரயோகிப்பதற்கு ஐசுஊளுடு விரும்புகின்றது:<br>I. காப்புறுதிக் கணிப்பீட்டு நிபுணர்<br>II. காப்புறுதி நிபுணர்<br>III. தகவல் தொழில்நுட்ப நிபுணர்<br>IV. மனிதவள நிபுணர<br>V. இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை சட்டகத்தை நவீனமயப்படுத்துவதற்கான ஆலோசனை நிறுவனம<br><br>ஆலோசகர்கள் செயல்பாட்டின் தன்மையின் காரணமாக ஓரளவிற்கு உள்ளக உறவினையும் கொண்டிருந்தனர். மேற்குறிப்பிட்ட வுழுசுள ஆலோசனையாளர்களின் மேற்குறித்த நோக்கத்தை அடைவதற்கான திட்டத்தை பிரதிபலிக்கின்றது. இனால் 2 ஆலோசனையாளர்களை நியமிக்க முடிந்ததுடன், பெறுகை நடைமுறை காரணமாக ஏற்படும் தடைகளினால் ஏனைய 3 ஆலோசனையாளர்களையும் நியமிக்க இயலாது போனது |
| (ஊ) | காப்புறுதி கணிப்பீட்டாளர் தனது ஒப்பந்தத்தை 29 மார்ச் 2022ஆம் திகதி முதல் இடைநிறுத்தியுள்ளார். காப்புறுதி கணிப்பீட்டு ஆலோசனையாளரின் 24 ஜனவரி 2020 இல் "இன்று வரையிலான காப்புறுதி (கணிப்பீட்டு) திட்டத்தின் ஆலோசகரின் மதிப்பீடு" எனப் பெயரிடப்பட்ட அறிக்கையின் படி, பணிநீக்கம் செய்யப்பட்டதற்கான காரணங்கள் நிர்வாகத்தால், அவரது பரிந்துரைகளுக்கு கருத்துக்களை வழங்கவில்லை, எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. செயல்திட்டங்களை செயல்படுத்தவும், பின்னூட்டல் செய்யவும் ஆணைக்குழுவினால் அவரது முன்மொழிவுகளுக்கு நியாயமான வாதங்களுடன் பதிளளிக்கப்படவில்லை, இந்த கருத்திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட வேண்டிய காப்புறுதி நிபுணரின துணையின்றி, காப்புறுதிக் கணிப்பீட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது, ஆணைக்குழு காப்பறுதி மற்றும் தகவல் தொழில்நுட்ப நிபுணர்களை வழங்குதல் வேண்டும், ஆனாலும் வழங்கவில்லை, எவ்வித சரியான விளகங்களும் அளிக்கப்படாது அவருடைய ஆலோசனைகள் தவிர்க்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அவதானிப்புகளின் படி, ஆலோசனை கணிப்பீட்டாளருக்கு செலுத்தப்பட்ட 168,000 அமெரிக்க டொலர் கொடுப்பனவானது பொருளாதார நன்மையற்ற கொடுப்பனவதாக அவதானிக்கப்படுகின்றது. | ஆலோசகர் EOI க்கு பதிலளிக்கும் வகையில் TORஇல் உள்ள அனைத்து பணிகளையும் நிறைவேற்ற ஒப்புக் கொண்டு தனது திட்டத்தை சமர்ப்பித்தார். ஆனால் ஒப்பந்தம் கைச்சாத்திட்டதன் பின்னர் பல்வேறுபட்ட காரணங்களினால் ஏற்றுக்கொள்ளத, சில இலக்குகளை பூர்த்திசெய்வதற்கு அவர் உடன்படவில்லை. குறிப்பிட்ட மதிப்பீட்டு அறிக்கை IRCSL ற்கு ஆலோசகரால் சமர்ப்பிக்கப்படவில்லை. அதனால் நாங்கள் அதற்கு பதிலளிக்கவில்லை. அதேவேளை, அந்தநேரத்தில் மதிப்பீட்டு அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான தேவைப்பாடு இருக்கவில்லை. அவரினால் திறைசேரி செயலாளருக்கும் ஜனாதிபதி செயலாளருக்கும் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பாக நாங்கள் அமைச்சின் ஊடாக அவரது அறிக்கையின் பிரதியொன்றைப் பெற்றுக்கொண்டோம். அதற்கமைவாக, இந்த விடயம் ஆணைக்குழு மட்டத்தில் கலந்துரையாடப்பட்டு, மேலதிக மீளாய்வுக்காக கணக்காய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்டது. அவருடைய நியாயமற்ற குற்றச்சாட்டுகள் தொடர்பாக அனைத்து சிரேஷ்ட முகாமைத்துடன் கணக்காய்வுக் குழு விரிவான கலந்துரையாடல்களை மேற்கொண்டது. சமரசமாக அவரினால் வழங்கப்பட்ட சில அறிக்கைகளுக்கு விகிதாசார கட்டணத்தை செலுத்துவது என கணக்காய்வுக் குழு தீர்மானித்தது. அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்காக IRCSL ற்கு உடன்பாடு இல்லை. மேலும் IRCSL அவரது ஆலோசனைகளை கருத்தில் கொள்ளாமல் இருக்கவில்லை. அவர், உரிய தரப்பினருடன் கலந்துரையாடி பல விடயங்கள் தொடர்பாக ஆலோசனை அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு கோரப்பட்டிருந்த போதிலும், அவர் அவ்வாறு செய்யவில்லை. காப்புறுதி நிபுணரின் பணிகளைச் செய்யத் தகுதியுடையவர் எனக் கூறி, காப்புறுதி நிபுணர் இல்லாமல் செயல்படுவதற்கு மேலதிக பணத்தையும் கேட்டார். எனினும், நாங்கள் அவருடைய வேண்டுகோளுக்கு இணங்கவில்லை. ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகளுக்கு |

# கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் 2021ஆம் ஆண்டுக்கான ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பதில்கள்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பதிலளிப்பு |
|---|---|---|
| | | அமைவாக, ஒரு தடவையேனும் அவர் இலங்கைக்கு வரவில்லை. அவர் அவருடைய விசா மற்றும் கால மற்றும் மனிதவள விரயம் பற்றி வாதாடுகின்றார். அவருடைய அறிக்கையில் உள்ள அனேக விடயங்கள், ஆனைக்குழுவிற்கு இறுதி அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு கலந்துரையாடலுக்கு உட்பட்டவையாகும். எனினும், சில அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டது. ஆக்கக்கூறு 15(b) என்பது தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் கீழ் ஒரு பணியாகும், இதில் காப்புறுதிக் கணிப்பீட்டு ஆலோசகர் ஐசுஊளுடு ற்கு துணைச் சேவைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்க வேண்டும். ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ளபடி, ஐசுஊளுடுஇன் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களினால் தகவல்தொழில்நுட்ப பெறுகையை வழங்க முடியவில்லை. அதனால், காப்புறுதி ஆலோசனையாளருக்கான கொடுப்பனவை பொருளாதார பெறுமதியற்ற கொடுப்பனவு எனக் கருத முடியாது. அறிக்கைகள் IRCSL இன் சொத்து மற்றும் அனைத்து ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கைகளிலும் உள்ள ஆலோசனைகள் ஒரு காப்புறுதிக் கணிப்பீட்டாளரை ஐசுஊளுடு நியமிக்கும் போது பயன்படுத்தப்படும். தற்போதைய ஆணைக்குழு கூட நேரடியாக ஒரு காப்புறுதி கணிப்பீட்டாளர் கூட நேரடியாக ஒரு காப்புறுதி கணிப்பீட்டாளர் ஆட்சேர்ப்பு செய்வதில் ஈடுபட்டுள்ளது, ஆனால் குறைந்த சம்பள கட்டமைப்புகள் காரணமாக வெற்றிபெறவில்லை என்பதால் இது ஒரு தனி விவாதம். |
| (vi) | கணக்காய்வுக்கு கிடைக்கப்பெற்ற தகவலின்படி, காப்புறுதிக் கணிப்பீட்டு ஆலோசகர் எந்த அறிக்கையையும் வெளியிடவில்லை அல்லது கொடுக்கப்பட்ட வேலைத்திட்டத்தின் படி கூறுகளுக்கு வேலை செய்யவில்லை. அதனால், 17 கூறுகளில் 14 கூறுகளுக்கான இறுதி மற்றும் வரைவு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. கணக்காய்வுக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, இந்த அறிக்கைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படவில்லை மற்றும் ஒழுங்குபடுத்துனராக ஆரம்பித்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் கொள்கைகளை உருவாக்குவதற்கு பொறுப்பானவர்கள் இந்த அறிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடியமைக்கு எவ்வித சான்றுகளும் இல்லை. | அறிக்கைகள் IRCSL இன் சொத்து மற்றும் ஐசுஊளுடு ஒரு கணிப்பீட்டாளரை பணியமர்த்தும் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து அறிக்கைகளிலும் உள்ள ஆலோசனைகள் பயன்படுத்தப்படும் மற்றும் ஐசுஊளுடு ஒரு கணிப்பீட்டாளரை பணியமர்த்தும் நடைமுறைகளை மேற்கொண்டு வருகின்றது |
| (vii) | பணித்திட்டத்தின்படி, காப்புறுதிக் கணிப்பீட்டு ஆலோசகரின் பணியானது, காப்புறுதி மற்றும் தகவல்தொழில்நுட்பம் போன்ற பிற ஆலோசகர்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே, அந்த ஆலோசகர்களிடையெ ஒருங்கிணைக்க ஆணைக்குழு அவர்களுக்கு வசதி செய்யவில்லை என்பதை நாங்கள் அவதானித்தோம். | ஒப்பந்தம்/ பெறுகைத்திட்டங்கள் போன்றவற்றின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஆலோசனை சேவைகளுக்கான நடைமுறையை பிரயோகிப்பதற்கு IRCSL விரும்புகின்றது:<br>I. காப்புறுதிக் கணிப்பீட்டு நிபுணர்<br>II. காப்புறுதி நிபுணர்<br>III. தகவல் தொழில்நுட்ப நிபுணர்<br>IV. மனிதவள நிபுணர்<br>V. இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை சட்டகத்தை நவீனமயப்படுத்துவதற்கான ஆலோசனை நிறுவனம்.<br><br>ஆலோசகர்கள் செயல்பாட்டின் தன்மையின் காரணமாக ஓரளவிற்கு உள்ளக உறவினையும் கொண்டிருந்தனர். எனினும், மனிதவள நிபுணர் காப்புறுதிக் கணிப்பீட்டு நிபுணருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டார், இருவரும் ஒரே காலத்தில் IRCSLஇல் சேவையாற்றினர |

# கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் 2021ஆம் ஆண்டுக்கான ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பதில்கள்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பதிலளிப்பு |
|---|---|---|
| (viii) | மனிதவள ஆலோசகருக்கு ஒதுக்கப்பட்ட பணியின்படி, ஆலோசகரின் பணியைச் செய்யும் போது வாடிக்கையாளரின் எதிர்கால முன்னேற்றங்களைப் பற்றிய கருத்துக்களைப் பெறுவதற்காக, திட்டத்தின் கீழ் பணியமர்த்தப்பட்ட பிற ஆலோசகர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்பது இறுதிப் பணியாகும். திட்ட முன்னேற்றத்தின் படி, செயல் ஆலோசகர் மட்டுமே நியமிக்கப்பட்டார். இந்த திட்டத்தில் மனிதவள ஆலோசகர் மற்ற ஆலோசகர்களுடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடினார் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. அதனால், ஆலோசனையாளர்களுக்கு இடையில் உரிய ஒருங்கிணைப்பு இல்லாமையினால், இந்த கருத்திட்டம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றை அடையவில்லை | மனிதவள நிபுணரின் எதிர்பார்க்கப்படும் விளக்கங்கள் அவரது ஒப்பந்த காலத்தில் சரியாக வழங்கப்பட்டுள்ளன. காப்பறுதிக் கணிப்பீட்டு நிபுணத்துவம் தவிர மற்ற ஆலோசகர்கள் இல்லாததால், அங்கு அவர் கலந்துரையாடினார். மேலும், மற்ற அனைத்து நிபுணர்களின் வுழுசுஏ கள் மற்றும் மனிதவள பணியிலிருந்து என்ன தேவை என்பதை அவர் புரிந்துகொண்டார். அவரது அனைத்து அறிக்கைகளும் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அவர் அனைத்து ஆணைக்குழு உறுப்பினர்களுடன் கூட்டாகவும் தனித்தனியாகவும் பல கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளார். சில அறிக்கைகள் ஆணைக்குழுவிடட நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டள்ளன, ஏனையவை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு முன் உப மனிதவளக்குழுவில் கலந்துரையாடப்படவுள்ளது |
| (ix) | டிசம்பர் 31, 2021ற்கான முன்னேற்ற அறிக்கை மற்றும் நவம்பர் 29, 2021 உலக வங்கி பிரதிநிதியிடமிருந்து பெறப்பட்ட மின்னஞ்சலின் படி, FSMP திட்டம் ஜுன் 30, 2022 இலிருந்து முடிவடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், திட்டத்தை நிறுத்துவதற்கு எடுக்கப்பட்ட முடிவின் திகதி, திட்டத்தை நிறுத்தவதற்கான முடிவை எடுக்கும் அதிகாரம், திட்டத்தை நிறுத்துவதற்கான காரணங்கள் கணக்காய்வுக்கு கிடைக்கவில்லை. | இந்த கருத்திட்டம் 26.01.2022ஆம் திகதி இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இந்தத் தீர்மானத்திற்கு அமைவாக, நிதி அமைச்சினால் கருத்திட்டம் இரத்துசெய்யப்பட்டு, நிதி அரசாங்கத்தின் முன்னுரிமை தேவைகளுக்கு ஒதுக்கப்பட்டது. |
| (எ) | 2020 மற்றும் 2021ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் 20 ஒக்டோபர் 2022 வரை கிடைக்கப்பெறவில்லை. அதனால், அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு காண்பதற்கு ஆணைக்குழுவினால் முடியாமல் போகும். மேலும், வெளிவாரி கணக்காள்வாளரின் திட்டங்கள் மற்றும் செயலாற்றுகைகளை மேற்கொள்வதற்கு, உள்ளக கணக்காய்வாளரின் பணிகளைப் பயன்படுத்துவதற்கு, வெளிவாரி கணக்காய்வாளரினால் இயலாமல் போகும். | 2020ஆம் ஆண்டுக்கான அறிக்கை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் பெப்பவரி 2022இல் பெறப்பட்டள்ளது. 2021ஆம் ஆண்டுக்கான அறிக்கை இதுவரை கிடைக்கப்பெறவில்லை. 30.07.2021ஆம் திகதி நடைபெற்ற கணக்காய்வுக் குழுக்கூட்டத்தில் 2019ஆம் ஆண்டுக்கான உள்ளக கணக்காய்வு அறிக்கை கலந்துரையாடப்பட்டது. 10.11.2021ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் பின்னூட்டல் பணிகள் கலந்துரையாடப்பட்டது. கணக்காய்வுக் குழுவின் அறிக்கைகள் விதப்புரையுடன் அனுமதிக்காக ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டள்ளது. மேலும் இவ்வாறான உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வுக் குழுவினால் கலந்துரையாடப்படும் போது, வெளிவாரி கணக்காய்வாளர் அழைக்கப்பட்டார் |

# கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் 2021ஆம் ஆண்டுக்கான ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பதில்கள்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பதிலளிப்பு |
|---|---|---|
| (ஏ) | சட்டமா அதிபரின் கருத்தின் அடிப்படையில், ஆணைக்குழு தமது சொந்த பணிக்குழு மற்றும் சம்பளத் திட்டத்தை தீர்மானித்துள்ளது. 31 மே 2019, விஞ்ஞாபனத்தின் ஊடாக, பணிப்பாளர் நாயகம் 01 ஜுலை 2018 முதல் அமுலுக்கு வரும் வகையில் ஆணைக்குழு ஊழியர்களுக்கு, சம்பள சீராக்கம், பதவியணி திருத்தம், ரூபா 7,800 வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு, அடிப்படை சம்பளத்தில் 15% வீத தகுதிக் கொடுப்பனவு மற்றும் ரூபா 12,5000 விசேட வாழ்க்கை தரக் கொடுப்பனவு என்பவற்றுக்கான அனுமதியைக் கோரியுள்ளார். ஆணைக்குழுவானது நிதி அமைச்சின் விடயப்பரப்பினுள் வரும் ஒரு நிறுவனமாக இருந்த போதிலும், அவர்களுடைய பதவியணி மற்றும் சம்பள மற்றும் கொடுப்பனவு அதிகரிப்பு தொடர்பாக இணைவானையை அல்லது சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை | IRCSL இன் ஊதியம் தொடர்பாக ஆணையத்தினால் நியமிக்கப்பட்ட குழு, கடந்த 13ஆண்டுகளில் 2012இல் மட்டும் ஒரு சம்பளத் திருத்தம் மேற்கொண்டதாக குறிப்பிட்டுள்ளதுடன் குறிப்பாக சந்தையில் உள்ள ஏனைய நிதியியல் ஒழுங்குமுறைப்படுத்துனர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்துடன் ஒப்பிடுகையிலும், சந்தை வீதங்களைப் பார்க்கையிலும் ஊழியர்களின் சம்பளம் போதியளவாக காணப்படவில்லை. இதன் விளைவாக, IRCSL ஆனது, காப்புறுதித்துறையில் தொடர்ந்து அதிகரித்துவரும விசாரணைகள், ஒருங்கிணைப்புகள் மற்றும் கையகப்படுத்தல்கள் போன்ற சிக்கலான சவால்களை எதிர்கொள்ள, தகுதியான மற்றும் அனுபவம் வாய்ந்த ஊழியர்களை பணிக்கமர்த்துவதற்கும், தற்போதுள்ள தகுதிவாய்ந்த மற்றும் அனுபவம் வாய்ந்த ஊழியர்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் இயலாது. ஒழுங்குபடுத்துனரின் செயற்திறன், வினைத்திறன் மற்றும் பொருத்தத்தை மேம்படுத்த சர்வதேச காப்புறுதி நடைமுறைகளுக்கு ஏற்ப கட்டமைப்பை மேம்படுத்த வேண்டிய தேவையும் உள்ளது. மேலும், ஏனைய ஒழுங்குபடுத்துனர்கள் போலவே சிறந்த இழப்பீட்டு பொதியொன்னையக் கொண்டிருப்பது தொடர்பான பின்வரும் உண்மைகளை முன்னிலைப்படுத்த விரும்புகின்றோம். IRCSL இன் ஒவ்வொரு பதவிக்கான ஆட்சேர்ப்புகளும், புகழ்பெற்ற நிறுவனங்களும் மற்றும் அனைத்து நிறைவேற்று மற்றும் amp; மேலே உள்ள ஊழியர்கள் தகுந்த தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். சட்டத்தின் விதிகளின் படி, சட்டமன்றம் தான் நிறுவிய நிறுவனத்திற்கு சில சுயாட்சியை வழங்கியது.<br><br>ஆணைக்குழுவின் மொத்த வருமானத்தில் சம்பளக்கூறு 24% வீதமாகும். PED 01/2021 இன் அடிப்படையில் நிதி அமைச்சிற்கு எழுதப்படும். |
| (ஐ) | ஜுலை 18, 2018ஆம் திகதியிடப்பட்ட 03/2048 முகாமைத்துவ சேவை சுற்றறிக்கைக்கு மாறாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அனுமதியைப் பெறாமல் சட்டமா அதிபரின் கருத்தின் அடிப்படையில் 2019ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் சம்பளம் 12.98% இருந்து 59.73% வீதமாக அதிகரித்துள்ளது. சபையிலுள்ள திறைசேரிப் பிரதிநிதி, இது தொடர்பில் சபைக்கு தனது சுயாதீனமான கருத்தைக் கொண்டுவந்து பொது நலனைப் பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. | ஊதியக் குழுவால் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வின் அடிப்படையிலும் ஆணைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலும் சம்பளம் திருத்தப்பட்டது. சட்டமா அதிபரின் கருத்து எடுத்த நிலைப்பாட்டை உறுதிப்படுத்தியது. ஊதியக் கட்டமைப்பை மாற்றியமைக்கும் முடிவை ஆணைக்குழு ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. ஆணைக்குழுவின் மொத்த வருமானத்தில் சம்பளத்தின் அளவு 24% வீதமாகும். PED 01/2021 இன் அடிப்படையில் நிதி அமைச்சிற்கு எழுதப்படும். |

# கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் 2021ஆம் ஆண்டுக்கான ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பதில்கள்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பதிலளிப்பு |
|---|---|---|
| (ஓ) | ஆணைக்குழு தமது ஊழியர்களுக்கு சுய பங்களிப்புக் காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. ஆணைக்குழு அவர்களின் நிதியில் ரூபா 6.2 மில்லியனை 2021ஆம் ஆண்டுக்காக ஊழியர்களின் பங்களிப்பு ஏதுமின்றி காப்புறுதிக் காப்பீட டைப் பெற்றுக்கொள்வதற்காக செலவளித்துள்ளது. எனினும், 2017ஆம் ஆண்டு, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் சுய பங்களிப்பு காப்புறுதித் திட்டத்தை பகுதியளவு அரச துறை ஊழியர்களுக்கும், ஊழியரிடமிருந்து ரூபா 1000.00 பங்களிப்புடன் விரிவுபடுத்தியது. | ஆணைக்குழுவின் ஆரம்பத்திலிருந்தே, ஊழியர்களுக்கு காப்புறுதிக் காப்பீட்டை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு வழங்குகின்றது. இது அவர்களின் ஊதியத்தின் ஒரு பகுதியாகும். அனைத்து சந்தர்ப்பங்களிலும் பெறுகை நடைமுறை சரியாக பின்பற்றப்பட்டது<br><br>PED 6/2019 இல், நிறுவனங்களுக்கு இந்த சேவையைப் பெறுவதற்கான வசதிகள் மற்றும் சேவைகளின் தரம் போன்றவற்றை உள்ளடக்கிய செலவு, ஈடுசெய்யப்பட்ட வேண்டிய ஆபத்தின் தன்மை போன்றவற்றை கருத்தில் கொள்ளமாறு நிறுவனங்களுக்கு அறிவுறுத்துகின்றது.<br><br>செப்டெம்பர் 12, 2019 (கோப்பு பக்க எண்ண 51) திகதியிட்ட பொது நிதிச் சுற்றறிக்கை எண் 06/2019(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கு இணங்க, IRCSL இன் கீழ் பதிவுசெய்யப்பட்டதும் சந்தைப் பங்கின் அடிப்படையில் முதல் 5 நிறுவனங்களில் அரசுக்கு சொந்தமான காப்புறுதி நிறுவனங்களில் இருந்து விலைக்கேள்விகளைக் கோருவதற்கு திணைக்களத்தின் பெறுகை குழு தீர்மானித்தது. தேசிய காப்புறுதி நிறுவனம் கேள்விமனுவை அனுப்பவில்லை. நீண்ட காலமாக இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கு சுகாதாரக் காப்புறுதியை வழங்கிய இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம், அந்த இடத்தில் கோரிக்கை தீர்வு சேவையை வழங்கல, விரிவான கோவிட் 19 காப்பீடு உள்ளடங்களாக தரமான சேவையை வழங்குகின்றது.<br><br>மேலும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் மோட்டர் மற்றும் தனிப்பட்ட விபத்து காப்பீடு தொடர்பாக திருப்திகரமான சேவையை கடந்த காலங்களில் வழங்கவில்லை<br><br>மேலும், அக்ரஹார காப்புறுதித் திட்டம் திறைசேரியினால் ஆதரவு வழங்கப்பட்ட திட்டமாகும். அதனால், அது பொருத்தமானதல்ல. |
| (ஓ) | 2021ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட நலன்புரிச் செலவு ரூபா 3,036,000 ஆனால் உண்மையான செலவு ரூபா 3,477,654.00 ஆகும். அதற்கமைவாக ரூபா 441,654 (12.7 சதவீதம்) வரவுசெலவுத்திட்டத்தை விட அதிகமாக செலவழிக்கப்பட்டுள்ளது. மேலும், மீளாய்வுக்குட்பட்ட ஆண்டு, போக்குவரத்துக்கான நலன்புரி செலவு தவிர்த்து, ஏனைய நலன்புரிச் செலவாக ஆணைக்குழு ரூபா 36,640.00ஐ ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலவழித்துள்ளது | IRCSL இன் 2021ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் நலன்புரிச் செலவாக ரூபா 3,100,000 ஒதுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, ரூபா 1.3 மில்லியன், ஆணைக்குழுவின் அனுமதியுடன் ஊழியர் நலன்புரிக்கு மாற்றப்பட்டது. (ஆணைக்குழுப் பத்திர இல 206/08 திகதி 05/03/2021).<br><br>கோவிட் நோய்ப்பரவல் காலத்திலிருந்து, IRCSL ஊழியர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்கி வருகின்றது. ஊழியர் நலன்புரி மற்றும் உள்;ர் போக்குவரத்து வரவுசெலவுத்திட்டத்தில் இருந்து போக்குவரத்து செலவு கோவிட் காலத்திலிருந்து மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைவாக,<br><br>(அட்டவணை கீழே)<br><br>அதனால், செலவு வரவுசெலவுத்திட்டத் தொகையினுள் உள்ளது. |

| விபரம் | வரவுசெலவுத்திட்டம் (ரூபா) | உண்மைச் செலவு (ரூபா) |
|---|---|---|
| ஊழியர் நலன்புரி | 4,400,000/- (ரூ. 1.3 Mn மாற்றல் உள்ளடங்களாக) | 4,518,164 |
| உள்ளுர் போக்குவரத்து | 260,000/- | |
| மொத்தம் | 4,660,000/- | 4,518,164 |

# நிதியியல் நிலைமை கூற்று

31 டிசம்பர் 2021 அன்றுள்ளவாறு

| | குறிப்புகள் | 31.12.2021 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.2020 இல் முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| **சொத்துகள்** | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துகள்** | | | |
| ஆதனங்கள், பொறிகள், மற்றும் உபகரணங்கள் | 1 | **23,827,365** | 15,984,713 |
| நிலையான மற்றும் மீளளிக்கக்கூடிய வைப்புகள் (PPF) | 2 | **445,593,949** | 868,593,949 |
| ஏனைய நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 3 | **9,639,737** | 8,034,020 |
| **நடைமுறையல்லாச் சொத்துகள்** | | **479,061,051** | 892,612,682 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| சரக்கிருப்பு | 4 | **598,430** | 522,560 |
| காப்புறுதிக் கொள்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் - முதலீடுகள் மற்றும் ஏனையவை | 2 | **7,995,830,615** | 6,605,893,807 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 5 | **12,448,937** | 13,164,043 |
| நிலையான வைப்புகளில் முதலீடுகள் | | **-** | 35,000,000 |
| அரசாங்க பிணையங்களில் உள்ள முதலீடுகள - ரிபோ | | **220,000,000** | 110,000,000 |
| காசுக்குச் சமமானவையும் | 6 | **6,320,185** | 5,673,130 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **8,235,198,168** | 6,770,253,540 |
| **மொத்த சொத்துக்கள்** | | **8,714,259,219** | 7,662,866,222 |
| **ஒதுக்குகளும் பொறுப்புகளும்** | | | |
| **ஒதுக்குகளும் நிதிகளும்** | | | |
| பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் | 7 | **8,441,424,564** | 7,468,719,235 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கு | | **28,593,684** | 17,689,652 |
| திரட்டப்பட்ட நிதி | | **162,942,114** | 92,731,913 |
| நிதி அமைச்சில் இருந்து கிடைக்கப்பெற்ற மானியம் | | **552,384** | 307,535 |
| **மொத்த ஒதுக்குகளும் நிதிகளும்** | | **8,633,512,746** | 7,579,448,336 |
| **பொறுப்புகள்** | | | |
| **நடைமுறையல்லாப் பொறுப்புகள்** | | | |
| மானியம் | 8 | **5,061,291** | 10,829,811 |
| பிற்போடப்பட்ட வரிகள் | 21 | **1,898,049** | 483,021 |
| ஓய்வு நலக் கடப்பாடு | 9 | **21,614,840** | 19,473,749 |
| **மொத்த நடைமுறையல்லாப் பொறுப்புகள்** | | **28,574,180** | 30,786,581 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| பெற்றுக்கொண்ட முற்பணங்கள் | | **16,380,329** | 14,140,076 |
| ஏனைய நடைமுறைப் பொறுப்புகள் | 10 | **35,791,964** | 37,085,332 |
| வங்கியின் மறை மீதி | 6 & 22 | **-** | 1,405,898 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புகள்** | | **52,172,293** | 52,631,306 |
| **மொத்த ஒதுக்குகளும் பொறுப்புகளும்** | | **8,714,259,219** | 7,662,866,222 |

இந்தக் கணக்குக் கூற்றுக்களைத் தயார் செய்வதிலும், சமர்ப்பிப்பதிலும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களே பொறுப்புடையவர்களாவர்.

"மேலே கூறப்பட்ட நிதிநிலைமைக் கூற்று, கணக்கியல் கொள்கைகள் மற்றும் 136 தொடக்கம் 154 ஆம் பக்கம் வரையிலான குறிப்புகளோடு சேர்த்து வாசிக்கப்படல் வேண்டும்."

**ரசீக் ஸாருக்**
தலைவர்

**அங்கத்தவர்**

**தமயந்தி பெர்னாண்டோ**
பணிப்பாளர் நாயகம்

**சதீஸ் குமார்**
பணிப்பாளர் நாயகம் - நிதி மற்றும் நிர்வாகம்

கொழும்பு, இலங்கை
30 செத்தெம்பர் 2022

# நிதிச் செயலாற்றுகை கூற்று

31 டிசம்பர் 2021 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | குறிப்புகள் | 31.12.2021 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.2020 இல் முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| பரிமாற்ற கொடுக்கல்வாங்கலகள் அல்லாத வருமானம் | | | |
| வருடாந்த கட்டணங்கள் மற்றும் புதுப்பித்தல் கட்டணங்கள் | 11 | **272,610,654** | 259,396,415 |
| மானிய அங்கீகாரம் | 8 | **-** | 2,905,041 |
| FSMP இல் இருந்து வருமானம் | 12 | **255,150** | 12,344,401 |
| பரிமாற்ற கொடுக்கல்வாங்கலகள் அல்லாத வருமானம் | | | |
| வட்டி வருமானம் | 13 | **12,609,727** | 12,784,254 |
| ஏனைய வருமானம | 14 | **425,296** | 210,661 |
| **மொத்த வருமானம்** | | **285,900,827** | 287,640,772 |
| **செலவுகள்** | | | |
| ஊழியர் ஆகுசெலவு | 15 | **(127,134,065)** | (110,760,060) |
| தொழில்முறைக் கட்டணங்கள் | 16 | **(320,576)** | (302,000) |
| தொழிற்பாட்டு செலவுகள் | 17 | **(71,346,108)** | (66,594,283) |
| FSM கருத்திட்ட செலவுகள் | 18 | **(255,150)** | (640,875) |
| நிதி மற்றும் ஏனையவை | 19 | **(54,613)** | (70,628) |
| **மொத்தச் செலவு** | | **(199,110,512)** | (178,367,845) |
| வரிக்கு முன்னரான தேறிய மிகை /(பற்றாக்குறை) | | **86,790,315** | 109,272,927 |
| வரிவிதிப்பு | 21 | **(16,014,436)** | (16,348,823) |
| காப்புறுதிப் பூட்கையாளர் நிதியத்திற்கு மாற்றப்பட்ட மிகை | | **-** | (93,214,934) |
| வரிக்கு பின்னரான மிகை /(பற்றாக்குறை) | | **70,775,879** | 290,831 |
| திரட்டிய நிதிக்கு மாற்றப்பட்ட மிகை | | **70,279,670** | - |
| ஓய்வு நன்மைகள் தேவைப்பாட்டின் மீது உண்மையான நட்டம் / (ஈட்டுகை) | 9 | **496,209** | (290,831) |
| **வருடத்திற்கான தேறிய மிகை** | | **69,783,461** | - |

"மேலே கூறப்பட்ட நிதிநிலைமைக் கூற்று, கணக்கியல் கொள்கைகள் மற்றும் 136 தொடக்கம் 154 ஆம் பக்கம் வரையிலான குறிப்புகளோடு சேர்த்து வாசிக்கப்படல் வேண்டும்."

# தேறிய சொத்துகளின் மாற்றங்கள் மீதான கூற்று

31 டிசம்பர் 2021 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள் ரூபா | திரட்டப்பட்ட மிகைகள் (பற்றாக்குறை) ரூபா | மொத்தம ரூபா |
|---|---|---|---|
| **01 ஜனவரி 2019 அன்று மீதி** | 17,689,652 | 41,337,937 | 59,027,589 |
| சம்பள திருத்தத்திற்கு உரிய முன்வருட சீராக்கல் | - | (11,643,186) | (11,643,186) |
| 2018ற்குரிய வருமான வரி சீராக்கல் | - | (11,190,575) | (11,190,575) |
| காப்புறுதிப் பூட்கையாளர் நிதியத்திற்கு மாற்றப்பட்ட 2018 மீதான மிகை | - | (18,504,176) | (18,504,176) |
| இவ்வருடத்திற்கான மிகை | - | (2,189,555) | (2,189,555) |
| கணிப்பீட்டு நட்டம்/(ஈட்டுகை) | - | 515,801 | 515,801 |
| காப்புறுதிப் பூட்கையாளர் நிதியத்திற்கு மாற்றல் | - | 1,673,754 | 1,673,754 |
| 31 டிசம்பர் 2019 அன்று மீதி | **17,689,652** | **-** | **17,689,652** |
| 01 ஜனவரி 2020 அன்று மீதி | 17,689,652 | - | 17,689,652 |
| ஆரம்ப மீதியில் பிற்போடப்பட்ட வரியின் தாக்கம் | - | (633,973) | (633,974) |
| இவ்வருடத்திற்கான மிகை | - | 96,001,300 | 96,001,300 |
| PPF அற்கு மாற்றப்பட்டது | - | (95,600,233) | (95,600,233) |
| கணிப்பீட்டு ஈட்டுகை மீது பிற்போடப்பட்ட வரியின் தாக்கம் | - | 40,716 | 40,716 |
| கணிப்பீட்டு நட்டம்/(ஈட்டுகை) | - | (290,831) | (290,831) |
| 2020 ஆம் ஆண்டுக்கு PPF ற்கு மாற்றப்பட்ட மிகையின் மீள் திருப்பல் | - | 93,214,934 | 93,214,934 |
| 31 டிசம்பர் 2020 அன்று மீதி | **17,689,652** | **92,731,913** | **110,421,565** |
| 01 ஜனவரி 2021 அன்று மீதி | 17,689,652 | 92,731,913 | 110,421,565 |
| 2021ஆம் ஆண்டுக்கான தேறிய மிகை | - | 69,783,461 | 69,783,461 |
| ஆதன மீள் மதிப்பீடு மீதான ஈட்டுகை | 12,679,107 | - | 12,679,107 |
| பிற்போடப்பட்ட வரி | (1,775,075) | - | (1,775,075) |
| கணிப்பீட்டு நட்டம்/(ஈட்டுகை) | - | 496,209 | 496,209 |
| பிற்போடப்பட்ட வரி | - | (69,469) | (69,469) |
| **31 டிசம்பர் 2021 அன்று மீதி** | **28,593,684** | **162,942,114** | **191,535,798** |

மீள்மதிப்பீட்டு திருப்பதல் என்பது மோட்டார் வாகனங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்திகள், அலுவலக உபரணங்களின் மீள் மதிப்பீட்டு மிகை

பற்றாக்குறையைக் குறிக்கின்றதுடன் மற்றும் திரட்டப்பட்ட மிகை.·. பற்றாக்குறைகள் என்பது நிதியில் செயலாற்றுகை கூற்றிலிருந்து மாற்றப்பட்ட மிகை/பற்றாக்குறையைக் குறிக்கின்றது.

# காசுப்பாய்ச்சல் கூற்று

31 டிசம்பர் 2021 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | குறிப்புகள் | 31.12.2021 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.2020 இல் முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| இக்காலப்பகுதிக்கான நிகர அதிகரிப்பு/(குறைவு) | | **86,790,315** | 109,563,757 |
| பெறுமானத் தேய்வுக்கான ஏற்பாடு | 1 | **7,861,456** | 5,480,041 |
| ஓய்வு நலனுக்கான ஏற்பாடு | 9 | **3,634,057** | 3,925,559 |
| அகற்றல் மீதான இலாபம்/(நட்டம்) | 9 | **(1,989,175)** | - |
| மானிய அங்கீகாரம் | 8 | **-** | (2,905,041) |
| வட்டி வருமானம் | 13 | **(12,609,727)** | (12,784,254) |
| நடைமுறை மூலதன மாற்றங்களுக்கு முன்னரான நிகர அதிகரிப்பு | | **83,686,926** | 103,280,062 |
| நடைமுறை மூலதனத்தில் மாற்றம் | | | |
| இருப்புகளில் குறைவு/(அதிகரிப்பு) | 4 | **(75,870)** | 131,762 |
| பெறுவனவுகளில் குறைவு/(அதிகரிப்பு) | 5 | **(1,127,676)** | 374,136 |
| முற்பணங்களில் அதிகரிப்பு/(குறைவு) | | **2,240,252** | (192,760) |
| கடன் வழங்குநர் மற்றும் அட்டுறுக்கான அதிகரிப்பு/(குறைவு) | 10 | **(464,970)** | 3,704,753 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட நிதிப் பாய்ச்சல் | | **571,736** | 4,017,891 |
| வருமான வரி செலுத்தப்பட்டது | 21 | **(16,063,744)** | (12,931,704) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் நிகர நிதிப் பாய்ச்சல்கள் | | **68,194,918** | 94,366,249 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் (பயன்படுத்தப்பட்ட)/ நிதிப் பாய்ச்சல்கள்** | | | |
| அரசாங்க பிணையங்களில் முதலீடு | | **(110,000,000)** | 52,000,000 |
| நிலையான வைப்புகளில் முதலீடு | | **35,000,000** | (35,000,000) |
| வட்டி வருமானம் | | **11,638,186** | 12,661,839 |
| ஆதனம், பொறி மற்றும் இயந்திரக் கொள்வனவு | 1 | **(3,025,000)** | (5,773,521) |
| முதலீட்டு நடவடிக்கையில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | | **(66,386,814)** | 23,888,318 |
| **நிதியியல் நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| காப்புறுதிக் கொள்கையாளர் பாதுகாப்பு நிதியத்தில் மாற்றப்பட்ட மூலதனம் | | **-** | 5,773,521 |
| PPF 2019இல் மாற்றப்பட்ட மிகை | | **-** | (129,844,897) |
| நிதி அமைச்சில் இருந்து கிடைக்கப்பெற்ற மானியம் | | **244,849** | (668,591) |
| நிதியில் நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சல் | | **244,849** | (124,739,967) |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளில் நிகர அதிகரிப்பு/(குறைவு) | | **2,052,952** | (6,485,399) |
| வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை | | **4,267,233** | 10,752,632 |
| வருட இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை | | **6,320,185** | 4,267,233 |
| **வங்கி மற்றும் கையிலுள்ள காசு** | 6 & 22 | | |
| நிதி முகாமைத்துவக் கணக்கின் மீதி | | **5,437,940** | 5,014,430 |
| இலங்கை வங்கி FSMP கணக்கு | | **508,578** | 658,147 |
| இலங்கை வங்கி 1877 | | **373,073** | - |
| சேமிப்பு - NSB | | **595** | 554 |
| | | **6,320,185** | 5,673,131 |
| இலங்கை வங்கியின் எதிர்மறை மீதி * | | | |
| இலங்கை வங்கி 1877 - லெட்ஜர் பதிவுக்கு அமைவாக | | **-** | 1,405,898 |
| | | **6,320,185** | 4,267,233 |

"மேலே கூறப்பட்ட நிதிநிலைமைக் கூற்று, கணக்கியல் கொள்கைகள் மற்றும் 136 தொடக்கம் 154 ஆம் பக்கம் வரையிலான குறிப்புகளோடு சேர்த்து வாசிக்கப்படல் வேண்டும்."

# காப்பறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் காசுப்பாய்ச்சல் கூற்று

31 டிசம்பர் 2021 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | 31.12.2021 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.2020 இல முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| காப்புறுதிப் பூட்கையாளர்களின் நிதியத்தில் நிகர அதிகரிப்பு | **972,710,329** | 1,215,761,003 |
| தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான நிகர அதிகரிப்பு | **972,710,329** | 1,215,761,003 |
| தொழிற்படு மூலதன மாற்றம் | | |
| அரசாங்க பிணையங்கள் மீதான கிடைக்கவுள்ள வட்டியின் (அதிகரிப்பு)/ குறைவு | **(35,502,718)** | (71,803,279) |
| செஸ் கிடைப்பனவுகளில் (அதிகரிப்பு)/குறைவு | **(20,875,866)** | (13,765,866) |
| PPF இருந்து மாற்றப்பட்ட தொகையின் அதிகரிப்பு/(குறைவு) | **87,981,414** | 36,871,008 |
| | **31,602,829** | (48,698,137) |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசு | **1,004,313,159** | 1,167,062,867 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் (பயன்படுத்தப்பட்ட)/ நிதிப் பாய்ச்சல்கள்** | | |
| அரசாங்க பிணையங்களில் முதலீடு | **-** | 1,076,659,000 |
| நிலையான வைப்புகளில் முதலீடு | **(1,153,407,500)** | (2,111,732,500) |
| முதலீட்டு நடவடிக்கையில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | **(1,153,407,500)** | (1,035,073,500) |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளில் நிகர அதிகரிப்பு/(குறைவு) | **(149,094,341)** | 131,989,367 |
| வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை | **150,396,035** | 18,406,669 |
| வருட இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை | **1,301,693** | 150,396,035 |
| நடைமுறைக் கணக்கில் மீதி | **1,000,000** | 1,000,000 |
| நிதி முகாமைத்துவக் கணக்கின் மீதி | **301,693** | 149,396,035 |
| | **1,301,693** | 150,396,035 |

# கணக்கீட்டுக் கொள்கைகள்

## 1. முக்கியத்துவம் வாய்ந்த கணக்கீட்டுக் கொள்கைகள்

### 1. 1 அறிக்கையிடல் நிறுவனம்

### 1.1.1 சட்ட வடிவம்

2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதி ஒழுங்குமுறைச் சட்டத்தின் கீழ் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளதுடன், அதன் தொழிற்பாடுகள் 2001 பெப்பரவரி 23 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 1172/ 27 உடைய அரசாங்க வர்த்தமானி அறிவித்தலிற்கு அமைவாக 01 மார்ச் 2001ஆம் திகதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டன..

ஆணைக்குழுவின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் 11ஆம் மாடி, கிழக்கு கோபுரம், உலக வர்த்தக மையம், கொழும்பு 01 எனும் முகவரியில் அமைந்துள்ளது.

### 1.1.2 முதன்மைச் செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாட்டின் தன்மை

ஆணைக்குழுவின் நோக்கமாகவும் பொறுப்பாகவும், இலங்கையினுள் காப்புறுதிப் பூட்கையாளர்களினதும் உத்தேச காப்புறுதிப் பூட்கையாளர்களினதும் தேவையைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் காப்புறுதி வியாபாரத்தை நேர்மையுடனும் மற்றும் தொழில்முறையுடன் விவேகமாக மேற்கொள்வதை உறுதிசெய்தல் அமைந்துள்ளது.

சட்டத்தில் குறிப்பிட்டவாறு ஆணைக்குழுவின் கடமை மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான அதிகாரம் கீழ்வருமாறு அமையும்.

(அ) இலங்கையினுள் காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்ளும் காப்புறுதியாளர்களைப் பதிவுசெய்தல்

(ஆ) காப்புறுதித் தரகர்களாகப் பதிவுசெய்தல்

(இ) காப்புறுதி கைத்தொழிற்துறையின் அபிவிருத்தி மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கல்,

(ஈ) காப்புறுதிக் கைத்தொழிற்துறையுடன் தொடர்புடைய அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்,

(உ) ஆணைக்குழுவின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளைச் செயற்படுத்தல், செய்தல் மற்றும் நிறைவேற்றுதல் போன்ற நோக்கங்களுக்காக அவசியமான அத்தகைய அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை ஈடுபடுத்தல்,

(ஊ) ஏதேனும் அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை கைக்கொள்வதுடன், அதனை விற்பனை செய்தல், குத்தகைக்கு வழங்கல் அல்லது அகற்றவும் முடியும்,

(எ) அதனுடைய அதிகாரத்தை, கடமைகளை மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு, செயலாற்றுவதற்கு மற்றும் விடுவிப்பதற்கு அவசியமான ஒப்பந்தங்களுக்கு வருதல், மற்றும்

(ஏ) இந்தச் சட்டத்தின் கீழ் உள்ள அதிகாரங்களை, கடமைகளை மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு, விடுவிப்பதற்கு மற்றும் செயலாற்றுவதற்கு உரிய அவசியமான அனைத்து ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்ளல.

### 1.2 தயாரித்தலுக்கான அடிப்படை

### 1.2.1 இணக்கக்கூற்று

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் நிதியியல் கூற்றுகள் நிதியியல் நிலைமைக் கூற்று, நிதியியல் செயலாற்றுகைக் கூற்று, உரிமைப்பங்கு/ தேறிய சொத்துகளில் மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பனவற்றை நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகளுடன் உள்ளடக்கியிருப்பதுடன் இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு, அதில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களுடன் இணங்குகின்றது.

இந்த நிதியியல் கூற்றுகளை விநியோகிப்பதற்கான அங்கீகாரம் 25 பெப்பரவரி 2022 ஆம் திகதி ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ளது.

### 1.2.2 அளவீட்டு அடிப்படை.

ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்கள், வரலாற்று ஆகுசெலவு இணக்கத்தில் கீழ் தயாரிக்கப்பட்டதுடன் கீழ்வருவன தவிர்ந்து நிதியியில் கூற்றுக்களைப் பாதிக்கும் வகையிலான பணவீக்க காரணிகளுக்கான சீராக்கங்கள் செய்யப்படவில்லை என்பது தொடர்ந்து பயன்படுத்தப்பட்டது.

வரையறுக்கப்பட்ட நன்மைத் தேவைப்படுகள் கணிப்பீட்டு பெறுமதியின் மீது அதன் தற்போதைய பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளதுடன் குறிப்பு 3.1.1 இல் விளக்கப்பட்டுள்ளது. பொருத்தமான இடங்களில் கணக்கீட்டுக் கொள்கைகள் பின்னிணைப்பு குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

பொருத்தமான இடங்களில், கணக்கியல் கொள்கைகள் அடுத்தடுத்த குறிப்புகளில் வெளிப்படுத்தப்படும்..

### 1.2.3 தொடர்ந்து செல்லும் கரிசனை

ஆணைக்குழு உறுப்பினர்கள், இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொடர்ந்து செல்லும் கரிசனை அடிப்படையில் ஆணைக்குழு தொடர்ந்து இயங்குவதற்கான தகைமை உள்ளதா என்பதை மதிப்பீடு செய்துள்ளனர். ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல்கள் ஆணைக்குழு அதன் செயற்பாட்டைத் தொடரும் எனவும், எதிர்பார்க்கக்கூடிய எதிர்கால நியதிச் சட்டக் கடமைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும் என்ற நியாயமான உறுதிப்பாட்டுடன் உள்ளனர். எதிர்காலம் பற்றிய அனைத்துத் தகவல்களையும் கருத்திற் கொண்ட பின்னர் இலங்கை காப்புறுதி

# கணக்கீட்டுக் கொள்கைகள்

ஒழுங்குமுறைப்படுத்தல்கள் ஆணைக்குழு அதன் செயற்பாடுகளை முடிவுக்கு கொண்டுவர வேண்டிய தேவை ஒன்று உள்ளது என்பதை எதிர்பார்க்கவில்லை. இதற்கமைவாக இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல்கள் ஆணைக்குழு அதன் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் தொடர்ந்து செல்லும் கரிசனை என்பதைத் தொடர்ந்து தழுவுகிறது.

## 1.2.4 செயற்பாட்டு மற்றும் வெளிப்படுத்தும் நாணயம்

ஆணைக்குழுவினால் செயற்படுத்தும் நாணயமான இலங்கை ரூபாவில் நிதியியல் கூற்றுகளில் நாணயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து நிதியியல் தகவல்களும் மிகக் கிட்டிய பொறுமதியாக்கப்பட்டு ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.2.5 ஒப்பீட்டுத் தகவல்கள்

இந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்வதற்காகவும் சிறந்த வெளிப்படுத்தலுக்காகவும் கடந்த வருடத்திற்கான நிதியியல் கூற்றுகளின் வெளிப்படுத்தல் மற்றும் வகைகப்படுத்தல் திருத்தப்பட்டுள்ளது.

## 1.2.6 பொருண்மை மற்றும் திரட்டல்

நிதியியல் கூற்றுக்களில் ஒவ்வொரு பொருண்மையான வகுப்புகளின் ஒத்த உருப்படிகள் வெவ்வேறாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவை பொருண்மையற்றவையாக இருந்தாலன்றி உருப்படியின் வேறுபட்ட தன்மை அல்லது செயற்பாடுகள் காரணமாக வேறாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.2.7 முக்கியமான கணக்கீட்டுத் தீர்மானங்கள், கருதுகோளுக்கான மதிப்பீடுகள்

எஸ்எல்பீஎஸ்ஏஎஸ் உடன் இணங்கும் வகையில் நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகம் மற்றும் சொத்துகள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகளின் அறிக்கையிடல் தொகை என்பவற்றைப் பாதிக்கும் முகாமைத்துவத்திற்கு தீர்மானங்களை, மதிப்பீடுகளை மற்றும் கருதுகோள்களை மேற்கொள்வதற்கு அவசியமாகின்றது. உண்மையான பெறுபேறுகள் இந்த மதிப்பீடுகளில் இருந்து வேறுபடலாம்.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை அனுமானங்கள் ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. எந்த மதிப்பீடு திருத்தப்பட்டதோ மற்றும் ஏதேனும் எதிர்காலம் பாதிக்கப்படுகின்றதோ அந்தக் காலத்திற்கான கணக்கீடு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் அடையாளம் காணப்படுகின்றது.

கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகிப்பதில் உள்ள சிக்கலான தீர்மானத்திற்குரிய தகவல்கள், அவை நிதியியல் கூற்றுகளில் உள்ள அடையாளம் காணப்பட்ட தொகைகளின் மீது முக்கியமான பாதிப்பை உருவாக்குமாயின் அவை கீழ்வரும் குறிப்புகளை உள்ளடக்கியிருக்கும்.

### தள்ளுபடி காசுப்பாய்ச்சல் எதிர்வுகூறல்களில் பயன்படுத்தப்படும் கருதுகோள்கள்

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் ஒரு சொத்து அல்லது சொத்துக்களின் போட்போலியோ பாதிப்படைகின்றது என்பதற்கான புறநிலை சான்றுகள் உள்ளதா என்பதற்காக ஆணைக்குழு மதிப்பீடு செய்கின்றது. ஒரு சொத்தின் மீட்டெடுக்கக்கூடிய தொகை என்பது பயன்பாட்டில் உள்ள அதன் பெறுமதி உயர்வாக இருத்தல் மற்றும் அதன் நியாயமான பெறுமதி விற்பதற்கான செலவை விடக் குறைவாக இருத்தல் என்பதாகும். பயன்பாட்டில் உள்ள பெறுமதியை மதிப்பீடு செய்தல், எதிர்கால காசுப் பாய்ச்சலை மதிப்பீடு செய்தல் என்பன பொருத்தமான தள்ளுபடி வீதத்தைப் பயன்படுத்தி அதனுடைய தற்போதைய பெறுமதிக்கு தள்ளுபடி செய்யப்படுகின்றது, அது சொத்தின் குறிப்பிட்ட இடர் மற்றும் அந்த நேரப் பணப் பெறுமதிக்கான தற்போதைய சந்தை மதிப்பீட்டினைப் பிரதிபலிக்கும்.

### தேய்மானம்

தேய்மான முறை, பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் மீதமுள்ள மதிப்புகள் என்பற்றைத் தீர்மானிப்பதற்கு ஒரு தீர்ப்புத் தேவைப்படுகின்றது.

### பிற்போடப்பட்ட வரிவிதிப்பு

எதிர்கால வரித் திட்டமிடல் உபாயமார்க்கத்துடன் எதிர்கால வரிவிதிப்பு இலாபங்களின் மட்டத்தின் அடிப்படையில் அடையாளம் காணப்படக்கூடிய பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் தொகையைத் தீர்மானிப்பதற்கு முகாமைத்துவ தீர்மானம் அவசியமாகின்றது.

### வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள்

வரையறுக்கப்பட்ட நன்மைத் தேவைப்பாடுகளின் பொறுப்பின் மதிப்பீடானது கழிவு, வீதங்கள், எதிர்கால சம்பள அதிகரிப்புகள் மற்றும் இறப்பு வீதங்கள் மற்றும் இந்தத் திட்டங்களின் நீண்ட காலத் தன்மை, நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்ட அத்தகைய மதிப்பீடுகள் என்பவை உள்ளடங்களாக கருதுகோள்களின் முக்கிய கூறுகளை உள்ளடக்கியுள்ளது.

### நடைமுறை வரிவிதிப்பு

நிதியியல் கூற்றுகளில் வழங்கப்பட்டுள்ள நடைமுறை வரிப் பொறுப்புகள் தொடர்புடைய அறிக்கைகள் வரிச் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை பிரயோகித்து உண்மையான பொறுப்பை பிரதிபலிக்கின்றது என நிர்வாகம் நம்புகின்றது. ஆணைக்குழுவினால் பரிவர்த்தனை மீது எடுக்கப்பட்ட நிலைப்பாடுகள் தொடர்பாக முரண்பாடான கொள்கைகளை வருமான அதிகாரிகள் மேற்கொள்வதற்கான நிகழ்வுகள் இருக்கக்கூடும். ஏதேனும் கணக்கில் கூடுதல் செலவுகள் இருந்தால் இந்தப் பிரச்சினைகள் ஆணைக்குழுவினால் பொறுப்புகள் உறுதிப்படுத்தப்படும் நேரத்தில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

# கணக்கீட்டுக் கொள்கைகள்

### 1.2.8. அறிக்கையிடும் காலப் பகுதியின் பின்னரான நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக்களில் தேவையான இடங்களில் அறிக்கையிடப்பட்ட திகதியின் பின்னர் நடைபெற்ற அனைத்து முக்கிய சம்பவங்களும் கருத்திற் கொள்ளப்பட்டு, பொருத்தமான சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

### 1.3 வெளிநாட்டு நாணயத்தை மாற்றுதல்

ஏதேனும் வெளிநாட்டு நாணயப் பரிமாற்ற நடவடிக்கைகள் இருப்பின், கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற வேளையில் இருந்த நாணயமாற்று வீதத்தின் அடிப்படையில் அவை, அறிக்கையிடும் நாணயமான இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டுள்ளது. வெளிநாட்டு நாணயத்தில் உள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை ஐந்தொகை தாளில் உள்ள திகதியில் காணப்பட்ட நாணயமாற்று வீதத்தின் அடிப்படையில் மாற்றப்பட்டது. அதன் காரணமாக உருவான ஈட்டுகைகளும் நட்டங்களும் வருமானம் மற்றும் செலவுக் கணக்கில் தீர்க்கப்பட்டன.

### 1.4 நிதியியல் இடர் முகாமைத்துவ நோக்கங்கள் மற்றும் கொள்கைகள்

ஆணைக்குழுவின் நிதியியல் பொறுப்புகள் முற்பணங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை உள்ளடக்கியுள்ளது. நிதியியல் பொறுப்புகள் என்பது ஆணைக்குழுவிற்கு வரவேண்டிய நேரடியான தொழிற்பாட்டிலிருந்தான வருமானக் கிடைப்பனவுகளும் ஏனைய குறுகிய கால முதலீடுகளுமாகும்.

### 1.4.1 சந்தை இடர்

சந்தை இடர் என்பது சந்தை விலைகளில் ஏற்படும் மாற்றத்தின் காரணமாக நிதியியல் சாதனத்தின் எதிர்கால காசுப் பாய்ச்சலின் நியாயமான பெறுமதியாகும். சந்தை விலைகள் இரு வகையான இடர்களை உள்ளடக்கியிருக்கும். அவை வட்டி வீத இடர் மற்றும் நாணய இடராகும். நிதியியல் நிறுவனங்களில் உள்ள வைப்புகள் உள்ளடங்கலாக நிதியியல் சாதனங்கள் சந்தை இடரினால் பாதிக்கப்படும

### 1.4.1.1 வட்டி வீத இடர்

வட்டி வீத இடர் என்பது நிதியியல் சாதனத்தின் நியாயப் பெறுமதி அல்லது எதிர்கால காசுப்பாய்ச்சல் சந்தையின் வட்டி வீதங்களினால் நிலையில்லாமல் மாறுவதாகும். ஆணைக்குழுவின் சந்தை வட்டி வீதங்களின் மாற்றத்திலான இடருக்கு வெளிப்பாடு ஆணைக்குழுவின் மிதக்கும் வட்டி வீதங்களுடனான கடப்பாட்டுக்கு பிரதானமானதாகும.

### 1.4.1.2. திரவம்தன்மை இடர்

ஆணைக்குழு தொடர்ச்சியான காசுப்பாய்ச்சல் முன்மதிப்பீடு மற்றும் காசு வரவுசெலவுக் கணிப்பீட்டைப் பயன்படுத்தி பற்றாக்குறையான திரவத்தன்மை இடரைக் கண்காணிக்கும்.

### 2. சொத்துகள் மற்றும் மதிப்பீட்டுக்கான அடிப்படை

### 2. 1 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

**உரிமை கொள்ளப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன, திரண்ட தேய்மானத்தில் இருந்து கழிக்கப்பட்டு, அதன் நிலை/மீள் மதிப்பீட்டுத் தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் விலை, அவை எந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்த எண்ணியிருந்ததோ அதற்காக அவை செயற்படுகின்ற நிலையில் கொண்டுவருவதற்கு உட்பட்ட ஏதேனும் செலவுகள் மற்றும் அதனைக் கைக் கொள்வதற்கான செலவுகள் என்பவற்றை உள்ளடக்கும்.

பரிவர்தனை அல்லாத பரிமாற்றங்களில் ஒரு சொத்து பூஜ்ஜியமாக அல்லது பெயரளவுக்கு பெறப்பட்டால், சொத்து ஆரம்பத்தில் அதன் நியாயமான மதிப்பில் அளவிடப்படுகின்றது.

ஆணைக்குழு மூலதனச் செலவாகக் கருதும் உருப்படிகளுடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகளுடன் தொடர்புடைய கொண்டு செல்லல் அல்லது பாய்ச்சலில் நிரந்தர தன்மையுடைய சொத்துக்களைக் கொள்வனவு செய்தல், விரிவாக்கல் அல்லது மேம்படுத்தல் நோக்கத்திற்காக பிற்பட நேர்ந்த ஆகுசெலவு உறப்பட்டது.

மீள்மதிப்பீட்டு மாதிரி மூன்று வருடங்களுக்கு ஒருமுறை மீள்மதிப்பீடு செய்யப்படும் மோட்டார் வாகனங்களுக்கு பிரயோகிக்கப்படும் மற்றும் அதன் பின்னர் எஸ்எல்பீஎஸ்ஏஎஸ் 7 இன் கீழ் மீள்மதிப்பீட்டு மாதிரியுடன் இணங்குதல் வேண்டும்.

அலுவலக உபரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் வருடாந்தம் மீள்மதிப்பீடு செய்யப்படுகின்றது..

### தேய்மானம்

பெறுமானத் தேய்வு, நேர்கோட்டு அடிப்படையில், மதிப்பிடப்பட்ட சொத்துக்களின் பயன்பாட்டுக் காலத்திற்கு ஏற்ப அறவிடப்பட்டுள்ளது. பயன்பாட்டு ஆயுள், தேய்மான முறைகள் மற்றும் மீதமுள்ள பெறுமதி ஆண்டுதோறும் அல்லது அந்த மதிப்பீடு அவசியம் எனும் ஏதேனும் சூழ்நிலை எழுமாயின் அதற்கு முன்னதாக மதிப்பிடப்படும்

| சொத்து | வருடத்திற்கு % |
|---|---|
| மோட்டார் வாகனங்கள. | 25 |
| தளபாடமும் பொருத்திகளும் | 12.5 |
| அலுவலக மற்றும் EDP உபகரண் | 25 |
| பயிற்சி உபகரணம் | 25 |

# கணக்கீட்டுக் கொள்கைகள்

ஒரு சொத்து கொள்வனவு செய்யப்பட்ட நாளிலிருந்து அது அகற்றப்படும் நாள் வரை பெறுமானத் தேய்வு கணிக்கப்படுகிறது. அகற்றப்படுதல் மீதான பெறுவனவுகளும் இழப்புக்களும் அகற்றப்படுவதிலிருந்து பெறப்படும் வருமானத்தைக் கொண்டுவரும் தொகையுடன் ஒப்பிட்டு தீர்மானிக்கப்படுகின்றது

## 2.2 முதலீடுகள்

அங்கீகாரம் பெற்ற அரச வங்கிகளில் நிலையான வைப்புகள் மற்றும் குறுகிய கால முதலீடுகள், அரச திறைசேரி உண்டியல்கள் மற்றும் அரச திறைசேரி பிணையங்களில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அறிக்கையிடல் திகதி வரை திரட்டப்பட்ட வட்டி ஆகுசெலவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த முதலீடுகள் ஆண்டு இறுதி வரை ஆகுசெலவு மற்றும் திரட்டப்பட்ட வட்டியில் கூறப்படுகின்றன. அதனால், நிதியாண்டின் இறுதியில் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் வெளிப்படுத்தும் நிதியியல் சாதனங்கள் மீது இடர்கள் எழமாட்டாது.

## 2.3 இருப்புச் சரக்கு

இருப்புச் சரக்குகளின் செலவு குறைவாக அல்லது பெறக்கூடிய நிகர பெறுமதியில் மதிப்பிடப்பட்டுள்ளன. பொருள் பட்டியல்களுக்கான விலை “முதலில் வருவது முதலில்” (FIFO) என்ற அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது.

## 2.4 பெறுவனவுகள்

மதிப்பு குறைப்புக்கான ஏற்பாட்டுக்கு பின்னர் எதிர்பார்க்கப்படும் மதிப்பு பெறுமதியாக வரவுகள் கொண்டு செல்லப்படுகின்றன. அனைத்து பெறத்தக்கவைகளும் புறநிலை சான்றுகளைக் கருத்தில் கொண்டு குறித்துரைக்கப்பட்ட குறைபாட்டு மூலம் மதிப்பிடப்படுகின்றன.

## 2.5 நிதியல்லாச் சொத்துகளின் மதிப்புக் குறைப்பு

நிதியல்லாச் சொத்துக்களில் குறைப்புகள் ஏறப்படலாம் எனும் நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் உள்ள அறிகுறி தென்படும் சூழ்நிலையில் ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் ஆணைக்குழு மதிப்பிடுகின்றது. அவ்வாறான அறிகுறி வெளிப்பட்டால், ஆணைக்கு சொத்தின் மீட்டெடுக்கக்கூடிய பெறுமதிக்கு மதிப்பீட்டினை மேற்கொள்ளும். மீட்டெடுக்கக்கூடிய பெறுமதியினை விட கொண்டு செல்லும் சொத்தின் பெறுமதி விஞ்சுமாயின், அந்த சொத்து சேதமடைந்த சொத்தாகக் கருதப்படுவதுடன அதன் மீட்டெடுக்கக்கூடிய பெறுமதிக்கு குறைப்பு செய்யப்படும்.

## 2.6 காசு மற்றும் காசுக்குச் சமனானவை

காசுப்பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக, காசு மற்றும் காசுக்கு சமமானவை வங்கிகளில் மற்றும் கையில் உள்ள பண், அழைப்பின் மீதான வைப்பு மற்றும் மூன்று மாதங்கள் அல்லது அதற்கும் குறைவான அசல் முதிர்வு கொண்ட திரவ முதலீடுகள், அவை எளிதில் அறியப்பட்ட பணமாக மாற்றப்படக்கூடியவை மற்றும் மதிப்பில் ஏற்படும் மாற்றங்களின் சிறிய ஆபத்துக்கு உட்பட்டவையாகும்.

## 3. பொறுப்புகள் மற்றும் ஏற்பாடுகள்

ஐந்தொகைத் திகதியில் அனைத்து கருத்தில் கொள்ள வேண்டிய பொறுப்புகளும் நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் மிகையாக அறியப்பட்டவைக்கு போதியளவு ஏற்பாடுகள் பொறுப்புகளுக்கு செய்யப்பட்டுள்ளது.

நிதியியல் கூற்றுகளைத் தயாரிக்கும் போது ஆகுசெலவில் அனைத்து அறியப்பட்ட பொறுப்புகளும் கணக்கீடு செய்யப்படும்.

3.1 நிதியியல் நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புகளாக வகைப்படுத்தப்பட்ட பொறுப்புகளில் அறிக்கையிடல் திகதியில் இருந்து ஒரு வருடத்திற்குள் அல்லது கேள்வி மீதான கொடுப்பனவு நிலுவையாக உள்ள அனைத்துக் கொடுப்பனவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

3.2 நிதியியல் நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாப பொறுப்புகளாக வகைப்படுத்தப்பட்ட பொறுப்புகளில் அறிக்கையிடல் திகதியில் இருந்து ஒரு வருடத்திற்குப் பினனர் உள்ள நிலுவையாக உள்ள அனைத்துக் கொடுப்பனவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளது..

3.3 ஒரு தற்செயல் பொறுப்பு என்பது கடந்த கால நிகழ்வுகளில் இருந்து எழும் ஒரு சாத்தியமான தேவைப்பாடாகும் யாருடைய இருப்பு இருக்கும் நிகழ்வின் அல்லது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிச்சயமில்லாத எதிர்கால நிகழ்வுகளுக்கு அப்பால் ஆணைக்குழுவின் கட்டுபாட்டுக்கு அமையாத நிகழாத ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது அல்லது நிகழ்காலத்தின் தேவைப்பாடு அடையாளம் காணப்படாதவிடத்து காரணம் அது சாத்தியமாக இருக்காதவிடத்து அந்த தேவைப்பாட்டினைத் தீர்க்க வளங்களின் வெளியேற்றம் தேவைப்படும்.

3.4 கடந்த கால நிகழ்வின் விளைவாக ஆணைக்குழுவினால் தற்போது சட்ட ரீதியாக அல்லது ஆக்கபூர்வமான தேவைப்பாடு அடையாளம் காணப்படும் போது ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படும் மற்றும் தேவைப்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்கு அவசியமான பொருளாதார நன்மைகளை உள்ளடக்கிய வளங்களின் வெளியேற்றம் சாத்தியமாகும் மற்றும் தேவைப்பாட்டின் தொகைக்கு அளவான மதிப்பீட்டை மேற்கொள்ள முடியும்

3.5 இருப்புகளின் தன்மை மற்றும் நோக்கம்

ஐசுஊஉடு குறிப்பிட்ட உள்;ர் தேவைகளின் அடிப்படையில் இருப்புகளை உருவாக்கி பராமரிக்கின்றது

(அ) திரட்டப்பட்ட கையிருப்பு

ஆணைக்குழுவின் மிகை / பற்றாக்குறை திரட்டப்பட்ட நிதியத்திற்கு மாற்றப்படுகின்றது.

(ஆ) மீள்மதிப்பீட்டு ஒதுக்கு

சொத்துக்களின் மீள்மதிப்பீட்டு ஈட்டுகை / நட்டம் மீள்மதிப்பீட்டு ஒதுக்குக்கு மாற்றப்படுகின்றது..

# கணக்கீட்டுக் கொள்கைகள்

## 3.1 ஓய்வுகால நலன்கள்

### 3.1.1 வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நலன் திட்டங்கள் - பணிக்கொடை

1983ஆம் ஆண்டு 12ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு அனைத்து ஊழியர்களுக்கான ஓய்வுகால நலன் திட்டத்தை ஆணைக்குழு உருவாக்கியுள்ளது. இந்த ஓய்வுகால நலன் திட்டம் ஒரு ஊழியர் ஓய்வின் போது பெற்றுக்கொள்ளும் நலன் தொகையினை வரையறுத்துள்ளது.

இலங்கை அரசதுறை கணக்கியல் நியமம் 19: ஊழியர் நன்மைகளின் கீழ் விபரித்துள்ள உய்த்தறியப்பட்ட அலகு கடன் முறையினைப் பயன்படுத்தி ஆணைக்குழு வருடந்தோறும் வரையறுக்கப்பட்ட நலன் திட்டத்தைக் கணிப்பீடு செய்வதன் ஊடாக நிதியியல் நிலைமைக் கூற்றில் பொறுப்பு இனங்காணப்படும்.

| | |
|---|---|
| **2021ஆம் ஆண்டின் தொடக்கத்தில்** | 19,473,748 |
| தற்போதைய சேவை ஆகுசெலவு | 2,465,632 |
| வட்டி ஆகுசெலவு | 1,168,425 |
| கணிப்பீடு செய்யப்பட்ட நட்டங்கள் / (ஈட்டுகைகள்) | 496,209 |
| **விரிவான வருமானக் கூற்றின் இலாபம் மற்றும் நட்டத்திற்கு அறவிடப்பட்டது** | 4,130,266 |
| செலுத்தப்பட்ட நலன்கள் | (1,989,175) |
| 2021 நிதியியல் ஆண்டின் இறுதியில் | 21,614,840 |

கடந்த ஆண்டில் ஏற்பாடுகளின் பற்றாக்குறை அல்லது மிகை காரணமாக எழும் மாற்றங்களினால் ஈட்டுகைகளும் நட்டங்களும் எழுவதுடன் அவை எழும் காலத்தில் நிதிநிலை செயற்பாட்டுக் கூற்றில் அவை அறவீடு செய்யப்படும். இந்த ஆண்டுக்கான தேவைப்பாடு உடனடியாக விரிவான வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படும். .

பிரதான கணிப்பீட்டு எடுகோள்கள் பின்வருமாறு எடுக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| கழிவு வீதம் | : | ஆண்டுக்கு 11% |
| சம்பள அதிகரிப்பு வீதம் | : | 9% |
| ஓய்வுபெறும் வயது | : | 62 வருடங்கள |

### 3.1.2 வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் – EPF மற்றும் ETF

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன, பொருத்தமான நியதிச் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக, அனைத்து ஊழியர்களும் ஊழியர் பங்கிலாப பங்களிப்புகள் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புகள் ஆகியவற்றுக்குத் தகுதியுடையவர்கள். ஆணைக்குழு ஊழியர் நம்பிக்கை நிதிய மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் என்பவற்றுக்கு ஊழியர்களின் மொத்த வருமானத்திலிருந்து முறையே 12% மற்றும் 3% இனை பங்களிப்புச் செய்கிறது.

## 3.2 மானியம்

### 3.2.1 காப்புறுதிப் பூட்கையாளர்கள் பாதுகாப்பு நிதியம்

பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்றப்பட்ட காப்புறுதிக் பூட்கையாளர்களின் மூலதனச் செலவு, மானியமாகக் கருதப்பட்டு சொத்து ஒன்றின் மதிப்பிடப்பட்ட பாவனைக் காலத்தின் மீது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### 3.2.2 நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் கருத்திட்டம் (FSMP)

மானியங்கள் அதனுடைய நியாயப் பெறுமதியில் நிதியியல் கூற்றில் அடையாளம் காணப்படுகின்றது. மானியம் தொடர்புடைய செலவுகள் எழும் போது, அது அந்தக் காலத்திற்குரிய வருமானமாக அதனுண்டய ஆகுசெலவுடன் பொருந்துவதற்கு முறைமையான அடிப்படையின் மீது ஈடுசெய்யும் நோக்கம் கொண்டது

பெறுபேறு அடிப்படையிலான நிதியிடல் வருமானமாக அங்கீகரிக்கப்படுவதற்காக நிதி அமைச்சிடமிருந்து மானியம் கிடைக்கப் பெறும். முதலீட்டு கருத்திட்ட நிதியிடலுக்கான மானியம் கிடைக்கப்பெறும் போது அது கூறப்பட்ட ஆகுசெலவுடன் வருமானமாக அங்கீகரிக்கப்படும்.

## 3.3 தொடர்புடைய தரப்பினர்

தனிப்பட்ட முறையில் அல்லது கூட்டாக கட்டுப்பாட்டை செலுத்தும் திறன் அல்லது மீது கணிசமான செல்வாக்கை செலுத்தும் திறன் கொண்ட நபர் அல்லது நிறுவனமாக அல்லது நேர்மாறாகவும் தொடர்புடைய தரப்பினரைக் கருத்துகின்றது, முக்கிய நிர்வாகத்தின் வரிசை அமைச்சு மற்றும் ஆணைக்குழுவின் அங்கத்தரவ்களை உள்ளடக்கியுள்ளதால் உறுப்பினர்கள் தொடர்புடைய தரப்பினர்களாகக் கருதப்படுகின்றார்கள்.

## 4. வருமானம் மற்றும் செலவு

## 4.1 வருமானத்தை அடையாளம் காணல்

### 4.1.1 பரிவர்த்தணை இல்லாத பரிமாற்றங்களில் இருந்தான வருமானம்

#### கட்டணங்கள் மற்றும் வரிகள்

கட்டணங்கள் மற்றும் நிகழ்வு நிகழும் போது வரி மற்றும் சொத்து அங்கீகார அளவுகோல்கள் பூர்த்தி செய்யப்படுகின்றன என IRCSL அங்கீகரிக்கின்றது. ஏனைய பரிமாற்றம் அல்லாத வருமானம் எதிர்காலம் என்று இருக்கலாம்

# கணக்கீட்டுக் கொள்கைகள்

பொருளாதார நன்மைகள் அல்லது சேவை தொடர்புடைய சாத்தியம் சொத்து மற்றும் அதன் நியாயமான மதிப்பிற்குச் செல்லும் சொத்தை அளவிட முடியும் நம்பகத்தன்மையுடன் பரிமாற்றம் அல்லாத வருமானம் இருக்கும் போது அங்கீகரிக்கப்படுகின்றன,

IRCSL வருமானம் வருடாந்தக் கட்டணம், புதுப்பித்தல் கட்டணம், பதிவுக் கட்டணம் மற்றும் விற்பனை வெளியீடுகள் முதலியனற்றைக் கொண்டுள்ளது

### 4.1.2 பரிவர்த்தனை பரிமாற்றங்களில் இருந்தான வருவாய்

#### வட்டி வருமானம்

வட்டி வருமானம் நேர் விகிதாசார அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் பெறப்படும்.

#### சொத்துக்களின் வருமானம்

பொதுவாக பொருட்களை வாங்கும் போது, உரிமையின் குறிப்பிடத்தக்க அபாயங்கள் மற்றும் வெகுமதிகள் வாங்குபவர்களுக்கு மாற்றப்படும் போது அங்கீகரிக்கப்படுகின்றது.

## 4.2 செலவு அங்கீகாரம்

ஆணைக்குழுவைப் பேணிப் பாதுகாப்பதற்காக கூறப்பட்ட அனைத்து செலவுகளும் வருமானத்தின் மீதான செலவுகளை உறுதிப்படுத்துவதற்கு வருவாய்க்கு அறவிப்பட்டுள்ளது.

### 4.2.1 வட்டி வருமானம் மற்றும் செலவுகள்

முதலீடுகள் மீதான வட்டி வருமானம் மற்றும் வட்டிச் செலவுகள் நிதியில் நிலைமைக் கூற்றில் அட்டுறு அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

## 4.3 வருமான வரி செலவுகள்

#### நடைமுறை வரி விதிப்பு

ஆணைக்குழுவின் வரிச் செலவு தற்போதைய வரிவிதிப்பு மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரி வருமானம் அல்லது இழப்பினால் உருவாக்கப்பட்டுள்ளது. வரிவிதிப்பு நோக்கத்திற்காக அந்த வருடத்திற்கான இலாபம் / மிகை மீது வரிவிதிப்புக்கான ஏற்பாடு சீராக்கப்பட்டுள்ளது.

#### பிற்போடப்பட்ட வரி

பிற்போடப்பட்ட வரிவிதிப்பு, இருப்புநிலைப் பொறுப்பை பயன்படுத்தி வழங்கப்படுகின்றது, நிதி அறிக்கை நோக்கங்களுக்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் சுமந்து செல்லும் அளவுகள் மற்றும் வரிவிதித்தல் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் தொகைகளுக்கு இடையே தற்காலிக வேறுபாடுகளை வழங்கும் முறை ஆகும். ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் எதிர்காலத்தில் வரி விதிக்கக்கூடிய இலாபங்கள் கிடைக்கக்கூடிய அளவிற்கு மட்டுமே, அதன் சொத்துக்கள் பயன்படுத்தப்படலாம் என அங்கீகரிக்கபடுகின்றன. ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மீளாய்வு செய்யப்பட்டு, அது தொடர்பான வரிச் சலுகைகள் இனிக் கிடைக்க வாய்ப்பில்லாத அளவிற்கு குறைக்கப்படுகின்றன.

## 4.4 காசுப் பாய்ச்சல் அறிக்கை

நேரடியல்லா முறையில் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுகின்றது.

## 4.5 வரவுசெலவுத்திட்ட தகவல்

அட்டுறு அடிப்படையில் வருடாந்த வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்படுகின்றது: அதாவது, ஐசுஊஎடு இன் அனைத்து தேவைகளையும் தீர்மானிப்பதற்கு செலவுகள் மற்றும் வருமானங்கள் திட்டமிடப்பட்டு ஒரு தனிக்கூற்றாக வெளிப்படுத்தப்படுகின்றது.

இந்த வரவுசெலவுத் திட்ட புள்ளிவிபரங்கள் நிதியாண்டின் ஆரம்பத்தில் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்றது.

# 5 பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம்

## 5.1 சட்ட வடிவம்

2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்பறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் 103 (1)ஆம் பிரிவு நியதிகளுக்கு அமைவாக பூட்கையாளர் பாதுகாப்பு நிதியம் நிறுவப்பட்டுள்ளது. காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி விதிக்கப்பட்டு பூட்கையாளர் பாதுகாப்பு நிதியத்திற்கு வைப்புசெய்யப்படும

## 5.2 பிரதான நடவடிக்கைகள் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மை

2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்பறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் 103 (1)ஆம் பிரிவு நியதிகளுக்கு அமைவாக, இந்த நிதியத்திற்கு வரவு வைக்கப்படும் நிதி பூட்கையாளர்களின் பொதுப் பாதுகாப்பிற்காகவும் ஆணைக்குழுவின் வார்பாக உருவாக்கப்பட்ட விதிகளினால் தீர்மானிக்கப்பட்ட குறித்துரைத்த நோக்கங்களுக்கா பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

மேலும், மேலே குறிப்பிடப்பட்ட ஏதேனும் நோக்கங்களுக்கு எந்த பணமும் உடனடியாக தேவையில்லை எனும் பொழுது, ஆணையத்தினால், விவேகமான முறையில் நல்ல வருமானத்தை பெற்றுக்கொள்வதற்காகவும் மற்றும் முதலீட்டை பாதுகாக்கவும் முதலீடு செய்யப்படும்.

மீளாய்வுக்குட்பட்ட நிதியில் காலத்தில் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் நோக்கத்தின் தன்மையில் எந்தவிதமான மாற்றமும் இல்லை

## 5.3 அளவீட்டுக்கான அடிப்படை

வரலாற்று செலவின் கீழ் மற்றும் தொடர்ந்து செல் நிலையை பிரயோகித்து நிதியில் அறிக்கைக்கு எவ்வித பணவீக்க தாக்கங்களும் ஏற்படாத வகையில் நிதி அறிக்கைகள் தயார் செய்யப்பட்டள்ளன

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

## 1 ஆதனம், பொறி மற்றும் உபரணம்

| | மோட்டார் வாகனங்கள் | தளபாடங்களும், பொருத்திகளும் | அலுவலக உபகரணம் (EDP& ஏனையவை) | பயிற்சி உபகரணங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **ஆகுசெலவு/மீள்மதிப்பீடு** | | | | | |
| 01 ஜனவரி 2019 அன்று மீதி | 10,300,000 | 14,152,432 | 26,635,537 | 141,450 | 51,229,419 |
| சேர்ப்புகள் | - | 1,508,944 | 3,392,354 | - | 4,901,298 |
| அகற்றல்கள் | - | (18,895) | (2,271,627) | - | (2,290,522) |
| 31 டிசம்பர் 2019 அன்று மீதி | **10,300,000** | **15,642,481** | **27,756,264** | **141,450** | **53,840,195** |
| 01 ஜனவரி 2020 அன்று மீதி | 10,300,000 | 15,642,481 | 27,756,264 | 141,450 | 53,840,195 |
| சேர்ப்புகள் | - | 1,383,081 | 4,390,440 | - | 5,773,521 |
| 31 டிசம்பர் 2020 அன்று மீதி | **10,300,000** | **17,025,562** | **32,146,704** | **141,450** | **59,613,716** |
| 01 ஜனவரி 2021 அன்று மீதி | 10,300,000 | 17,025,562 | 32,146,704 | 141,450 | 59,613,716 |
| சேர்ப்புகள் | - | - | 3,025,000 | - | 3,025,000 |
| அகற்றல்கள் | - | - | - | - | - |
| மீள்மதிப்பீடு மீதான தாக்கம் | 2,500,000 | (7,950,627) | (11,817,033) | - | (17,267,660) |
| 31 டிசம்பர் 2019 அன்று மீதி1 | **12,800,000** | **9,074,935** | **23,354,671** | **141,450** | **45,371,056** |
| **திரட்டப்பட்ட பெறுமானத்தேய்வு** | | | | | |
| 01 ஜனவரி 2019 அன்று மீதி | - | 12,675,881 | 22,722,663 | 141,450 | 35,539,995 |
| இவ்வருடத்திற்கான கட்டணம் | 2,575,000 | 533,646 | 1,790,844 | - | 4,899,489 |
| அகற்றல்கள் | - | (18,895) | (2,271,627) | - | (2,290,522) |
| 31 டிசம்பர் 2019 அன்று மீதி | **2,575,000** | **13,190,632** | **22,241,880** | **141,450** | **38,148,962** |
| 01 ஜனவரி 2020 அன்று மீதி | 2,575,000 | 13,190,632 | 22,241,880 | 141,450 | 38,148,962 |
| இவ்வருடத்திற்கான கட்டணம் | 2,575,000 | 580,890 | 2,324,151 | - | 5,480,041 |
| அகற்றல்கள் | - | - | - | - | - |
| 31 டிசம்பர் 2020 அன்று மீதி | **5,150,000** | **13,771,522** | **24,566,031** | **141,450** | **43,629,003** |
| இவ்வருடத்திற்கான கட்டணம் | 2,575,000 | 1,499,751 | 3,786,704 | - | 7,861,456 |
| அகற்றல்கள் | - | - | - | - | |
| மீள்மதிப்பீடு மீதான தாக்கம் | (7,725,000) | (9,878,066) | (12,343,701) | - | (29,946,767) |
| 31 டிசம்பர் 2019 அன்று மீதி | **-** | **5,393,207** | **16,009,034** | **141,450** | **21,543,691** |
| **பதிவழிக்கப்பட்ட பெறுமதி** | | | | | |
| 31 டிசம்பர் 2021 அன்று மீதி | **12,800,000** | **3,681,727** | **7,345,638** | **-** | **23,827,365** |
| **பதிவழிக்கப்பட்ட பெறுமதி** | | | | | |
| 31 டிசம்பர் 2020 அன்று மீதி | 5,150,000 | 3,254,039 | 7,580,674 | - | 15,984,713 |

31.12.2021இல் 34,964,431 மதிப்புள்ள முழுமையாக மதிப்பிழந்த சொத்துக்கள் இன்னும் பயன்பாட்டில் உள்ளன. மீள்மதிப்பீட்டு தொகை ரூ. 2,454,107 ஆகும்.

கணக்கெடுப்பு சபை இந்த சொத்துக்களின் நிலையை ஆய்வு செய்து, பயனுள்ள ஆயுட்காலத்தை மீள்மதிப்பீடு செய்துள்ளது. இதன் விளைவாக ஏற்படும் தாக்கம் எதிர்காலத்தில் சரிசெய்யப்படும்..

சிலோன் ஓட்டோ மொபைல் சங்கத்தின் தொழில்முறை மதிப்பீட்டாளரினால் மோட்டார் வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டன

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

| | | குறிப்புகள் | 31.12.2021 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.2020 இல் முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|---|
| 2 | **காப்புறுதி பூட்கையாளர் பாதுகாப்பு நிதியத்தின் முதலீடுகள் மற்றும் ஏனையவை** | | | |
| | **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| | வாடகை மற்றும் மின்சார வைப்பு | | **9,593,949** | 9,593,949 |
| | நிலையான வைப்புகள் | | **436,000,000** | 859,000,000 |
| | | | **445,593,949** | 868,593,949 |
| | **நடைமுறைச் சொத்துகள** | | | |
| | நிலையான வைப்புகளில் முதலீடுகள் | | **7,449,100,000** | 5,872,692,500 |
| | நிலையான வைப்புகளில் இருந்து கிடைக்க வேண்டிய வட்டி | | **384,766,481** | 349,263,763 |
| | கிடைக்க வேண்டியவை CESS | | **161,202,441** | 140,326,575 |
| | நிதி முகாமைத்துவக் கணக்கின் மீதி | | **301,693** | 149,396,035 |
| | வங்கியில் உள்ள மீதி | | **1,000,000** | 1,000,000 |
| | PPF மாற்றப்பட்ட மிகை | | **-** | 93,214,934 |
| | | | **7,996,370,615** | 6,605,893,807 |
| | கழி | | | |
| | PPF இருந்து மாற்றப்பட்ட வேண்டிய தொகை | | **540,000** | - |
| | | | **7,995,830,615** | 6,605,893,807 |
| | மொத்த சொத்துகள் | | **8,441,424,564** | 7,474,487,756 |
| 3 | **ஏனைய நடைமுறையல்லா சொத்துகள்** | | | |
| | வாடகைக்கான மீளளிக்கக்கூடிய வைப்பு | | **2,688,246** | 2,688,246 |
| | முற்கொடுப்பனவு | | **775,242** | - |
| | ஊழியர் கடன்கள * | | **6,176,249** | 5,345,774 |
| | | | **9,639,737** | 8,034,020 |
| 4 | **சரக்கு இருப்பு** | | | |
| | அச்சிடுதல், எழுதுகருவிகள் மற்றும் கணணி உதிரிப்பாகங்கள் | | **519,010** | 490,870 |
| | முத்திரை | | **79,420** | 31,690 |
| | | | **598,430** | 522,560 |
| 5 | **ஏனைய நடைமுறைச் சொத்துகள்** | | | |
| | **பரிமாற்றம் அல்லாத கொடுக்கல் வாங்கல்களில் இருந்தான கிடைப்பனவு** | | | |
| | ஏனைய கிடைப்பனவுகள் | | **239,953** | 227,953 |
| | **பரிமாற்ற கொடுக்கல் வாங்கல்களில் இருந்தான கிடைப்பனவு** | | | |
| | காப்புறுதிப் பூட்கையாளர் நிதியத்திற்கு மாற்றப்பட்ட தொகை | | **540,000** | - |
| | கைக்கொள்ளலுக்கான ஏற்பாடு | 5.1 | **2,200,000** | 3,193,650 |
| | ஊழியர் கடன்கள் * | | **2,292,955** | 2,052,354 |
| | பண்டிகைக் கால முற்பண்* | | **1,170,100** | 1,360,100 |
| | முற்பணம் மற்றும் முன்கொடுப்பனவுகள் | | **4,101,974** | 4,649,569 |
| | VAT கட்டுப்பாடு | | **581,313** | 129,409 |
| | வைப்புகள் | 5.2 | **228,686** | 219,987 |
| | கிடைக்க வேண்டிய வட்டி – அரசாங்க பிணையங்கள் | | **1,093,957** | 122,415 |
| | நிறுத்திவைத்தல் வரி மீட்டெடுப்புகள் | | **-** | 1,208,606 |
| | | | **12,448,937** | 13,164,043 |

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

5.1 2021 டிசம்பரில் வழங்கப்பட்ட மடிக் கணணிகளைப் பொறுத்தமட்டில் கையகப்படுத்துவதற்கான ஏற்பாடு

5.2 வைப்புத்தொகை எரிபொருள் வைப்புத் தொகை மற்றும் பாதுகாப்பு பெட்டகங்களுக்கான என்எஸ்பி வைப்பு என்பவற்றைக் குறிக்கின்றது.

| | | குறிப்புகள் | 31.12.2021 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.2020 இல முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|---|
| | *ஊழியருக்கு வழங்கப்பட்ட கடன்கள் | | | |
| | 01 ஜனவரி 2021 அன்று மீதி | | 8,758,228 | 5,347,093 |
| | இவ்வருடத்தில் வழங்கப்பட்ட கடன்கள் | | 7,257,500 | 6,436,900 |
| | | | 16,015,728 | 11,783,993 |
| | இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட மீள்செலுத்தல்கள் | | (6,376,424) | (3,025,765) |
| | 31 டிசம்பர் 2021 அன்று மீதி | | 9,639,304 | 8,758,228 |
| 6 | **காசு மற்றும் காசுக்கு சமனானவை** | | | |
| | **வங்கியில் உள்ள காசு** | | | |
| | நிதி முகாமைத்துவக் கணக்கின் மீதி | 22 | 5,437,940 | 5,014,430 |
| | கையிலுள்ள காசு | | - | - |
| | இலங்கை வங்கி 1877 | | 373,073 | - |
| | இலங்கை வங்கி FSMP கணக்கு | | 508,578 | 658,147 |
| | சேமிப்பு - NSB | | 595 | 554 |
| | | | 6,320,185 | 5,673,130 |
| | **இலங்கை வங்கியின் மறை மீதி** | | | |
| | இலங்கை வங்கி 1877 - பேரேட்டின் படி | 22 | - | 1,405,898 |
| | | | 6,320,185 | 4,267,232 |
| 7 | **காப்புறுதிப் பூட்கையாளர்கள் பாதுகாப்பு நிதியம்** | | | |
| | ஆரம்ப மீதி | | 7,468,719,235 | 6,252,958,232 |
| | இவ்வருடம் கிடைத்த செஸ் | | 543,906,322 | 506,139,149 |
| | ரிபோ மற்றும் சேமிப்பு கணக்குகளில் இருந்து கிடைத்த வட்டி | | 334,087 | 479,514 |
| | திறைசேரி பிணையங்களின் முதலீடுகளில் இருந்து கிடைத்த வட்டி | | - | 33,151,511 |
| | நிலையான வைப்புகளில் இருந்து கிடைத்த வட்டி | | 515,764,257 | 588,341,378 |
| | நிதி முகாமைத்துவ கணக்கில் இருந்து கிடைத்த வட்டி | | 150,009 | 211,291 |
| | நடைமுறை வருடத்தில் தேறிய மிகை | | - | 93,219,934 |
| | | | 8,528,873,909 | 7,474,501,007 |
| | கழி: | | | |
| | PPFற்கு மாறறப்பட்ட மிகையின் மீள்திருப்பல் | | 87,446,414 | - |
| | மூலதனச் செலவுகளுக்கான மாற்றல் | | - | 5,773,520 |
| | மொத்த மாற்றல்கள் - காப்புறுதிப்பூட்கை பாதுகாப்பு நிதியம் | | 87,446,414 | 5,773,520 |
| | வங்கிக் கட்டணங்கள் | | 2,932 | 8,251 |
| | | | 87,449,347 | 5,781,772 |
| | முடிவு மீதி | | 8,441,424,564 | 7,468,719,235 |

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

| | | 31.12.2021 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.2020 இல் முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| **8** | **மானியம்** | | |
| | வருட ஆரம்பத்தில் மீதி | 10,829,811 | 7,966,331 |
| | காப்புறுதிப் பூட்கையாளர் காப்புறுதி நிதியத்தில் இருந்து மூலதன செலவு | (5,773,521) | 5,773,521 |
| | கழி : இவ்வருடததின் கடன் தீர்ப்புர | - | (2,905,041) |
| | வருட இறுதியில் மீத | 5,061,291 | 10,829,811 |

**குறிப்பு - மானியத்தை அடையாளம் காணல்**

கீழ்வரும் வீதங்களில் வருமானங்களாக மானியம் நிதியியல் செயலாற்றுகை கூற்றில் அடையாளம் காணப்பட்டுள்ளது (அதாவது, தொடர்புடைய சொத்துக்களின் பயனுள்ள ஆயுள் குறித்த முறைமையான அடிப்படை).

எனினும், பூட்கையாளர்கள் பாதுகாப்பு நிதியத்திலிருந்து மாற்றப்பட்ட மூலதனச் செலவு ஆணைக்குழு நிதியத்தில் மிகை காணப்பட்டதானால் நிறுத்தப்பட்டது. நடைமுறை ஆண்டு வெளிப்படுத்துகையை பிரதிபலிப்பதற்கு கடந்த ஆண்டு புள்ளிவிபரங்கள் சீராக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| மோட்டார் வானம் | 25% | 25% |
| அலுவலக உபகரணம் - ஏனையவை மற்றும் EDP | 25% | 25% |
| தளபாட இணைப்புகள் மற்றும் பொருத்திகள் | 12.5% | 12.5% |
| பயிற்சி உபகரணங்கள் | 25% | 25% |

| | | 31.12.2021 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.2020 இல் முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| **9** | **ஒய்வு நலன் தேவைப்பாடுகள்** | | |
| | வருட ஆரம்பத்தின் மீதி | 19,473,749 | 15,839,021 |
| | இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் | 3,634,057 | 3,925,559 |
| | உண்மையான (ஈட்டுகை)/நட்டம் | 496,209 | (290,831) |
| | (-)இவ்வருடத்தில் மேற்கொள்ளப்ட்ட கொடுப்பனவுகள் | (1,989,175) | - |
| | வருட இறுதியில் மீதி | 21,614,840 | 19,473,749 |
| | கழிவு வீதம் | 11% | 6% |
| | எதிர்கால சம்பள அதிகரிப்பு வீதம் | 9% | 9% |

**9.1 பயன்படுத்தப்பட்ட அனுமானங்களின் உணர்வளவு**

அனுமானங்களின் ஒரு சதவீத மாற்றம் பின்வரும் விளைவுகளை ஏற்படுத்தும்

| | **கழிவு வீதம்** | **எதிர்கால சம்பளம் அதிகரிப்பு வீதம்** |
|---|---|---|
| 1% அதிகரிப்பு | 20,022,506 | 23,553,736 |
| 1% வீழ்ச்சி | 23,426,500 | 19,889,539 |

டிசம்பர் 31, 2021இல் ஒரு தொழில்முறை நிபுணரால் ஓய்வூதியப் பணிக்கொடை கடமையின் உண்மையான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது, ஆச்சுவரி முகாமைத்துவ சேர்விஸ் (பிறைவட்) லிமிடட் நிறுவனத்தினால் கணிப்பீட்டுப் பொறுப்பை மதிப்பிடுவதற்கு பயன்படுத்தும் மதிப்பீட்டு முறை இலங்கை அரச கணக்கியல் நியமத்தினால் பணியாளர் நன்மைகளுக்கு பரிந்துரைக்கப்படும் SLPSAS 19 “திட்டமிடப்பட்ட அலகு கடன் முறை” ஆகும்.

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

| | | 31.12.2021 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.2020 இல முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| **10** | **ஏனைய நடைமுறை பொறுப்புகள்** | | |
| | அட்டுறு செலவுகள் | **25,008,338** | 25,591,998 |
| | EPF கொடுப்பனவு செய்ய வேண்டியவை | **1,247,337** | 1,258,891 |
| | ETF கொடுப்பனவு செய்ய வேண்டியவை | **187,102** | 188,834 |
| | PAYE கொடுப்பனவு செய்ய வேண்டியவை | **35,068** | 30,320 |
| | கொடுப்பனவு செய்ய வேண்டிய பிடித்து வைத்தல் | **36,228** | 36,228 |
| | கொடுப்பனவு செய்ய வேண்டிய வருமான வரி | **5,948,270** | 6,776,668 |
| | மீள்கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவு செய்ய வேண்டியவைகள் | **3,329,621** | 3,202,393 |
| | | **35,791,964** | 37,085,332 |
| | *2020ஆம் அண்டிலிருந்து ஆணைக்குழுவின் நிதியில் இருந்து மாற்றப்பட்ட மிகை நிறுத்தப்பட்டுள்ளது. | | |
| **11** | **பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனைகளில் இருந்தான வருமானம்** | | |
| | காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற வருடாந்தக் கட்டணம் | **257,764,270** | 244,899,120 |
| | பதிவு மற்றும் புதுப்பித்தல் கட்டணம் | **14,846,384** | 14,497,295 |
| | | **272,610,654** | 259,396,415 |
| **12** | **கருத்திட்டத்திலிருந்தான வருமானம்** | | |
| | FSMP - DLI மானியம் | **-** | 11,675,810 |
| | FSMP - DLI மானியம் அல்லாதவை | **255,150** | 668,591 |
| | | **255,150** | 12,344,401 |
| **13** | **பரிமாற்ற பரிவர்த்தனைகளில் இருந்தான வருமானம்** | | |
| | நிலையான வைப்புகளில் இருந்தான வட்டி | **5,514,050** | 7,748,539 |
| | நிதி முகாமைத்துவ நிதியத்தின் மீதான வட்டி | **201,853** | 228,338 |
| | சேமிப்பு கணக்கு மீதான வட்டி | **41** | - |
| | ரிபோ மீதான வட்டி | **6,893,783** | 4,807,377 |
| | | **12,609,727** | 12,784,254 |
| **14** | **ஏனைய வருமானம்** | | |
| | வாகனக் கடன் மீதான வட்டி | **274,395** | 83,622 |
| | இடர் கடன் மீதான வட்டி | **149,012** | 127,039 |
| | இடர் கடன் மீதான வட்டி | **1,890** | - |
| | | **425,296** | 210,661 |

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

| | | 31.12.2021 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.2020 இல் முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| **15** | **ஊழியர் செலவுகள்** | | |
| | ஊழியர் சம்பளங்கள் | **77,422,627** | 69,948,812 |
| | EPF 12% | **9,293,499** | 8,365,679 |
| | ETF 3% | **2,323,376** | 2,091,420 |
| | தலைவர் - கொடுப்பனவு | **1,200,000** | 1,162,466 |
| | தலைவர் - எரிபொருள் கொடுப்பனவு | **241,050** | 238,887 |
| | ஆணைக்குழு அங்கத்தவர்கள் - அமர்வுக்கான கொடுப்பனவு | **1,384,859** | 865,972 |
| | உள்ளுறைக் கொடுப்பனவு | **242,000** | 283,500 |
| | மேலதிக நேரம் | **527,240** | 306,761 |
| | ஊழியர் மருத்துவச் செலவு | **2,773,703** | 2,416,726 |
| | ஊழியர் மருத்துவக் காப்புறுதி | **2,328,894** | 2,001,327 |
| | தீ மற்றும் தனியாள் காப்புறுதி | **587,977** | 379,922 |
| | ஊழியர் நலன்புரி | **4,459,324** | 2,038,778 |
| | உள்ளூர் ஊழியர் பயிற்சி மற்றும் சந்தா | **921,188** | 401,492 |
| | செயலலாற்றுகை அடிப்படையிலான ஊக்குவிப்புக் கொடுப்பனவு | **9,096,187** | 8,438,186 |
| | ஆட்சேர்பு விளம்பரம் | **732,740** | 128,975 |
| | பணிப்பாளர்களின் வதிவிடத் தொலைபேசி | **786,390** | 439,740 |
| | விடுமுறையைக் காசாக்கல் | **1,796,425** | 1,673,310 |
| | வாகனத் தொழிற்பாட்டுக் குத்தகைக் கட்டணம் | **1,455,048** | 1,455,048 |
| | பணிப்பாளர் வாகனக் கொடுப்பனவு | **4,570,890** | 3,166,986 |
| | பணிப்பாளர்களின் எரிபொருள் கொடுப்பனவு | **1,356,590** | 1,030,514 |
| | ஊழியர் பணிக்கொடை* | **3,634,057** | 3,925,559 |
| | | **127,134,065** | 110,760,060 |

* கடந்த ஆண்டு நிதி செலவின் கீழ் வகைப்படுத்தப்பட்ட பணிக்கொடைக்கான வட்டிச் செலவு, பணியாளர்களின் செலவின் கீழ் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **16** | **தொழில்முறைக் கட்டணங்கள்** | | |
| | வரி மற்றும் பணிக்கொடை மதிப்பீட்டுக் கட்டணம் | **320,576** | 302,000 |
| | | **320,576** | 302,000 |

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

| | | 31.12.2021 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.2020 இல முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| **17** | **தொழிற்பாடடுச் செலவுகள்** | | |
| | வாடகை மற்றும் சேவைக் கட்டணம் | **44,182,960** | 41,537,311 |
| | தரிப்பிடக் கட்டணம் | **763,550** | 761,000 |
| | தொலைபேசிக் கட்டணங்கள் மற்றும் இணையம் | **1,690,919** | 1,329,925 |
| | மின்சாரம் | **1,626,825** | 1,602,200 |
| | அலுவலகப் பராமரிப்பு | **618,023** | 1,476,835 |
| | அச்சிடுதல் மற்றும் எழுதுகருவி | **2,764,004** | 2,413,783 |
| | போக்குவரத்து - உள்ளுர் | **1,814,843** | 1,459,568 |
| | போக்குவரத்து - உள்ளுர் | **58,840** | 112,381 |
| | ஈடிபி மற்றும் ஏனையவைக்கான அலுவலக உபகரணப் பராமரிப்பு | **2,103,839** | 3,298,073 |
| | ஐஏஐஎஸ் (IAIS) ற்கான சர்வதேச அங்கத்துவக் கட்டணம் | **4,516,334** | 4,124,500 |
| | விளம்பரம் - ஏனையவைகள் | **355,255** | 135,000 |
| | சட்டச் செலவுகள் | **290,520** | 279,330 |
| | பத்திரிகை மற்றும் நூலக புத்தகங்களுக்கான சந்தா | **164,694** | 236,414 |
| | தபால் மற்றும் பொதிக் கட்டணம் | **62,438** | 152,900 |
| | கணக்காய்வுக் கட்டணம் - கணக்காய்வாளர் நாயகம் | **504,000** | 457,200 |
| | கணக்காய்வுக் கட்டணம் - உள்ளக | **1,262,200** | 1,050,000 |
| | பெறுமானத் தேய்வு | **7,861,456** | 5,480,041 |
| | பொதுச் செலவுகள் | **112,778** | 73,730 |
| | சட்டச் செலவுகள் | **-** | 64,000 |
| | புலனாய்வுச் செலவுகள் | **12,921** | 1,850 |
| | மேற்பார்வை செலவுகள் | **-** | 6,020 |
| | வாகனப் பராமரிப்பு | **223,973** | 215,300 |
| | வாகனக் காப்பறுதி | **96,464** | 90,626 |
| | வாகன ஓட்டக் கட்டணங்கள் | **259,272** | 97,780 |
| | தேசக் கட்டுமான வரி | **-** | 138,516 |
| | | **71,346,108** | 66,594,283 |
| **18** | **ஆட்சேர்ப்புக்கான விளம்பரம** | **253,150** | 640,875 |
| | வங்கிக் கட்டணம | **2,000** | - |
| | | **255,150** | 640,875 |
| **19** | **நிதி மற்றும் ஏனைய செலவுகள்** | | |
| | வங்கி கட்டணங்கள் | **54,613** | 70,628 |
| | | **54,613** | 70,628 |

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

| | உண்மை 2021 ரூபா | வரவு செலவுத்திட்டப்படி 2021 ரூபா | வேறுபாடு |
|---|---|---|---|
| **20 வரவுசெலவுத்திட்டத்திற்கு எதிராக உண்மையான வருமானம் மற்றும் செலவு ஒப்பீடு** | | | |
| வருமானம் | | | |
| காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்தான வருடாந்த கட்டணம் | 257,764,270 | 262,900,000 | -2% |
| பதிவு மற்றும் புதுப்பித்தல் கட்டணம் | 14,846,384 | 14,100,000 | 5% |
| **கழி: செலவு** | | | |
| ஊழியர் செலவுகள் | 127,134,065 | 146,750,000 | 13% |
| நிபுணத்துவ மற்றும் தொழிற்பாட்டு கட்டணங்கள் | 71,666,684 | 97,465,000 | 26% |
| நிதி மற்றும் ஏனையவை | 16,069,049 | 20,350,000 | 21% |

| | 31.12.2021 இல் முடிவுற்ற வருடம் ரூபா | |
|---|---|---|
| **21 வரி விதிப்பு** | | |
| நடைமுறை வருமான வரி | | |
| நடைமுறை வருமான வரிக் கட்டணம் | 16,443,952 | |
| பிற்போடப்பட்ட வரி | | |
| தோற்றம் மற்றும் தற்காலிக வேறுபாடுகளின் திருப்பல் தொடர்பானது | (429,516) | |
| நிதி செயலாற்றுகை கூற்றில் உள்ள வருமான வரிச் செலவு | **16,014,436** | |
| **அ. வியாபார வருமானம்** | | |
| வரிக்கு முன்னரான இலாபம | 86,790,315 | |
| **சேர்: கழிப்பனவுகள் அனுமதிக்கப்படமாட்டாது** | | |
| ஆதனம், பொறு மற்றும் உபரணத்தின் தேய்வின் கணக்கீடு | 7,861,456 | |
| ஓய்வூதிய பங்களிப்பு (பணிக்கொடை)க்கான ஏற்பாடு | 3,634,057 | |
| பணிப்பாளரின் வீட்டுத் தொலைபேசி | 786,390 | |
| **கழி: அனுமதிக்கக்கூடிய கழிப்பனவுகள்** | | |
| தேய்மானச் சொத்துகளின் மீது மூலதன கொடுப்பனவுகள் | (3,771,616) | |
| கொடுப்பனவு செய்யப்பட்ட பணிக்கொடை | (1,989,175) | |
| **கழி முதலீட்டு வருமானம்** | | |
| வட்டி வருமானம் | (12,609,727) | |
| **மொத்த வியாபார வருமானம்** | | |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய வரி 14மூ வீதத்தில் | 80,701,699 | 11,298,238 |
| **ஆ. மொத்த முதலீட்டு வருமானம்** | | |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய வரி 28மூ வீதத்தில் | 12,609,727 | 3,530,724 |
| **நடைமுறை வருட வரி** | | 14,828,961 |
| ஏற்பாடுகளின் கீழ் முன்னைய வருட வருமான வரி | | 1,614,991 |
| **மொத்த வரி** | | 16,443,952 |

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

| | 31.12.2021 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.2020 இல முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|
| **பிற்போடப்பட்ட வரி** | | |
| வரி நோக்கங்களுக்காக திரட்டப்பட்ட தேய்மானம் | | |
| 01 ஜனவரி அன்று மீதி | **483,021** | 633,974 |
| இவ்வருடத்தில் தோற்றம் பெற்றவை ∴ திருப்பப்பட்டவை) | **1,415,028** | (150,953) |
| 31 டிசம்பர் அன்று மீதி | **1,898,049** | 483,021 |
| ஆண்டு இறுதியில் ஒத்திவைக்கப்பட்ட வரி விதிப்பு பின்வருமாறு உருவாக்கப்பட்டுள்ளது. | | |
| தற்காலிக வேறுபாடுகளிலிருந்து ஒத்திவைக்கப்பட்ட வரி விதிப்பு | | |
| - ஆதனம் பொறி மற்றும் உபகரணம | **2,197,895** | 991,882.78 |
| - **பணிக்கொடை** | **(299,847)** | (508,861.92) |
| - **மீள்மதிப்பீட்டு மிகை** | | - |
| | **1,898,048** | 483,021 |

## 22. நிதி முகாமைத்துவக் கணக்குகள், பேரேட்டு மீதிகள் மற்றும் வங்கி மீதிகள்

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, ஆணைக்குழுவின் இரு நடைமுறைக் கணக்குகளில் (ஆணைக்குழு மற்றும் காப்புறுதிபூட்கையாளர் பாதுகாப்பு நிதியம் என்பவற்றுக்கான) சாதகமான மீதியான ரூபா 1,000,000 இனை கொண்டுள்ள நடைமுறைக் கணக்குகளின் மீதிகள் (வங்கி பதிவேடுகளில்) நிதி முகாமைத்துவ கணக்குகளுக்கு தன்னியக்கமாக மாற்றப்படும் வகையில் இரு நிதி முகாமைத்துவக் கணக்குகளை தொழிற்படுத்துகின்றது. இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் ஏற்கனவே வழங்கப்பட்ட காசோலைகள் உடனடியாக சமர்ப்பிக்கப்படாதிருந்தால், பேரேட்டில் காணப்படும் வங்கி மீதியானது நிதி முகாமைத்துவ கணக்குகளுடனான கொடுக்கல்வாங்கல்களின் பின்னர் பதிவுசெய்யப்படுவதன் காரணமாக மறைப் பெறுமதியை வெளிப்படுத்தக்கூடும்.

31 டிசம்பர் 2021ஆம் திகதியன்று வங்கி மீதிகள் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| நடப்புக் கணக்கின் இருப்பு | - | ரூ. 373,073 |
| காப்புறுதி பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் | - | ரூ. 5,437,940 |
| மொத்தம் | - | ரூ. 5,811,012 |

## 23. மூலதன ஒப்படைப்புகள்

31 டிசம்பர் 2021 அன்று மூலதன ஒப்படைப்புகள் ஏதுமில்லை.

## 24. தொடர்ந்து செல்லும் பொறுப்புகள் மற்றும் தொடர்ந்து செல்லும் சொத்துக்கள்

31 டிசம்பர் 2021 அன்று அறிந்தவரையில் தொடர்ந்து செல்லும் பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்கள் எதுவுமில்லை.

## 25. அறிக்கையிடலின் பின்னரான நிகழ்வுகள்.

நிதியியல் கூற்றுகளில் அவசியமான சீராக்கல்கள் மேற்கொண்டதன் பின்னர் அல்லது வெளிப்படுத்தியதின் பின்னர் அறிக்கையிடப்பட்டதன் பின்னரான எந்த ஒரு நிகழ்வும் எழவில்லை..

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

## 26. வரிவிதிப்பு

வருமான வரிக்கான ஏற்பாடுகள் 2017ஆம் ஆண்டு 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கு அமைவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது

| விபரம் | 2021. 12. 31 | |
|---|---|---|
| **அ. வியாபார வருமானம்** | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | 86,294,106 | |
| **சேர்: கழிப்பனவுகள் அனுமதிக்கப்படமாட்டாது** | | |
| ஆதனம், பொறு மற்றும் உபரணத்தின் தேய்வின் கணக்கீடு | 7,861,456 | |
| ஓய்வூதிய பங்களிப்பு (பணிக்கொடை)க்கான ஏற்பாடு | 4,130,266 | |
| பணிப்பாளரின் வீட்டுத் தொலைபேசி | 786,390 | |
| **கழி: அனுமதிக்கக்கூடிய கழிப்பனவுகள** | | |
| தேய்மானச் சொத்துகளின் மீது மூலதன கொடுப்பனவுகள் | (3,771,616) | |
| கொடுப்பனவு செய்யப்பட்ட பணிக்கொடை | (1,989,175) | |
| **கழி முதலீட்டு வருமானம்** | | |
| வட்டி வருமானம் | (12,609,727) | |
| **மொத்த வியாபார வருமானம்** | **80,701,699** | |
| கொடுப்பனவு செய்ய வேண்டியவ ரி 14% வீதத்தில் | | 11,298,237.87 |
| **மொத்த வியாபார வருமானம்** | **12,609,727** | |
| கொடுப்பனவு செய்ய வேண்டியவ ரி 28% வீதத்தில் | | 3,530,724 |
| | | 14,828,961 |
| ஏற்பாடுகளின் கீழ் முன்னைய வருட வருமான வரி | | 1,614,991 |
| | | **16,443,952** |
| **கழி: வரி வரவுகள்** | | |
| மு/கொ வருமான வரி | | (39,000) |
| நிறுத்திவைத்தல் வரி | | (1,208,606) |
| செலுத்தப்பட்ட சுய-மதிப்பீட்டு கொடுப்பனவு | | (7,633,085) |
| **கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை** | | **5,948,271** |

## 27. இலங்கை நிதியியில் துறையை நவீனமயப்படுத்துவதற்கான கருத்திட்டம் (FSMP)

இலங்கை அரசாங்கம், நிதித்துறையை அபிவிருத்தி செய்வதற்கு அவசியமான தொழில்நுட்ப மற்றும் நிதியியல் உதவிகளை வழங்குவதற்கு உலக வங்கி போன்ற அபிவிருத்திப் பங்காளிகளிடம் கோரியுள்ளது. உலக வங்கி ஐந்து வருட காலங்களுக்கு, மூன்று நிதியியல் துறை ஒழுங்குபடுத்துனர்களை அமுல்படுத்தல் பங்காளர்களாகக் கொண்டு “இலங்கையின் நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்திற்கு”ஆதரவளிப்பதற்கு சம்மதம் தெரிவித்துள்ளது.

கருத்திட்ட அபிவிருத்தியின் நோக்கம், நிதியியல் மற்றும் காப்புறுதித்துறையின் வினைத்திறனை அதிகரித்தல் மற்றும் நிதியியல் காப்புறுதி சேவைகளை நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் பயன்படுத்துவதற்கு பங்களிப்பு செய்வதாகும். இந்த கருத்திட்டம் கருத்திட்ட அபிவிருத்தி நோக்கத்தை நிதியியல் சந்தைக் கட்டமைப்பை நவீனமயப்படுத்தல், நிதியியல் முறைமைக்கான சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் சட்ட அமைப்பை மேம்படுத்தல் மற்றும் இலங்கை மத்திய வங்கி, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் போன்ற நிதியியல் துறை ஒழுங்குபடுத்துனர்களின் நிறுவன இயலுமையை பலப்படுத்தல் என்பவற்றினூடாக அடையும்.

அதற்கமைவாக, இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசும் சர்வதேச அபிவிருத்தி சங்கமும் (கடன் இலக்கம் 6006-எல்கே), விசேட பெற்றுக்கொள்ளல் உரிமைகள் 55,400,000 (அண்ணளவாக அ.டொ 75 மில்லியன்) சமனான கடன் தொகைக்கு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது. கடன் நடைமுறைகளில் இருந்து, அரசாங்கம் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவுடன் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் அமைக்கப்படும் உரிய செலவழிப்பு இணைக்கு காட்டிகளாக (DLIS) விசேட பெற்றுக்கொள்ளல் உரிமைகள் 6,650,000 (அண்ணளவாக அ.டொ 9 மில்லியன்) மற்றும் விசேட பெற்றுக்கொள்ளல் உரிமைகள் 708,333 (அண்ணளாவாக அ.டொ 1 மில்லியன்) இனை வழங்குவதற்கு உப ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

உலக வங்கி கீழ்வரும் தொகையை நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சுக்கு அனுப்பியுள்ளது.

(i) FSMP முதலீட்டு கருத்திட்ட நிதியிடல்

நிதிச் சந்தை உள்கட்டமைப்பின் சட்ட மற்றும் ஒழுங்குமுறைக் கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் நவீனமயமாக்குதல் ஆகியவற்றின் கட்டுப்பாட்டார்களின் நிறுவனத் திறனை வலுப்படுத்துதல்.

| **திகதி** | **தொகை (ஐ.அ.டொ)** |
|---|---|
| 14/01/2019 | 523,000 |
| கொடுப்பனவுகள | (48,352) |
| | 474,648 |

(ii) பெறுபேறு அடிப்படையிலான நிதியிடல்

விடுவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள பெறுபேறுகளை அடைவதற்கு எதிராக தகுதியான செலவினத் திட்டத்திற்கு நிதியளிப்பதற்கான ஆதரவை வழங்குதல்.

| **திகதி** | **தொகை (ஐ.அ.டொ)** |
|---|---|
| 27/03/2019 | 261,163.13 |
| 25/05/2019 | 64,677.66 |
| 09/10/2019 | 64,039.69 |
| 17/12/2019 | 64,803.28 |
| 12/02/2020 | 64,208.44 |

## 28. தொடர்புடைய தரப்பினரின் வெளிப்படுத்தல்கள

திரு. ராஸிக் ஸரூக் பிசி அவர்கள் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் தலைவராக 03 ஜனவரி 2020ஆம் திகதியில் இருந்து நியதிக்கப்பட்டார்.

திரு. ஆர்.எம்.பி. ரத்னாயக்க பொதுத் திறைசேரியின் பிரதிச் செயலாளராக பணியாற்றும் காரணமாக பதவி வழி அங்கத்தவராக 22 ஜனவரி 2021ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டார்.

திருமதி. டீ.எம்.ஜே.வை.ஜி. பெர்னான்டோ இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆணையாளராக பணியாற்றும் காரணமாக பதவி வழி அங்கத்தவராக 01 ஜனவரி 2021ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டார்.

திரு. சஞ்சீவ திசாநாயக்க கம்பனிகள் பதிவுசெய்யும் திணைக்களத்தின் கம்பனிகள் பதிவாளராக பணியாற்றும் காரணமாக பதவி வழி அங்கத்தவராக 08 ஜுலை 2021ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டார்.

திரு. ஹரிஷ் சல்பிடிகோரள ஆணைக்குழுவின் தலைவராக 03 ஜனவரி 2020ஆம் திகதியில் இருந்து நியதிக்கப்பட்டார்.

திரு. ராஜா குணரத்ன ஆணைக்குழுவின் தலைவராக 03 ஜனவரி 2020ஆம் திகதியில் இருந்து நியதிக்கப்பட்டார்.

திருமதி. இந்திரா பதுகே ஆணைக்குழுவின் தலைவராக 03 ஜனவரி 2020ஆம் திகதியில் இருந்து நியதிக்கப்பட்டார்.

கீழே குறிப்பிட்டுள்ளபடி, ஆணைக்குழுவின் கீழ்குறிப்பிடப்பட்ட முன்னாள் பதவிவழி உறுப்பினர்கள் பதவி வகிப்பதை நிறுத்திவிட்டனர்.

திரு. பி. அல்கம பொதுத் திறைசேரியின் பிரதிச் செயலாளராக பணியாற்றுவதை நிறுத்தியதன் காரணமாக பதவி வழி அங்கத்தவராக 21 ஜனவரி 2021ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் நிறுத்தப்பட்டார்.

திரு. ஏ.கே.டி.டி.டி ஆரன்தர கம்பனிகள் பதிவுசெய்யும் திணைக்களத்தின் கம்பனிகள் பதிவாளராக பணியாற்றுவதை நிறுத்தியதன் காரணமாக பதவி வழி அங்கத்தவராக 21 ஜனவரி 2021ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் நிறுத்தப்பட்டார்.

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**28.1** கீழ்வரும் அட்டவணையானது இந்த வருடத்தில் பதவியில் இருந்த ஆணைக்குழு உறுப்பினர்களின் உறவுமுறையினை சித்தரிக்கின்றது.

| அங்கத்தவரின் பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | உறவுமுறை |
|---|---|---|
| திரு. ராஸிக் ஸரூக் | நிதி ஆணைக்குழு,<br>BMICH | அங்கத்தவர் (01.01.2021 - 31.12.2021)<br>அங்கத்தவர் (01.01.2021 - 31.12.2021) |
| திரு. ஆர்.எம்.பி.ரத்னாயக்க | பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு<br>இலங்கை வங்கி<br>உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் | பணிப்பாளர் (01.01.2021 - 31.12.2021)<br>பணிப்பாளர் (01.01.2021 - 31.12.2021)<br>பணிப்பாளர் (01.01.2021 - 31.12.2021) |
| திரு. சஞ்சீவ திசாநாயக்க | பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு<br>இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியம கண்காணிப்பு சபை<br>கணக்கீட்டு நியமக் குழு | பதவி வழி அங்கத்தவர் (08.07.2021 - 31.12.2021)<br>பதவி வழி அங்கத்தவர் (08.07.2021 - 31.12.2021)<br>பதவி வழி அங்கத்தவர் (08.07.2021 - 31.12.2021) |
| திருமதி டீ.எம்.ஜே.வை.ஜி. பெர்னான்டோ | இலங்கை மத்திய வங்கி<br>இலங்கை கடன் தகவல் பணியகம்<br>இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம: | பிரதி ஆளுனர் (01.01.2021 - 31.12.2021) )<br>தலைவி (01.01.2021 - 31.12.2021)<br>தலைவி (01.01.2021 - 31.12.2021 |
| திரு ஹரிஷ் சல்பிடிகோரள | எதுவுமில்லை | எதுவுமில்லை |
| திரு. ராஜா குணவர்தன | NMRA | அங்கத்தவர் (01.01.2021 - 31.12.2021) |
| திருமதி. இந்திரா பதுகே | எதுவுமில்லை | எதுவுமில்லை |

**28. 2** சந்தை விகிதத்தில் வியாபாரத்தின வழக்கமான போக்கில் பின்வரும் பரிவர்த்தனைகளைத் தவிர, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் மேலே குறிப்பிட்ட நிறுவனங்களுடன், எந்த பரிவர்த்தனைகளும் பதிவு செய்யப்பட்டவில்லை. ஐசுஊளுடு பினவரும் 2 நடைமுறைக் கணக்குகள் மற்றும் 3 சேமிப்பு கணக்குகளை இலங்கை வங்கியில் பராமரிக்கின்றதுடன், வங்கி நிலுவைகள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

| கணக்கின் பெயர் | கணக்கு இலக்கம் | 31.12.2021 அன்று மீதி | 31.12.2020 அன்று மீதி |
|---|---|---|---|
| இலங்கை வங்கி | 1877 | ரூபா 373,073 | (ரூபா 1,405,898) |
| இலங்கை வங்கி | 74236358 | ரூபா 5,437,940 | ரூபா 5,014,430 |
| இலங்கை வங்கி | 83094438 | ரூபா 508,578 | ரூபா 658,147 |
| இலங்கை வங்கி | 1886 | ரூபா 1,000,000 | ரூபா 1,000,000 |
| இலங்கை வங்கி | 74236394 | ரூபா. 301,963 | ரூபா 149,396,035 |

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**28. 3** 2021இல் கீழ்வரும் முதலீடுகள் இலங்கை வங்கியின் ஊடாக மேற்கொள்ளப்பட்டது.

| ஆணைக்குழு நிதியின் முதலீட்டு வகை | இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் (ரூபா) | 31.12.2021 அன்று மீதி (ரூபா) |
|---|---|---|
| ரிபோ | 586 மில்லியன் | 95 மில்லியன் |
| நிலையான வைப்புகள் | 265 மில்லியன் | - |
| **காப்புறுதிப் பூட்கை நிதியின் முதலீட்டு வகை** | **இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் (ரூபா)** | **31.12.2021 அன்று மீதி (ரூபா)** |
| ரிபோ | ரூபா 696,900,000 | - |
| நிலையான வைப்புகள் | ரூபா 2,260,000,000 | ரூபா 2,260,000,000 |

**28.4** ஆளுகை உருவகம் நிதி அமைச்சு, நிதி அமைச்சர் மற்றும் திறைசேரி செயலாளர் ஆகியோரால் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டிருக்கலாம், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் சாதாரண வியாபாரப் பரிவர்த்தனைகளைத் தவிர, இவ்வருடத்தில் வேறு எந்த பரிவர்த்தனைகளும் பதிவுசெய்யப்படவில்லை.

## 28.5 பிரதான முகாமைத்துவ நபர்களுடனான கொடுக்கல் வாங்கல்

இலங்கை அரச கணக்கியல் நியமம் - SLPSAS - 14இன் படி - “தொடர்புடைய தரப்பினரின் வெளிப்பாடுகள்”, பிரதான முகாமைத்துவ நபர்களின் செயல்பாடுகளை, அதாவது நிறுவனத்தின் திட்டமிடுதல், பணிப்புரை வழங்குதல் மற்றும் செயல்பாடுகளை கட்டுப்படுத்துதல் போன்றவற்றுக்கு பொறுப்புடையவர்கள் மற்றும் அதிகாரம் உள்ளவர்களை உள்ளடக்கியுள்ளது.

### 28.5.1 பிரதான முகாமைத்துவ நபர்களின் ஊதியம்

| ஆளுகையின் அங்கத்தவர்கள் | |
|---|---|
| போக்குவரத்து செலவு உள்ளடங்களாக திரட்டிய ஊதியம் (7 அங்கத்தவர்கள்) | ரூபா 2,656,685 |
| 2 அங்கத்தவர்களுக்கு மருத்துவக் காப்புறுதித் தவணைக் கட்டணம் | ரூபா 103,546 |

| பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவம் | |
|---|---|
| 6 நபர்களுக்கான திரட்டிய ஊதியம் | ரூபா 25,183,970 |
| காசற்ற நன்மைகள் | ரூபா 1,455,048 |
| 6 அங்கத்தவர்களுக்கு மருத்துவக் காப்புறுதித் தவணைக் கட்டணம் | ரூபா 285,820 |

## 29. விரிவான தகவல்

கணக்காய்வு நாயகம் வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில், ஐசுஊளுடு ஒத்திவைக்கப்பட்ட வரிவிதிப்பை பயன்படுத்தத் தொடங்கியது. LKAS 12 வருமான வரி தேவைப்பாடுகளின் படி, ஐசுஊளுடு முன்பு கணக்கியல் கொள்கையில் ஒரு மாற்றத்திற்கான தொகைக்கு உரிய தற்காலிக கால வேறுபாடுகளுக்கு வழங்கவில்லை. அதேபோன்று, மதிப்பீடுகளில் மாற்றம் மற்றும் வழுக்கள் என்பவற்றுக்கு கடந்த இரண்டு ஆண்டுகள், டுமுயுளு 3 கணக்கியல் கொள்கைகளுக்கு இணங்குவாற்காக மீண்டும் இணைக்கப்பட்டது.

# இணைப்பு I

31 டிசம்பர் 2021 அன்று 2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள்.

| இல | தரகர் கம்பனியின் பெயர் | வியாபார வகுப்பு |
|---|---|---|
| 1 | ஏஜஏ இன்சூரன்ஸ் லங்கா பிஎல்சி. . | நீண்ட கால காப்புறுதி |
| 2 | ஏஐஜி இன்சூரன்ஸ் லிமிடட். ழு | பொதுக் காப்புறுதி |
| 3 | எலைன்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட். . | பொதுக் காப்புறுதி |
| 4 | எலைன்ஸ் லைப் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட. | நீண்ட கால காப்புறுதி |
| 5 | அமானா டக்காபுல் லைப் பிஎல்சி | நீண்ட கால காப்புறுதி |
| 6 | அமானா டக்காபுல் பிஎல்சி | பொதுக் காப்புறுதி |
| 7 | ஆர்ப்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சி | நீண்ட கால காப்புறுதி |
| 8 | சிலிங்கோ ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 9 | சிலிங்கோ லைப் இன்சூரன்ஸ் லிமிடட் | நீண்ட கால காப்புறுதி |
| 10 | கென்டினென்டல் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 11 | கோப்பரெட்டிவ் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட. | பொதுக் காப்புறுதி |
| 12 | கோப்லைப் இன்சூரன்ஸ் லிமிடட | நீண்ட கால காப்புறுதி |
| 13 | பியார்பெஸ்ட் இன்சூரஸ் லிமிடட | பொதுக் காப்புறுதி |
| 14 | எச்என்பி அசூரன்ஸ் பிஎல்சி | நீண்ட கால காப்புறுதி |
| 15 | எச்என்பி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட்.. | பொதுக் காப்புறுதி |
| 16 | ஜனசக்தி இன்சூரன்ஸ் பிஎல்சி | நீண்ட கால காப்புறுதி |
| 17 | லை.ஃப் இன்சூரன்ஸ் கோர்பரேஷ்ன் (லங்கா) லிமிடட். | நீண்ட கால காப்புறுதி |
| 18 | எல்ஓஎல்சி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட். | பொதுக் காப்பறுதி |
| 19 | எல்ஓஎல்சி லைப் அசூரன்ஸ் லிமிடட். | நீண்ட கால காப்புறுதி |
| 20 | எம்பிஎஸ்எல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட். ழுழு | நீண்ட கால காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 21 | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | பொதுக் காப்புறுதி |
| 22 | ஒரியன்ட் இன்சூரன்ஸ் லிமிட்ட | பொதுக் காப்புறுதி |
| 23 | பீப்பள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி | பொதுக் காப்புறுதி |
| 24 | சனச ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட். | பொதுக் காப்புறுதி |
| 25 | சனச லைப் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட். | நீண்ட கால காப்புறுதி |
| 26 | ஸொப்ட்லொஜிக் லைப் இன்சூரன்ஸ் பிஎல்சி | நீண்ட கால காப்புறுதி |
| 27 | இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் | நீண்ட கால காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 28 | யூனியன். அசூரன்ஸ் பிஎல்சி | நீண்ட கால காப்புறுதி |

* எந்தவொரு புதிய காப்புறுதி வியாபாரத்தையும் ஏற்றுக்கொள்வதில்லை என்பதுடன் இலங்கையில் இருந்து வெளியேறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது.

** 01.06.2020ஆம் திகதியில் இருந்து பயனுறுதி பெறும் வகையில் எவ்விதமான புதிய ஆயுட் காப்புறுதிப் பூட்கைகளையும் வழங்குவதில்லை என்பதனை கம்பனி உறுதிப்படுத்தியது

# இணைப்பு II

2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் கீழ் 31 டிசம்பர் 2021 அன்றுள்ள பதிவுசெய்யப்பட்ட காப்புறுதித் தரகுக் கம்பனிகள்..

| இல | தரகர் கம்பனியின் பெயர் | வியாபார வகுப்பு |
|---|---|---|
| 1 | 3 டி எச் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 2 | ஏஏசியன் இன்டர்ந'னல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 3 | ஏ.எம்.டபில்யூ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 4 | ஏடிஎஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 5 | எயிட்கன் ஸ்பென்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 6 | அல்பின்கோ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 7 | அலியோன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 8 | அம்ட்ரஸ்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 9 | அகுலைன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 10 | அசகி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 11 | ஏசியா குரொப் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் ஜ முன்னைய ஜேஎப் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட்ஸ | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 12 | அஸட்லைன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 13 | ஏஎக்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 14 | பிஐஎம்ஏ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 15 | பரிலியன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 16 | சியேக்சி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 17 | சிலான் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் கோ (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 18 | சினர்ஜி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 19 | சிஎப் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 20 | கொலொம்போர் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 21 | கொமர்'ல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 22 | டி எஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 23 | டெல்மேஜ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 24 | ஈகிள் டிவிஆர்எஸ் இன்சூரன்ஸ் அன்ட் ரீஇன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 25 | ஈகிள் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட். | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 26 | ஈகுவிட்டி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 27 | ஈஸ்னா இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 28 | ஈசாஜி கரிம்ஜி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 29 | பெயர்வே இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 30 | பைன்ட் மை இன்சூரன்ஸ் அன்ட் ரீஇன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 31 | போர்மோஸ்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 32 | ஜோர்ஜ் ஸ்டுவர்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 33 | குளோபல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் அன்ட் சேர்விஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 34 | கிரான்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம |

# இணைப்பு II

| இல | தரகர் கம்பனியின் பெயர் | வியாபார வகுப்பு |
|---|---|---|
| 35 | கார்டியன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 36 | ஜக்கன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட்ழுழுழு | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 37 | ஜஜஆர்எம் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் ஜ முன்னைய பின்லே இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட்ஸ | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 38 | இன்சூர்மீ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 39 | ஜேய் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் கன்ஸல்டன்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 40 | லக் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 41 | லைப் அன்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் சிலோன் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 42 | எம் ஆர் எஸ் யு இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 43 | மக்ஸ்வெல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 44 | மேர்கன்டைல் போர்சூன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட். | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 45 | மேர்கன்டைல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட். | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 46 | முத்துவல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 47 | எல்எம் அன்ட் ஏ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 48 | மை இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 49 | ந'னல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 50 | பிளசிட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 51 | பிரஸ்டிஜ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 52 | புரோகெயர் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 53 | புரெட்டெக்ஸன் அன்ட் அசூரதன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 54 | பிரியோரிட்டி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 55 | ரெட்மோ ஸ்விஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 56 | ரிலைன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 57 | ரின்கோன் லங்கா இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 58 | சம்சன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 59 | சேனாரத்ன இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 60 | செங்கடகல இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 61 | செரண்டிப் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட். | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 62 | ஸ்ரடர்ஜிக் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 63 | சன்கேட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 64 | ட்ரஸ்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 65 | யூஎன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 66 | யுனைட்டட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 67 | வேராசிட்டி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 68 | விக்டர் இமானுவேல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 69 | வோங்கா இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 70 | ஸெனித் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |

# இணைப்பு III

2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் கீழ் 31 டிசம்பர் 2021அன்று பதிவுசெய்யப்பட்ட நட்ட சீராக்கலாளர்கள்.

| இல. | நட்ட சீராக்கலாளர் | அனுமதிப் பத்திரத்தின் பயனுறுதித் திகதி |
|---|---|---|
| 1 | திருமதி. உதிதமாலா ஜினாதரி குருகுலசூரிய | 13 ஜுன் 2018 |
| 2 | திரு. ரன் பண்டார தென்னகோன் | 25 ஜுன் 2018 |
| 3 | திரு. விஜிதசேன லீலாரத்ன பெர்னான்டோ | 25 ஜுன் 2018 |
| 4 | திரு. காமினி கினிகம | 25 ஜுன் 2018 |
| 5 | திரு. அஹமட் நஸீம் நஸ்வி ரஹ்மான் | 25 ஜுன் 2018 |
| 6 | திரு. குணவர்தன முதியான்சலாகே ஆனந்த உதய குமார குணவர்தன | 25 ஜுன் 2018 |
| 7 | திரு மஹபாலகே டொன் சிசிர உபாலி பெரேரா | 26 ஜுன் 2018 |
| 8 | திரு. நிரோஷ் சஞ்சீவ வத்துகரவத்த | 26 ஜுன் 2018 |
| 9 | திரு. சுசாந்த மகிந்தரத்ன வீரகோன் | 26 ஜுன் 2018 |
| 10 | திரு. ராஜபக்ஷ பத்திரகே டொன் காஞ்சன சுரங்கிகா | 10 செப்டெம்பர் 2018 |
| 11 | த ஷீல்ட் அஜஸ்டர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 29 மார்ச் 2019 |
| 12 | திரு. ஏ.டபில்யூ.எம். பந்துல விஜேகோன் | 29 மார்ச் 2019 |
| 13 | திரு. கிறிசாந்த கருணாரத்ன | 29 மார்ச் 2019 |
| 14 | திரு. ராஜபக்ஷ முதலியான்சலாகே ஹேரத் ராஜபகஷ | 26 செப்டெம்பர் 2019 |
| 15 | திரு. ஜசின் பஸ்தியன் ஆரச்சிகே ரவினாத் நிரோ'ன | 26 செப்டெம்பர் 2019 |
| 16 | திரு. கீர்த்தி தெல்வத்த | 26 செப்டெம்பர் 2019 |
| 17 | என்ட்ரஸ்ட் இன்டர்ந'னல் (பிறைவட்) லிமிடட் | 08 ஜுன் 2020 |
| 18 | திரு.அ லி மொஹிதீன் மொஹமட் கலீல் | 12 ஒகஸ்ட் 2020 |
| 19 | திரு. ஷெல்வின் மலிகஸ்பே கோரலகே | 12 ஒகஸ்ட் 2020 |
| 20 | திரு. சௌரத் பந்துல அமரசேகர | 12 ஒகஸ்ட் 2020 |
| 21 | திரு. அனுர மகின்சக தெடிகம | 12 ஒகஸ்ட் 2020 |
| 22 | திரு. மங்கல கீர்த்தி அசோக குமார தர்மரத்ன | 12 ஒகஸ்ட் 2020 |
| 23 | திரு. சித்திர பண்டிதசுந்தர | 12 ஒகஸ்ட் 2020 |
| 24 | திரு. ஹேமா கோதபாய மஹானாம லியனகே | 16 மார்ச் 2021 |
| 25 | திரு. ஜொஹான் அமரதுங்க | 08 பெப்பரவரி 2021 |
| 26 | திரு. மாபே விதனாகே ரூபசேன பெரேரா | 07 ஜுலை 2021 |
| 27 | திரு. பியல் வதுதொர | 05 ஜுலை 2021 |
| 28 | திரு. சுகத் வீரரத்ன | 07 ஜுலை 2021 |
| 29 | திரு. சுவர்ணகமல் சுவர்ணராஜ் | 21 ஜனவரி 2021 |
| 30 | திரு. தனுஜ ஹிகுலகே | 06 டிசம்பர் 2021 |

# அருஞ்சொல் அகராதி

**திரட்டு**
அதே கம்பனியுடன் காப்புறுதி செய்துகொண்ட அல்லது மறுகாப்பீடு செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க அளவான இடர்கள் இழப்பு நிகழ்வு ஒன்று நடைபெறும் அதே சமயத்தில் பாதிக்கப்படும் சூழ்நிலையை குறிக்கும்.

**கையேற்புச் செலவுகள்**
புதிய காப்புறுதி ஒப்பந்தங்கள் மற்றும் இருக்கின்ற காப்புறுதி ஒப்பந்தங்களைப் புதுப்பித்தல் கையேற்புகளோடு முதன்மையாக சம்பந்தப்பட்ட அத்துடன் மாறுபடும் அனைத்துச் செலவுகளையும் குறிக்கும். உதாரணம் - தரகு.

**காப்பீட்டு கணிப்பாளர்**
காப்பீட்டுக் கணிப்பாளர் என்பவர், எதிர்பாராத நிகழ்வுகளையுடைய நிதிசார் தாக்கங்களை மதிப்பிடுவதற்கு தொழில் முறையாகப் பயிற்றுவிக்கப்பட்ட நபர் ஆவார். காப்புறுதிக் கணிப்பீட்டாளர்கள் காப்புறுதி வியாபாரத்தின் இயல்பு, அதன் நிதிசார் சேவைகள், சொத்துக்களுடன் ஒன்றிணைந்துள்ள இடர்கள் மற்றும் புள்ளி விபரவியல் மாதிரிகளைப் பயன்படுத்துதல் போன்றவற்றில் சிறந்த விளக்கம் கொண்டவர்களாக இருத்தல் அவசியமாகும். காப்புறுதிச் சூழலில் இந்தத் திறன்கள் உதாரணமாக, கட்டுப்பணங்களை நிரூபித்தல், தொழில்நுட்ப ஏற்பாடுகள் மற்றும் மூலதன மட்டங்கள் ஆகியவற்றில் அடிக்கடி பயன்படுத்தப்படும்.

**நிர்வாகச் செலவுகள்**
கட்டுப்பணச் சேகரிப்பு, இலாகா நிர்வாகம், ஊழியர் செலவீனம், ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பான பெறுமானத் தேய்வுகளுக்கான ஏற்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கிய நிர்வாகத் தன்மையைக் கொண்ட செலளவுகாகும்.

**அனுமதிக்கத்தக்க ஆதனங்கள்**
காப்புறுதியாளர் ஒருவரின் நியதி பூர்வமான கடன்தீர் ஆற்றலை நிர்ணயிப்பதில் உள்ளடக்கக் கூடிய ஆதனங்கள். அத்தகைய சொத்துகள், என்பவை 2000 ஆவது ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்துறையை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட விதிமுறைகளின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

**ஆண்டுத் தொகை**
குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பிரிவுக்கு அல்லது காப்புறுதிதாரரின் ஆயுள் காலத்தின்போது, காலத்திற்குக் காலம் வருமான அனுகூலங்களைச் செலுத்தும் ஒரு காப்புறுதித் திட்டம். எதிர்காலத்தில் ஏதாவது ஒரு கட்டத்தில் கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்படும்போது அது ஒத்திவைக்கப்பட்ட ஆண்டுத்தொகையாகும். உடனடியாக வருடாந்த கொடுப்பனவு ஒப்பந்தம் செய்யப்பட்ட ஆரம்பத்திலேயே கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்படும்போது அது உடனடியான ஆண்டுத்தொகை ஆகும்.

**பாங்கசூரன்ஸ்**
ஒரு காப்புறுதியாளர், காப்புறுதி மற்றும் மூலதனப் பொருளை, வங்கி வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்வதற்கான ஒரு ஒழுங்கமைப்பு.

**பயனாளி**
காப்புறுதிப் பூட்கையாளரின் மரணத்தின் போது, காப்புறுதி செய்யப்பட்ட தொகையையும், கிடைக்க வேண்டிய ஏனைய அனுகூலங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டியவர் எனக் காப்புறுதிப் பூட்கையாளரினால் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் நபர்.

**மூலதன போதுமான விகிதம் (CAR)**
தேவைப்படும் இடர் மூலதனத்திற்கு (RCR) ஆதரவளிக்கும் மொத்த மூலதனத்தின் (TAC) போதுமான வழிவகைகள்.
CAR = (TAC/RCR) x100

**ஒப்பளிப்பாளர்**
மீள்காப்புறுதிக் கம்பனியின் வாடிக்கையாளர் (ஆரம்ப காப்புறுதிக் கம்பனி).
விட்டுக்கொடுத்தல் - விட்டுக்கொடுக்கப்படும் கம்பனிகளால் மறு காப்புறுதியாளருக்கு மாற்றப்படும் இடரின் ஒரு பகுதி.

**கோரிக்கைகள்**
காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் காப்புறுதி நிகழ்வு சம்பவிக்குமிடத்து, ஒரு காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய தொகை. அதாவது, சொத்துகள் அழிதல் அல்லது சேதமடைதல் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட மரணம் அல்லது காயங்கள், மருத்துவமனைச் செலவுகள் அல்லது மருந்துச் செலவுகள் ஏற்படுதல், காப்புறுதி செய்யப்பட்ட நபரின் மரணம் அல்லது உடல் ஊனம், ஒரு காப்புறுதிப் பத்திரம் முதிர்ச்சியடைதல், ஓய்வூதிய வயதை அடைதல், போன்றவை காப்புறுதிப் பத்திரத்தைக் கையளிக்கும் போது செலுத்தப்பட வேண்டிய தொகை.

**ஏற்க நேர்ந்த கோரிக்கைகள்**
கணக்குக் காட்டப்படும் காலப்பகுதியில், கோரிக்கை கையாளுவதோடு தொடர்புடைய செலவுகள், பொருத்தமான சந்தர்ப்பங்களில் கணக்குக் காட்டப்படும் காலத்தின் ஆரம்ப அல்லது இறுதித் திகதியில் செலுத்தப்பட வேண்டிய இருக்கின்ற கோரிக்கை தொடர்பான ஏற்பாடுகளைச் சீராக்குதல் ஆகியவற்றோடு தொடர்புபட்ட செலுத்தப்பட்ட மொத்தக் கோரிக்கைகளின் கூட்டுத் தொகை ஆகும்.

**கோரிக்கைகள் தொடர்பாக ஏற்பட்ட அறிவிக்கப்படாத செலவுகள் (IBNR)**
ஏற்பட்டிருக்கும் ஆனால் இதுவரையில் காப்புறுதியாளருக்கு அறிவிக்கப்பட்டிராத எதிர்பார்க்கப்படும் இழப்புக்களின் செலவை உள்ளடக்கும் பொருட்டு, சொத்து, பொறுப்பு மற்றும் ஏனைய காப்புறுதிகள் என்பன தொடர்பாக கணக்கீட்டுக் காலத்தின் முடிவின்போது வைக்கப்பட்டிருக்கும் ஓர் ஒதுக்கு.

**நிலுவையில் இருக்கும் கோரிக்கைகள் ஒதுக்கு - பொதுக் காப்புறுதி வியாபாரம்**
ஐந்தொகைத் திகதிக்குள் இடம் பெற்றிருக்கும் நிகழ்வுகளில் இருந்து தோன்றும் கோரிக்கைகளைத் தீர்த்து வைப்பதற்கான மதிப்பிடப்பட்ட செலவுகளை உள்ளடக்கும் பொருட்டு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை. இது அறிவிக்கப்படாத (IBNR) ஆனால், ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் கோரிக்கைகள் தொடர்பான செலவுகள், கோரிக்கைகளைக் கையாளும் செலவுகள் என்பனவற்றை உள்ளடக்குவதுடன், அக்கோரிக்கைகள் தொடர்பாக ஏற்கனவே செலுத்தப்பட்டிருக்கும் தொகைகள் இதிலிருந்து கழிக்கப்படுகின்றன.

**இணைக் காப்புறுதி**
ஓர் நட்ட இடரை குறித்துரைக்கப்பட்ட தவணைக் கட்டணத்தில் உடன்பட்டிருக்கும் விகிதத்தில் உள்ளடக்கும் பொருட்டு

# அருஞ்சொல் அகராதி

காப்புறுதி செய்பவருடன் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட காப்புறுதியாளர்கள் தனியொரு ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளும் ஓர் ஏற்பாடு.

**தரகுக் கட்டணம்**
காப்புறுதியாளர் ஒருவரின் காப்புறுதித் திட்டங்களை விற்பனை செய்தமைக்காக மற்றும் சேவைகளை வழங்கியமைக்காக, ஒரு தரகருக்கு அல்லது காப்புறுதி முகவருக்குச் செலுத்தப்படும் கொடுப்பனவு.

**செறிவு இடர்**
காப்புறுதியாளரின் சொத்துக்கள், உள்ளார்ந்த கடன் இடரை, பொருத்தமான வகையில் கணிப்பதற்கு பொதுமான அளவில் பன்முகப்படுத்தப்படாத போது இருக்கின்ற மேலதிகக்கடன், மேலதிக கடன் இடர்.

**கடன் இடர்**
கம்பனிக்கு வெளிப்பாடு ஒன்று உள்ள பிணையங்கள் காப்புறுதியாளரின் (காப்புறுதியாளரின் மூலதன இலாகாவில்), கடனாளிகள் (உதாரணம்- அடமானதாரர்கள்), அல்லது எதிர் முனைவோர் (உதாரணம் -மறுகாப்பீட்டு ஒப்பந்தங்கள், வழித்தோன்றல் ஒப்பந்தங்கள் அல்லது வைப்புக்கள் மீது) மற்றும் இடைத்தரகர்களின் தவறுகை அல்லது கடன் விகித ஒப்படைகளில் ஏற்படும் நகர்வுகள் காரணமாக, நிகழும் நிதி இழப்பு இடர், கடன் இடர் எனப்படும். கடன் இடர், தவறுகை இடர், தரமிறக்கிய அல்லது இடம்பெயர்வு இடர், உட்கிடையான கடன் அல்லது பரவலான கடன், செறிவு இடர் மற்றும் இடைத்தொடர்பு இடர் என்பவற்றை உள்ளடக்கும். கடன் இடர் மூலதன எதிர்முனைவோர், காப்புறுதிக் கொள்கையாளர்கள் (செலுத்தப்பட வேண்டிய கட்டுப்பணங்கள் ஊடாக), மறுகாப்பீட்டாளர்கள், இடைத்தரகர்கள் மற்றும் வழித்தோன்றல் எதிர்முனைவோர் என்பவற்றில் இருந்து தோன்றும்.

**ஒத்திவைக்கப்பட்ட கையகப்படுத்தல் செலவு - பொதுக் காப்புறுதி வியாபாரம்**
வருடாந்த கணக்கீட்டு அடிப்படையின் கீழ் ஐந்தொகைத் தினத்தில் செல்லுபடியான ஒப்பந்தங்களின் முதிர்ச்சியடையாத இடர்க் காலம் தொடர்பான கையகப்படுத்தல் செலவுகள் இவை ஒரு கணக்கீட்டுக் காலப் பிரிவிலிருந்து, அடுத்துவரும் கணக்கீட்டுக் காலப் பிரிவுகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

**கைவிடப்பட்ட செயற்பாடு**
நிறுவனம் முழுவதிலும் இருந்து அகற்றுவதற்கு முறையான திட்டம் ஒன்றுள்ள ஒரு நிறுவனத்தின் முழுமையான பிரிவு, துணைப் பிரிவு அல்லது ஒரு பிரிவின் செயற்பாடுகள்.

**உழைக்கப்பட்ட தவணைக்கட்டணங்கள்**
கணக்கீட்டு காலத்தின் ஆரம்பத்திலும் இறுதியிலும் உள்ள உழைக்கப்படாத தவணைக்கட்டண ஏற்பாடுகளினால் எழுதப்பட்ட தவணைக் கட்டணங்கள் சீராக்கப்பட்டன.

**கொடையுரிமையளித்தல்**
எதிர்பாராத நிகழ்வு காரணமாக தனிப்பட்டவரின் ஆயுளைப் காப்பீடு செய்வதுடன், காப்புறுதிக் காலத்தின் முடிவின் முதிர்ச்சி அனுகூலங்களையும் வழங்கும் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம்.

(ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின்னர் (அதன் முதிர்ச்சியின் போது) அல்லது மரணத்தின் போது ஒரு தொகைக் கொடுப்பனவை வழங்குவதற்கு வடிவமைக்கப்பட்ட ஒரு ஆயுள் காப்புறுதி)

**பொதுக் காப்புறுதி வர்த்தகம்**
தீ, கடல், மோட்டார் வாகன அல்லது நானாவித காப்புறுதி வர்த்தகத்தை தனியாகவோ, ஒன்றுடன் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றுடன் இணைந்து மேற்கொள்ளல். கிடைத்த, மொத்த தவணைக் கட்டணங்கள் அல்லது அனைத்து மூலங்களில் இருந்தும் கிடைக்க வேண்டிய தவணைக் கட்டணங்கள். இவை கணக்கீட்டுக் காலப் பிரிவின் போது பொதுக் காப்புறுதி வர்த்தகம் தொடர்பாகக் கருதப்பட்ட மீள் காப்புறுதிக்கான கட்டணங்களையும் உள்ளடக்குகின்றன.

**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்**
கழிவுகள், மீள் திருப்பப்பட்ட தொகை, மற்றும் தள்ளுபடிகள் ஆகியவை கழிக்கப்பட்டதன் பின்னரான தவணைக் கட்டணமாயினும், இது எந்தவொரு தவணைக் கட்டண செலுத்துதல்கள் அல்லது காப்புறுதியாளர் ஒருவரின் மீள் காப்புறுதி வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவு என்பவை கழிக்கப்படுவதற்கு முன்னரானதாக இருக்கும் தொகை ஆகும்.

**காப்புறுதியாளர்**
2007ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பொதுக் கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டதும் மற்றும் 2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதி கைத்தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டதுமான கம்பனி.

**காலாவதியான கொள்கை**
கட்டுப்பணத்தைச் செலுத்தாமையின் காரணமாக, சலுகைக் கால இறுதியில் முடிவுறுத்தப்பட்ட ஒரு கொள்கை.

**பொறுப்பு போதுமான தன்மைப் பரீட்சை (LAT)**
அதன் காப்புறுதி ஒப்பந்தங்களின் கீழ் உள்ள எதிர்கால நிதிப் பாய்ச்சல்களின் நிகழ்கால மதிப்புகளைப் பயன்படுத்தி, அதன் காப்புறுதிப் பொறுப்புக்கள் போதுமையானவையா என அங்கீகரிப்பதற்காக அறிக்கையிடும் ஒவ்வொரு காலப்பகுதியின் முடிவிலும் மேற்கொள்ளப்படும் மதிப்பீடு.

**பொறுப்பு இடர்**
காப்புறுதியாளரால் ஸ்தாபிக்கப்பட்ட தொழில்நுட்ப ஏற்பாடுகள் மற்றும் காப்புறுதிக் கொள்கையாளரின் பொறுப்புகள், எதிர்காலக் கோரிக்கைகள் மற்றும் தற்போது வலுவிலுள்ள கொள்கைகள் மீதான செலவுகள் என்பவற்றைச் செலுத்துவதற்கு போதுமானதாக இல்லாமையைக் குறிப்பிடும்.

**ஆயுள் மிகை**
பொறுப்புகளுக்கு மேலாக உள்ள சொத்துக்களின் மிகை மற்றும் பூட்கையாளர்களுக்கு மிகையூதியம் விநியோகித்ததன் பின்னர் நட்டக் கணிப்பீட்டாளரினால் தீர்மானிக்கப்பட்ட தொகை (கடன்தீர் தேவைப்பாடுகளைக் கருத்தில் கொண்டதன் பின்னர்)

**நீண்டகாலக் காப்புறுதி வியாபாரம்**
மனித ஆயுள் தொடர்பான பூட்கை ஒப்பந்தங்களில் ஈடுபடுதல் அல்லது பராமரித்தல் தொடர்பான வர்த்தகம். அத்தகைய ஒப்பந்தங்கள் மரணத்தின்

# அருஞ்சொல் அகராதி

போது அல்லது மனித வாழ்க்கையில் ஏதெனும் திடீர் நிகழ்வுகள் இடம்பெறும் போது, பணக் கொடுப்பனவு உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கும் ஒப்பந்தங்களையும், மனித வாழ்க்கையில் ஏற்படக்கூடிய ஓர் அவசர நிலைக்கென தவணைக் கட்டணங்கள் செலுத்தப்படுவதற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஒப்பந்தங்களையும் உள்ளடக்குகின்றன.

### சந்தை இடர்

காப்புறுதியாளரின் சொத்துக்களுக்குரிய சந்தைப் பெறுமதியில் குறைப்பை ஏற்படுத்தும் இடர்

### முதிர்சி

நீண்டகால காப்புறுதிக் கொள்கை ஒன்று பெறப்பட்டு அதன் தவணை முடிவில் செலுத்த வேண்டிய தொகைக்குரிய கொடுப்பனவை மேற்கொள்கின்ற நேரம்.

### இறப்பு விகிதம்

முழு மக்கள் தொகைக்கு அல்லது குறிப்பிட்ட வயது குழுமத்திற்குரிய மரண விகிதம். இது, உலகளாவிய ரீதியில் விகிதத்தில் வெளிப்படுத்தப்படுவதோடு, இறப்பு விகித அட்டவணைகளில் விளக்கப்படுகிறது.

### நிகர கோரிக்கைகள் விகிதம் அல்லது நிகர இழப்பு விகிதம்

நிகர இழப்புச் செலவுகளை நிகர வருமானத்துடன் தொடர்புபடுத்துவதற்கென காப்புறுதி வழங்குநர்களினால் பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு வழிமுறை. (அதாவது, சம்பந்தப்பட்ட மீள் காப்புறுதி களைக் கழித்த பின்னர்)

$$\frac{\text{நிகர கோரிக்கை கொடுப்பனவுகள்}}{\text{நிகர தவணைக் கட்டண பெறுகைகள்}} \times 100$$

### நிகர இணைந்த விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

இது காப்புறுதியாளரின் தொழிற்பாடுகளின் இலாபத் தன்மையைக் காட்டுகின்றது. தேறிய நட்ட விகிதத்தையும் தேறிய செலவு விகிதத்தையும் இணைத்துக் கணிக்கப்படுகின்றது. இது முதலீட்டு வருமானத்தைக் கவனத்தில் எடுப்பதில்லை.

நிகர கோரிக்கை

$$\frac{\text{செலவுகள்}}{\text{நிகர தவணைக் கட்டணங்கள்}} \times 100 + \frac{\text{செலவுகள்}}{\text{நிகர உழைக்கப்பட்ட தவணைக் கட்டணம்}} \times 100$$

### தேறிய தவணைப் பெறுகைகள் -பொதுக் காப்புறுதி வியாபாரம்

மீள் காப்புறுதி தவணைக் கட்டணம் மற்றும் பெறப்படாத தவணைக் கட்டணங்களுக்கான அதிகரிப்பு மற்றும் குறைவு என்பனவற்றுக்கென சீராக்கம் செய்யப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்.

### தேறிய செலவு விகிதம் -பொதுக் காப்புறுதி வியாபாரம்

கையகப்படுத்தல் மற்றும் நிர்வாகச் செலவுகளைக் குறிப்பிடுவதற்கென காப்புறுதிக் கம்பனிகளினால் பயன் படுத்தப்பட்டு வரும் ஒரு வழிமுறை. (உதாரணம், தரகுக் கட்டணம், வரிகள், ஆளணி, விற்பனை மற்றும் செயற்பாட்டுச் செலவுகள்).

தேறிய எழுதப்பட்ட தவணைக் கட்டணங்கள் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் மீள்காப்புறுதியாளர்களுக்கு விட்டுக்கொடுக்கப்பட்ட தவணைக் கட்டணங்களைக் கழித்ததன் பின்னர் ஏதேனும் மீள்காப்புறுதிகளாக் கருதியவற்றைக் கூட்டிய பின்னர் வரும் காப்புறுதிக் கம்பனியினால் திரட்டிய எழுதப்பட்ட தவணைக் கட்டணங்கள் ஆகும்.

### பங்கேற்காத காப்புறுதிப்பத்திரம் - நீண்டகால காப்புறுதி வியாபாரம்

பொருத்தமான ஆயுள் காப்புறுதி நிதியத்திலுள்ள மிகைகளை பங்கிட்டுக் கொள்வற்கான ஒப்பந்த ரீதியில் உரித்தற்ற நீண்ட காப்புறுதி வியாபாரத்தின் காப்புறுதிக் கொள்கையாளர்கள்.

### ஒரு தடவை மேலதிகம்

2016 ஆம் ஆண்டின் ஜனவரி 01 இல் உள்ளவாறு இடர் அடிப்படையிலான மூலதனத்தில் (RBC) உள்ள மொத்தக் கொள்கை பொறுப்புக்கள் மீது 2015 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிகர தவணைக் கட்டண மதிப்பீட்டு (NPV) ஆளுமையின் கீழ் உள்ள மொத்தக் கொள்கைப் பொறுப்புக்களின் மிகை ஆகும். மேலதிகம் பின்வரும் மாற்றத்தினால் உருவாக்கப்பட்டது. கொள்கை பொறுப்புக்களுடைய மதிப்பீட்டு முறைமை நிகர கட்டுப்பண மதிப்பீட்டிலிருந்து மொத்தக் கட்டுப்பண மதிப்பீட்டிற்கு மாற்றப்பட்டது

### ஒரு தடவை மேலதிக மாற்றம்

மிகை உடைய மாற்றம் பின்வரும் காரணத்தினால் ஏற்பட்டது. கொள்கைப் பொறுப்புக்கள் மதிப்பீட்டு முறைமை, நிகர கட்டுப்பண மதிப்பீட்டிலிருந்து (NPV) பங்குதாரர் நிதியத்திற்கான மொத்த கட்டுப்பண மதிப்பீட்டிற்கு (GPV) மாற்றப்பட்டது.

### செயற்பாட்டு இலாபம்

முதலீட்டு வருமானம், தேறிய மூலதன ஆதாயங்கள் மற்றும் ஏனைய வருமானம் என்பனவற்றைக் கவனத்திற் கொண்ட பின்னர், பொதுக் காப்புறுதித் தொழிலை மேற்கொள்வதன் மூலம் உருவாக்கப்படும் இலாபம்.

### செயற்பாட்டு இடர்

உள்ளக முறைமைகள், ஆட்கள், நடவடிக்கை முறைகள் அல்லது நிதி இழப்பை ஏற்படுத்தும் கட்டுப்பாடுகள், உள்ளக முறைமைகள், ஆட்கள், நடவடிக்கை என்பவற்றின் பற்றாக்குறை அல்லது தோல்வி அல்லது நிதியிழப்பை ஏற்படுத்தும் கட்டுப்பாடுகள் என்பவற்றில் இருந்து எழுகின்ற இடர் செயற்பாட்டு இடர். பாதுகாப்பு இடரையும் உள்ளடக்கும்.

### காப்புறுதிப் பூட்கை

காப்புறுதிப் பூட்கையாளருக்கு விநியோகிக்கப்படும் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பனவற்றை கொண்டுள்ள ஓர் ஆவணம்.

### காப்புறுதிப் பூட்கையாளர்

காப்புறுதியாளருடனான ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்டிருக்கும் சந்தா்ப்பத்தில் காப்புறுதிப் பத்திரத்தை அச்சமயத்தில் சட்டபூர்வமாக வைத்திருக்கும் ஒரு நபர்.

### காப்புறுதி பூட்கைக் கடன்

நீண்டகால காப்புறுதிப் பத்திரத்தின் ஒப்படைப்புப் பெறுமதியைப் பிணையாக கொண்டு காப்புறுதியாளர் ஒருவர் காப்புறுதிப் பூட்கையாளருக்கு வழங்கும் கடன். இக்கடன் காப்புறுதிப் பத்திரத்தின்

# அருஞ்சொல் அகராதி

தற்போதைய ஒப்படைப்புப் பெறுமதியின் குறிப்பிட்டதொரு சதவீதத்திற்கு பொதுவாக வரையறுக்கப்பட்டிருப்பதுடன், இத்தகைய கடன்கள் மீது வட்டி அறவிடப்படுகின்றன.

**மீள்காப்புறுதி**
ஒரு பிரதிபயனின் (கட்டுப்பணம்) பரிமாற்றத்திற்காக மாற்றாளரால் வழங்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களின் இழப்புக்களுக்கு எதிராக அவற்றைத் தீர்ப்பதற்காக ஒரு காப்புறுதியாளர் அல்லது மீள்காப்பீட்டாளர் இன்னுமொரு காப்புறுதியாளருடன் (மாற்றாளர்) செய்து கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தம்.

**மீள்காப்புறுதித் தரகு**
மீள்காப்புறுதியாளர் ஒருவருக்கு செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்பட வேண்டிய கட்டுப்பணங்களோடு சம்பந்தப்பட்ட பெறப்பட்ட அல்லது பெற வேண்டிய தரகு.

**உள்நோக்கிய மீள் காப்புறுதி**
மீள் காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் இடர்களை ஏற்றுக்கொள்ளல்.

வெளிநோக்கிய மீள் காப்புறுதி

மீள் காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் இடர்களை வைத்தல்.

**மீள் காப்புறுதி தரகு கட்டண இலாபம்**
மீள் காப்புறுதியாளரினால் மீள் காப்புறுதி ஒப்பந்தத்தின் மூலம் பெறப்பட்ட (மீள் காப்புறுதி ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு) தேறிய இலாபத்தின் அடிப்படையில், மீள் காப்புறுதி செய்தவருக்கு (ஆரம்பக் காப்புறுதியாளருக்கு) கிடைத்த அல்லது கிடைக்க வேண்டிய மீள் காப்புறுதி மற்றும் தரகுக் கட்டணம்.

**வரையறுக்கப்பட்ட ஒழுங்குபடுத்தல் ஒதுக்குகள்**
பணிப்புரை 16இற்கு அமைவாக பங்குதாரரின் நிதியத்திற்கு பங்குபற்றும் வியாபாரம் தவிர்த்து மாற்றம் செய்யப்படும் ஒரே தடவை மிகை.

**தக்க வைத்துக் கொள்ளல்**
காப்புறுதியாளர் / மீள்காப்புறுதியாளர் மீள்காப்புறுதி/ திருப்பிச் செலுத்தமாட்டார் என அனுமானிக்கப்பட்ட இடரின் ஒரு பகுதி. அதாவது, சொந்தக் கணக்கிற்காக நிகர தொகையை வைத்துக் கொள்ளுதல்.

**மீளப் பெறுதல்**
மீள்காப்புறுதியாளர் இடர்களை மாற்றும் ஒரு நடவடிக்கையாகும். இது, இன்னுமொரு மீள்காப்புறுதியாளருக்காக மீள் காப்புறுதி செய்யப்பட்டது.

**இடர் மூலதன தேவைப்பாடு (RCR)**
இடர் அடிப்படையிலான மூலதனத் தேவைப்பாடு என்பது, 2015 ஆம் ஆண்டின் கடன் தீர்வு திறன் விழிம்பு விதிகளில் குறித்துரைக்கப்பட்ட அனைத்து பொருத்தமான மற்றும் பொருள் வகையைச் சார்ந்த இடர்களின் மூலதனத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்குரிய தேவைப்படும் மூலதனத்தின் மொத்தத் தொகை. (RCR) பொது மற்றும் நீண்டகால காப்புறுதிக்கு வெவ்வேறாக கணக்கிடப்படுவதுடன், காப்புறுதி மற்றும் பங்குதாரர் நிதியம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கும்.

(அ) பொதுக் காப்புறுதி வியாபாரத்திற்கு RCR = [(கடன் இடர் மூலதனக் கட்டணம் + செறிவு இடர் மூலதனக் கட்டணம் + மறு காப்புறுதி இடர் மூலதனக் கட்டணம் + சந்தை இடர் மூலதனக் கட்டணம்)$^2$ + பொறுப்பு இடர் மூலதனக் கட்டணம்$^2$ + செயற்பாட்டு இடர் மூலதனக் கட்டணம்$^2$] மற்றும்

(ஆ) நீண்டகால வியாபாரம் ஒன்றுக்கு: RCR = max {[SVCC, ஐ(கடன் இடர் மூலதனக் கட்டணம் + செறிவு இடர் மூலதனக் கட்டணம் ஁ மறு காப்புறுதி இடர் மூலதனக் கட்டணம் + சந்தை இடர் மூலதனக் கட்டணம்)$^2$ + பொறுப்பு இடர் மூலதனக் கட்டணம்$^2$ + செயற்பாட்டு இடர் மூலதனக் கட்டணம்$^2$]

**கடன் தீர் திறன் விழிம்பு (இடர் அடிப்படையிலான மூலதனம்)**
காப்புறுதிப் பொறுப்புகளுக்காக தொழில்நுட்ப ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக, காப்புறுதியாளரினால் வைத்திருக்க வேண்டிய வில்லங்கமற்ற மூலதனத்தின் தொகையைத் தீர்மானிப்பதற்காக இருக்கின்ற ஒழுங்குபடுத்தும் மூலதனத் தேவைப்பாடு. அத்துடன், முழுமையான குறைந்தபட்ச மூலதன போதுமான தன்மையின் தராதரத்தை உள்ளடக்கியதோடு, 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதி ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் பிரிவு 26(1) உடன் சேர்த்து வாசிக்கின்றவிடத்து, பிரிவு 105 இன் கீழ் உருவாக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டின் கடன் தீர் திறன் விழிம்பு விதிகளின் (இடர் அடிப்படையிலான மூலதனம்) வரைவிலக்கணப்படுத்தியுள்ள இடர் அடிப்படையிலான தேவைப்பாட்டையும் உள்ளடக்குகிறது.

**சரணடையும் பெறுமதி**
காப்புறுதிக் கொள்கை ஒன்றின் தவணைக்காலம் பூர்த்தியடைய முன்னர், நீண்டகால காப்புறுதிக் கொள்கை ஒன்று முடிவுறுத்தப்படும் போது அதற்காக காப்புறுதியாளரினால் காப்புறுதிக் கொள்கையாளருக்கு செலுத்த வேண்டிய தொகை ஆகும். இங்கு குறிப்பிடப்பட்ட சரணடையும் பெறுமதியை அடைவதற்கு காப்புறுதிக் கொள்கை தொடர்ச்சியாக மூன்று வருடங்களுக்கு அமுலில் இருந்திருத்தல் வேண்டும்.

**சரணடையும் பெறுமதி மூலதனக் கட்டணம் (SVCC)**
அனைத்துக் காப்புறுதி ஒப்பந்தங்களும் ஒரே நேரத்தில் சரணடையக் கூடிய தீவிர பாதகமான சூழ்நிலை ஒன்று ஏற்படும் சந்தர்ப்பம்.

**தவணைக் காப்புறுதி**
குறிப்பிட்ட காலப்பகுதி ஒன்றுக்கு அல்லது குறித்துரைக்கப்பட்ட தவணைக்கு பாதுகாப்பை வழங்குகின்ற ஆயுள் காப்புறுதிக் கொள்கையின் ஒரு வகை. கொள்கையில் குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதியின் போது காப்புறுதியாளர் இறந்தால் மற்றும் காப்புறுதிக் கொள்கை வலுவில் இருப்பின் - இறப்பின் மீதான ஒரு அனுகூலம் செலுத்தப்படும்.

**தொழில்நுட்ப ஏற்பாடு**
இலாகாவின் ஆயுள் காலத்தின் போது, அதிலிருந்து எழும் ஏனைய பயனாளிகள் மற்றும் காப்புறுதிக் கொள்கையாளருக்கு செலுத்த வேண்டிய அனைத்து கொடுப்பனவுகள் மற்றும் அதன்

# அருஞ்சொல் அகராதி

காப்புறுதிக் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக காப்புறுதியாளரினால் ஒதுக்கி வைக்கப்படும் ஒரு தொகை. இது, கொள்கைகள், மறு காப்புறுதி என்பவற்றை நிர்வகிப்பதற்கான செலவுகள் மற்றும் எஞ்சிய இடர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு தேவையான மூலதனத்தையும் உள்ளடக்கும்.

**அடுக்கு 1**

மூலதனம் தொடர்ந்து செல்வதற்கான கரிசனைகள் மற்றும் வியாபாரத்தை முடிவுறுத்தல் ஆகிய அடிப்படையின் மீது அனைத்து சந்தர்ப்பங்களிலும் காப்புறுதியாளருக்கு ஏற்படுகின்ற நட்டத்தைப் பாதுகாப்பதற்காக முழுமையாக இருக்கக்கூடிய நிரந்தர மூலதனம்.

**அடுக்கு 2**

மூலதனம் அடுக்கு 1 மூலதனத்தில் உறிஞ்சும் தன்மையுடைய பண்புகள் இல்லாத மூலதனம். ஆயின், எவ்வாறாயினும், நடந்து கொண்டிருக்கின்ற செயற்பாடுகள் அல்லது வியாபாரத்தை முடிவுறுத்தும் செயற்பாடுகளின் போது சில இழப்பு உறிஞ்சும் தன்மையை வழங்கக்கூடியது

**மொத்தக் கிடைக்கப்பெறும் மூலதனம் (வ்யுஊ)**

2015 ஆம் ஆண்டின் கடன்தீர் திறன் விழிம்பு விதிகளில் குறித்துரைக்கப்பட்ட கழிப்பனவுகள் ஏதேனும் இருப்பின், அவற்றைக் கழித்த அடுக்க 2 மூலதனம் மற்றும் அடுக்கு 1 மூலதனம் ஆகிய இரண்டினதும் மொத்தத் தொகை இருக்கக்கூடிய மொத்த மூலதனமாகும்.

**எழுத்தாக்க இலாபம்**

மூலதன வருமானம் மற்றும் ஏனைய வருமானத்தை கருத்திற் கொள்ளாது, பொதுக் காப்புறுதி வியாபாரத்தை நடத்துவதன் மூலம் ஈட்டப்படும் தொழில்நுட்ப இலாபம்.

**சம்பாதிக்கப்படாத கட்டுப்பண ஒதுக்கு**

வரவேண்டிய கட்டுப்பணங்கள் கணக்குகளில் ஏற்கனவே உள்ளிடப்பட்டிருப்பதோடு, இது, ஐந்தொகை திகதியை அடுத்து வரும் இடர் காலப்பகுதியோடு தொடர்புபட்டது

**சம்பாதிக்கப்படாத கட்டுப்பண ஒதுக்கு**

இன்னும் வலுவிலுள்ள காப்புறுதிக் கொள்கைகளின் கீழ் எதிர்காலத்தில் எழக்கூடிய கோரிக்கைகளை வழங்குவதற்காக பொதுக் காப்புறுதியாளரினால் வைத்திருக்கப்படும் நிதியமாகும்.

**காலாவதியாகாத இடர் ஒதுக்கு**

கோரிக்கைகளின் மதிப்பிடப்பட்ட பெறுமதியை விட கூடிய தொகை மற்றும் இதுவரை அத்திகதிக்கு முன்னர் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் முடிவுபெற்ற ஒப்பந்தங்களில் இருந்து எழக்கூடிய செலவுகள் என்பவற்றின் மதிப்பிடப்பட்ட தொகையைவிட கூடிய தொகையாகும். ஏனெனில், அவற்றினுடைய மதிப்பிடப்பட்ட தொகை சம்பாதிக்கப்படாத கட்டுப்பணங்களுக்கான ஏற்பாடுகளைவிட அதிகரித்திருப்பதால் (ஒத்தி வைக்கப்பட்ட ஏதேனும் கையேற்புக்கான செலவுகள் இருப்பின் அவற்றைக் கழித்த பின்பு).

**உலகளாவிய ஆயுள் காப்புறுதி**

முதலீட்டு சேமிப்புகள் மற்றும் குறைந்த கட்டுப் பணங்களை உள்ளடக்கிய வகையிலான தவணை ஆயுள் காப்புறுதியாக அமைகின்ற நிரந்தர ஆயுள் காப்புறுதி ஆகும். அநேகமான உலகளாவிய காப்புறுதிக் கொள்கைகள், நெகிழ்வான கட்டுப்பணத் தெரிவுகளை உள்ளடக்கியிருக்கிறது. எவ்வாறாயினும், சில ஒற்றைக் கட்டுப்பணம் (ஒற்றை மொத்தத் தொகைக் கட்டுப்பணம்) அல்லது நிலையான கட்டுப்பணங்களை (அட்டவணையிடப்பட்ட நிலையான கட்டுப்பணங்கள்) விரும்புவர்.

**முழு ஆயுளுக்குமான காப்புறுதி**

முழு ஆயுள் காப்புறுதி பெற்றவரின் ஆயுள் காலம் முழுவதையும் பாதுகாப்பதற்காக வழங்கப்படுகிறது. இறப்பு மீதான நலனை வழங்குவதற்கு மேலதிகமாக, முழுமையான ஆயுள் காப்புறுதி பணப் பெறுமதி திரளக்கூடிய ஒரு சேமிப்பு உறுப்பையும் உள்ளடக்கும். இந்தக் கொள்கைகள் நிரந்தர அல்லது பாரம்பரிய ஆயுள் காப்புறுதி எனவும் அழைக்கப்படும்.

# குறிப்பு

# பொதுத் தகவல்கள்

**அலுவலக முகவரி**
தளம் 11, கிழக்கு கோபுரம், உலக வர்த்தக நிலையம்
கொழும்பு 1
இலங்கை

| | | |
|---|---|---|
| தொலைபேசி | : | +94112396184-9 |
| தொலைநகல் | : | +94112396190 |
| மின்னஞ்சல் | : | info@ircsl.gov.lk |
| இணையதளம் | : | www.ircsl.gov.lk |

**சட்டபூர்வ நிலைமை**
2000 ஆம் ஆண்டு 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழில் ஒழுங்கமைப்புச் சட்டத்தின் பிரகாரம் இலங்கையில் நியம சபையாக நிறுவப்பட்டது. 2001 பெப்ரவரி 23 ஆம் திகதி 1172/27 ஆம் இலக்க அரசாங்க வர்தமானி அறிவித்தலை அடுத்து 2001 மார்ச் 01 ஆம் திகதி நடவடிக்கைகளை மேற்கொண்ட சட்டபூர்வமான அந்தஸ்தைக் கொண்ட நிறுவனம் ஆக்கப்பட்டது.

**சபையின் நோக்கமும் பொறுப்புக்களும்**
காப்புறுதியாளர்களினதும், உத்தேச காப்புறுதியாளர்களினதும் நன்மைகளைப் பாதுகாக்கும் நோக்கத்தில், இலங்கையில் காப்புறுதித் தொழிலை நேர்மையாகவும், தொழில்சார் அடிப்படையிலும், விவேகமாகவும், இலங்கையில் காப்புறுதித் தொழில் நடத்தப்படுவதை உறுதிப்படுத்துவது ஆணைக்குழுவின் நோக்கமும், பொறுப்புக்களுமாகும்.

**கணக்கீட்டு ஆண்டு**
டிசம்பர் 31

**கணக்காய்வாளர்கள்**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**வங்கியாளர்கள்**
இலங்கை வங்கி

**கணக்காய்வுக் குழு**
திரு. ஆர்.எம்.ரத்நாயக்க
திருமதி. யுவதி பெர்ணான்டோ
திரு. ஹரிஷ் சல்பிடிகோரள
செல்வி. இந்திரா பதுகே

இலங்கை காப்பறுதி
ஒழுங்குமுறைப்படுத்தல்
ஆணைக்குழு

11ஆம் தளம், கிழக்கு கோபுரம், உலக வர்த்தக மையம், கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : +94112396184-9 | தொலைநகல் : +94112396190
மின்னஞ்சல் : info@ircsl.gov.lk இணையதளம் : www.ircsl.gov.lk